

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலரும் தந்தை பெரியாரும்





முனைவர் முத்து. குணசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலரும் தந்தை பெரியாரும்

முனைவர் முத்து. குணசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

தந்தை பெரியார் ஈ.வெ.ரா.அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேரா. முனைவர் ந. வேலுசாமி,
தலைவர் (ம) இயக்குநர், பெரியாரியல் சிந்தனை மையம், பெரியார்
மணியம்மைப் பல்கலைக்கழகம், பெரியார் நகர், வல்லம், தஞ்சாவூர்-613 403

வரிசை எண். 4

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Cintanaic cirpi Ma. Ciṅkāravēlarum Tantai periyārum
Author	:	Dr. Muthu. Gunasekaran Professor of Tamil (Retd.) Correspondence Course University of Madras, Chennai
General editor	:	Dr. M. Valarmathi Associate Professor Faculty of Overseas Tamils International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai - 600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai - 600 113 Ph: 22542992
Publication No.	:	735
Language	:	Tamil
Edition	:	First
Year of publication	:	2012
Paper used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of pages	:	x+230
No. of copies	:	1200
Price	:	Rs.105/- (Rupees One Hundred and five only)
Printed by	:	Lakshmi Agencies 23/11, Perumal Mudali Street, Royapettah Chennai -600 014
Subject	:	Life Sketches of M. Singaravelar

முனைவர் கா.மு. சேகர்
இயக்குநர் (மு.கூ.பொ.)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

அணிந்துரை

சிந்தனைச் சிற்பி, செஞ்சூரியன் எனப் போற்றப்பட்டவர் ம. சிங்காரவேலர். பொதுவுடைமை இயக்க முன்னோடியாகத் திகழ்ந்தவர். சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கி மக்களுக்குப் பகுத்தறிவுச் சிந்தனையை ஊட்டியவர் தந்தை பெரியார். அறியாமை, மடமை நீங்கி மக்கள் பகுத்தறிவு, சமதர்மச் சிந்தனை பெற்று வளமுடன் வாழவேண்டும் என்று இருவரும் இறுதி வரை போராடியவர்கள்.

அறிவியல் வெளிச்சம் நாட்டில் பரவ வேண்டும் என்பதற்காகச் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் 'புதுஉலகம்' எனும் அறிவியல் ஏட்டை நடத்தி வந்தார். இதனை மையமாக வைத்துப் பாவேந்தர்,

நல்லறிவும் பெருநோக்கும் கேட்பீராயின்
நம்தோழன் சிங்காரவேலன் கண்ட
வெல்லுதமிழ் புதுஉலகம் மாதவெளியீட்டை
வாசித்தல் வேண்டும் என்போம்!
புல்லறிவும் தூக்கத்தில்பேசும் பேச்சைப்புதுஉலகில்
எவ்விடத்தும் கண்டோ மில்லை

என்று பாராட்டியுள்ளார். சிங்காரவேலரின் சிறப்புக்கு இது ஒரு நற்சான்றாகும்.

'1923ஆம் ஆண்டில் சென்னை நகரில் ம. சிங்காரவேலர் கொண்டாடிய மே நாள் தமிழகத்தின் முதல் மே நாள் மட்டுமன்று; இந்தியத் துணைக் கண்டத்தின்– ஏன் ஆசியக்கண்டத்தின் முதல் மே நாளும் அதுவே' என்று குறிப்பிட்டுக் காட்டும் அளவிற்கு அவர் ஒரு வரலாற்று மனிதராகத் திகழ்ந்தார்.

சுயமரியாதை இயக்கம் தந்தை பெரியாரால் உருவாக்கப் பட்டது. சமதர்ம இயக்கம் சிந்தனைச் சிற்பி ம. சிங்கார வேலரால் உருவாக்கப்பட்டது. இருவரும் காங்கிரசு இயக்கத்தில் ஈடுபட்டு வெளிப்பட்டவர்கள். 1932ஆம் ஆண்டிற்குப் பின் இருவரும் இணைந்து சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் எனும் ஒரு பேரியக்கத்தை உருவாக்கினர். அது இந்திய அரசியலில் மிகப் பெரும் கிளர்ச்சியை உருவாக்கியது. நாட்டு மக்களின் வாட்டத்தைப் போக்கி வாழ்வு வளம் பெறப் பல்வேறு செயல் திட்டங்களைத் தீட்டினர்.

ஓய்வறியாமல் உழைத்தனர். தமிழகத்தில் 150க்கும் மேற்பட்ட சுயமரியாதைச் சமதர்ம அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும் மாநாடுகளும், கூட்டங்களும் நடைபெற்றன. பொதுவுடைமைக் கொள்கைகள் காட்டாற்று வெள்ளமெனப் பாய்ந்தன என்பது நமது கடந்த கால வரலாறு. இவ்விரு பெருந்தலைவர்களின் சிறப்பையும், பேருழைப்பையும் எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் பேரா. முனைவர் முத்து. குணசேகரன் அரிய ஒரு நூலாக வழங்கியுள்ளார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளைப் பொழிவு நூலாக இந்நூல் வெளிவருவது வரவேற்புக்குரியதாகும். தமது கடும் உழைப்பின் மூலம் ஏராளமான நிகழ்ச்சிகளை, செய்திகளை, சிந்தனைகளை இந்நூலின் மூலம் வழங்கியுள்ள பேரா.முனைவர் முத்து.குணசேகரன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்து தக்கதொரு சிறந்த நூல் வெளிவரத் துணைநின்று இந்நிகழ்ச்சியைச் சிறப்புற நடத்தி வரும் இணைப்பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **மாண்புமிகு பள்ளிக்கல்வி, தொல்லியல், விளையாட்டு (ம) இளைஞர் நலம், தமிழ் ஆட்சிமொழி (ம) பண்பாட்டுத் துறை, சட்ட அமைச்சர் திரு.என்.ஆர். சிவபதி** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இவ்வறக்கட்டளையின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன், நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இலட்சுமி ஏஜென்ஸீஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள். அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

முன்னுரை

சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலர், தந்தை பெரியார் இருவரும் தமிழக வரலாற்றில் தனித்தன்மை மிக்கவர்கள், தனி வரலாறு படைத்தவர்கள், புதிய கொள்கைகளையும், பொதுவுடைமைத் தத்துவங்களையும் வகுத்துத் தமிழர்கள் மான உணர்ச்சியும் அறிவுணர்ச்சியும் பெறுவதற்குத் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர்கள்.

சுயமரியாதை இயக்கம் தந்தை பெரியாரால் உருவாக்கப்பட்டது. சமதர்ம இயக்கம் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலரால் உருவாக்கப்பட்டது. இருவரும் இணைந்து 1932ஆம் ஆண்டிற்குப் பின்னர்ச் சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் எனும் ஓர் சமுதாய இயக்கத்தை உருவாக்கினர். அது தமிழக அரசியல் வரலாற்றில் கிளர்ச்சிகளையும் தனி மனித வாழ்வில் பெரும் மாற்றத்தையும் தோற்றுவித்தது. இவர்கள் இருவரும் சொன்னதைச் செய்தவர்கள். செய்ததைச் சொன்னவர்கள்.

இந்திய சுதந்திரப் புரட்சியாளர்களிலே மூத்தவர் மட்டுமல்ல முதிர்ந்தவர் ம.சிங்காரவேலர். ''இந்தியாவில் உருவாகிய இயக்கங்கள் நான்கு. இந்திய தேசியக் காங்கிரஸ், சமதர்ம இயக்கம், சுயமரியாதை இயக்கம், தொழிற்சங்க இயக்கமென நான்கு. இந் நான்கு இயக்கங்களிலும் நீக்கமற, நெருக்கமாக இடம் பெற்றவர் சிங்காரவேலர் மட்டுமே'' என்பார் ம.பொ.சி. ''சிங்காரவேலருக்கு இணையாக லெனினைச் சொல்லலாம்; டிராட்ஸ்கியைச் சொல்லலாம்; சக்லத் வாலாவைச் சொல்லலாம்'' என்றார் பேரறிஞர் அண்ணா.

உலகத் தொழிலாளர்களை ஒருங்கிணைக்கப் பாடுபட்டவர்; பாட்டாளி வர்க்கத்திற்குச் சொந்தமானவர்; மே தினம் தொழிலாளர்களுக்குரியது என வரலாற்றுப் புகழ் சேர்த்தவர். ஏழை, எளிய மக்களின் நல்வாழ்விற்காகத் தம் இறுதி மூச்சு வரை பாடுபட்டவர். எல்லா வகையிலும் முன்னோடியாக மட்டுமல்ல முதன்மை மனிதராகவும் பணியாற்றிய ம. சிங்காரவேலர் அறிவியல் முன்னேற்றம், அரசியல் தெளிவு இவற்றுடன் அடித்தட்டு மக்களான தலித்துகள், பிற்பட்ட, மிகப் பிற்பட்ட மனிதர்களின் சமூக முன்னேற்றத்திற்கு உழைத்தவர். இவருடைய சிந்தனைகள் இன்றைக்கும் தேவை என்பதால் சிங்காரவேலரை முதன்மைப்படுத்தி என் வாழ்நாள் பணியாக மேற்கொண்டு உழைத்து வருகிறேன்.

தமிழ், தமிழினம், தமிழீழம் இவற்றின் மீது தணியாத பற்றும் பரிவும் உடையவர். இவற்றின் கொள்கைகளுக்காக அனுதினமும் உழைப்பவர். பல பத்திரிகைகளின் கட்டுரையாளர். 1000க்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். பாவலர் சிசவேதா, ம.வெ.சி. அன்பன், கவிஞர் முகுணன், வசந்தா குணசேகரன் என்னும் பெயர்களில் தினமணி, போரொலி, சிந்தனையாளன், உண்மை, கடலார், புரட்சிக்கனல், அறிவே துணை, குமரிக்கடல், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், வீர சிவாஜி ஆகிய பத்திரிகைகளில் இவர் கட்டுரைகள் வெளிவந்தன, வருகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவராகத் தங்கப்பதக்கம் பெற்ற இவரின் பேச்சாற்றலுக்காகவும், எழுத்தாற்றலுக்காகவும் பொதுமக்கள் ''இனமுரசு'', ''சமுதாய விடிவெள்ளி'', ''நீலப்புரட்சியாளர்'' என்ற பட்டங்களையும் தந்து பாராட்டினர். புதுவை அரசு ''சிங்காரவேலர் ஆய்வறிஞர்'' என்ற பட்டத்தையும் தந்து பெருமை செய்தது. இந்திய அரசினால் ம. சிங்காரவேலர் அஞ்சல் தலை வெளிவர இவர் முன் நின்றார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்குச் சிங்கார வேலர் பெயரிடவும், சிலை அமைக்கவும் முன்நின்றார். புதுவை அரசு ம. சிங்காரவேலர் சிலையை அமைக்கவும், காரைக்காலில் அரசால் சிலை அமைக்கவும், பழையாற்றில் சிங்காரவேலர் சிலையமையவும், பெருந்தோட்டத்தில் சிலை, தாழங்குடா, மூர்த்திருப்பம், விழுப்புரம் மாவட்டம் நடுக்குப்பம், புதுச்சேரி காலாப்பட்டு இங்கெல்லாம் ம. சிங்காரவேலர் சிலை இடம் பெறவும் இவர் முன்னின்று உழைத்து, சிலையை அமைத்தார்.

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், தொழிற்சங்க மேதை நாகை முருகேசன், பெருந்தலைவர் ந. ஜீவரத்தினம், ம. சிங்காரவேலர் வாழ்வும் பணியும், கடலோரத்து வானவில், நெய்தல் நிலத்துச் செங்குயில், முத்து. குணசேகரனின் முன்னுரைக் கவிதைகள், செஞ்ஞாயிறும் விண்மீன்களும், ம.சிங்காரவேலரின் கட்டுரைகள், ம. சிங்காரவேலரின் வாழ்க்கைக் குறிப்புகள், ம. சிங்காரவேலரும் சுயமரியாதை இயக்கமும், சிங்காரவேலரும் வந்தனைக்குரிய பெரியோர்களும், சிந்தனைக்குரிய சிறுகதைகள், தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர் ஏ.எஸ். அய்யங்கார், ம. சிங்காரவேலரும் தந்தை பெரியாரும், பெரியாரும் சிங்காரவேலரும், இலக்கிய முத்துக்கள், சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம் (அரசால் நாட்டுடைமை ஆக்கப்பெற்றது), ஆஸ்திரேலிய அனுபவங்கள் ஆகிய நூல்கள் இவரால் எழுதப்பட்டன.

பெரியார் உலகில் விநோதமாகவும், விந்தையாகவும், அதிசயமாகவும், ஆச்சரியமாகவும் செயல்பட்டவர். 5000 ஆண்டுகளுக்கான மூடத்தனங்களும் மௌடீகப் பழக்க வழக்கங்களும் மத, ஜாதி, வர்ணாசிரமக் கொடுமைகளும் ஒழியத் தம் இறுதி மூச்சு வரை பாடுபட்டவர். ஆகவேதான் ‘தந்தை பெரியார்’ என்றே இராமசாமி அழைக்கப்பெற்றார். தந்தையென்பதும் பெரியார் என்பதும் பெரியாருக்குக் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர்கள். உலகில் பெரியாருக்கு மட்டுமே இந்தச் சிறப்பு உண்டு என்பதைக் கவிஞர்களும், அறிஞர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பெரியார் ஒருவர்தான் பெரியார்
பெருமைக்குரியார் இவர்போல் பிறர் யார்?
பகைவர்தமை வாட்டி, பகைத்த கூர் ஈட்டி
தமிழர் புகழ்நாட்டி வாழ்ந்த வழிகாட்டி
(பெரியார் ஒருவர்தான் பெரியார்)

எனக் கவிஞர் காசி ஆனந்தன் தம் பாடலில் பெருமைப் படுத்தியுள்ளார்.

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலரையும், தந்தை பெரியாரையும் இணைத்து அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழியாக வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். பொழிவுரை வழங்கவும், நூலை வெளியிடவும் நல்வாய்ப்பு வழங்கிய இயக்குநர் முனைவர் கா.மு. சேகர் (மு.கூ.பொ.) அவர்களுக்கு உளங்கனிந்த நன்றி, இப்பணிக்குத் துணைநின்ற இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் இணைப்பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி அவர்களுக்கும் நன்றி. மெய்ப்புத் திருத்தம் செய்து சிறந்த முறையில் நூல்வெளிவர உதவிய முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் எனது நன்றி.

முத்து. குணசேகரன்

பொருளடக்கம்

ஆசிரியர் குறிப்பு



பேராசிரியர் முத்து. குணசேகரன் தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டத்தைச் சேர்ந்த கொடியம்பாளையம் என்னும் கடற்கரைச் சிற்றூரில் 04.03.1938இல் பிறந்தார். தந்தை முத்து; தாயார் லோகாம்மாள். கொடியம் பாளையத்தில் தொடக்கக் கல்வியையும், ஆயங்குடிப்பள்ளம் வெங்கடேசா உயர்நிலைப் பள்ளியில் உயர் நிலைக் கல்வியையும் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புகுமுகவகுப்பு, இளங்கலை, முதுகலை, பி.எட்., எம்.எட். பட்டங்களைப் பெற்றார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் எம்.ஃபில் பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ம. சிங்காரவேலர் குறித்து முனைவர் பட்டமும் பெற்றார்.

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் மீது இவர் கொண்ட பற்றைப் போல் பொதுவுடைமைக் கொள்கைகளிலும், செயல்பாடுகளிலும் அளவிலாப் பற்றுக் கொண்டவர். 1967 முதல் 2000 வரை தமிழ்நாட்டு அரசு கல்லூரிகளிலும், சென்னைப் பல்கலைக்கழகம் அஞ்சல் வழிக் கல்வித்துறையிலும் துணைப் பேராசியராகவும், பேராசிரியராகவும் முறையே பணியாற்றினார். பேராசிரியர் ந. சஞ்சீவியும், பேராசிரியர் கு. மோகனராசும் பொறுப்பாளராகவும் நெறியாளராகவும் இருந்து வழிகாட்டினர். அடித்தட்டு மக்களின் உயர்வே தமது இலட்சியம் என வாழ்ந்த ம. சிங்காரவேலரின் கொள்கைகளைப் பின்பற்றி அடித்தட்டு மக்களான தலித்துகள், மீனவர்கள் இவர்களுக்கு உழைப்பதைத் தமது உயிர்ப்பணியாகக் கொண்டார்.

தமிழ்நாடு-புதுவை மீனவர் கூட்டமைப்பின் தலைவர், கட்டுமரம்-விசைப்படகு தொழிலாளர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், ம. சிங்காரவேலர் கல்வி அறக்கட்டளை, ம. சிங்காரவேலர் தமிழ்ச் சங்கம், வடசென்னை ந.ஜீவரத்தினம் பேரவை, பாரதிதாசன் மன்றம், திருவள்ளுவர் இலக்கியக் கழகம் ஆகியன இவர் ஆளுமையில் செயல்படுகின்றன. திருவண்ணாமலைப் பகுத்தறிவுக்கழகம், கடலூர் பெரியார் தமிழ்ச் சங்கம் இவரால் தொடங்கப் பெற்றவை.

1. எதற்கும் முன்னோடி ம. சிங்காரவேலர்

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் 18.2.1860இல் தோன்றி 11.2.1946இல் மறைந்தார். தமிழகத்தில் தோன்றிய சிந்தனையாளர்கள் மட்டுமின்றி இந்திய அளவில் தோன்றிய அறிஞர்களில் குறிப்பிடத்தகுந்தவர் சிங்காரவேலர். தொடக்கக் காலத்தில் காங்கிரஸ் கட்சியில் செயற்குழு உறுப்பினராகவும் தொண்டர் படைத் தளபதியாகவும் இருந்து செயல்பட்டவர். காங்கிரசில் இருந்தபொழுது 1925ஆம் ஆண்டில் யானைக் கௌனி தொகுதியிலிருந்து நகராண்மைக் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் நகராண்மைக் கழக உறுப்பினராக இருந்தபொழுது செயற்கரிய பல சாதனைகளைச் செய்தார். நகராண்மைக் கழக அலுவலகங்களில் அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப் படத்தை வைக்க வேண்டுமென்றார். இன்றைக்கு அனைவருக்கும் பயன்படுகின்ற மின்சாரம், தொலைபேசி, டிராம் போக்குவரத்து அனைத்தையும் நகராண்மைக் கழகம் ஏற்க வேண்டுமென்று அதற்காகத் தீர்மானம் தந்ததுடன் அதன் செயல்பாட்டிற்கும் கடினமாக உழைத்தவர் சிங்காரவேலர்.

இந்தியத் துணைக் கண்டத்தில் பொதுவுடைமை இயக்கம் கால் கொள்வதற்கு முன்னரே தனியார் துறைகளை மக்கள் நலம் கருதி அரசுடைமை ஆக்க வேண்டுமென்று முதன்முதல் குரல் கொடுத்தவர் அவர். நகராண்மைப் பள்ளிக் கூடங்களில் மாணவ மாணவியருக்குப் பகல் உணவு வழங்கவும், கூடுதலான பள்ளிகளை உருவாக்கவும், சூதாட்டத்தை ஒழிக்கவும் குரல் கொடுத்தவர் அவர். பள்ளிகளில் குழந்தைகளின் மனங்களில் சமய வெறியையும், போர் வெறியையும் தூண்டும் பாடத்திட்டங்கள் அமையக் கூடாதென்று குரல் கொடுத்த மேதையவர்.

படிக்கும் குழந்தைகள் ஆசிரியர்களால் அரவணைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டுமேயல்லாது, மாணவர்களை அடித்தோ, துன்புறுத்தியோ, பயமுறுத்தியோ பயிற்றுவிக்கும் போக்கு ஆசிரியர்களுக்கு அறவே கூடாதென்றார் சிங்காரவேலர். முதன் முதல் மழலைக் குழந்தைகளுக்குத் தனிப்

பயிற்சியும், அழகிய பூங்காக்களும் அமைக்கப் படவேண்டு மென்றவர் ம. சிங்காரவேலர்தாம்.

சிங்காரவேலர் காங்கிரசில் இருந்தாலும் தொடக்க காலத்திலேயே இடதுசாரி சிந்தனை கொண்டு சோவியத்து ரஷ்யாவின் பொதுவுடைமைக் கொள்கையை மானசீகமாக ஏற்றார். பொதுவுடைமைக் கொள்கையே அனைத்து மக்களுக்கும் நன்மை செய்யும் எனவும், முதலாளித்துவம் அறவே ஒழிக்கப்பட வேண்டுமெனவும் குரல் கொடுத்த மேதையவர். பொதுவுடைமை இயக்கத்திற்கு முன்னோடி இயக்கமான 'இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கட்சி' என்ற இயக்கத்தைத் தோற்றுவித்து 1923லேயே கதிர் அரிவாள் சின்னம் பொறித்த கம்யூனிஸ்டு கொடியுடன் காங்கிரஸ் கொடியையும் ஏற்றி ஆசியாவிலேயே முதன் முதல் மே தினம் கொண்டாடிய மேதையவர்.

அக்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையும், போர்களையும், முதலாளித்துவச் சுரண்டல்களையும் நன்குணர்ந்து, 1922லேயே கயா காங்கிரசில் இந்தியாவிற்கு வேண்டுவது 'பரிபூரண சுயராஜ்யமே' எனக் குரல் கொடுத்த மேதை சிங்காரவேலர். இந்திய அரசியல் அமைப்பில் தொழிலாளர்களும், விவசாயிகளும் ஓர் அங்கமானால் மட்டுமே அடித்தட்டு மக்கள் உயர முடியுமென அக்காலத்திலேயே சிந்தித்தவர் சிங்காரவேலர். அக்காலத்தில் சிங்காரவேலர் வழங்கிய அரசியல் கோட்பாடுகளை எம்.என். ராயின் *வேன்கார்டு* இதழ் மனந்திறந்து பாராட்டியுள்ளதை இந்தியர்கள் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய செய்தியாகும்.

அரசியல், சமுதாயச் செயல்பாடுகளுக்கும் அறிவுத் துறைகளுக்கும் இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னோடியாக இருந்து செயல்பட்டவர் ம. சிங்காரவேலர். 26.12.1925இல் இந்தியாவின் கம்யூனிஸ்டு இயக்கத்தைச் செங்கொடியுடன் ஏற்றி வைத்தவர் சிங்காரவேலரே. சிங்காரவேலர் இறுதிக் காலம் வரை யாருக்கும் அஞ்சாத போர்க்குணம் மிகுந்தவராகவே வாழ்ந்தார். இந்தியா, ஆசியா மட்டுமல்ல, ஐரோப்பாவில் அமெரிக்காவில் அநீதி நடைபெற்றாலும் அதற்காகவும் குரல் கொடுக்கும் முதல் மனிதராகச் சிங்காரவேலர் திகழ்ந்தார். தொழிற்சங்க முன்னோடியான இவர், சாக்கோ, **வான்சிட்டி** ஆகிய இருவரையும் அமெரிக்க அரசு மின்சார நாற்காலியில் வைத்துக் கொன்றபொழுது அதனை எதிர்த்துச் சென்னை நேப்பியர் பூங்காவில் கண்டனக் கூட்டத்தை நடத்திய முன்னோடி ஆவார்.

மாமேதை லெனின் இறப்பின்போது காங்கிரஸ் இயக்கம் இரங்கல் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று முதன் முதல் முன்மொழிந்தவர் சிங்காரவேலர். தமது பத்திரிகையான 'லேபர் கிஸ்ஸான் கெஜட்டில்' இரங்கல் உரை எழுதிப் பிரிட்டிஷ் அரசையே நிலை குலைய வைத்த மேதையவர். அதனாலேயே அவர்மீது கான்பூர் சதிவழக்கென்ற நூதன வழக்கும் தொடுக்கப்பட்டது. பாசிசம், நாசிசம் அழிந்தே தீரும் என்று ஆருடம் கூறிய சிங்காரவேலர் வேல்ஸ் இளவரசர், காநாட்டுக் கோமகன், சைமன் இவர்கள் வருகையின்போது எதிர்ப்பியக்கம் நடத்தி வீதிக்கும் வந்து போராடினார்.

அரசியல் துறைகளில் முன்னோடியான அவர் எழுத்துத் துறைகளிலும், அறிவியல் துறைகளிலும் முன்னோடியாகவே வாழ்ந்தார். அவர் தொட்டு விளங்காத துறைகளே கிடையா. அரசியல், மானிட இயல், வானியல், உளவியல் அனைத்தைப் பற்றியும் சிந்தித்த அந்த மேதை, அனைத்தும் தாய் மொழியில், தமிழ் மொழியில்தான் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றார். ஆங்கிலத்தில் விற்பன்னரான அவர் சென்னை நகர்மன்றத்தில் தமது கன்னிப் பேச்சைத் தமிழிலேயே பேசியது இன்றைக்கும் நமக்கெல்லாம் வழிகாட்டும் முன்னோடி முயற்சியாகும்.

அன்றைக்கு வெளிநாடுகளிலிருந்து வருகை தருகின்ற அறிஞர்கள், சக்லத்வாலா போன்றவர்கள் தொடர்புகொள்ளும் முகவரி என்பது 22, சௌத் பீச் ரோடு என்கின்ற சிங்காரவேலர் வீடாகவே இருந்தது. இன்றைக்கும் தமிழால் பயிற்றுவிக்க முடியுமா எனக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் விவாதம் நடைபெறுகிறது. அன்றைக்கே காலம், இடம் ஐன்ஸ்டீன் தத்துவத்தையும், லாப்லஸ் வெண்மேகச் சித்தாந்தத்தையும் மற்றும் மெக்காபி, ஹெர்பர்ட்ஸ்மென்சர் போன்றோரின் தத்துவங்களையும், டார்வினிசம், மார்க்சியம் குறித்தெல்லாம் தமிழில் எழுதிய முன்னோடி சிங்காரவேலர்.

ஒரு காலத்தில் புத்த சங்கம் அமைத்து அறிஞர்கள் அயோத்திதாச பண்டிதர், சிங்காரவேலர், இலட்சுமி நரசு நாயுடு ஆகியவர்கள் பேரியக்கமாகச் செயல்பட்டனர். அந்த இயக்கமே 22, சௌத்பீச் ரோடு என்ற சிங்காரவேலர் வீட்டில்தான் செயல்பட்டது. தமிழ்த்தென்றல் திரு.வி.க., 'டார்வினிசத்தையும், மார்க்சியத்தையும் சிங்காரவேலரிடம்தான் கற்றேன்' எனத் தனது வாழ்க்கைக் குறிப்பில் பதிவு செய்துள்ளார். மார்க்சியம் மட்டுமல்ல, ஜார்டனோ, புரூனோ போன்ற அறிவியல் அறிஞர்களைத் தமிழர்க்கு அறிமுகம் செய்த முன்னோடி

சிங்காரவேலர். மூலதனத்தின் சுருக்கத்தை முதலில் தந்தவர் சிங்காரவேலர்தாம்.

1800களில் இந்தியாவில் தொழிலாளர்கள் ஒற்றுமை உணர்வு தோன்றிவிட்டாலும் 1905இல் தூத்துக்குடியில் தொழிற் சங்கத்தை அமைத்தவர் வ.உ.சி. அதன் பின்னர் 27.4.1918இல்தான் சென்னையில் தொழிற்சங்கம் தோற்றம் பெற்றது. வாடியா, திரு.வி.க., செல்வபதிச் செட்டி, சக்கரைச் செட்டி போன்றவர்களுக் கெல்லாம் 'கூலி உயர்வு மட்டும் நம் நோக்கமாக இருக்கக் கூடாது; தொழிலிலும் பங்கு வேண்டும்' என்னும் உன்னத தத்துவத்தை முதன் முதல் உணர்த்தியவர் சிங்காரவேலர்தாம். பொருளுக்கு ஏற்ற முறையில், கருத்துக்கு ஏற்ற முறையில் பல பத்திரிகைகளில், பல புனைபெயர்களில் எழுதிய முன்னோடி ம. சிங்காரவேலர்.

அறிவியலைத் தமிழகத்தில் அறிமுகம் செய்ததில் முன்னோடியான சிங்காரவேலர் அனைத்துச் செய்திகளும் மக்களுக்குப் பொதுவாக வேண்டுமென்னும் முனைப்புடைய முன்னோடி ஆவார். அக்காலத்தில் 'விண்மீன்களும் அணுக்களும்', 'நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சம்', 'கடவுளும் பிரபஞ்சமும்', 'பிரபஞ்சத்தின் வாழ்வு', 'மூலப் பொருள்களும், அணுக்களும்', 'அணுக்களுக்கப்பால்' என்பன போன்ற அரிய நூல்களையெல்லாம் தமிழர்க்கு அறிமுகம் செய்த முன்னோடி ம. சிங்காரவேலர்.

சுயமரியாதையை விதைத்த தந்தை பெரியாரும், சமதர்மம் விதைத்த சிங்காரவேலரும் இணைந்து 'சுயமரியாதைச் சமதர்ம இயக்கம்' கண்டனர். அப்பொழுது இந்தியாவே இருவரின் செயல்பாட்டால் நடுங்கியது. இந்திய அரசு பொதுவுடைமை இயக்கத்தையே தடையும் செய்தது. அந்தக் காலத்தில் பெரியாரின் குடியரசு, புரட்சி, பகுத்தறிவு, பத்திரிகைகளிலும், புதுவை முரசு, புதுவுலகம் ஆகிய பத்திரிகைகளிலும் சிங்காரவேலர் எழுதினார். இக்காலத்தில் மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக்கும் பெரும் முயற்சியில் சிங்காரவேலர் முன்னின்றார். மூட நம்பிக்கைகளை ஒழிப்பதில் பெரியாரும் சிங்காரவேலரும் முன்னின்றனர். உலகத் தமிழர்கள் வினாத்தொடுக்க அவற்றிற்கெல்லாம் சிங்காரவேலர் விடையளித்தார் என்பது வியப்புக்குரியது!

கல் மழை, இரத்த மழை, மீன் மழை, கல்யாணம் என்றால் என்ன? ஜட தத்துவம், பகுத்தறிவு என்றால் என்ன? வேலையில்லாத் திண்டாட்டம், கர்ப்பத்தடை பித்தம், லாஸ்கி அம்மையாருக்கு விடை என்ற அனேக தலைப்புகளில்

சிங்காரவேலரின் கட்டுரைகள் வெளிவந்தன. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, வெனிசுலா, பாகு போன்ற நாடுகளைப் பற்றித் தமிழர்க்கு எழுதிய முன்னோடி சிங்காரவேலர். 2004இல் உலக நாடுகளை உலுக்கி எடுத்த சுனாமி போன்றதைப் பற்றிகூடச் சிங்காரவேலர் எழுதியுள்ளது வியப்புக்குரியதல்லவா?

அன்றைக்கு வெளிவருகின்ற நூல்கள் அனைத்தையும் முதன் முதலாக வாங்குகின்ற வழக்கம் சிங்காரவேலருக்கு இருந்தது. இந்தியாவில் தனிப்பட்டவர்கள் நூலகங்களில் சிங்காரவேலர் நூலகம் மிகப் பெரியது. 20,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் அதில் இடம் பெற்றிருந்தன. சிங்காரவேலர் அவை பொதுவுடைமை இயக்கத்திற்கே சொந்தமென உயில் எழுதி வைத்தாலும் போற்றுவார் இல்லாமல் அவை அனைத்தும் அழிந்தன என்பது துன்பியல் வரலாறு. எண்ணற்ற செயல்பாடுகளுக்கு முன்னோடிகளாகச் சிங்காரவேலரும், தந்தை பெரியாரும் இருந்தனர். மானிட மேன்மைக்கு இருவரும் இணைந்து செய்யாத பணிகளே கிடையா. அனைத்துச் செய்திகளும் இன்னும் சரியாகச் சொல்லப்படவில்லை என்கின்ற ஏக்கம் நல்லவர்களுக்கு இன்றைக்கும் நிறையவே இருக்கிறது.

தந்தை பெரியாரைப் பல்வேறு வல்லுநர்கள் புகழ்ந்திருப்பதைப் போலச் சிங்காரவேலரையும் அறிஞர் பெருமக்கள் வாயார, நெஞ்சாரப் புகழ்ந்துள்ளனர். இனி, சிங்கார வேலரின் வாழ்க்கை வரலாற்றை அந்த அறிஞர்களின் புகழ்மொழியைத் தொடக்கமாகக் கொண்டு, சிங்காரவேலர் பிறப்பு முதல் இறப்புவரை நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைக் கால வரிசைப்படி தொகுத்தளித்துள்ளேன். இனி அவரின் வரலாற்றைப் படியுங்கள்.

அவர் வரலாற்றை எழுதும்பொழுது பல நூல்களும் தரவுகளாகக் கிடைத்தன. அவற்றையெல்லாம் அகரவரிசைப் படுத்தாமல் தரவுப் புத்தகங்களுக்கெல்லாம் எண்ணைக் குறிப்பிட்டுள்ளேன். செய்திகள் பேசப்படும்போது அங்கேயே தரவுக்கான புத்தக எண்ணையும் புத்தகப் பக்கத்து எண்ணையும் குறிப்பிட்டுள்ளேன். மேலும் எப்புத்தகத்தின் தரவு என்பதை அறிய விரும்புகின்றவர்கள் புத்தகத்தின் கடைசியில் அமைந்துள்ள துணை நூல்கள் பட்டியலைப் பார்த்தால் தேவையான விவரங்களை அறிய முடியும்.

இனி, சிங்காரவேலரைப் புகழ்ந்த அறிஞர்கள் புகழ் மொழி தொடக்கம் கால வரிசைப்படி சிங்காரவேலரின் வரலாற்றை அறியலாம்.

அறிஞர்கள் புகழ்ந்த சிங்காரவேலர்

சிந்தனைச்-சிற்பி ம. சிங்காரவேலர் நிறைவாழ்வு வாழ்ந்த மூதறிஞர். ஒரு காலத்தில் சிந்தனைச் சிற்பி என்றால் அது அவரை மட்டுமே குறித்தது. தனித்துவம் வாய்ந்த சிங்காரவேலர் மானிட வாழ்வில் அனைத்துச் செயல்பாட்டிற்கும் முன்னோடியாக வாழ்ந்தார். இந்தியாவின் அரசியல் செயல்பாடென்பது நான்கு பகுப்புகளை உள்ளடக்கிக் கொண்டிருப்பது. 1. தேசிய இயக்கம் 2. சுயமரியாதை இயக்கம் 3. சமதர்ம இயக்கம் 4. தொழிற்சங்க இயக்கம் என அவை நான்காகும். இந்நான்கு இயக்கங்களிலும் நீக்கமற நிறைந்திருந்தவர் அறிஞர் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் மட்டுமே.

அக்காலத்தில் சிங்காரவேலர் ம. சிங்காரவேலர் என்றே அழைக்கப் பெற்றார். சிங்காரவேலர் வாழ்ந்த காலத்தில், அறிஞர்கள் ஊரின் பெயரோடு சேர்த்தே அழைக்கப்படுவது மரபு. ஆகவே மயிலாப்பூரில் பிறந்த சிங்காரவேலர் அக்காலத்தில் ம. சிங்காரவேலர் என்றே அழைக்கப் பெற்றார். உவமைக் கவிஞர் சுரதா சிங்காரவேலரைப் பற்றிக் குறிப்பிடும் போது 'சிங்காரவேலர் நிறை வாழ்வு வாழ்ந்தவர் மட்டுமல்ல, நிறைய நிகழ்ச்சிகளை வாழ்வில் சந்தித்தவர்' என்று குறிப்பிடுவார். சிங்காரவேலர் வாழ்க்கையை ஆராய்கின்றவர்கள் இப் பேருண்மையை நிறையவே உணரமுடியும்.

கிரேன் முகர்ஜி

இந்தியாவில் நீண்ட காலம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் வங்கத்து அறிஞர் கிரேன் முகர்ஜி. அவர், [1]

> இன்னும் ஐந்நூறு ஆண்டுகள் கடந்த பின்னர் இந்திய மக்கள் இருபெரும் அறிஞர்களை மட்டுமே நினைவுகூர்வர். ஒருவர் இந்த மண்ணுக் கேற்ற பொதுவுடைமை இயக்கத்தைப் பற்றிச் சிந்தித்த சிந்தனையாளர் ம. சிங்காரவேலர்; மற்றொருவர்

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், பக்.24-27.

> மனிதனுக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய தன்மான உணர்வாகிய சுயமரியாதையைப் பற்றிச் சிந்தித்த தந்தை பெரியார். இவ் இருவர் மட்டுமே மிகச் சிறப்பாக மக்களால் நினைக்கப்படுவர்.

எனக் கிரேன் முகர்ஜி குறிப்பிட்டார்.

இந்தச் சொற்றொடர் ஆழ்ந்தகன்ற நுட்பமான பொருள் கொண்டதாகும். பேரியக்கமாக வாழ்ந்த சிங்காரவேலர் வாழ்ந்த காலத்தில் பல அறிஞர்களும் வாழ்ந்தனர். அவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1930களில் 22, சவுத் பீச் சாலையில் இருந்த ம. சிங்காரவேலர் நூலகத்தை முழுமையும் பயன்படுத்திக் கொண்டு தம்மை வளர்த்துக் கொண்டவர் அறிஞர் அண்ணா. ஒரு காலத்தில் 24 மணி நேரமும் சிங்காரவேலர் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தவர் பேரறிஞர் அண்ணா. திருவாசக மணி என்னும் 'சண்டே அப்சர்வர்' பி. பாலசுப்பிரமணியம்தாம் அண்ணாவின் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்தவர்; இல்லையென்றால் இன்னொரு நாகை கே. முருகேசனாக அண்ணா இருந்திருப்பார்.

பேரறிஞர் அண்ணா

அண்ணாகூடத் தம்முடைய இயக்கத்தை அரசியல் இயக்கமாக மாற்றிக் கொண்டதற்குப் பேரறிஞர் சிங்காரவேலர் தாம் காரணமாக இருந்தார். அறிஞர் அண்ணா அவர்கள், சிங்காரவேலரைப் பற்றி எழுதிய நினைவுக் கட்டுரை வரலாற்றிற்கு உரியது. இவர்தாம் சிங்காரவேலரைப் பற்றி,

> பச்சோந்திகளும், வெட்டுக் கிளிகளும் புகழப்பட்ட நேரத்தில், புரட்சிப் புலியை; சிங்காரவேலரை மக்கள் மறந்தனர். இல்லை, இல்லை. மறக்கும்படிச் செய்யப்பட்டனர். புரட்சிகள் அவருக்கு நிலாச்சோறு. கிளர்ச்சிகள் உவப்பானவை. சிறைவாசம் அவருக்குச் சகஜம். அவருக்கு இணையாகச் சொல்ல வேண்டுமானால் லெனினைச் சொல்லலாம், டிராட்ஸ்கியைச் சொல்லலாம்; சக்லத் வாலாவைச் சொல்லலாம். [1]

எனக் குறிப்பிட்டார்.

---

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், ப. 24.

மூதறிஞர் இராஜாஜி

இதற்கு இன்னும் ஒரு படி மேலே சென்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சிங்காரவேலரின் இறப்புச் செய்தியைப் பத்திரிகையில் கண்ட மூதறிஞர் இராஜாஜி, அன்றைக்கு, இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி அவர்கள்

> சிங்காரவேலரின் இறப்பும் நிகழ்ந்து விட்டது. சுதந்திரப் பித்தரும் யோக்கியர்களில் ஒருவருமாக இருந்த ம. சிங்காரவேலர் மறைந்து விட்டார். எனது ஆழ்ந்த இரங்கலைக் குடும்பத் தவர்களுக்குத் தெரிவிக்கவும். [1]

எனக் குறிப்பிட்டார். இந்தச் சொற்றொடர்கள் சாதாரண மானவையல்ல. வாழ்கின்ற காலத்தில் சிங்காரவேலரும், இராஜாஜியும் அரசியல் ரீதியாக முரண்பட்டே நின்றனர்; என்றாலும் இப்படிப்பட்ட சொற்றொடர் இராஜாஜியிடமிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டுமானால் சிங்காரவேலரின் ஆளுமை பேராண்மையுடன்தானே இருந்திருக்க வேண்டும்?

திரு.வி.க.

இன்னொரு அறிஞர், சிங்காரவேலரோடு இணைந்து தொழிற்சங்க இயக்கம் நடத்தியவர், திரு.வி.கலியாண சுந்தர முதலியார். இவரும் பல வேளைகளிலே முரண்பட்டே நின்றார். ஆனாலும் சிங்காரவேலரின் ஆளுமையை, பேரறிவை மதிக்கத் திரு.வி.க. தயங்கியதே இல்லை. 1921இல் வெளியான ஏ.எல். அய்யரின் 'சுதர்மா' பத்திரிகை ஓர் அரிய செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. தொழிற் சங்கம் தொடர்பாக அறிவார்ந்த முறையில் இருவரும் முரண்பட்டிருந்தாலும் சிங்காரவேலரை மதிக்கத் திரு.வி.க. தவறியதே இல்லை. [2]

பக்கிங்ஹாம் கர்னாட்டிக் மில்லில் வேலை நிறுத்தம் நடைபெற்றபொழுது, ஏழு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போது சுட்டுக் கொல்லப்பட்டனர். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் பரிகாரம் தேடுகின்ற குழுவைத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஏ.எல். அய்யர், வாடியா, செல்வபதிச் செட்டி, சக்கரைச் செட்டி போன்றவர்கள் உருவாக்கினர். அந்தக் குழுவிற்கு, பணப் பொறுப்புடைய அக்குழுவிற்கு, திரு.வி.க.

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், ப. 155.
2. மேற்படி

சிங்காரவேலரைத்தாம் தலைவராக நியமனம் செய்தார். அரசியலில் யோக்கியர் என்று இராஜாஜி குறிப்பிட்ட சொற்றொடரின் ஆழம் இப்பொழுது புரிகிறதல்லவா?

அதைப் போலவே சிங்காரவேலரின் பேரறிவில் மலைப்புடன் திகைத்து நின்றவர் திரு.வி.க. தம்முடைய இளமைக் காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டுவதன் மூலம் சிங்காரவேலரின் பேரறிவைப் பற்றித் திரு.வி.க குறிப் பிடுகின்றார். இளமைக் காலத்தில் திரு.வி.க. சைவப் பற்றுடையவராக மட்டுமல்ல, வெறியாகவே வாழ்ந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

அயோத்திதாச பண்டிதர், பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் இலட்சுமண நரசு நாயுடு, ம. சிங்காரவேலர் மூவரும் இணைந்து புத்தமகா சங்கக் கூட்டங்களை 22, சௌத் பீச் ரோட்டில் சிங்காரவேலர் வீட்டில் நடத்தி வந்தனர். அக்காலத்தில், இளமைத் துடிப்பின் காரணத்தால், சைவ மத வெறியால் புத்த மத அறிஞர்கள் ஏற்பாடு செய்கின்ற கூட்டங்களுக்குச் சென்று குழப்பம் செய்வதையே ஒரு கொள்கையாகவே திரு.வி.க. கொண்டிருந்ததாகத் திரு.வி.க.வே குறிப்பிடுகின்றார். ஆனாலும் சிங்காரவேலரின் பேரறிவு தம்மை எப்படி மடைமாற்றம் செய்தது என்பதைத் திரு.வி.க. பசுமையாகத் தமது 'வாழ்க்கைக் குறிப்பில்' குறிப்பிடுகின்றார்.

சிங்காரவேலர் உட்பட மேற்கண்ட அறிஞர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு புத்த மதக் கூட்டத்திற்குக் குழப்பம் செய்வதற்காகவே இளைஞரான திரு.வி.க. சென்றிருந்தாராம். அத்தகைய ஒரு கூட்டத்தில்தான் சிங்காரவேலர் திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியது தொடர்பான புராண நிகழ்ச்சியை விவரித்து விட்டு டார்வினுடைய பரிணாமம் தொடர்பான கொள்கைகளையும் விவரிக்க ஆரம்பித்தார்.

> குழப்பம் செய்வதற்காகவே அங்குச் சென்றிருந்த நான், சிங்காரவேலரின் சொல்லாற்றலில் என்னை இழந்தேன். என்னிடம் இருந்த மதம் தொடர்பான முரண்பாடுகள் அகன்றன. சிங்காரவேலர் எனக்கு அன்று முதல் ஆசிரியரானார். நான் அவருக்கு மாணவன் ஆனேன்.

என்று குறிப்பிடுகின்றார். இதனால் அறிஞர்களிடம் கூடச் சிங்காரவேலர் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றார் என்பதை நம்மால் உணர முடிகிறது.

நெ.து. சுந்தரவடிவேலு

இதைப் போலவே இன்னொரு ஆளுமை மிக்க அறிஞர், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நெ.து.சுந்தர வடிவேலு ஆவார். அவர்கள் சிங்காரவேலரைப் பற்றிக் கூறிய சில செய்திகள் சிங்காரவேலரின் ஆளுமையை உணர்த்தக் கூடியன.

> மாணவனாக இருந்த நான் சென்னைக் கடற்கரை ஓரமாகத்தான் மாநிலக் கல்லூரிக்குச் சென்று வருவேன். இன்றைக்கு விவேகானந்தர் சிலை இடம்பெற்றுள்ள இடத்தில் பிரம்மாண்டமான இரண்டடுக்கு மாடிக் கட்டடம் இடம் பெற்றிருந்தது. மிகப் பிரம்மாண்டமான வீடு அது. அந்த வீட்டைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான மீனவர்களின் குடிசைகள் இருந்தன. அந்தக் காலத்தில் அந்த வீட்டில்தான் ம. சிங்காரவேலர் குடியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் ஒரு நாளைக்கு இரு தடவைகள், வரும் பொழுதும், போகும் பொழுதும் அந்த இடத்தை நோக்கி வணங்கிவிட்டுச் சென்றிருப்பேன். அந்த வீட்டில்தான் சிங்காரவேலர் குடியிருந்தார் என்பதைப் பின்னர்தான் நான் தெரிந்து கொண்டேன். சிங்காரவேலர் பேரறிஞர். அவருடைய எழுத்துக்களெல்லாம் பல்கலைக் கழகங்களில் பாடங்களாக வைப்பதற்குரிய தகுதியுடையன. [1]

எனக் குறிப்பிட்டார்.

அரசியல் விடுதலை பொருளாதார விடுதலையாகவும், சமுதாயச் சமத்துவமாகவும் கனிய வேண்டும் எனத் தெளிவாக உணர்ந்த சிங்காரவேலர் 1921லேயே அண்ணல் காந்தியடிகளுக்குச் சமதர்மத்தைக் காங்கிரஸ் திட்டத்தில் கலக்க வேண்டுமென்று தந்தி கொடுத்த மேதை என்று நெ.து. சுந்தரவடிவேலு குறிப்பிடுகின்றார்கள். துணைவேந்தர்கள் கூட மதிக்கின்ற மாமேதையாக ம. சிங்காரவேலர் வாழ்ந்தார்.

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் 128ஆம் ஆண்டு சிறப்பு மலர், பக். 82-85.

கா. அப்பாதுரை

இன்னொரு குறிப்பிடத்தகுந்த தமிழறிஞர் கா.அப்பாதுரை. இவர் வாழுங்காலத்தில் பன் மொழியறிஞர் எனப் பாராட்டப் பெற்றவர். இவர் சிங்காரவேலரைப் பற்றிக் குறிப்பிடுவது உளங்கொள்ளத் தக்கதாகும்.

> வருங்காலத்தில் பகுத்தறிவு சமதர்ம உலகில் தமிழன் மதிக்கப்படாமல் போகான். அவன் இறந்து பட்டாலன்றி அவனுக்கு இடம் கிடைத்தே தீரும். அப்போது யார் இந்த ம.சிங்காரவேலு? எந்த நாடு அவரைப் பெற்றெடுத்தது? அவர் பேசியப் பேறு பெற்ற மொழி எது? என உலக மக்கள் கேட்பர். அக்காலத்தில் அவரா, எங்களுக்குத் தெரியாது அவர் தமிழ்நாட்டில் இருந்ததில்லையே என்று தமிழன் கூறாதிருக்க வேண்டுமானால், அவரையும் அவர் போன்று தமிழனுக்குழைத்த, உலகுக்கும் உழைத்த பெரியோர்களைப் பற்றிய வரலாறுகள் எழுதப்படவேண்டும்.

என்று கா. அப்பாதுரையார் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் குறிப்பாக இனங்காட்டப் படுகின்ற பேரறிஞராகச் சிங்காரவேலர் மதிக்கப்படுவாரென அப்பாதுரையார் குறிப்பிடுகின்றார்.

ஏ.எஸ்.கே. அய்யங்கார்

தமிழகத்தின் தொழிற் சங்கத் தலைவர்களில் தனித்தன்மை வாய்ந்தவர் ஏ.எஸ்.கே. அய்யங்கார். சிங்காரவேலரை முன் மாதிரியாகக் கொண்டு தொழிற்சங்கப் பணியாற்றியவர் ஏ.எஸ்.கே. அய்யங்கார். நல்ல கொள்கையாளர்களுக்குத் திருமணம் இடையூறானது என்ற சிங்காரவேலரின் மொழியைப் பொன்னே போல் போற்றித் தம் திருமணத்தையும் புறக்கணித்து விட்டு நாட்டுரிமைக்காக உழைத்த உத்தமர் ஏ.எஸ்.கே. அய்யங்கார்.

இவர் சிங்காரவேலர் தொடர்பாகச் சொன்ன சில கருத்துகள் சிங்காரவேலரை இனங்காட்டக் கூடியன. சென்னையில் 27.4.1918இல் சென்னைத் தொழிலாளர் சங்கம் ஏற்படத் திரு.வி.க., வாடியா, ஸ்ரீ சக்கரைச்செட்டி, செல்வபதிச் செட்டி, ஆகிய தலைவர்களுக்கு உதவியவர் ம. சிங்காரவேலர். 1923லேயே சென்னை நகரில் இரு இடங்களில் முதன் முதலாகக் காங்கிரஸ் கொடியுடன் கதிர் அரிவாள் சின்னம் பொறித்த செங்கொடி ஏற்றி, சர்வதேசப் பாட்டாளி மக்களின் மே தினத்தை

வெற்றிகரமாகக் கொண்டாடியவர் ம. சிங்காரவேலர் எனக் குறிப்பிடுகின்றார். அரசியல் மட்டுமல்ல இன்னும் பல செயல்பாடுகளுக்கும் சிங்காரவேலர் தமிழகம் மட்டுமல்ல, இந்திய அளவில் முன்னோடியாக வாழ்ந்திருப்பதை இதனால் அறிகின்றோம்.

நாகை என். காளியப்பன்

பெரியார் பெருந்தொண்டர்களில் நாகை என். காளியப்பன் குறிப்பிடத்தகுந்தவர். சுயமரியாதைக் கொள்கைக் காகவும், தொழிற் சங்கப் போராட்டத்திற்காகவும் பலமுறை சிறை சென்றவர். சிங்காரவேலரை எப்படியும் தண்டித்தே ஆக வேண்டும் என்பதற்காகவே தென்னிந்திய இரயில் சதிவழக்கில் வேண்டுமென்றே சிங்காரவேலருக்கு எதிராக 500க்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். லேடி வெலிங்டனுடன் டென்னீஸ் ஆடுகின்ற உயர் நீதிமன்ற நீதிபதி லெட்சுமணனால் சிங்காரவேலருக்குப் பத்தாண்டுகள் சிறைத் தண்டனை விதித்ததில் என்ன ஆச்சரியம் இருக்கமுடியுமென என். காளியப்பன் குறிப்பிடுகின்றார்.

அரசியல் ரீதியாகச் சிங்காரவேலர் ஆள்வோருக்குச் சிம்ம சொப்பனமாக வாழ்ந்தார் என்பதை நாகை என். காளியப்பன் போன்றோர்களின் கூற்றால் தெளிவாகவே அறிகின்றோம். அக்காலத்து இரகசியக் காவலர்கள் குறிப்புகூடச் சிங்காரவேலரை Noted agitator, Notorious agitator என்றே குறிப்பிட்டுள்ளதை நாம் அறிய முடிகிறது.

ம.பொ.சி.

அறிஞர் ம.பொ.சி. தமிழக அரசியலிலும், இந்திய அரசியலிலும் முக்கியமானவராகவும், முன்னோடியாகவும் வாழ்ந்தவர். மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்றெல்லாம் இன்றைக்குப் புதுமையாக எழுப்பப்படுகின்ற பல கோஷங்களின் முன்னோடி ம.பொ.சி.

> தோழர் ம. சிங்காரவேலர் எனக்கு வழி காட்டியாக வாழ்ந்த மூதாதையாவார். அரசியல், பொருளாதாரம், சமுதாயம், மொழி ஆகிய கொள்கைகளில் அவருடைய வாரிசுகளில் ஒருவனாக நான் என்னைக் கருதிக் கொள்ளுகிறேன்.[1]

---

1. ம.பொ.சி., சிந்தனைச்சிற்பி 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், பக்133-138.

> இந்தியாவிலே குறிப்பாகத் தமிழ் நாட்டிலே தோன்றிய இயக்கங்களை வரிசைப்படுத்திச் சொல்ல வேண்டுமானால் காலத்தால் மூத்தது தேச விடுதலைக்கான தேசிய இயக்கம் காங்கிரஸ். அதற்கடுத்தது, தொழிற்சங்க இயக்கம். இந்த இரண்டோடும் தொடர்பு கொண்டு வளர்ந்தது வர்க்கப் புரட்சி இயக்கம். இவற்றிற்குப் பின்னர், தமிழ் நாட்டில் தனித்துத் தோன்றியது 'சுயமரியாதை இயக்கம்'. இந்த நான்கு இயக்கங்களிலுமே நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்த ஒருவரைச் சொல்ல வேண்டுமென்றால், அவர் தோழர் ம. சிங்காரவேலராகத்தான் இருக்க முடியும்.

என ம.பொ.சி. குறிப்பிடுகின்றார்.

பல்வேறு இயக்கங்களில் தொடர்பு உடையவராகச் சிங்காரவேலர் இருந்ததை நாம் தெளிவாகவே அறியமுடிகிறது. பொதுவுடைமைத் தலைவர்களிலேயே இங்கிதம் பேசாமல், வெட்டொன்று துண்டு இரண்டு என்பதைப் போலவே பொருளாதார விடுதலைக்காகக் குரல் கொடுத்த அவர், பொதுவுடைமையின் அடிப்படைத் தத்துவமான நாஸ்திகத்தின் பாற்பட்ட கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு, அனைத்திற்கும் குரல் கொடுக்கின்ற தனித் தன்மை வாய்ந்த மாமனிதராகச் சிங்காரவேலர் திகழ்கின்றார்.

குத்தூசி குருசாமி

தமிழகத் தலைவர்களிலே மிகமிகத் தூய்மையானவராக, இலஞ்சம், லாவண்யம் அற்றவராக, எளிமையின் திருவுருவாக வாழ்ந்தவர் குத்தூசி குருசாமி. சிங்காரவேலரிடத்தும், பெரியாரிடத்தும் பெரும் பற்றுக் கொண்டு வாழ்ந்தவர். பெரியார், சிங்காரவேலர் இணைந்து செயல்படுபவதற்குப் பெருங் காரணமானவர்களில் ஒருவர். தமக்குப் பிறந்த அருமையான பெண் குழந்தைக்குச் சிங்காரவேலர் சொன்னதற்காகத் தம் மகளுக்கு 'இரஷியா' எனப் பெயர் வைத்து அழகு பார்த்தார். அப் பெருந்தகை சிங்காரவேலர் பற்றிக் குறிப்பிட்ட சில புகழ் மொழிகள் சிங்காரவேலரின் ஆளுமையைப் புரிந்து கொள்ளப் பயன்படுவதாகும்.

> சிங்காரவேலருக்கு வான நூல் முதல் நில நூல் வரையில், தத்துவ நூல் முதல் தாவர நூல் வரையில், பொதுவுடைமை நூல் முதல் உடற் கூற்று நூல் வரையில் படித்து அறிந்திருந்த நூற்கள் ஒன்றல்ல, பலப்பல.
>
> முதிர்ந்த மூளை; நல்ல அனுபவம்; அவர் அக்கிரஹாரத்தில் பிறக்கவில்லை. பிறந்திருந்தால் அவருக்கு ஒரு நினைவு மண்டபமும் எழும்பி இருக்கும்! அவரை முதலாளித்துவ உலகமும், அக்கிரகாரமும் தலைமேல் வைத்துக் கொண்டாடி இருக்கும். [1]

எனக் குறிப்பிட்டார். குத்தூசியின் கட்டுரை சிங்காரவேலரின் உண்மையான பெருமைகளை உலகிற்குக் காட்டப் போதுமானதாகும்.

தந்தை பெரியார்

அனைத்து அறிஞர்களை விடத் தந்தை பெரியார் தனித் தன்மை வாய்ந்தவர். தமிழர்களின் குறிப்பாகத் தாழ்த்தப் பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப் பட்டவர்களின் தலையெழுத்தையே மாற்றியமைத்த மேதையவர். 1930களில் சிந்தனைச் சிற்பியுடன் இணைந்து சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் கண்டவர் தந்தை பெரியார். யார் யாருக்கு எவ்வளவு தகுதியோ அந்தளவு மட்டுமே புகழக் கூடியவர். தேவையில்லாமல் யாரையும் புகழ்ந்து பேசாதவர். அந்த மேதை சிங்காரவேலரைப் பற்றிப் பொன்மலை இரயில்வே தொழிற் சங்கத்தில் சிங்காரவேலர் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய சொற்கள் என்றென்றைக்கும் தமிழர்கள் மனங்கொளத் தக்கதாகும்.

> பொதுவுடைமை, பகுத்தறிவு சம்பந்தமாக அவரைப் போன்று அறிந்தவர்கள் அப்போது அவரைப்போல் யாரும் இல்லையென்றே கூறலாம். அவர் எப்பொழுதும் படித்துக் கொண்டே இருப்பார். அவர் வீடே புத்தகசாலையாகக் காட்சியளித்தது. கடினமான பிரச்சினைகள் குறித்தெல்லாம் எழுதுவார். அவர் தைரியமான நாஸ்திகர். காங்கிரசில் இருந்து

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், பக்.33-34.

> கொண்டே சட்ட சபையில் கடவுளின் பேரால் பிரமாணம் எடுக்கக் கூடாது என்று தீர்மானம் கொண்டு வந்தார். எதையும் ஆராய்ச்சி செய்யும் பண்பும், துணிச்சலும் தைரியமும் உடைய அவரைப் போன்ற ஆராய்ச்சியாளர்கள், நிறைய விஷயம் உணர்ந்து வாதிப்பவர்கள் அவருக்குப் பிறகு தோன்றவே இல்லை.

என்று தந்தை பெரியார் பேசினார்.

இதனால் சிங்காரவேலரின் கொள்கை, கோட்பாடு, தைரியம், நூலறிவு, நுண்ணறிவு போன்ற பல விஷயங்களைப் பற்றி நாம் நிறையவே அறிய முடிகிறது. தந்தை பெரியாரின் இதயமே எதற்கும் ஒடியாத இரும்பு இதயம் என்பார்கள். அந்த இரும்பு இதயமே இப்படி சிங்காரவேலரைப் பற்றிக் குறிப்பிடுமானால் சிங்காரவேலரின் ஆண்மையைப் பற்றி அறிந்து கொள்ள நமக்கு வேறு என்ன அளவுகோல் தேவை?

எம்.என். ராய்

தந்தை பெரியாரைப் போலப் பெரும் அரசியல் செல்வாக்கிற்கும், புகழுக்கும் காரணமானவர் எம்.என். ராய் பொதுவுடைமைக் கொள்கையின்பால் ஈடுபாடு கொண்டு 1920களிலேயே சோவியத்து லெனினோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தவராவார்.

இந்தியாவில் இரகசியமாக இயங்கிக் கொண்டிருந்த கம்யூனிசக் குழுக்களான லாகூர், கல்கத்தா, பம்பாய், சென்னைக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்தவர் எம்.என்.ராய். இந்தியாவில் உள்ள அனைத்துக் குழுக்களையும் ஒருங்கிணைக்கக் கூடிய தகுதியும் திறமையும் சிங்காரவேலருக்கு மட்டுமே இருப்பதாக ராய் குறிப்பிட்டுள்ளதை ஆவணக் காப்பக இரகசியக் குறிப்புகளால் நாம் அறிய முடிகிறது.

Archives of Madras - Under Secretary safe file 492 dated 09.07.1924 என்ற இரகசியக் குறிப்பால் சிங்காரவேலரின் ஆளுமையையும், பெருமையையும் நாம் அறிய முடிகிறது. அந்த இரகசியக் கடிதத்தில் எம்.என். ராய் சிங்காரவேலரைப் பற்றி ‘A few remarks about M. Singaravelu, I was convinced he was the best man available to be figure head of the legal part. He is very energetic and possess a very splendid spirit’ என்று குறிப்பிடுகின்றார்.

இக்கடிதத்தில் 'அங்குள்ள எங்களில் மிகவும் தகுதியுடையவர் சிங்காரவேலர் மட்டுமே. இவர் மூலம்தான் காங்கிரஸ் இயக்கத்தில் பொதுவுடைமைக் கொள்கைகளைக் கொண்டுசெல்ல முடியுமென எம்.என். ராய் குறிப்பிடுவாரானால், அப்பொழுது இந்தியாவில் வாழ்ந்த பொதுவுடைமைத் தலைவர்களான செளகத் உஸ்மானி, முசாபர் அகமட், அமர்த கௌரி டாங்கே, குலாம் உசேன், ஹாசன், மணிலால், சமன்லால் இவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கக்கூடிய தகுதியைச் சிங்காரவேலர் மட்டுமே பெற்றிருந்ததை எம்.என். ராய் கடிதத்தால் அறிகிறோம்.

சுரதா

'மற்றவர்களைச் சிந்தனையாளர் என்பதற்கும் சிங்காரவேலரைச் சிந்தனையாளர் என்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு' என்பார் சுரதா. 'சிந்தனையின் முழு வடிவமாகவே வாழ்ந்தார் சிங்காரவேலர்' என்பார் அவர்.[1]

இளமைக் காலத்தில் சென்னைக்கு வந்து விட்ட சுரதா, காலை வேளையில் சிங்காரவேலரை அவர் மாளிகையில் காணலாமே என்று 22, சவுத் பீச் ரோட்டிலுள்ள திருவல்லிக்கேணி வீட்டிற்குச் சென்றாராம். வீட்டின் முன்னால் அகன்று பரந்து விரிந்து கிடக்கின்ற பூந்தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டுச் சுரதா காலார நடந்து வந்தவர் அழகாக மலர்ந்திருந்த பூவொன்றைப் பறித்தாராம்.

யார் அங்கே? என்ற அதட்டல் சத்தத்தால் மிரண்டு போன சுரதா, அமைதியாக ஆதவனின் அழகை இரசித்துக் கொண்டிருந்த சிங்காரவேலரை அங்கே கண்டாராம். பறித்த பூவோடு குடு குடுவென்று ஓடிய சுரதா மன்னிப்பு கேட்கும் தோரணையில் சிங்காரவேலர் அருகில் சென்று நின்றாராம். எப்பொழுதும் சிந்தனை தோய்ந்த கடு கடுத்த முகத்தோடிருக்கும் சிங்காரவேலர் இப்பொழுது நிதானமாக 'ஏன் இந்தப் பூவைப் பறித்தாய்? என்றாராம். கடுமையான குணமுடைய சிங்காரவேலரிடம் எதையாவது சொல்ல வேண்டுமே என்பதற்காகச் சுரதா, இந்த மலர் அழகாக இருக்கிறது, மணமாக இருக்கிறது, ஆகவே பறித்தேன்' என்று கூறினாராம். அதன் பிறகு சிங்காரவேலர் பேசியதுதான் என்னை வேறு வகையில் சிந்திக்க வைத்தது என்று சுரதா கூறினார்.

---

1. மபொ.சி., சிந்தனைச்சிற்பி 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், ப.32.

> இந்தப் பூ அழகாக இருப்பது உனக்காகவல்ல. இந்தப் பூ மணத்துடன் இருப்பதற்குக் காரணம் இருக்கிறது. இந்தப் பூ தேனைச் சுமந்து கொண்டு நிற்பதற்கும் காரணம் இருக்கிறது. பூக்கள் அழகாக வண்ணத்துடன் இருப்பதற்குக் காரணமே வண்டுகளைக் கவரத்தான். பூக்கள் தேனைச் சுமந்து நிற்பதற்குக் காரணமே வண்டுகளுக்கு உணவளிக்கத்தான். உணவுக்காகத் தேனைத்தேடி வருகின்ற வண்டுகள் மலர்களில் அமர்கிற பொழுது மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதால் பூக்களின் இனப்பெருக்கம் நடைபெறுகிறது.
>
> இந்தப் பூவைப் பறித்ததால் எனக்கொன்றும் இழப்பில்லை. ஆனால் பூவின் இனப் பெருக்கத்தைத் தடுத்துப் பூக்களுக்கு ஒரு குடும்பக் கட்டுப்பாட்டையே ஏற்படுத்தி விட்டாய்,

என்ற சிங்கார வேலரின் விளக்கத்திற்குப் பின்னர், சுரதா ஓர் அருமையான முடிவெடுத்தார். இனி வாழ்வில் என்றென்றைக்கும் பூவைப் பறிப்பதில்லை என்பதுதான் அந்த முடிவு. இந்த முடிவிற்குப் பின்னர்ச் சுரதாவின் மனைவி கூடப் பூவைச் சூடிக்கொள்வதில்லை என்ற முடிவெடுத்தார் என்றார்.

இனி, சிங்காரவேலர் பிறந்த சமூகம், அவர் முன்னோர், சிங்காரவேலர் இளமைக் காலம் குறித்தெல்லாம் அறிவோம்.

மீனவர்களின் நிலை

1800களில் வர்ணாசிரமம் என்பது மிக ஆழமாகவும் அழுத்தமாகவும் இந்தியச் சமுதாயத்தில் வேர் ஊன்றி இருந்தது. பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பகுப்புகள் இருந்தன. சூத்திரர்களுக்குள்ளும் பல உட்பிரிவுகள் இருந்தன. உழவர்கள், கருமான், கொல்லன், சக்கிலி எனப் பல பிரிவுகள் இருந்தன. அவற்றுள் ஒன்றுதான் மீனவர் சமூகமும்.

மீனவர்களிடையே பல மதத்தவர்கள் உண்டு. தென்பகுதியில் உள்ள மீனவர்கள் கிறிஸ்தவர்களாக உள்ளனர். அதைப்போலவே அப்பகுதியில் பல மீனவர்கள் முகமதியர்களாகவும் உள்ளனர். தமிழகத்தின் வட பகுதியில் உள்ள மீனவர்கள் பெரிதும் இந்துக்களாகவே உள்ளனர். தென்

பகுதி- குறிப்பாக, தூத்துக்குடி பகுதி மீனவர்கள் கி.பி. 1500க்குப் பின்னர் அரசியல் நெருக்கடியினால் கிறிஸ்துவர்களாக மாறியவர்கள். இதனை வரலாற்றால் அறியலாம்.

அதைப்போலவே கி.பி. 1300க்குப் பின்னர்- மாலிக்காபூர் படை எடுப்புக்குப் பின்னர்த் தென்பகுதி மீனவர்கள் முகமதியர்களாக மாறியவர்கள் என்பது வர்லாற்று உண்மையாகும். சூத்திரர்களான மீனவர்களிடையே பல உட் பிரிவுகள் உண்டு. பெரிய பட்டினவன், சின்ன பட்டினவன், கரையான், செம்படவன், முக்குவன் எனப் பல பிரிவுகள் உண்டு. அக்காலத்தில் மீனவர்கள் தங்கள் பகுப்பைச் சார்ந்தவர்கள் மத்தியிலேயே கொள்வினை, கொடுப்பினை வைத்துக் கொண்டனர். இவர்களுக்குள் கலப்பு மணம் என்பதே கிடையாது. முதன் முதல் கலப்பு மணத்தையும், வைதீக எதிர்ப்புத் திருமணத்தையும் தொடங்கி வைத்தவரே ம. சிங்காரவேலர்தாம்.

முன்னோர்கள் வரலாறு

ம. சிங்காரவேலரின் முன்னோர்களாக முதலில் அறியப் படுபவர் மாட்டுவான் செட்டி என்பவராவார். மாட்டாங்குப்பம் என்பது தற்போதைய சென்னைத் திருவல்லிக்கேணியின் ஒரு பகுதியாகும். மாட்டாங்குப்பம் என்ற பெயரே மாட்டுவான் செட்டி என்பவர் பெயரால் ஏற்பட்டதாகும். மாட்டுவான் செட்டி கி.பி. 1640ஆம் ஆண்டில் சென்னைப் பகுதியை ஆண்ட கோல்கொண்டா மத்திய அமைச்சரிடம் மானியம் பெற்று வாழ்ந்தார். கி.பி. 18ஆம் நூற்றாண்டில் சென்னை நடுக்குப்பம் பகுதியில் நாட்டாண்மைக்காரராக வாழ்ந்த கந்தப்பச் செட்டி, மாட்டுவான் செட்டியின் வழிமுறையினர். கந்தப்பச் செட்டி சிங்காரவேலரின் மூதாதையர்களில் இரண்டாவதாக அறியப்படுபவர். கந்தப்பச் செட்டி பாலாத்தாள் என்னும் அம்மையாரை மணந்தார். மாட்டாங்குப்பம் விரிவடைந்த பின்னர் அதன் அருகில் உள்ள நடுக்குப்பம் என்னும் அந்த ஊரின் நாட்டாண்மைக்காரராகவும் வாழ்ந்தார்.[1]

நடுக்குப்பத்தில் வாழ்ந்த கந்தப்பச் செட்டி அப்பகுதியில் பெருஞ்செல்வந்தராக வாழ்ந்தார். ‘மீனம்பர்’ என்னும் திமிங்கலத்தின் விந்து மருத்துவத்திற்குப் பெரிதும் பயன்படுவது. அதனை விற்றுத்தான் கந்தப்பச் செட்டி பணக்காரர் ஆனார் என்று அப்பகுதியில் இன்றும் கூறப்படுகிறது. அதைப் போலவே

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன் சிந்தனைச் சிற்பி ம. சிங்கரவேலர், பக்.9-12.

புதையலாகக் கிடைத்த நூறு ரூபாய்க் கட்டுகளை மீனவர்களிடமிருந்து வஞ்சித்துப் பெற்றுக் கந்தப்பச் செட்டி தனவந்தர் ஆனார் என்னும் கதையும்கூடக் கூறப்படுகிறது.

கந்தப்பச் செட்டி மீனவர்களுக்குத் தேவைப்படும் கட்டு மரங்களைக் கேரளம், பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து கொண்டுவந்து வணிகம் செய்தார். இதுவுமல்லாமல் கந்தப்பச் செட்டிக்கு நிறையக் கட்டுமரங்களும், வலைகளும் இருந்தன. அவற்றையெல்லாம் மீனவர்களுக்கு வாடகைக்கு விட்டு, மீனவர் மத்தியில் ஒரு முதலாளியாகவும் வாழ்ந்தார். பர்மாவிலிருந்து கட்டு மரங்களையும், தேக்கு மரங்களையும் கொண்டுவந்து மொத்த வணிகம் செய்து வந்தார். நடுக்குப்பம், திருவல்லிக்கேணி கடற் கரைப்பகுதி முழுமையும் இவருக்கே உரிமையாக இருந்தன. அப்பகுதியில் வாழ்ந்த மக்கள், தாங்கள் குடி இருப்பதற்கு நில வாடகையாக மாதம் நான்கணாவை இவரிடம் கொடுத்து வந்தனர்.

பெருஞ்செல்வந்தராக இருந்த கந்தப்பச்செட்டி தன்மகன் அருணாச்சலத்துடன் இணைந்து கி.பி.1800களிலேயே அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தினார். இன்றளவும் அந்த அறக்கட்டளை தமிழக அரசின் மேற்பார்வையில் செயல்படுகிறது. சிங்காரவேலர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இன்றளவும் அந்த அறக்கட்டளையின் 400 கோடி மதிப்புடைய சொத்துக்கள் தங்களுக்கு வேண்டுமென்று போராடி வருகின்றனர். பெருஞ்செல்வந்தரான கந்தப்பச் செட்டி மீனவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கண்ணோட்டத்துடன் 'திரு' என்று தொடங்குகின்ற ஊர்களிலெல்லாம் அன்னச் சத்திரங்களை நிறுவியுள்ளார். திருமயிலையில் இரு சத்திரங்கள், திருப்போரூரில், திருவான்மியூரில், திருவண்ணாமலையில், திருத்தணியில், திருவள்ளூரில் சிங்காரவேலர் குடும்பத்திற்கு அன்னச் சத்திரங்கள் உள்ளன. [1]

கோயில் திருப்பணிகள் செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் அந்த அறக்கட்டளைச் சார்பில் நடுக்குப்பத்தில் பாண்டியம்மன் கோயில் என்றொரு கோயிலை ஏற்படுத்தி இன்றளவும் பராமரித்து வருகின்றனர். சென்னையின் ஆளுநர் மாளிகைக்கு மீன் வழங்குகின்ற ஒப்பந்தத்தைக் கந்தப்பச் செட்டிக் குடும்பம் பெற்றிருந்தது. ஆளுநர் வீட்டு விருந்துகளில் கலந்து கொள்ளுகின்ற உரிமையைக் கந்தப்பச் செட்டி, அருணாச்சல


---

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன் சிந்தனைச் சிற்பி ம. சிங்கரவேலர், பக்13-20.

செட்டி பெற்றிருந்தனர். பெருஞ்செல்வந்தராக இருந்த கந்தப்பச் செட்டி, அருணாச்சல செட்டி அக்காலத்தில் தங்கள் சொத்து விவரத்தைக் கல்வெட்டில் பதிந்து மயிலாப்பூர் பகுதியில் உள்ள இராமகிருஷ்ணாமடம் உள்ள சாலையில் வைத்திருந்தனர்.

கந்தப்பச் செட்டிக்கு அருணாச்சல செட்டி, வீரப்பச் செட்டி, வெங்கடாசலம் செட்டி ஆகிய மூன்று ஆண் மக்கள் இருந்தனர். கந்தப்பச் செட்டியின் மூன்றாவது மகனே வெங்கடாசலம் செட்டி. வெங்கடாசலத்தின் மனைவி வள்ளியம்மை. இந்தத் தம்பதியினருக்கு மூன்று ஆண் மக்கள் பிறந்தனர். முதல் பிள்ளையின் பெயர் சுப்பராயச் செட்டி, இரண்டாவது பிள்ளையின் பெயர் முனுசாமிச் செட்டி. மூன்றாவது பிள்ளையே நம் நூலின் நாயகனான ம. சிங்காரவேலு. வெங்கடாசலம் செட்டி, அவர் மனைவி வள்ளியம்மையின் மகன் ம. சிங்காரவேலுவின் வரலாற்றை மட்டும் இனி நாம் காண்போம்.

ம. சிங்காரவேலர் குடும்ப வரைபடம்



இந்தியச் சூழலில் வாழுகின்ற காலத்தில் எந்தத் தலைவர்களும் பாராட்டப்படுவதில்லை. மறைந்த தலைவர்கள் கொள்கையால், கோட்பாடுகளால் வெற்றி பெற்ற பின்னர் ஆய்வாளர்கள் அவர்களைத் தேடித்தேடிக் காண்பது உலகியல். பாரதி, பாரதிதாசன், தந்தை பெரியார் இவர்களின் வாழ்க்கை வரலாற்றை இன்றைக்கும் ஆய்வாளர்கள் தேடிக் கொண்டுள்ளனர்.

இன்றைக்கும் தேடிக்காண வேண்டிய நிலையில்தான் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், மண்டையம் திருமலாச்சாரி, சின்ன காஞ்சி கிருஷ்ணசாமி சர்மா இவர்களின் வாழ்க்கை வரலாறுகள் புதைந்து கிடக்கின்றன. மறைந்தவர்கள் புகழுடையவர்களாக இருக்கும்பொழுது பலரும் தங்களுக்கு உறவு என்று கூறிக் கொள்வது இயல்பு. 400 கோடி சொத்துக்கு உரிமையுடைய ம. சிங்காரவேலரை இன்றைக்குப் பலரும் உரிமை கொண்டாடலாம்.

ம. சிங்காரவேலரின் வரலாற்றை மட்டுமல்ல, அவரின் முந்தைய தலைமுறையையும் பிந்திய தலைமுறையையும் அன்பர்கள் தெளிவாக அறிய வேண்டும் என்பதற்காகவே அவரின் குடும்ப வரைபடத்தை இங்கே தந்துள்ளேன். இதனால் குடும்பம் தொடர்பான விவரங்களை அன்பர்கள் தெளிவாக அறிய முடியும். பெரும் செல்வந்தர்களின் சொத்துப் பட்டியலைத் தெருவில், கல்வெட்டில் பதிந்து வைத்திருப்பது அக்கால முறை. சிங்காரவேலர் குடும்பச் சொத்தும் அப்படியே கல்வெட்டில் பதிந்து வைத்துள்ளதை நாம் காணமுடிகிறது.[1]

இனிச் சிங்காரவேலர் குடும்பத்தவர்களின் பட்டியலையும் சிங்காரவேலர் காலத்தில் அவர் பிறந்த மீனவர் சமுதாய நிலையையும் காணலாம்.

ம. சிங்காரவேலரின் பிறப்பு

வெங்கடாசலம், வள்ளியம்மையின் மூன்றாம் மகனான ம. சிங்காரவேலு 1860 பிப்ரவரி 18ஆம் நாள் பிறந்தார். சைவப் பற்றாளரான வெங்கடாசலம்-வள்ளியம்மை இருவரும் தங்கள் மகனுக்குச் சைவக் கடவுளான முருகனின் பெயரான 'சிங்காரவேலு' என்ற பெயரை வைத்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால் சைவம் மட்டுமல்ல அனைத்து மதங்களிலும் நம்பிக்கையற்றவராகவும், கடவுள் தொடர்பான ஆன்மீகத்திலும்

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி ம. சிங்கரவேலர், பக். 20-22.

அறவே நம்பிக்கையற்றவராக மட்டுமல்ல; அவற்றையெல்லாம் ஒழித்து மானிடச் சமூகத்தைக் கட்டற்ற சமூகமாக ஆக்கச் சிங்காரவேலர் வாழ்நாள் முழுமையும் உழைத்தார். அதற்காகவே வாழ்ந்தார் என்பது வரலாற்று உண்மையாகும்.

தொடக்கக் கல்வி

ம. சிங்காரவேலர் தமது தொடக்கக் கல்வியைத் திருவல்லிக்கேணிப் பகுதியிலுள்ள திண்ணைப் பள்ளியொன்றில் பெற்றார். தற்பொழுது சென்னைத் திருவல்லிக்கேணி, பெரிய தெருவிலுள்ள இந்து மேல்நிலைப் பள்ளியில் இவர் 1881ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப் பெற்ற மெட்ரிக்குலேஷன் தேர்வில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

கல்லூரிப் படிப்பு

அடுத்து, தமது எஃப். ஏ. என்னும் பட்டத்தை 1884ஆம் ஆண்டு சென்னைச் சேத்துப்பட்டிலிருந்த கிறிஸ்துவக் கல்லூரியில் பெற்றார். அதன் பின்னர், சிறிது காலம் மேற்படிப்பைத் தொடராமல் வணிகத்தில் ஈடுபட்டார். காலம் முழுமையும் பொதுப்பணியையே முதற்பணியாகக் கொண்ட சிங்காரவேலர் தம்மை வளர்த்துக் கொள்ள வணிகத்தைப் புறக்கணித்துவிட்டுச் சென்னைப் பல்கலைக் கழத்தைச் சார்ந்த மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டத்தையும், சென்னைச் சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டத்தையும் 1907ஆம் ஆண்டு பெற்றார்.

காதல் மணம், கலப்பு மணம்

சிங்காரவேலர் மணம் அக்காலத்தில் ஒரு காதல் திருமணமட்டுமல்ல; கலப்புத் திருமணமாகவும் அமைந்தது. சிங்காரவேலர் பெரிய பட்டினவன் என்ற பகுப்பைச் சார்ந்தவர். சிங்காரவேலர் அடிக்கடி நண்பர்களையும் உறவினர்களையும் காண வடசென்னை இராயபுரம் பகுதிக்குச் சென்று வருவார். அங்கே இவருக்குச் சின்ன பட்டினவன் என்ற பிரிவைச் சார்ந்த தூ. சுந்தரமூர்த்தி, தூ. ஐம்புலிங்கம் என்ற நண்பர்கள் இருந்தனர். இவர்கள் இருவரும் கு. தூயமூர்த்தி செட்டி என்பவரின் மகன்களாவர். அக்காலத்தில் தூ. சுந்தரமூர்த்தி பொதுத் தொண்டிற்குப் பெயர் பெற்று விளங்கினார். பொது மக்களுக்கு அடிக்கடி அன்னதானம் செய்வது அவரின் பழக்கமாம். ஆகவேதான் இன்றும் இராயபுரம் பகுதியில் 'சுந்தரமூர்த்தி செட்டி சோறு போடக் கெட்டி' என்றொரு பழமொழி வழங்குகிறது. இவருடைய பொதுத் தொண்டைப் பாராட்டும்

விதமாக இராயபுரம் பகுதியில் 'சுந்தரமூர்த்தி பூங்கா' என்பதொன்று இன்றளவும் உள்ளது.[1]

தூ. சுந்தரமூர்த்தியின் தங்கை அங்கம்மாள் என்பவர் இராயபுரம் பகுதியிலுள்ள நார்த்விக் பள்ளியில் மெட்ரிகுலேஷன் பயின்றவர். சமூகப் பணியில் தன் அண்ணனுக்கு முன்மாதிரியாக இருந்த ம. சிங்காரவேலரிடம் அங்கம்மை நெஞ்சத்தைப் பறி கொடுத்தார். கல்வி அறிவு வாய்க்கப் பெற்ற அங்கம்மையையே தமது துணைவியாக ஏற்கச் சிங்காரவேலர் முடிவெடுத்தார். இன்றைக்கும் கூடச் சின்ன பட்டினவன், பெரிய பட்டினவன் இடையே திருமணங்கள் மிகமிக அரிதாக நடைபெறுகின்றன. இந்த நிலையில் அக்காலத்தில் சிங்காரவேலர் விரும்பிய அங்கம்மையை மணப்பது எளிதாக இல்லை.

சிங்காரவேலர் செல்வாக்குள்ள, செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சிங்காரவேலரின் திருமண வேட்கையை அறிந்த பின்னரும் சிங்காரவேலரின் பெற்றோர் இந்தத் திருமணத்திற்கு உடன்பட மறுத்தனர். சின்ன பட்டினவன் வகுப்பைச் சார்ந்த அங்கம்மையின் பெற்றோர்களும் தங்களின் மகளின் வேட்கையை அறிந்த பின்னர் உண்மையில், அதிர்ந்து போயினர். உடன்பட மறுத்தனர். ஆனாலும் அங்கம்மையின் சகோதரர்களான சுந்தரமூர்த்தியும், ஐம்புலிங்கமும் இந்த மணத்திற்கு உடன்பட்டாலும் பெற்றோர்களின் எதிர்ப்பை மீறிச் செயல்பட அஞ்சினர்.

மணந்தால் அங்கம்மை, இல்லையென்றால் திருமணமே வேண்டாமென்ற முடிவைச் சிங்காரவேலர் மேற்கொண்டார். அங்கம்மையும் சிங்காரவேலரைத்தான் மணப்பது என்ற உறுதியில் திடமாக நின்றார். ஆனாலும் சொல் வேறு, செயல் வேறு என்று என்றைக்கும் இரு வாழ்வு வாழாத சிங்காரவேலு இறுதிவரை உறுதியுடன் நின்று அங்கம்மையைக் கைப்பிடித்தார். வைதிகச் சடங்குகளற்ற, பார்ப்பனர் தலைமை இல்லாத புரட்சித் திருமணம் அது. 1889இல் சிங்காரவேலர் திருமணம் நடைபெற்றது.

அக்காலத்தில் ம. சிங்காரவேலரின் திருமணம் காதல் மணமாக மட்டுமல்ல, கலப்பு மணமாகவும் நடைபெற்றது. பெரிய பட்டினவன், சின்ன பட்டினவன் என்ற இரு பகுப்புகளும் மீனவர் சாதியில் உட்பிரிவுகளென்றாலும் அதுநாள்வரை இரு பிரிவினரும் கொள்வினை, கொடுப்பினை அற்றவர்களாகவே இருந்தனர்.[2]

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி ம. சிங்கரவேலர், பக். 20-22.
2. மேற்படி

செல்வந்தரான பெரிய பட்டினவன் வகுப்பைச் சேர்ந்த சிங்காரவேலர் சின்னபட்டின வகுப்பைச் சேர்ந்த அங்கம்மையை மணப்பதன் மூலம் தங்கள் பிரிவையே அவமானப் படுத்துவதாகச் சின்ன பட்டினவர்கள் நினைத்தனர். தங்களிலும் இழிந்த பிரிவாகிய சின்ன பட்டினவன் பெண்ணான அங்கம்மையை மணப்பதன் மூலம் தங்களின் பெரிய பட்டினவன் அமைப்பிற்கே அவமானத்தைச் சிங்காரவேலர் தேடித் தருவதாகப் பெரிய பட்டினவர்கள் அனைவரும் நினைத்தனர்.

எப்பொழுதெல்லாம் ஜாதிய அமைப்பிற்குள் பிரிவினை வருகிறதோ, அப்பொழுதெல்லாம் சமூகப் பஞ்சாயத்து என்ற அமைப்பைக் கூட்டித் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது இன்றைக்கும் மீனவர்களிடையே உள்ள வழக்கமாகும். இப்பொழுதும் அப்படித்தான். சிங்காரவேலர் அங்கம்மையின் காதல் மணத்தை, கலப்பு மணத்தை ஒப்புக் கொள்ள இராயபுரத்தில் பஞ்சாயத்து கூடியது. சென்னை இராயபுரம் கல்மண்டபம் என்கின்ற பகுதியில் அமைந்துள்ள பெரிய ஆலமரங்களின் கீழ்ச் சின்ன பட்டினவன், பெரிய பட்டினவன் இரு சாராரின் பஞ்சாயத்து கூடியது.

பஞ்சாயத்தின் இரு சாராரும் தங்களுக்குள் கலகமிட்டு விவாதம் செய்தனர். செல்வந்தரான சிங்காரவேலரின் ஆணவச் செயலை ஏற்கமுடியாதெனச் சின்ன பட்டினவர்கள் முழக்கமிட்டனர். சிங்காரவேலரோ தமது நண்பரின் தங்கை அங்கம்மையை விரும்பி மணப்பதாகக் கூறினார். இந்த நிலையில் நடுநிலை மிக்க சில தலைவர்கள், அற்புதமான முடிவொன்றை வெளியிட்டனர். அங்கம்மையே சிங்காரவேலரை விரும்பி மணக்கின்றபொழுது அதை மறுப்பது தர்மமல்ல, ஏற்பதுதான் முறை என்று தீர்ப்பும் கூறினர். மணமகளான அங்கம்மை சிங்காரவேலரை விரும்பித்தான் மணக்கின்றார் என்பதை எப்படி அறிவது? என்ற வினாவைச் சிலர் எழுப்பினர். இப்பொழுது பஞ்சாயத்தார்களே நல்ல முடிவொன்றையும் வெளிப்படுத்தினர். குறிப்பிட்ட இரு பகுதியைச் சேர்ந்த பஞ்சாயத்தார்க்கும் கைகால் கழுவ மணமகளே தண்ணீர் கொண்டு வந்து தந்தால் அந்த மணத்தை ஏற்பது, இல்லையென்றால் அந்த மணத்தைத் தடுப்பது என்று முடிவெடுத்தனர். பஞ்சாயத்தார்கள் வரும் செய்தி அங்கம்மை வீட்டிற்குச் சொல்லப்பட்டது.

திட்டமிட்டபடியே இருபகுதியைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் மணமகள் அங்கம்மையின் வீட்டிற்குச் சென்றனர். சென்ற தலைவர்களை அகமும், முகமும் மலர அங்கம்மை

வரவேற்றுத் தலைவர்கள் கை, கால், கழுவச் செம்பில் தண்ணீர் முகந்து கொண்டுவந்து கொடுத்தார். இந்த உபசரிப்பை ஏற்றுக் கொண்ட பஞ்சாயத்தார் 'மணமக்களே விரும்பி மணக்கின்ற முறையில் இந்த மணத்தைத் தடுப்பது முறையல்ல, அதனை ஏற்பதே சரி' என முடிவெடுத்தனர். அந்த முடிவைப் பஞ்சாயத்துத் தீர்ப்பாக அறிவிக்கவும் செய்தனர்.

அதன் பின்னர், சிங்காரவேலர் அங்கம்மையின் திருமணம் 1889இல் காதல் மணமாக மட்டுமல்ல, கலப்பு மணமாகவும், வைதிகச் சடங்குகளற்ற, பார்ப்பனர் இல்லாத திருமணமாகவும் அத்திருமணம் அக்காலத்தில் புரட்சித் திருமணமாகவும் நடந்தேறியது. இத்திருமணத்தைப் பற்றிச் சிங்காரவேலரே பிளவு பட்டிருக்கின்ற மீனவர் சமூகத்தை ஒருங்கிணைக்க முதன் முதல் காதல் திருமணம் மட்டுமல்ல கலப்பு மணமாகவும் செய்து கொண்டு, வழிகாட்டியவர்களில் நான் ஒருவன் என்று பிற்காலத்தில் 'குடியரசில்' குறிப்பிடுகின்றார்.

சிங்காரவேலரின் இளமைக்காலம்

சிங்காரவேலர் இளமைக் காலத்தை மற்ற பிள்ளைகளைப் போல்தான் கழித்திருக்க வேண்டும் என்கிறார் அவரின் வளர்ப்புப் பேத்தி ம. ஜெய்பாய். 'இளமைக் காலத்தில் என் தாத்தா ம. சிங்காரவேலு அவரையொத்த இளைஞர்களோடு மரத்தில் ஏறியும் இறங்கியும், ஆறு குட்டை நீச்சிலும், பேச்சிலும் ஓடி, ஆடி வளர்ந்துதான் இருக்க வேண்டுமென்கிறார். 22. சௌத் பீச் ரோட்டில் பிறந்த தாத்தா கடலும் கடல் சார்ந்த மணல் வெளியும், அங்கு இடம் பெற்றிருந்த படகும், கட்டுமரங்களும், வலைகளும், துடுப்புகளும், குடிசைகளும் நிறைந்த புல்வெளியும் அவர் ஓடி ஆடி விளையாடிய இடமாக இருந்திருக்க வேண்டும், என்கிறார்.

குடியரசில் கூடச் சிங்காரவேலர் தமது இளமைக் கால நினைவுகளைப் பதிவு செய்துள்ளார்.

> என்னோடு ஓடி ஆடி விளையாடிய பிள்ளைகளில் பலர் இன்று உயிரோடில்லை. காரணம் அவர்கள் வாழ்ந்த ஏழ்மையான தூய்மையற்ற வாழ்வுதான். இன்றுவரை நாங்கள் உடல் நலத்துடன் இருப்பதற்குக் காரணம் எங்களுக்கமைந்த வளமான, தூய்மையான செல்வச் செழிப்புதான்

எனக் குறிப்பிடுகின்றார்.

'எங்கள் இளமைக் காலத்திலேயே நாங்கள் அறிவாளிகளாக வளர வேண்டும் என்பதற்காகத் தாத்தா

உருவாக்கிய ஸ்லைடுகளும், ஆய்வுக் குழாய்களும் அவர் சொந்த முயற்சியில் உருவாக்கிய நூலகமும் இன்னமும் எங்களுக்குப் பசுமையாக நினைவில் உள்ளன' என்கிறார் ம. ஜெய்பாய்.

> தம் தாத்தா புத்தகப் புழுவாகவும், தத்துவம், அரசியல், அறிவியல், உளவியல், வானவியல், கட்டடக் கலை, சிற்பக்கலைகளில் பேரார்வம் கொண்டு உழைத்த சிங்காரவேலர் நல்ல ஓவியராகவும் இருந்தார்.

என்று ம. ஜெய்பாய் நினைவு கூர்கின்றார்.

சிங்காரவேலருக்கு இருந்த பல் வேறுபட்ட திறமைகளை நினைக்க இப்பொழுதும் எங்களுக்கு வியப்பாக இருக்கிறது என்கிறார் ம. ஜெய்பாய்.

> இளமைக் காலத்தில் ம. சிங்காரவேலர் எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்தில் தொடர்ந்து டென்னிஸ் ஆடுவது வழக்கம். குழந்தைகளான நாங்கள் அவருடன் சென்று அவர் விளையாடுவதைக் கண்டு மகிழ்வோம்.

என்கிறார் ம. ஜெய்பாய்.

> அங்குதான் பம்மல் சம்பந்த முதலியார் தம் நாடகத்தையெல்லாம் அரங்கேற்றுவார். சுகுண விலாச நாடகக் கம்பெனி அங்குதான் இடம் பெற்றிருந்தது. நாடகத்தில் பெரும் ஈடுபாடு கொண்ட தாத்தா அங்கு அடிக்கடி சென்று வருவார். பிற்காலத்தில், 22, சௌத் பீச் ரோட்டில் எங்கள் வீட்டிலேயே நாடகக் கம்பெனி ஒன்று இருந்தது. அதில் பாவேந்தர் பாரதிதாசன் போன்றவர்களெல்லாம் வந்து நடிப்பார்கள்.

என்கிறார் ம. ஜெய்பாய்.[1]

> அதைப்போலவே
>
> தாத்தாவிற்கு இசையிலேயும் அளவில்லாத நாட்டம் இருந்தது. பல இசைக் கருவிகளைத் தாத்தா மீட்டுவார். அவரிடம் கித்தார் வாத்தியம் இருந்தது. ஹார்மோனியம், வயலின், வீணை, தபேலா,

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி ம. சிங்கரவேலர், 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், பக்.123-133.

மிருதங்கம் இவற்றில் அவர் கொண்டிருந்த பரிச்சயம் காரணமாகவே குழந்தைகளான நாங்களும் அவற்றை யெல்லாம் கற்றோம்.

என்கிறார் ம. ஜெய்பாய்.

விவசாயத்தில் அவருக்கு அளவில்லாத ஆர்வம் இருந்தது. அரசியலுக்கு அடுத்த நிலையில் தாத்தா விவசாயத்தைத்தான் விரும்பினார்

என்கிறார் ம. ஜெய்பாப்.

1917க்கும் 1920க்கும் இடைப்பட்ட காலத்தில் திருவான்மியூரில், விவசாயப் பண்ணையோடு கூடிய நிலத்தை வாங்கி அதிலே தாத்தா முழுமையாக ஈடுபட்டார்

என்கிறார் ம. ஜெய்பாய்.

காவலர்கள் அடிக்கடி சோதனை போடுகின்ற வீடாக அது இருந்தது. தாத்தாவுக்கு மிகவும் பிடித்த குறள்-

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்

என்கின்ற குறளைத் தாத்தா தம் கடைசிக்காலத்தில் அடிக்கடி பயன்படுத்தினார்.

என்கிறார் ஜெய்பாய்.

1930க்குப் பின் தந்தை பெரியாரோடு சிங்காரவேலர் மிக நெருக்கமான அரசியல் தொடர்பு கொண்டிருந்தார். சிங்காரவேலரின் பரிந்துரையின் படித்தான் பெரியார் ரஷ்யா செல்ல முடிந்தது

என்கிறார் ம. ஜெய்பாய். சக்லத் வாலா பரிந்துரையால்தான் ரஷ்யாவிற்குப் பெரியார் செல்ல முடிந்தது.

22, சௌத் பீச் ரோடு என்ற முகவரி அன்றைக்கு அனைத்து அரசியல்வாதிகளுக்கும் பரிச்சயமான வீடாகும். அவர் வீடு 20 அறைகளையும் பல முற்றங்களையும் கொண்ட இரண்டடுக்கு மாடி வீடாகும். வீட்டின் பக்கத்தில் மாட்டின் தொழுவம், குதிரைலாயம் இடம் பெற்றிருந்தன. பின்னர் அந்த இடத்தில்தான் சிங்காரவேலர் தமது மோட்டார் சைக்கிளையும் தமது காரையும் நிறுத்தி வைத்தார். இந்த வீடுதான் லேபர் கிஸ்ஸான் கட்சியின்

தலைமையகமாகவும் இருந்தது. இங்கேதான் லேபர் கிஸ்ஸான் கட்சியின் அச்சுக்கூடமும் இடம் பெற்றிருந்தது என்கிறார் ம. ஜெய்பாய்.

*1927*இல் அகில இந்திய *42*ஆவது காங்கிரஸ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு இந்தியாவில் பல பகுதியைச் சேர்ந்த கம்யூனிஸ்டு தீவிரவாதிகள் வந்து தங்கள் வீட்டில் 22, சௌத்பீச் வீட்டில் தங்கிச் சென்றதாக ம. ஜெய்பாய் கூறுகின்றார். மாநாட்டிற்குச் செல்வதற்கு முன்னர்த் தங்கள் வீட்டில்தான் கம்யூனிஸ்டு தோழர்கள் தாத்தாவுடன் இரகசியக் கூட்டம் நடத்தியதாக ம. ஜெய்பாய் பதிவு செய்கின்றார்.

> எங்கள் வீடு இரகசிய ஒற்றர்களால் 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும். ஆனால் அதைப் பற்றித் தாத்தா ஒரு நொடி கூடக் கவலைப்பட்டதில்லை

என்கிறார் ம. ஜெய்பாய்.

காநாட்டுக் கோமகன் புறக்கணிப்பு, வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்பு, சைமன் புறக்கணிப்பு அனைத்திற்கும் இந்த வீட்டிலேதான் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது என்கிறார் ம. ஜெய்பாய். அக்காலத்தில் பெண்கள் அரசியல் கூட்டங்களுக் கெல்லாம் செல்வதே மிகமிக அரிது. ஆனால் தாத்தா என்னையும் ஜூபாயையும் எல்லா அரசியல் கூட்டங்களுக்கும் கூட்டிச் செல்வார். கல்லூரி மாணவிகளான நாங்கள் படிப்பிலே தீவிரமாக இருந்தோம். தாத்தாவைப்போல அரசியலில் தீவீரம் காட்ட வில்லை. இது எங்கள் தவறுதான் என்கிறார் ம. ஜெய்பாய்.

அங்கம்மை மறைவு

*1889*இல் அங்கம்மையைக் கைப்பிடித்த சிங்காரவேலர் இல்லற வாழ்வில் இனிய வாழ்வு வாழ்ந்தார். சிங்காரவேலரின் நண்பர் மகாகவி பாரதி பாடியதைப் போல [1]

> **காதல் ஒருவனைக் கைப்பிடித்தே-அவன்**
> **காரியம் யாவினும் கைகொடுத்து**
> **மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்**
> **மாட்சி பெறச் செய்து வாழ்வோமடி!**

என்பதற்கிணங்க அங்கம்மை பெரும் படிப்பாளி இல்லை யென்றாலும் சிங்காரவேலரின் அனைத்துக் காரியங்களிலும் கை கொடுத்து வாழ்ந்தவர் என்பதை அறிகிறோம்.

1. முத்து.குணசேகரன், சிந்தனைச் சிற்பி ம.சிங்கரவேலர், 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், பக். 22-24.

சிங்காரவேலர் இயல்பாகவே அரசியல் உணர்வு மிக்கவர். தொழிலாளர்களுக்கான உரிமைப் போராட்டங்களில் எப்பொழுதும் முன்னின்றவர். பொதுக் கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்கங்கள், அரசியல் இயக்கங்கள் என்றெல்லாம் இடையறாது கலந்து கொண்டிருந்த சிங்காரவேலர் தம்முடைய வீட்டிற்கு நேரங்கடந்து வருவதும், நிறைய நண்பர்களுடன் வருவதும் அவருடைய இயல்பான வாழ்க்கை என்றறிகிறோம்.

பெரும் செல்வந்தர் சிங்காரவேலர் வீட்டில் நிறைய வேலைக்காரர்கள் இருந்தாலும், எப்பொழுதும் எந்த நேரத்திலும் சிங்காரவேலரைப் பார்த்துக் கொள்வது, பராமரிப்பது ஆகியவற்றை அங்கம்மை ஒரு கடமையாகவே கொண்டிருந்தார். இக்கடமையில் அங்கம்மை ஒரு நாளும் தவறவில்லை என்பதைச் சிங்காரவேலரே பதிவு செய்துள்ள ஒரு கல்வெட்டை 1967இல் சென்னைத் திருவான்மியூரில் சிங்காரவேலர் வீட்டில் இருந்த ஒரு கல்வெட்டைக் காணும் வாய்ப்பால் நானறிய முடிந்தது.

1967இல் பொன்னேரி கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த நான், ஓர் இலக்கியக் கூட்டத்திற்காகச் சென்றிருந்தபோது, சிங்காரவேலர் வாழ்ந்த பண்ணைவீடு அருகில்தான் இருக்கிறது என்பதை அறிந்து அந்த வீட்டின் உரிமையாளர் ம. நித்தியகுமார் அனுமதியுடன் சென்று கண்டேன். விளக்கம் கேட்ட பொழுது தம் தாத்தா சிங்காரவேலர் தம் மனைவி அங்கம்மையின் இறப்பிற்குப் பின்னர் வைத்த கல்வெட்டென்று சொன்னார். அற்புதமான அந்தக் கல்வெட்டுப் பாடல் ஆழமான, அழுத்தமான, நெஞ்சை உருக்கும் கருத்தைக் கொண்டது. இப்படிப்பட்ட பாட்டை வாசுகி இறப்பிற்குப் பின்னர் வள்ளுவனே பாடியது என்றும் கூறுவதுண்டு. அன்றைக்கு நான் கண்ட தனிப்பாடல் இதுதான்.

அடிசிற் கினியாளே, அன்புடை யாளே,
படிசொற் தவறாத பாவாய், அடிவருடி
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே; போதியோ
என் தூங்கும் என் கண் இரா?

அன்றைக்கு இப்பாடலை ஏதோ சாதாரணப் பாடல் என்று நான் நினைத்தேன். 1980க்குப் பின்னர், சிங்காரவேலரைப் பற்றி டாக்டர் பட்டத்திற்கு முயன்று பல நுட்பமான தகவல்களை அறிந்த பின்னர், அந்தப் பாடலைப் படி எடுக்க வேண்டுமென்பதற்காகத் திருவான்மியூர் சென்று அப்பாடலைத் தேடிய பொழுது அதிர்ச்சியான தகவலை அறிந்தேன். மாமேதை சிங்காரவேலரின்

பேரன் ம. நித்தியகுமார் கூறிய செய்தியை அறிந்த நான் துடித்துப் போனேன்.

> நீண்ட காலமாகக் குடும்பம் முன்னேற்றமின்றி இடர்ப்படுவதற்கு வீட்டின் தோட்டத்தில் அமைந்த சமாதியும், அங்கே அமைந்துள்ள இந்த வெண்பாப் பாடலுமே காரணமென ஜோசியக்காரர்களும் கூறினார்கள். அந்தக் கல்வெட்டு இங்கிருக்கும் வரை குடும்பம் விருத்திக்கு வராது என்பதால்தான் அந்தக் கல்வெட்டையும், சமாதியையும் இடித்து அள்ளிச் சென்று திருவான்மியூர் கடலிலே கொட்டி விட்டோம்

என்று கூறினார்.

ஜோதிடம், ஜாதகம் இன்னும் பல பிற்போக்குத் தனங்களுக்கெல்லாம் முற்றிலும் முரணாகவும், அறிவார்ந்த விளக்கமும் அளிக்கும் மேதையாக வாழ்ந்த சிங்காரவேலர் கல்வெட்டிற்கமைந்த கொடுமை குறித்து நான் துடித்துப் போனேன். ஆனாலும் அப்பாட்டில் பலநுட்பமான செய்திகளைச் சிங்காரவேலர் பதிவு செய்துள்ளார் என்பதை நாம் அவசியம் உணர வேண்டும்.

சிங்காரவேலர் மனைவி அங்கம்மை நன்றாகச் சமைப்பார் என்பதையும், காலங்கடந்து வருகின்ற கணவரை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தார் என்பதையும், எக்காலத்தும் எந்தச் சூழலிலும் அங்கம்மை எதிர்வழக்காடாத ஏந்திழை என்பதையும் உணருகின்றோம். அந்தப் பாடலில் காணப்படும் ‘படிசொற் தவறாத பாவாய் என்பது சாதாரணச் சொற்றொடர் அல்ல.

குடும்பத்தில் ஜாதியப் பாகுபாடு இருந்தாலும் குடும்பத்தினர்களால் அங்கம்மை இழித்தும், பழித்தும் பேசப்பட்டாலும் சிங்காரவேலர் தம்முடைய பேராண்மைிக்க ஆளுமையால் அவற்றையெல்லாம் சமாளித்ததுடன் அங்கம்மைக்கமைந்த உற்ற துணையாகவும், வாழ்ந்தார் என்பதையும் அறிகின்றோம்.

அரசியலில் அவல வீரராக வாழ்ந்த, எதிர்ப்புக்கிடையே எதிர் நீச்சல் போட்ட அந்த மேதை குடும்பச் சூழலாலும் இடர்ப்பட்டார். நீண்ட காலம் குழந்தை இல்லாத சிங்காரவேலர் தம் குடும்பச் சொத்தைத் தம் அண்ணனின் குழந்தைகளுக்கே வாரிசாக எழுதிவைத்தார். நீண்ட நாள்களுக்குப் பின்னர், சிங்காரவேலர்-அங்கம்மை ‘கமலா’ என்னும் பெண் குழந்தையை

ஈன்றெடுத்தனர். இப்பொழுது சொத்தை, தம் மகள் உட்பட அனைவருக்கும் உரிமையாக உயிலைச் சிங்காரவேலர் மாற்றி எழுதினார். இதனால் அவருக்கு ஏற்பட்ட குடும்ப அவதிகள் ஏராளம். ஆனாலும் சிங்காரவேலருக்கமைந்த அங்கம்மை, கார்ல்மார்க்சுக்கு அமைந்த ஜென்னியைப் போல, தந்தை பெரியாருக்கமைந்த நாகம்மையைப் போல, வள்ளுவனுக்கமைந்த வாசுகியைப் போல உற்ற துணையாக விளங்கினார் என்பதை நாம் அறிகிறோம். எத்தனையோ வகையான துன்பமுற்ற அந்தமேதை அங்கம்மையை இழந்த பின்னர் இனி, தனக்கு உறக்கமில்லாத இரவுகளே மிஞ்சும் என்பதை 'என் தூங்கும் என் கண் இரா' என்ற சொற்றொடரால் உணர்த்துகின்றார்.

புத்தமதப் பற்றாளர்

கி.பி. 1890இல் ம. சிங்காரவேலர் புத்தமதப் பற்றாளராக இருந்தார். சிங்காரவேலரோடு புத்தமத வளர்ச்சிக்குச் சிலர் சென்னையில் இணைந்து பணியாற்றினர். அவர்களில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர் பண்டிதர் அயோத்திதாசர். மற்றொருவர் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் லட்சுமி நரசு நாயுடு அவர்கள். இந்த மூவரும் இணைந்து சென்னையில் புத்தமத வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினர்.

கி.பி. 1900இல் இரு ஜாதி மக்கள் புத்தமதத்தைப் பேரளவில் ஏற்றுக் கொண்டனர். ஆதிதிராவிடர்கள் மதமாற்றத்திற்குப் பெருங்காரணமாக இருந்தவர் அயோத்திதாச பண்டிதர். சிங்காரவேலர் காலத்துத் தமிழக அறிஞர்களில் சிலரே சிங்காரவேலரைவிட வயதில் மூத்தவர்கள். அவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர் அறிஞர் க.அயோத்திதாச பண்டிதர். இடைப்பட்ட காலத்தில்தான் சிங்காரவேலரோடு இணைந்து அயோத்திதாச பண்டிதர் பணியாற்றினார். அயோத்திதாச பண்டிதரை முழுமையும் அறிவதற்கு அவர் தொடர்பான கவிதை உதவும்.[1]

அயோத்திதாசர்

அம்பேத்கார் முன்னோடி ஒருவனுண்டு, வாழ்வில்
அவனன்றோ தமிழகத்தின் அயோத்தி தாசன்!
அயோத்திதாச கவிராஜபண்டிதரை-அன்னோன்
ஆசிரியன் என ஏற்றான், ஏற்றம் பெற்றான்!

படித்ததனால் அன்னவனை மக்கள் அறிஞனென்றார்,
பகுத்தறிவு மேதைகளில் அவன்தான் மூத்தோன்!

---

1. முத்து. குணசேகரன், செஞ்ஞாயிறும் விண் மீன்களும், பக்.10-16.

விபூதிதனை அணிவதிலே லாபமென்ன? நாளும்
விழலுக்கு நீரிறைத்து ஓய் வதென்ன?

கபாலியாம் ஈசனவன் கதைகள் யாவும்-தீயோர்
கபடத்தால் கட்டி வைத்த பொய்தானென்றான்!
பஞ்சமர்க்குப் பள்ளிதனை அமைத்துப் பாரில்
பாமரர்க்குப் புத்தனைப் போல் கருணைசெய்தான்

ஆதியிலே திராவிடர்க்கு உணர்வும்-மேலும்
அங்கவர்க்குப் பகுத்தறிவு நெறியும் காட்டி,
பாதியிலே வந்தவன் தான் பார்ப்பான் என்பான்-
பறையன்
பழந்தமிழன் ஆதிகுடி இந்துவல்ல!

பூர்வ மொழி தமிழ்மொழிதான் புனிதமான -ஆதி
புத்த மதம் முதல் மதம் தான் தமிழர்க்கென்றான்
பாதகர்கள் பறையனென இகழ்ந்த நாட்டில் - பாரில்
படிப்பதற்குத் தடை விதித்த பாவி நாட்டில்

ஆதியிலே நாத்திகத்தைப் பாத்தி கட்டி-நாளும்
அன்றாடம் வளர்த்திருந்த சென்னைச் செல்வன்,
சிந்தனையில் முதிர்ந்திருந்த பெரும் பேராசான்.
அறிஞர்
சிங்கார வேலர்க்கும், அவர்க்கும் மூத்த

நாடுபுகழ் லட்சுமண நரசுவுக்கும், நல்லவர்க்கும்
பெரியார்க்கும் இன்னும் யார்க்கும்,
மூத்தவன்தான் அயோத்தி தாசனாவான்!
முதல் பெருமை, முழுப்பெருமை அவர்க்கேயுண்டு!

பத்திரிகைத் துறையினிலே அவன்தான் மூத்தோன்-
பாரில்
பல்வளம் சேர் பூஞ்சோலை முத்து வீரன்,
இளைத்தவர்க்குக் கேடயம் போல் இருந்து வந்த
இரட்டைமலை சீனிவாசன் இவர்க்கும் மூத்தோன்!

ஒரு பைசா தமிழனென நாளும் கூறி
உலகறிய பத்திரிகை நடத்தி வந்தான்!
கல்வியிலே கறை இல்லாக் கடல் அவனும் தானும்
கற்றதனால் மருத்துவனாய்த் தொண்டு செய்தான்!

ஆயிரத்து எண்ணூற்றி நாற்பத்தைந்தில் - மண்ணில்
அடியினிலே அவன் புதைந்தான் மீட்பார் இல்லை!
அன்னவன்தான் அனைத்தினுக்கும் முன்னோன்-தமிழர்
அவன் பெயரைச் சொல்லாமை கொடுமையாகும்

> **தீண்டாமை தேசியத்தின் பெருங்கொடுமை-அதனைத்**
> **தெரிந்திருந்தும் பேணுவது மதமடமை**
> **வேண்டாத பெருந்தொல்லை மனித வாழ்வை-நாளும்**
> **வெட்டுகின்ற வெறியரிவாள் ஜாதி என்றான்**

என்ற புகழ் மொழிக்குரிய அயோத்திதாசரும், சிங்காரவேலரும் இணைந்து புத்தமத இயக்கத்திற்கு உழைத்தனர். ஆளுநர் முதல் அதிகாரிகள் வரை அனைத்து ஆங்கில அதிகாரிகளும் கிறிஸ்துவப் பற்றாளர்களாக இருந்த காரணத்தால் புத்தமதப் பற்றாளர்களை வெறுத்தனர். அதனாலும் சிங்காரவேலருக்குத் தொல்லைகளும் விளைந்தன. தொடர்ந்து சிந்திப்பவர்கள் ஓரிடத்திலேயே தேங்கிவிடுவதில்லை. சிந்தனைச் சிற்பியாக இருந்த சிங்காரவேலர் இந்து மதத்தைக் கடந்து, புத்தமதத்தைத் தாண்டி இவையெல்லாம் மனிதனின் படைப்புகள் என்பதை உணர்ந்த பின்னர், இம் மதங்களே மனிதனைப் பேதப்படுத்துகின்றன என்பதை உணர்ந்த பின்னர் இவற்றை ஒழிப்பதிலே முனைந்து செயல்பட்டார். என்றாலும் 1880களிலே சிங்காரவேலர் புத்தமதப் பற்றாளராகவும் இருந்தார் என்பதற்கான ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

சிங்காரவேலர் பற்றிய ஒரு குறிப்பு ‘ஞானபோதினி’ என்னும் தமிழ் இலக்கிய மாத இதழில் கிடைக்கிறது. சிங்காரவேலர் தமது மிகப் பெரிய மாளிகை போன்ற வீட்டின்முன் ‘மகா போதி சங்கம்’ என்னும் பெரிய அறிவிப்புப் பலகையை அமைத்து வாரந்தோறும் கூட்டத்தையும் நடத்தி வந்தார். இந்தச் செய்தியைத் திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்பு நூலில் அறிய முடிகிறது. ஞானபோதினி அக்டோபர் 20, 1899 ப.117இல் சிங்காரவேலரை பி.ஏ. சிங்காரவேலர் எனவே குறிப்பிட்டுள்ளது. மக்கள் குறைவாகப் படித்திருந்த காரணத்தால் அவர்கள் பெற்ற பட்டத்தை முன்னால் போடுவதே வழக்கமாக இருந்தது. சுப்பிரமணிய பிள்ளை எம்.எல். பிள்ளை என்றழைக்கப்பட்டதைப் போலவே சிங்காரவேலரும் பி.ஏ. சிங்காரவேலர் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டார்.[1]

ஞான போதினியில்’ சமாச்சாரங்கள் என்ற தலைப்பில் சிங்காரவேலர் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

> வங்காளத்திலிருந்து தர்மபாலர் என்ற பௌத்த சமயக் குரவர் ஒருவர் சென்னைக்கு வந்து, நான்கு வாரங்களாகின்றன. சென்ற மாதம் 27ஆம் தேதி

---

1. பெசு. மணியன், காரல்மார்க்ஸ் இலக்கிய இதயம், பக்.226-227.

> மாலை திருவல்லிக்கேணி கடற்கரையோரத் தெருவில் பி.ஏ. சிங்காரவேலு செட்டியார் வீட்டுத் தெரு வாயிலில் சபை சேர்ந்து மேற்கூறிய தர்மபாலர் அவர்கள் உடன் யாசித்தனர். அதன்கண் இந்தியாவில் பறையர், செம்படவர், சான்றோர் முதலான சுமார் நூறு லட்சம் பேர் இழிகுலத்தினராகி எண்ணப்படுதலையும் அவர்களிடத்தில் அன்பு கூர்ந்து அக்கறைப் பட்டு அவர்கள் சீர்திருத்தும்படி மற்றைய இந்துக்கள் பாடு படாமையையும் எடுத்துக் காட்டித் துக்கித்தனர்.

என்ற செய்தி காணப்படுகிறது. 22, சௌத் பீச் ரோடு என்கின்ற இந்தப் பகுதிதான் இன்றைக்கு 'வெலிங்டன் வளாகம்' என்றழைக்கப் படுகிறது. சிங்காரவேலர் வீடு இடம் பெற்றிருந்த இடத்தில்தான் இன்றைக்கு விவேகானந்தர் சிலை இடம் பெற்றுள்ளது.

விவேகானந்தர் சிலைக்கு மேற்குப் பகுதியில் கந்தப்பச் செட்டி, அருணாசலச்செட்டி சமாதிகள் இன்றைக்கும் அமைந்துள்ளன. இந்த இடத்தில்தான் சிங்காரவேலருக்கும் திரு.வி.க.வுக்கும் முரண் ஏற்பட்டதாகத் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் தமது வாழ்க்கைக் குறிப்பில் குறித்துள்ளார். அந்தக் குறிப்பையும் திரு.வி.க. சிங்காரவேலர் தொடர்பையும் இனி அறியலாம்.

1889லேயே ம. சிங்காரவேலர் எவ்வளவு தெளிவுடன் இருந்தார் என்பதை அறிவதற்கான குறிப்பொன்று 'இந்தியன் சோஷியல் ரிபார்மர்' (மே, 28, 1889) இதழில் கிடைக்கிறது. இதனால் சிங்காரவேலரின் விழிப்புணர்ச்சியையும் சமூகப் பற்றையும் நிறையவே அறிய முடிகிறது.[1]

> சென்ற வியாழக்கிழமை அன்று புத்த பிரானின் மறைவின் 2443ஆம் ஆண்டு விழா சிங்காரவேலு அவர்கள் இல்லத்தில் நடந்தது. நிகழ்ச்சியைச் சுவாமி இராமகிருஷ்ணானந்தர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்... பின்னர் ம. சிங்காரவேலு பேசினார். சுவாமி விவேகானந்தரின் படைப்புகளிலிருந்து பல பகுதிகளை எடுத்துரைத்தார். அத்துடன் பார்க்லி, அடால்ப்தாமஸ், மோனியர்வில்லியம்ஸ் ஆகியோர் நூல்களிலிருந்து சில விஷயங்களை

---

1. பெ.சு. மணியன், காரல்மார்க்ஸ் இலக்கிய இதயம், ப. 227.

> எடுத்துரைத்தார். புத்த பிரானின் வாழ்வைப் பற்றியும் அவரது போதனைகளைப் பற்றியும் தமிழில் தான் எழுதி அச்சிட்டு வெளியிட்டுள்ள சிறு நூல்களினின்றும் சில பகுதிகளையும் படித்தார். நூலின் பிரதிகளும் தரப்பட்டன. பண்டித அயோத்திதாஸ் அவர்களும் பேராசிரியர் லட்சுமிநரசு நாய்டு அவர்களும் பேசினார்கள்

என்ற செய்தி காணப்படுகிறது. இதனால் பல செய்திகளையும் நாம் சிங்காரவேலரைப் பற்றிப் புரிந்து கொள்ளுகின்றோம். சிங்காரவேலருக்குப் புத்த மதத்தில் நல்ல பேரறிவு மட்டுமல்ல, விவேகானந்தர் இலக்கியத்திலும் நல்ல திறனாய்வு அறிவும், மேலை நாட்டு அறிஞர்களான பார்க்லி அடால்ப் தாமஸ், மோனியர் வில்லியம்ஸ் இவர்கள் நூல்கள் பற்றிய பேரறிவும், திறனாய்வுப் போக்கும் உடையவராகச் சிங்காரவேலர் 1889களிலேயே இருந்தார் என்பதை அறிகிறோம்.

அதற்கு மேலும் அவர் தாமே முயன்று தமிழ் மட்டுமல்ல, ஆங்கிலம், ஹிந்தி, உருது, ஜெர்மன், பிரஞ்சு ஆகிய மொழிகளிலும் தேர்ந்த அறிஞராக இருந்தார். இந்த நிலையில்தான் அவரது 1902இல் இலண்டன் பயணம் அவரைப் பல வழிகளிலும் மேம்படுத்தியது. 1889லேயே அவர் சில புத்தகங்களையும் அச்சிட்டார் என்பது நாம் அறியத் தகுந்த விஷயமாகும். எந்த ஆய்வாளரும் இதுவரை அவரது புத்தகங்களைப் கண்டு பிடிக்க முடியவில்லை.

இலண்டன் பயணம்

நுட்பமான பேரறிவும் ஆற்றலும் கொண்ட சிங்காரவேலர் 1902இல் இங்கிலாந்து சென்று இலண்டனில் ஆறு மாதங்கள் தங்கி இருந்தார். இலண்டனில் இருந்தபொழுது சிங்காரவேலரின் உறவினர் ஜலகண்டி என்பவருக்குச் சிங்காரவேலர் கடிதம் எழுதியுள்ளார்.[1]

சிங்காரவேலர் இலண்டன் பயணத்தை மூன்று காரணங்களுக்காக மேற்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். ஒன்று இலண்டனில் நடைபெற்ற புத்த மத மாநாட்டில் சார்பாளராகக் கலந்து கொள்வது. இரண்டு பிரயாணங்கள் மூலம் உலக அறிவைப் பெற வேண்டுமென்பது. மூன்றாவதாக இலண்டனில் சிங்காரவேலர் குடும்பத்தின் வர்த்தகத்தை மேற்பார்வையிட

---

1. முத்து. குணசேகரன், காரல்மார்க்ஸ் இலக்கிய இதயம், ப. 25-26.

வேண்டும் என்பதற்காகவும் கலந்து கொண்டதாகவும் குறிப்பிடுகின்றார். இலண்டனில் இருந்தபொழுது உலகப் பௌத்த மாநாட்டில் கலந்து கொண்டதைச் சிங்காரவேலரே பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் பிறந்த பலரும் இலண்டன் சென்று வாழ்ந்த பின்னர்த்தான் பெரும் தலைவர்களாக மாறமுடிந்தது. அண்ணல் காந்தி, பண்டிதர் ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், சாவர்க்கார், சி.எஸ். சுப்பிரமணியம், எம்.பி.டி. ஆச்சார்யா, இவர்களெல்லாம் இலண்டனில் தங்கி வாழ்ந்த பின்னரே தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டு புரட்சியாளராகவும் மாறினர். சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலரும் பேரறிவாளராகவும், புரட்சியாளராகவும் மாறினார். 1880களிலேயே படிப்பாளராகவும், சிந்தனையாளராகவும், எழுத்தாளராகவும் மாறி இருந்த சிங்காரவேலரை இலண்டன் வாழ்க்கை பேரளவில் மாற்றியது.

பெரும் படிப்பாளியாக இருந்த சிங்காரவேலர் பிற்காலத்தில் தம்முடைய நூலகத்தில் 20,000க்கு மேற்பட்ட புத்தகங்களைச் சேர்த்து வைத்தார். புத்தகங்களைத் தேடுவதற்கும், திரட்டுவதற்கும் இலண்டன் பயணம் சிங்காரவேலருக்குத் துணை நின்றது. பிற்காலத்தில் சிங்காரவேலர் வெளிப்படையாகவே தம்மை ஒரு 'கம்யூனிஸ்டு' என்று கூறிக் கொண்டார். அதனாலேயே மக்கள் அவரைக் **காம்ரேட் சிங்காரவேலு** என்றே அழைத்தனர். இந்தப் பொதுவுடைமைச் சிந்தனைக்கான அடித்தளம் ஆழமாகச் சிங்காரவேலரிடம் இடம்பெறுவதற்கு இலண்டன் வாழ்க்கையே பெருங்காரணமாகும்.

எல்லாவற்றிற்கும் அடிப்படையாகவும், முதல் தளமாகவும் அமைய வேண்டுவது நாத்திக உணர்வுதான். அதுதான் மனிதனின் சிந்தனையைச் சீர்படுத்துகிறது. அது என்ன? இது என்ன? இது எதற்காக? அது எதற்காக? என்ற கேள்விகளே மனிதனின் அறிவை வளர்க்கின்றன. இந்தச் சிந்தனை ஆற்றலைச் சிங்காரவேலர் இலண்டன் பயணத்தால் முழுமைப் படுத்திக் கொண்டார். தாம் இலண்டனில் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிச் சிங்காரவேலர் 'குடியரசில்' குறிப்பிடுகின்றார். இலண்டனில் பரிச்சயமான ஓர் அம்மையாரிடம் சிங்காரவேலர் இன்று ஞாயிற்றுக்கிழமை, இருந்தும் நீங்கள் ஏன் மாதா கோயிலுக்குச் செல்லவில்லை என்று கேட்டாராம். அதற்கு அந்த அம்மையார் 'வஞ்சம், சூதில்லாமல் உண்மையாக உழைப்பவர்க்கு மாதா கோயிலோ, ஆன்மீகமோ தேவை இல்லை' என்று கூறினார்களாம். இந்தப் பதில் தம்மைப் பேரளவில் பாதித்ததாகச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார்.

சிங்காரவேலரின் போக்குகள் இலண்டன் பயணத்திற்குப் பின்னர் ஆன்மீகத்திற்கு எதிராகவும், பொதுவுடைமைக் கொள்கைக்கு முழுமையும் ஆதரவாகவும் மாறி வந்ததைப் பெ.சு. மணி அவர்களும் எடுத்துக் காட்டுகின்றார்கள். 22.8.1909இல் சிங்காரவேலு செட்டியார் பி.ஏ., பி.எல். சென்னை இராயப் பேட்டையில் பௌத்தாசிரமத்தில் சொற்பொழிவாற்றியுள்ளார். இந்தச் சொற்பொழிவின் சுருக்கம் அயோத்திதாச பண்டிதரின் 'ஒரு பைசா தமிழன்' என்னும் வார ஏட்டில் பதிவாகியுள்ளது. ம. சிங்காரவேலரின் பேச்சைப் படியுங்கள்.

> இச்சபையின் கண் வந்துள்ள அன்பர்காள்! நாம் இன்றைய தினம் கடவுளென்னும் வார்த்தையைப் பற்றியும், அவரது சிருஷ்டியைப் பற்றியும் விசாரிக்க வேண்டியதென்னும் நோக்கம் கொண்டவர்களாய் இருக்கிறோம். மனுக்களால் சிருஷ்டித்துள்ள கடவுளரும், மதங்களும் இன்னும் அனந்த முண்டு. அவற்றை விரிக்கின் வீணேயாம்.
>
> சிருஷ்டிகள் உண்டென்பதும், சிருஷ்டிகன் என்பதும் வெறும் பொய்யேயாம். மெய்யை விரும்புவார் சிருஷ்டிகள் உண்டென்னும் பொய்யையும் அகற்றி மனிதனுக்குத் துக்கமென்பது ஒன்று உண்டு. அவற்றைப் போக்கிக் கொள்வதற்கு வழியுண்டா? என்று விசாரித்துத் தெளிவதே மெய்மை விரும்புவோர் பலன்.

சிங்காரவேலர் தமது சொற்பொழிவில் சிவன், விஷ்ணு, வேதாந்திகள் கூறும் பிரமம், கிறிஸ்துவர்கள் கூறும் கடவுள் முதலியவற்றைப் பற்றித் திறனாய்வு செய்துள்ளதை அறிகிறோம். சிங்காரவேலர் பவுத்தமதச் சிந்தனையாளராகவும், பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும் நிகழ்த்தியுள்ளார் என்பதும் வரலாற்றுச் செய்திகளாகும். இந்தக் காரணத்தினாலேயே பிற்காலத்தில் பெரியார் ஈ.வெ.ரா. அவருடைய சுயமரியாதைப் பிரச்சாரத்திற்குச் சிங்காரவேலரின் உதவியை வேண்டிப் பெற்றார் எனப் பெ.சு. மணி குறிப்பிடுகின்றார்.[1]

காங்கிரசால் ஈர்க்கப்படல்

பிறவிச் சிந்தனையாளரான சிங்காரவேலரை இங்கிலாந்தின் இலண்டன் பயணம் முழுமையான

1. முத்து. குணசேகரன், காரல்மார்க்ஸ் இலக்கிய இதயம், ப.54.

பகுத்தறிவுவாதியாகவும், நாஸ்திகராகவும், பொதுவுடைமை நெறியாளராகவும் மாற்றியதில் பெரும் பங்குண்டு. இலண்டனில் இருந்து திரும்பிவந்த சிங்காரவேலர் இந்தியாவில் நிகழ்ந்து வந்த அரசியல் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தார். காங்கிரஸ் இயக்கத்தின் போக்கு இருவேறு பிரிவுகளாகப் பிளவு பட்டிருந்தது. மிதவாதம் பேசியவர்கள் மென்மையாக நடந்து கொள்ள, சிலர் ‘நமக்கு வேண்டியது சுயராஜ்யம்’ என்று தீவிரவாதமும் பேச ஆரம்பித்தனர். இயக்கம் இரு கூறுகளானது.

அகில இந்திய அளவில் பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்றவர்கள் 1905இல் ஏற்பட்ட வங்கப் பிரிவினையை எதிர்த்து ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். திலகர் தலைமையில் உருவான தீவிரவாதப் போக்கை ஆதரிக்கின்ற ஒரு குழுவினர் சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி இங்கெல்லாம் சுறுசுறுப்பாக இயங்கினர். தீவிரவாதப் போக்கில் பிரச்சாரம் செய்தவர்களையும், அவர்கள் ஆதரவாளர்களையும் பிரிட்டிஷ் அரசு தனது அடக்குமுறைச் சட்டங்களைப் பயன்படுத்திக் கைது செய்து குற்றம் சாட்டிக் கடும் தண்டனையையும் விதித்தது.

தூத்துக்குடியில் கடும் பிரசங்கம் செய்ததற்காக வ.உ.சி. அவர்களும், சுப்பிரமணிய சிவா அவர்களும் கடும் தண்டனை பெற்றனர். அதைப் போலச் சுதேசியப் பிரச்சாரம் செய்ததற்காகச் சின்ன காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா கரூரில் குற்றம் சாட்டப்பட்டுக் கடும் தண்டனை பெற்றார். அதைப் போல 1906இல் நடத்தப்பட்டு வந்த தமிழ் வார இதழ் ‘இந்தியா’ தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டது. அதன் ஆசிரியர் திருவல்லிக்கேணி மண்டையம் சீனிவாசன் கைது செய்யப்பட்டார்.

இந்தியாவின் பத்திரிகை உரிமையாளர் மண்டையம் திருமலாச்சாரியும், இந்தியா பத்திரிகை ஆசிரியர் பாரதியாரும் கைதாகாமல் புதுவைக்குத் தப்பிச் சென்றனர். மேலே குறிப்பிட்ட வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, சின்ன காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா, பாரதி இவர்களெல்லாம் சிங்காரவேலரின் கெழுதகு நண்பர்கள். அதே போல 1911இல் மணியாச்சி ஜங்ஷனில் ஆஷ் கொலை வழக்கில் தொடர்பு படுத்தப்பட்ட நீலகண்ட பிரமச்சாரி சிங்காரவேலரின் மிக நெருக்கமான நண்பர். சிங்காரவேலர் வீட்டிலேயே குடியிருந்தவர்.

இக் காலக் கட்டங்களில் சிங்காரவேலரின் இயக்கங்களைப் பற்றி வெளிப்படையாக அறிய முடியவில்லை.

மகாஜன சபை, திருவல்லிக்கேணி லிட்டரரி சொசைட்டி ஆகியவற்றில் சிங்காரவேலர் ஈடுபட்டு வந்ததை அறிய முடிகிறது. 1913 முதல் 1916 வரை மகாஜன சபையின் செயலாளராகவும் சிங்காரவேலர் செயலாற்றினார். 1914இல் வெடித்த முதல் ஏகாதிபத்திய உலகப் போரும் அதனால் மோசமாகி வந்த உலகப் பிரச்சினையும் சிங்காரவேலரைப் பெரிதும் கவர்ந்தன. இக்காலங்களில் மிகச் செல்வாக்குப் பெற்ற வழக்கறிஞராக இருந்த ம. சிங்காரவேலர் சமூக நலப்பணிகளில் நாட்டங்கொள்ள ஆரம்பித்தார்.

காங்கிரசில் பணியாற்றல்

1916 தொடக்கம் அரசியலில் தீவிரப் பணியாற்றத் தொடங்கினார். ரௌலட் சட்டத்தை எதிர்க்க வேண்டுமென்ற காந்திஜியின் கோரிக்கையை ஏற்றுச் செயல்பட்டார். காந்தியின் சத்தியாக்கிரக அழைப்பை ஏற்றுச் சிங்காரவேலர் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட ஆரம்பித்தார். ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பின்னர், சிங்காரவேலர் மிகக் கடுமையான, தீவிரமான தொண்டராகக் காங்கிரசில் பணியாற்றினார். 1917க்குப் பின்னர், காங்கிரஸ் இயக்கத்தின் தொண்டர் படைத் தளபதியாகவும் சிங்காரவேலரைக் காங்கிரஸ் இயக்கம் ஆக்கியது.

அரசியல் செயல்பாடு

தமிழகம் முழுமையும் காங்கிரஸ் கூட்டங்களுக்குச் செல்வது, இயக்கங்கள் நடத்துவது சிங்காரவேலரின் முழுநேரப் பணியாயின. இளைஞர்கள், மாணவர்கள் அடங்கிய தொண்டர்கள், தொண்டர் படைத் தளபதியான சிங்காரவேலர் தலைமையில் தேசியக் கீதங்களைப் பாடிக் கொண்டும், ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோஷங்களை முழங்கிக் கொண்டும் சென்றனர். அரசியல் சிங்காரவேலரின் முழு நேரப் பணியானது.

புகழ் பெற்ற வழக்கறிஞர்

இக்காலத்தில் சிங்காரவேலர் சென்னையில் மிகச் செல்வாக்குப் பெற்ற வழக்கறிஞராக இருந்தார். ஹைக்கோர்ட்டு வக்கீல் என்றே சிங்காரவேலர் அழைக்கப்பெற்றார். வழக்கறிஞர்களில் மிகவும் புகழ்பெற்ற துரைசாமி அய்யர், வி.என். சாமாராவ் போன்றவர்களாலேயே புகழப்பட்ட வழக்கறிஞராகச்

சிங்காரவேலர் விளங்கினார். சென்னை எக்ஸ்பிளனேடு பக்கத்தில் உள்ள ஜேக்கப் அண்ட் கம்பெனி முதல் மாடியில் அவரின் வழக்கறிஞர் அலுவலகம் இருந்தது.

சிங்காரவேலருக்கு ஏராளமான வழக்குகள் வந்தன. அதனால் நிறையச் செல்வத்தையும் சிங்காரவேலர் சேர்த்தார். சென்னைப் புறத்தேயுள்ள திருவான்மியூர்ப் பகுதியில் தம் சொந்த வருவாயில் இருந்து கொஞ்சம் சொத்தையும், நிலத்தையும் சென்னை மயிலாப்பூரில் ஒரு பெரிய பங்களா போன்ற வீட்டையும் சிங்காரவேலர் வாங்கினார்.

தீவிரமான காங்கிரஸ்காரர்

மற்றவர்களுடைய செயல்பாடுகளைப் போலில்லாமல் சிங்காரவேலரின் செயல்பாடுகள் மிக வித்தியாசமாக இருந்தன. குறிப்பாக 1920 டிசம்பரில் நாகபுரி காங்கிரஸ் மாநாட்டில் அரசுக்கு எதிரான ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், சிங்காரவேலரின் செயல்பாடுகள் மிக மிகத் தீவிரமாக இருந்தன. இந்தியாவினுடைய சுயராஜ்யம் என்பது தொழிலாளர்களுக்கும், உழைக்கும் மக்களுக்கும் உண்மையான விடுதலையைத் தருவதாக இருக்க வேண்டுமென்று சிங்காரவேலர் சிந்தித்தார்; செயல்பட்டார்.

1921இல் 'நியு இந்தியா' என்ற ஆங்கில நாளேட்டின் 'மக்கள் குரல்' என்ற பகுதிக்குச் சிங்காரவேலர் கடிதமொன்று எழுதினார். அக்கடிதம் 15.1.1921இல் இந்துவில் வெளியாகி இருந்தது. அக்கடிதத்தில் சிங்காரவேலர்.

> தொழிலுற்பத்தியில் கட்டுப்பாடு, நிலத்தை நாட்டுடைமை ஆக்குதல் போன்ற விஷயங்களில் இந்தியத் தொழிலாளர்கள் தீவிரம் காட்ட வேண்டும். சாதாரண விஷயங்களான இலாபத்தில் பங்கு, ஊதிய உயர்வு போன்றவற்றில் இந்தியத் தொழிலாளர்கள் ஆர்வம் காட்டக் கூடாது. இதுதான் உண்மையான தொழிலாளர்க்கான சோஷலிசம்.

என்ற பொருளில் சிங்காரவேலர் அரிய கடிதம் ஒன்றை எழுதி இருந்தார்.

தொழிலில் பங்கு வேண்டும்

இந்தச் சமயத்தில்தான் அனைத்திந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் மாநாடு பம்பாயில் கூடியது. இக்கூட்டத்தில் கலந்து

கொள்ளப் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் சார்பாகக் 'கர்னல் வெட்ஜ்வுட்', 'எச்.என். பிரைல் போர்ட்', 'ஹால் போர்ட் நைட்' போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர்.[1]

நியு இந்தியாவில் வெளியிட்டிருந்த செய்தியையே மையமாக வைத்து மாநாட்டிற்குச் சிங்காரவேலர் ஒரு தந்தியையும் அனுப்பி இருந்தார். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட வெட்ஜ்வுட் என்ற உன்னதமான சிந்தனையாளர் சிங்காரவேலரின் தந்தி வாசகத்தைப் பற்றி 'இந்தியாவில் இத்தகைய உணர்வு கொண்ட உணர்ச்சி இதுவரையில் இல்லையென்றும், இது ஓர் உன்னதமான உணர்வென்றும் இத்தகைய தொழிலாளர் ஸ்தாபனங்களே வெற்றி பெற வேண்டுமென்றும்' புகழ்ந்து பேசினார்.

கையாலும், கருத்தாலும் போராட்டங்கள்

போராட்டமென்பது கையால் மட்டுமல்ல, கருத்தாலும் செய்யப்பட வேண்டும் என்பதில் சிங்காரவேலர் எப்பொழுதும் தெளிவாக இருந்தார். முடிந்த போதெல்லாம் இயக்கங்களில் ஆர்வமுடன் கலந்து கொள்வது, கூட்டங்களில் பேசுவது, ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வது, தலைமை தாங்குவது, மாநாடுகளில் கலந்து கொண்டு பங்களிப்பது, பத்திரிகைகளில் எழுதுவது, மாநாடுகளில் கலந்து கொள்ள முடியாதபோது நீண்ட, பெரிய தந்திகளை அனுப்புவது, இப்படியே சிங்காரவேலர் காலம் முழுமையும் செயல்பட்டார்.

பத்திரிகைக்கு எழுதுதல்

அக்காலத்தில் சிங்காரவேலர் பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதுகின்ற பழக்கத்தை மேற்கொண்டிருந்தார். 1920 ஜனவரியில் நடைபெற்ற டிராம்வே வேலை நிறுத்தத்தைப் பற்றியும் 1921இல் பி அண்டு சி மில் வேலைநிறுத்தத்தின் போது துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவர் சவ அடக்க நிகழ்ச்சி பற்றியும், 12.2.1920இல் இந்துவில் 'மிதவாத அரசியலும் சீர்திருத்தச் சட்டமும்' என்ற தலைப்புகளில் சிங்காரவேலர் பத்திரிகைகளில் கடிதங்கள் எழுதினார்.[2]

---

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், பக்.111-116.
2. முத்து. குணசேகரன் மற்றும் பா.வீரமணி, ம. சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், 3 தொகுதிகள்.

'காந்திக்குப் பகிரங்கக் கடிதம்' என்ற பெயரில் 24.5.1921இல் சிங்காரவேலர் கடிதம் எழுதினார். பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுவது அவரது தொடர்ந்த பணியாக இருந்தது. இந்தியாவின் சுயராஜ்யம் குறித்து இந்துவில் 13.5.1921இல் அவரது கட்டுரை வெளியானது. வெவ்வேறு நிலைகளில் சுயராஜ்யம் என்ற தலைப்பில் 30.6.1921 இந்துவில் வெளியானது. சிங்காரவேலரின் ஜென்மப் பகைவராகச் செயல்பட்ட 'லார்ட் வெலிங்டனுக்கு' 9.7.1921இல் பகிரங்கக் கடிதம் எழுதினார்.

'தொழிலாளரும், அரசியலும், மாபெரும் வேலை நிறுத்தமும்' என்ற தலைப்பில் இந்து பத்திரிகைக்கு 18.11.1921இல் எழுதினார். 'வேல்ஸ் இளவரசர் வருகையும், ஹர்த்தாலும், கடையடைப்பு பற்றிய அறிக்கையும் என்ற தலைப்பில் 10.1.1922இல் சிங்காரவேலர் எழுதினார். ஒத்துழையாமையில் சேரவேண்டுமென்று வழக்கறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சிங்காரவேலர் 6.2.1922இல் எழுதினார். அதைப் போலவே லார்ட் ரீடிங் பிரபுவுக்குப் பகிரங்கக் கடிதமொன்று 15.2.1922இல் எழுதினார்.

சிங்காரவேலர் தேசியத் தொண்டர்களின் தலைவர் என்ற முறையில் தமது அனுபவத்தை 17.4.1922இல் இந்துவில் பதிவு செய்தார். காங்கிரஸ் இயக்கத்தில் செய்ய இருக்கும் திருத்தங்கள் குறித்து இந்துவில் 3.5.1922லும் 5.5.1922 ஆகிய இரு நாள்களிலும் சிங்காரவேலர் எழுதியதைக் காணமுடிகிறது. அதைப் போலவே சிங்காரவேலர் தொடங்க இருக்கிற ஒத்துழையாமைக்காரன் என்ற மாதம் இருமுறை சைக்குளோஸ்டு செய்யப்பட்ட பத்திரிகை குறித்து இந்துவில் 1.11.1922இல் எழுதியுள்ளார். 'காங்கிரசின் கொள்கையும் நமது பிழையும்' என்ற தலைப்பில் 12.12.1922இல் இந்துவில் சிங்காரவேலர் எழுதியுள்ளார். இவை தவிர, திரு.வி.க.வின் நவசக்தியிலும், அந்நாளைய சுதேசமித்திரனிலும் சிங்காரவேலர் தொடர்ந்து எழுதியுள்ளார்.

இவை அன்றியும் இ.எல். அய்யரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த சுதர்மாவிலும் 1920 தொடக்கம் தொடர்ந்து சிங்காரவேலர் கட்டுரைகள் எழுதியதைக் காணமுடிகிறது. 15.5.1922 முதல் எம்.என். ராயால் பெர்லினிலிருந்து வெளிவந்த 'வேன்கார்ட்' பத்திரிகையிலும் சிங்காரவேலரின் கட்டுரைகள் வெளியிடப் பட்டதை அறிகிறோம்.[1]

---

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், பக்.147-152.

நம் நாட்டிலுள்ள தலைவர்களுக்கு ஒரு குறைபாடு எப்பொழுதும் உண்டு. மேடையில் பேச ஆரம்பித்தால் அதுவும் நன்றாகவும் பேச ஆரம்பித்துவிட்டால் மேடைப் பேச்சோடு மட்டும் தங்கள் பணியை முடித்துக் கொள்வார்கள். செயல்பாடுகள் அவர்கள் வாழ்வில் அறவே அற்றுப் போய் விடும். இவர்களில் சிங்காரவேலரும், பெரியாரும் முற்றிலும் மாறுபட்ட மனிதர்கள். தங்களின் வாழ்வின் இறுதிக்காலம் வரை இருவரும் கருத்தாலும், கையாலும் போர் செய்து கொண்டே இருந்தனர்.

சிங்காரவேலர் வாழ்வில் செயல் வேறு, சொல் வேறு என்ற நிலை இல்லாது, கருத்தால் புரட்சி செய்து கொண்டிருந்த அவர் கையாலும் புரட்சி செய்பவராகவே வாழ்ந்தார். 1946இல் அவர் மறைகின்ற அந்தத் தருணத்தில் கூடப் பத்திரிகையாளர் கூட்டத்தில் கலந்து கொண்ட சிங்காரவேலர் இந்தக் கூட்டத்திலேயே இப்படி பணியாற்றுகின்றபொழுதே நான் மறைந்தால் என் வாழ்வு பொருளுடையதாக இருக்குமெனக் குறிப்பிட்டார்.

தீவிரவாதி

கட்டுரைகளால் ஆளுவோருக்குக் கலவரமூட்டிக் கொண்டிருந்த சிங்காரவேலர் நடவடிக்கைகளாலும் தீவிரவாதியாகச் செயல்பட்டார். காந்தியினுடைய ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக் கொண்ட சிங்காரவேலர் அக்கொள்கைக்குத் தம்மை முழுமையும் ஒப்படைத்துக் கொண்டார். காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரத் தொண்டராகவும், தலைவராகவும் செயல்பட்டார். அண்ணல் காந்தி அந்நியப் பொருள்களைப் புறக்கணியுங்கள் என்று ஆணையிட்ட மறுகணமே சிங்காரவேலர் மிகமிக உன்னதமாகச் செயல்பட்டார். மாபெரும் வீரரான சிங்காரவேலர் அண்ணல் காந்தியின் ஆணைக்கிணங்கத் தம் வக்கீல் அங்கிக்குத் தீயிட்டுக் கொளுத்தினார்.

வக்கீல் அங்கிக்குத் தீயிடல்

சென்னைத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தம் வக்கீல் அங்கிக்குச் சிங்காரவேலர் பலர் முன்னிலையில் தீ மூட்டினார். இந்தப் பயங்கரச் செயல்பற்றிச் சிங்காரவேலர் 24.5.1921இல் இந்து பத்திரிகை மூலம் மகாத்மாவிற்குப் 'பகிரங்கக் கடிதம்' என்ற தலைப்பில் வெளிப்படுத்தவும் செய்தார். உணர்ச்சி வசப்பட்டு, அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டுச் செயல்பட்டுப் பின்னர்த் தங்களை மாற்றிக் கொள்பவர்கள் உண்டு. சிங்காரவேலர் அப்படிப்

பட்டவரல்லர். உன்னதமான தலைவர் எனப் பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டது பொருளையுடையது.

சிங்காரவேலரின் செயல்பாடுகள்

மற்றவர்களின் செயல்பாடுகளைவிடச் சிங்காரவேலரின் செயல்பாடுகள் தனித்தன்மையானதாகவும், மக்களைக் கவருவதாகவும், புரட்சிகரமானதாகவும் அமைந்து இருந்தன. 1921, 1922 ஆகிய ஆண்டுகளில் அவரின் செயல்பாடுகளைப் பற்றிய குறிப்புகள் 'சுதேசமித்திரனில்' 11.1.1922, 16.1.1922 மற்றும் 22.2.1922 ஆகிய தேதிகளில் வெளியிடப்பட்டுள்ளன. 24.1.1922 நியூ இந்தியாவிலும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. 4.1.1922 மற்றும் 10.1.1922 ஆகிய தேதிகளிலும் சுதேசமித்திரனில் சிங்காரவேலர் தொடர்பான செய்திகள் வெளியாகியுள்ளன. [1]

இசையில் நாட்டமுள்ள சிங்காரவேலரே ஊர்வலங்களில் புரட்சிப் பாடல்களைப் பாடிக் கொண்டும் முழக்கங்களை எழுப்பிக் கொண்டும் செல்வாராம். அவ்வப்பொழுது ஆங்காங்கே சிங்காரவேலர் கூட்டங்களை ஏற்பாடு செய்து பேசுவாராம். பஞ்சாப் படுகொலையைக் கண்டிக்கின்ற கூட்டங்களைச் சிங்காரவேலர் நண்பர் வீரமுரசு சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்தே செய்வாராம். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் ஆறாம் தேதிமுதல் 13ஆம் தேதி வரை காங்கிரஸ் சார்பாகத் 'தேசிய வாரம்' கொண்டாடப்பட்டது என அறிகிறோம்.

சென்னையில் பேரியக்கமானவர்

சென்னையில் எல்லாப் பகுதிகளிலும் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதற்குச் சிங்காரவேலர் பெருங்காரணமாக இருந்தார். சிங்காரவேலர் செயல்பாடுகள் மட்டும் முற்றிலும் வேறு விதமாக இருந்தன. காங்கிரசின் சென்னைத் தொண்டர் படைத்தளபதியான அவர் தமது நண்பர் பாரதியின் புரட்சிப் பாடல்களைத் தெருக்களில் குறிப்பாகத் தொழிலாளர்கள் வாழுகின்ற பகுதிகளில் தொண்டர்களுடன் பாடிக் கொண்டும், புரட்சிகரமான முழக்கங்களை எழுப்பிக் கொண்டும் செல்வார். சென்னையில் நடைபெறுகின்ற அனேகமாக எல்லாக் கூட்டங்களிலும் சிங்காரவேலர் முழுமையாகப் பங்கெடுத்துக் கொள்வார். சென்னையிலே மிக முக்கியமான நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. அதனைச் சிங்காரவேலர் முழுமையாக அரசுக்கு எதிராகப் பயன்படுத்திக் கொண்டார். 1922 ஜனவரியில் பிரிட்டிஷ் 'வேல்ஸ் இளவரசர்'

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர், ப.59.

சென்னைக்கு வருகை புரிவதைச் சிங்காரவேலர் அறிந்தார். இந்த வருகைக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் சிங்காரவேலர் பயன்படுத்திக் கொண்டார்.

வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்பு

வேல்ஸ் இளவரசருக்கு எதிரான புறக்கணிப்புக் கூட்டங்களைச் சிங்காரவேலர் தொய்வின்றிச் செய்தார். சென்னையில் இளவரசரின் எதிர்ப்புக்கு அடையாளமாக அனைத்துக் கடைகளையும் மூடச் செய்தார். ஒவ்வொரு நாளும் நடைபெற்ற கூட்டங்களில் தொண்டர்களுடன் சிங்காரவேலர் எஸ். இராமநாதன், சுப்பிரமணிய சிவா இவர்களுடன் கலந்து கொண்டார். காங்கிரஸ் இயக்கத்தின் பெருந்தலைவர் எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர் என்னும் தலைவரை, தமது நண்பரைச் சிங்காரவேலர் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் கலந்து கொள்ளச் செய்தார்.[1]

அச்சமற்ற சிங்காரவேலர்

சிங்காரவேலரின் செயல்பாடுகள் அரசுக்கும் காவல் துறையினருக்கும் ஆத்திரம் ஊட்டின. என்றாலும் அச்சமின்றிச் சிங்காரவேலர் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தினார். 1922 ஜனவரி மாதம் 13ஆம் தேதி நடைபெற்ற கடையடைப்பு முழுமையும் வெற்றி பெற்றது. இதற்காகவே சென்னை மெரினா கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் சக்கரைச் செட்டித் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அக் கூட்டத்தில் கடையடைப்புக்கு முழுமையும் ஒத்துழைத்த சென்னை மக்களுக்குச் சிங்காரவேலர் நன்றி தெரிவித்துப் பேசினார். இதன் தொடர்பான செய்திகள் 24.1.1922 ‘நியூ இந்தியா’ பத்திரிகையில் வெளியாயின.

ஹிந்துஸ்தான் பஞ்சாயத்து

காங்கிரஸ் இயக்கத்தின் அந்நியப் பொருட்களைப் புறக்கணியுங்கள் என்ற ஆணைக்கிணங்கச் சிங்காரவேலர் செயல்பட்டார். இன்னொரு தீர்மானத்தையும் காங்கிரஸ் இயக்கம் அறிவித்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு உரிமையுடைய நீதிமன்றங்களையும் புறக்கணியுங்கள் என்பதுதான் அத் தீர்மானம். காங்கிரஸ் இயக்கம் அதற்காக உருப்படியான யோசனை ஒன்றையும் வெளியிட்டது. மக்கள் ஆங்கிலேயர்களின் நீதிமன்றங்களைப் புறக்கணித்த நிலையில் ‘மக்களே நடுவர்

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப. 65.

நீதிமன்றங்களை' அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் காங்கிரஸ் யோசனையாகும். இந்த யோசனைக்கிணங்க சிங்காரவேலரும் அவர் நண்பர் சுப்பிரமணிய சிவாவும் மற்றுமுள்ள செயலூக்கமுள்ள தொண்டர்களும் கூடி 'ஹிந்துஸ்தான் பஞ்சாயத்து' என்ற அமைப்பை நிறுவி அதன் குறிக்கோளை மக்களுக்கு விளக்கினர்.[1]

ஹிந்துஸ்தான் பஞ்சாயத்து ஞாயிற்றுக் கிழமைகளில் கூடியது. 'பாரத் ஆஸ்ரமம்' என்ற இடத்தில் சிங்காரவேலர், சுப்பிரமணிய சிவா இவர்களின் ஆளுமையில் கூடி மக்களின் பொருளியல் குற்றங்களையும், குற்றவியல் குற்றங்களையும் விசாரித்தது என்பதைச் சுதேசமித்திரன் 20.5.1922, 14.6.1922, 20.7.1922 ஆகிய தேதிகளில் பதிவு செய்துள்ளதை அறிகிறோம். இதே காலக்கட்டத்தில் தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியா அளவில் இந்திய விடுதலைக்கு முகமதியர்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டுமென்று காங்கிரஸ் முடிவெடுத்தது. அந்த இயக்கத்திற்கு 'ஹிலாபட் இயக்கம்' என்பது பெயர். அந்த இயக்கத்திலும் சிங்காரவேலரின் பங்களிப்பு நிறைந்து இருந்தது.

ஹிலாஃபட் இயக்கத்தில் சிங்காரவேலர்

ஹிலாபட் இயக்கமென்பது இந்திய விடுதலையில் முகமதியர்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட்ட இயக்கமாகும். இந்திய விடுதலைக்கு முகமதியர்கள் ஆற்றிய பணி என்பது அசாதராணமானது. இந்தியாவில் உள்ள அனைத்து மக்களும் இந்தியர்களே என்ற உன்னதமான எண்ணத்தைப் பெற்றிருந்தவர் சிங்காரவேலர். சென்னை மட்டுமல்ல, தமிழகம், இந்தியா என்ற பேரளவில் முகமதியர்களை இணைத்துக் கொண்டு புரட்சி இயக்கம் நடத்தியவர் சிங்காரவேலர்.

கார்ல்மார்க்சும், ஏங்கெல்சும் 'கம்யூனிஸ்டு மெனிபெஸ்டோவை' வெளியிட்டுச் சாதனை படைத்ததைப் போலச் சிங்காரவேலரும் எம்.பி.எஸ். வேலாயுதமும் தமிழகத்தில் ஹிந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கட்சியென்னும் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையை வெளியிட்டுச் சாதனைப் படைத்தனர். 1923 மே மாதம் ஒன்றாம் நாள் இந்த அறிக்கை வெளியாகி உள்ளது. அந்த அறிக்கையில் இருவருமே கையெழுத்திட்டுத் தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று பிரகடனப் படுத்தியுள்ளனர்.

அக்காலத்தில் கம்யூனிஸ்டுகள் என்று உச்சரிக்கவே அச்சப்படும் சூழலில் சிங்காரவேலரும், வேலாயுதமும் தம்மைக்

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப. 66.

கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொண்டது சாதாரணமல்ல. இரும்பு இதயமாக இருந்தாலொழிய இப்படித் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளத் துணிவிருக்காது. இதனாலேயே சிங்காரவேலர் மீதும் வேலாயுதத்தின் மீதும் கான்பூர் சதி வழக்கு தொடுக்கப்பட்டது.

இந்தக் கட்சி அறிக்கையில்தான் சிங்காரவேலர் தாம் வகித்த பதவிகளையெல்லாம் குறிப்பிடுகின்றார். பதினொரு பதவிகளுக்குமேல் அவர் பொறுப்பில் இருந்திருக்கிறார். 1. மகாபோதியின் சொசைட்டித் தலைவர். 2. மில் ஒர்க்கர்ஸ் லேபர் கமிட்டித் தலைவர். 3. ஹிந்துஸ்தான் பஞ்சாயத்துத் தலைவர். 4. மெட்ராஸ் சிட்டி காங்கிரஸ் தலைவர். 5. காங்கிரஸ் லேபர் கமிட்டி மெம்பர் மற்றும் செக்ரட்டரி. 6. கிலாஃபட் புரவிஷன் கமிட்டியின் மெம்பர். 7. தமிழ்நாடு கிலாபட் புரவின்ஷியல் கமிட்டியின் மெம்பர். 8. சென்னைக் காங்கிரஸ் ஓர்க்கிங் கமிட்டி மெம்பர். 9. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர். 10. சென்னைக் காங்கிரஸ் தொண்டர் படைத்தளபதி. 11. அகில இந்திய லேபர் கமிட்டியின் உறுப்பினர் ஆகிய பதவிகளில் இருந்திருக்கிறார்.

இவற்றிலே கிலாஃபட் புரவின்ஷியல் கமிட்டியின் மெம்பர் மற்றும் தமிழ்நாடு கிலாபட் புரவின்ஷியல் கமிட்டியின் மெம்பர் என்ற இரு பொறுப்புகளையும் ஏற்றுச் சிங்காரவேலர் அருமையாகச் செயல்பட்டுள்ளார்.

ஹிலாபட் இயக்கம்

ஹிலாபட் இயக்கம் என்றால் என்ன? அது இந்த மண்ணில் எப்படி செயல்பட்டது? என்பதை அறிந்தால்தான் சிங்காரவேலரின் பெருமைகளை நாம் புரிந்து கொள்ளமுடியும். 1920களில் பிரிட்டிஷ் பேரரசு அஸ்தமிக்காத பேரரசாக இருந்தது. அது உலகம் முழுமையையும் கட்டி ஆண்டது. துருக்கியை ஆண்ட சுல்தான் பிரிட்டிஷ் அரசுக்கு முரண்பட்டு நடந்து கொண்டார். இன்றைக்கு அமெரிக்கா செய்கின்ற வேலையை அன்றைக்குப் பிரிட்டன் செய்தது.

துருக்கியின் பெரும்பதவியான கலிஃபா என்னும் பதவியை ஒழித்து விட்டுக் கமால் பாஷா என்பவருக்கு அதிகாரத்தைத் தந்து பிரிட்டன் அவரைப் பதவியில் அமர்த்தியது. இதனைக் கண்ட உலக முகமதியர்கள் ஒட்டுமொத்தமாகப் பிரிட்டனுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். உலக முகமதியர்கள் அத்தனை பேரும் ஒன்றாக ஓரணியில் திரண்டனர்.

இந்தியாவில் திரண்ட முகமதியர்கள் அத்தனை பேரையும் காங்கிரஸ் அமைப்பினோடு இணைத்து அவர்கள் உணர்வுகளை ஒன்றாகத் திரட்டிப் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகப் பயன்படுத்தி அந்த உணர்வை இந்தியச் சுதந்திர விடுதலைக்காகப் பயன்படுத்திக் கொள்ளக் காங்கிரஸ்காரர்கள் திட்டமிட்டனர். இந்தச் சமயத்தில்தான் சிங்காரவேலர் மெட்ராஸ் சிட்டி காங்கிரஸ் தலைவராகவும், காங்கிரஸ் லேபர் கமிட்டி மெம்பராகவும், சென்னை ஒர்க்கிங் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், சென்னைக் காங்கிரஸ் தொண்டர் படைத்தளபதியாகவும் இருந்த நிலையில் மிக அற்புதமாகக் ஹிலாஃபட் இயக்கத்தில் தலைமை ஏற்று அருமையாகப் பணியாற்றினர். முகமதியர்களைத் தூண்டிவிட்டு இந்தியச் சுதந்திரத்திற்கு அவர்களைப் பயன்படுத்திக் கொண்டார்.

சிங்காரவேலர் ஹிலாஃபட் இயக்கத்தில் சிறப்பாகப் பணியாற்றியதற்குத் தனிப்பட்ட காரணங்கள் இருந்தன. உலக மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யா மொழி போன்ற மொழிகளை அறிந்திருந்த சிங்காரவேலர் உருது, ஹிந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளையும் மிக நன்றாக அறிந்திருந்தார்.

டாஷ் கேப்பிட்டல் என்னும் நூலையே நேரடியாகப் படிக்கின்ற அளவிற்குச் சிங்காரவேலர் ஆற்றல் உள்ளவர் என்றால் உருது மொழியையும், ஹிந்தியையும் பேசவும் எழுதவும் அறிந்திருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? அத்தனை மொழிகளையும் தாமே முயற்சி செய்து கற்றார் என்பதுதான் அவரின் தனிச்சிறப்பு. ஆகவே இந்த வகையில் ஹிலாஃபட் இயக்கத்தில் சிங்காரவேலர் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

இந்தியாவில் எதனையும், யாரையும் மதக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்ற கொடுமை இன்று உருவாகி விட்டது. இந்துக்கள் என்னும் பிரிவினை நஞ்சை ஊட்டி இந்துமதத் தலைவர்கள் மக்களுக்கு வெறியூட்டுகிறார்கள். இதைப் போலவே இந்தியாவில் உள்ள மதவெறியர்கள் முகமதியர்களுக்கு மத வெறியை ஊட்டி வளர்க்கின்றனர். மொத்தத்தில் இந்தியா முழுமையும் தீவிரவாதமும், மதவாதமும் தலைவிரித்தாடுகின்றன.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறுகின்றன. இந்த மதவாதிகள் மூட்டிவிட்ட தீயில் பலியாவது ஏழை எளியவர்கள்தாம். இது இன்றுள்ள நிலைமை. தடா, போடோ அவசரச் சட்டங்கள் என்று காணும் இந்தியா

அன்று அப்படி இல்லை. முகமதிய மக்களும், இந்து மக்களும் இணைந்து போராடினார்கள். இரு இன மக்களின் எழுச்சியைக் கண்ட பிரிட்டிஷ் பேரரசு உண்மையில் நடுங்கியது. ஹிலாஃபட் இயக்கத்தில் முக்கியப் பொறுப்பில் இருந்த சிங்காரவேலர் இருமக்களையும் இணைத்து வைத்து அற்புதமாகப் போராடினார்.

1920 டிசம்பரில் நாக்பூர் காங்கிரசில் ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேறியது. இதன் அடிப்படையில் இந்தியாவில் விடுதலை இயக்கத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அடக்க முடியாத பிரிட்டிஷ் அரசு அண்ணல் மகாத்மாவை 18.3.1922இல் கைது செய்து ஆறாண்டுகள் சிறைத் தண்டனையையும் விதித்தது. இந்த நேரத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் மூன்று வகையில் செயல்பட்டனர். ஒரு பிரிவினர் சட்டமன்றத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றுச் சட்டமன்றங்களில் நுழைந்து அரசை எதிர்த்தனர். இன்னொரு பிரிவினர் சட்டமன்றத் தேர்தல்களிலே கலந்து கொள்வதில்லை என முடிவெடுத்தனர். மூன்றாவது பிரிவினர் மாண்டேகு சேம்ஸ்போர்டு அரசியல் சட்டத்தின் கீழ் நகரசபைத் தேர்தல்களிலும், சட்டமன்றத் தேர்தல்களிலும் கலந்து கொண்டு தங்கள் உணர்வுகளைச் செலவிட்டனர்.

இந்தச் சமயத்தில் சிங்காரவேலர் ஹிலாஃபட் இயக்க அமைப்பில் மிகத் திறமையாகச் செயல்பட்டார். முகமதிய மக்கள் தமிழகத்தில் எங்கெல்லாம் மிகுதியாக வாழுகின்றார்களோ, அங்கெல்லாம் சென்று சிங்காரவேலர் மிகத் திறமையாகச் செயல்பட்டார். உருதும், ஹிந்தியும் தெரிந்திருப்பதால் அம்மக்களை நேரில் பார்த்து உணர்வுகளை ஊட்டி அவர்களை இந்திய அரசியல் கிளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

முகமதியர்கள் பெரும்பான்மையாக வாழும் தஞ்சை, நாகபட்டினம், திருச்சி, வட ஆர்க்காடு மாவட்டம், கோவை, சேலம், திருவண்ணாமலை ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்று ஹிலாஃபட் இயக்க உணர்வைத் தூண்டிவிட்டார். ஹிலாஃபட் இயக்கம் இந்திய விடுதலைக்குப் பெரும் பங்காற்றவில்லை யென்றாலும் அதன் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது.

இந்துக்களும், முகமதியர்களும் ஒரு நுகத்தடியில் பூட்டிய இரு காளைகளைப் போலச் செயல்பட்டனர். ஆளுபவர்கள் சமாளிக்க முடியாமல் இடர்ப்பட்டனர். சிங்காரவேலர் 1920களில் இரு சமுதாயத்தையும் ஒருங்கிணைத்து அவர்களைத் தூண்டியது, அவரின் தனித்தன்மைக்குச் சிறந்த சான்றாகும்.

சிங்காரவேலர்-பாரதி தொடர்பு

பாரதிக்கு யார் யாரோடு தொடர்பு இருந்ததோ அவர்களோடெல்லாம் சிங்காரவேலர் நெருக்கமான உறவைப் பெற்றிருந்தார். திருவல்லிக்கேணியில் வாழ்ந்திருந்த சுப்பிரமணிய அய்யர், எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி இவர்களெல்லாம் சிங்காரவேலரின் நெருக்கமான நண்பர்கள். எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி ஆஷ் கொலை வழக்கில் தொடர்பு படுத்தப்பட்டவர். இவர் சிங்காரவேலர் வீட்டில் நிரந்தரமாகத் தங்கி இருந்தவர்.

வ.ரா. அய்யர், நெல்லையப்பர், பாரதிதாசன், வ.வே.சு. அய்யர், மண்டையம் திருமலாச்சாரி அவர் குடும்பத்தினர் அனைவரோடும் சிங்காரவேலர் பல வகையான தொடர்புகளைப் பெற்றிருந்தார். பாரதி சென்னைக்கு 1905 தொடக்கம் குடிவந்து விட்டார். 1907 சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குப் பின்னர்த் திலகர், வ.உ.சிதரம்பரனார் இவர்களின் கெழுதகு நண்பராக மாறினார். இந்த வகையில் பாரதி ம. சிங்காரவேலரின் கெழுதகு நண்பராக விளங்கினார்.

பாரதியை ஆதரித்த சிங்காரவேலர்

சிங்காரவேலர் பெரும் செல்வந்தர். திருவல்லிக்கேணியில் இருந்த சிங்காரவேலர் வீட்டிற்குப் பாரதி அடிக்கடி குடும்பத்துடன் வருகின்ற பழக்கமுடையவர். சிங்காரவேலர் இளமையிலேயே தம் வீட்டுக் குழந்தைகளுக்கெல்லாம் கடவுள் வாழ்த்துப் பாடலுக்குப் பதிலாகச் சுதந்திரக் கிளர்ச்சிப் பாடல்களைத்தாம் சொல்லிக் கொடுத்திருந்தார். செல்வந்தரான சிங்காரவேலர் குடும்பத்தவர்கள் எப்பொழுதும் மேலை நாட்டினர்கள் போல் மேஜை நாற்காலியில் அமர்ந்து உண்பவர்கள். உண்பதற்கு முன்னர் இறை வணக்கப் பாடல் பாடுவது சிங்காரவேலர் குடும்பத்தவர்கள் பழக்கம்.[1]

அந்த இறை வணக்கப் பாடல் பாடுகின்ற முறையை மாற்றித் தேசியப் பாடல்களான

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்
என்றெம தன்னை கை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்
வந்து பாயுது காதினிலே.

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப.110.

பாரத சமுதாயம் வாழ்கவே!

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்திற்கு ஒது புதுமை.

என்பன போன்ற பாடல்களையே சிங்காரவேலர் இறை வணக்கப் பாடல்களாகப் பாடச் செய்தார்.

பாரதியாருடன் சிங்காரவேலர் கொண்ட தொடர்பென்பது கொள்கை அடிப்படையானதல்ல; குடும்ப உறவென்று கூறுபவர் ம. ஜெய்பாய். உஸ்மேனியா பல்கலைக் கழக ஆங்கிலப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் ம. ஜூபாய். சென்னையில் தொடக்ககால எம்.பி.,பி.எஸ். டாக்டர் ஆவார். இருவருமே சிங்காரவேலர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். சிங்காரவேலரின் பேத்திகளாவர்.

இவ்விருவரையும் நான் ஆய்வு நிமித்தம் சந்திப்பதுண்டு. தொழிற்சங்க மேதை நாகை கே. முருகேசன் உடன் இருப்பார். எப்பொழுதும் பேராசிரியர் பி. இரத்தினசபாபதி, அ. வாசுதேவன் இருவரும் உடன் இருக்கின்ற பொழுதுதான் பல அரிய நுட்பமான செய்திகளை ம. ஜெய்பாயும், ம. ஜூபாயும் பதிவு செய்தனர்.

அச்செய்திகளில் ஒன்றுதான் மகாகவி பாரதி சிங்காரவேலர் மடியில் உயிர் துறந்தார் என்கின்ற செய்தி. 1921 ஜூன் மாதமே பார்த்தசாரதி கோயில் யானைக்கு மதம் பிடித்துவிட்டது. இருந்தும் பாரதி அடிக்கடி அந்த யானையைப் பார்த்துப் பழம் தேங்காய் கொடுப்பதுண்டு. இப்பொழுதும் பாரதி பழம், தேங்காய் கொடுப்பதற்கு யானையை நெருங்கினார். பக்கத்தில் இருந்தவர்கள் 'யானைக்கு மதம் பிடித்துவிட்டது, கிட்டே போகாதே, கிட்டே போகாதே என்று கத்தினார்கள். மயக்கத்தில் இருந்த பாரதி யானையால் தூக்கி வீசப்பட்டார். சிறிய காயத்தோடு தப்பிய பாரதி எப்படியோ காப்பாற்றப் பட்டார்.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர்ப் பாரதி கடுமையான நோய்வாய்ப்பட்டார். இப்பொழுது சீதபேதியும் சேர்ந்து கொண்டது. 1921 செப்டம்பர் 21ஆம் தேதி நடுநிசியில் பாரதிக்கு உடல்நிலை மிகவும் கவலைக்கிடமானது. பாரதி இப்பொழுது முழுமையும் மயக்க நிலையிலேயே இருந்தார். சிங்காரவேலர் வீட்டில் குடியிருந்த எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி, பரலி

சு. நெல்லையப்பர், பாரதியின் உறவினர் இலட்சுமண ஐயர் இன்னும் சிலரும் உடன் இருந்தனர். இரவு, ஒரு மணிக்குமேல் சிங்காரவேலர் பாரதியைப் பார்க்க மிகவும் கவலையுடன் வந்து நின்றார். இப்பொழுது பாரதியின் மயக்கம் தெளிந்தது.

அருகில் நின்றிருந்த சிங்காரவேலரைப் பாரதி மிகவும் பரிவுடன் பார்த்து அவரை அருகே வரவேண்டுமென அழைத்தார். அருகில் சென்றமர்ந்த சிங்காரவேலர் மடியில் பாரதி பரிவுடன் தலை சாய்த்துக் கொண்டு குடிப்பதற்கு ஏதாவது வேண்டுமென்று சைகை செய்தார். வீட்டினர் கொடுத்த பாலைச் சிங்காரவேலர் கொடுத்தார். சிங்காரவேலர் மடியில் சாய்ந்த பாரதி மீளாத் துயிலில் ஆழ்ந்தார்.

அன்று இரவு உடன் இருந்தவர்கள் எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி, பரலி சு. நெல்லையப்பர், பாரதி உறவினர் இலட்சுமண அய்யர் என ரா.சு. பத்மநாபன் பதிவு செய்கின்றார். இடுகாட்டிற்கு உடன் சென்றவர்கள் வி. ஹரிஹர சர்மா, எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி, சிங்காரவேலர் நண்பர் சக்கரைச் செட்டி, சுரேந்திர நாத் ஆர்யா, சிங்காரவேலர் குடும்ப நண்பர் மண்டையம் சீனிவாச்சாரி, இன்னொரு சிங்காரவேலர் நண்பர் சின்ன காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா ஆகியவர்கள். பாரதியின் முகத்தில் அமர்ந்திருந்த ஈக்களை விட இன்னும் குறைவானவர்களே உடன் சென்றனர் என அறிகிறோம். அந்த ஈமச் சடங்கிற்குச் செலவிட்டவர் ம. சிங்காரவேலர்தாம்.

பிற்காலத்தில் யார் யாரோ பாரதியை நெருங்கிய உறவினர்களாகக் கூறிக் கொள்கின்றனர். அன்றைக்கு அவர் பின்னால் அவர் சமூகமே உடன் இல்லை என்பதுதான் வரலாற்று உண்மை. சிங்காரவேலர் தம் வாழ்வின் இறுதிவரை ஒரு செய்தியைத் தம் தொண்டர்கள், குடும்பத்தவர்கள் அனைவரிடமும் ஆற்றாமையோடு புலம்புவது உண்டாம். அந்தப் புலம்பலை அடிக்கடி கேட்டவர்கள் நாகை கே. முருகேசன், தொழிற்சங்க மேதை ஏ.எஸ்.கே. அய்யங்கார், ம. ஜெய்பாய், ம. ஜூபாய் ஆகியோர். இவர்களின் வாய்வழிச் செய்தியைத்தான் இங்கே நாம் பதிவு செய்கிறோம். 'அந்த மகாகவிஞன் பாரதியின் உயிர் இந்த மடியிலே தான் பிரிந்தது' என்று சிங்காரவேலர் அடிக்கடி நினைவுபடுத்தியதை ம.ஜெய்பாய், ம. ஜூபாய், நாகை கே. முருகேசன், ஏ.எஸ்.கே. அய்யங்கார் ஆகியோர் கூறுவர்.

இந்தத் தகவல் பாரதிக்குப் பெருமைக்காகவோ சிங்காரவேலருக்குப் பெருமைக்காகவோ பதிவு செய்யப்

படவில்லை. சில வரலாற்று உண்மைகள் என்றென்றைக்கும் பேசப்பட வேண்டுமே என்கின்ற ஆதங்கத்தால்தான் பதிவு செய்யப்படுகின்றன. இந்தத் தகவலைச் சிங்காரவேலரின் வாரிசாக இருந்து தொழிற்சங்கப் பணிக்கே தம் வாழ்வைச் செலவிட்ட ஏ.எஸ்.கே. அய்யங்கார் அவர்களும் பதிவு செய்துள்ளார்கள்.

கயா காங்கிரசில் சிங்காரவேலர்

சிங்காரவேலர் தொடர்பான சில செய்திகள் நமக்கு உண்மையில் வியப்பளிப்பதாகும். 1920களிலேயே காங்கிரசில் இடதுசாரி சிந்தனை, தீவிரவாதம், ரஷ்யாவுடன் தொடர்பு, தொழிலாளர்களை ஒருங்கிணைத்தல், உலகத் தொழிலாளர்கள் மேன்மைக்குப் பாடுபடல் போன்ற உன்னதமான கொள்கைகளைச் சிங்காரவேலர் கொண்டிருந்தார். [1]

காங்கிரசில் எங்கே மாநாடுகள் நடந்தாலும் அவற்றில் சென்று கலந்து கொள்வது என்பது அவருடைய உன்னதமான கொள்கையாக இருந்தது. அப்படி தம்மால் செல்லமுடியாத நிலை இருக்குமானால் நீண்ட தந்திகளைக் கொடுப்பது அவருடைய வழக்கமாக இருந்திருக்கிறது. சிங்காரவேலரின் கெழுதகு நண்பர் வீரமுரசு சுப்பிரமணிய சிவாவும் சிங்காரவேலருடன் கயா காங்கிரசிற்குச் சென்றிருந்தார். 1886க்குப் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பின்னர்த்தான் 1922இல் கயாவில் காங்கிரஸ் மாநாடு கூட்டப் பெற்றது. அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியினுடைய செயற்குழு உறுப்பினராக இந்த மாநாட்டில் சிங்காரவேலர் கலந்து கொண்டார். அவர் கலந்து கொண்ட விவரத்தை எம்.என். ராயின் 'வேன்கார்டு' பத்திரிகை தெளிவாகத் குறிப்பிடுகின்றது.

எந்தக் கூட்டங்களுக்குச் சென்றாலும் அக் கூட்டங்களில் இயக்கத்தின் நோக்கங்களையும், கொள்கைகளையும் அச்சடித்து வழங்குவது சிங்காரவேலர் இயல்பு. அப்படித்தான் இப்பொழுது சிங்காரவேலர் ஒரு போர் அறிக்கையை அச்சடித்துக் கயா கூட்டத்தில் கலந்து கொண்ட 400 உறுப்பினர்களுக்கும் வழங்கி இருந்தார். அந்த அறிக்கை புரட்சிகரமாகத் தயாரிக்கப் பட்டிருந்தது. 'ஆட்டிப் படைப் போர்க்கு அஞ்சுதல் வேண்டாம், அமைச்சர் என்போர்க்கு அஞ்சுதல் வேண்டாம், காட்டிக் கொடுப்போர்க்கு அஞ்சுதல் வேண்டாம், கருத்திலாக் கட்சிகளுக்கு அஞ்சுதல் வேண்டாம்' என்ற பாங்கில் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை கூடியிருந்தவர்களை ஒரு

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப. 92.

குலுக்குக் குலுக்கியது. கூடியிருந்தவர்களின் ஆர்வமும், ஊக்கமும் சிங்காரவேலரை அன்பு மழையில் நனைய வைத்தன. கூடியிருந்த அத்தனை உறுப்பினர்களும் பாசமழையைச் சிங்காரவேலர் மீது பொழிந்தனர்.

கூட்டம் இப்பொழுது சிங்காரவேலரை உரையாற்ற வேண்டிக் கொண்டது. சிங்காரவேலர் இப்பொழுதே 60 வயதைக் கடந்த முதியவர். எந்தக் கூட்டத்தில் பேசினாலும் முகத்தை இடது பக்கத்திலிருந்து வலது பக்கமும், வலது பக்கத்திலிருந்து இடது பக்கமும் ஒரு சிங்கநோக்காகப் பார்ப்பது சிங்காரவேலர் பழக்கம். உடல் நலமில்லாமல் இருந்த சிங்காரவேலர் இப்பொழுது நரைத்த தாடியுடனும் காணப்பட்டார். நீண்ட நேரம் கூட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்த சிங்காரவேலரைப் பற்றிக் கூட்டம் வேறுவகையில் நினைத்தது! ஆர்வத்தால் முதியவர் மேடை ஏறிவிட்டார். இப்பொழுது பேசத் தெரியாமல் திண்டாடுகிறார் எனக் கூட்டம் நினைத்தது.

இந்த நிலையில்தான் சிங்காரவேலர் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். ‘அன்புக்குரிய காம்ரேட்ஸ்களே’! என்று விளித்தார். இடிவிழுந்ததைப் போலக் கூட்டம் அஞ்சியது. காம்ரேட்ஸ் என்பது கம்யூனிஸ்டுகளுக்கு உரிய வார்த்தை. அந்த வார்த்தையை இந்தியாவில் மறந்தும் காங்கிரஸ்காரர்கள் பயன்படுத்த மாட்டார்கள். இளைஞர்கள் கூட அப்படிப் பேசினால் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்று அஞ்சுகின்ற வார்த்தை. அந்த வார்த்தையைத்தான் சிங்காரவேலர் இப்பொழுது துணிவாகப் பயன்படுத்தினார். கூட்டத்தின் கை தட்டல் ஓய 5 நிமிடங்கள் ஆகின. தொடர்ந்து சிங்காரவேலர் பேசினார். கூட்டம் ஆடாமல் அசையாமல் இருந்து அவர் பேச்சைக் கேட்டது.

> தலைவர் அவர்களே! மாமன்றத்தில் கூடியுள்ள தோழர்களே! உடன் உழைக்கும் தோழர்களே! இந்துஸ்தான் தொழிலாளிகளே! இந்துஸ்தான் விவசாயிகளே! உங்களோடு இணைந்து உழைப்பவன் என்ற முறையில் உங்களோடு பேச வந்திருக்கிறேன். உலகத் தொழிலாளர்கள் நலனில் அக்கறையுள்ள கம்யூனிஸ்டுகளின் வாழ்த்துக்களை உங்களுக்குச் சொல்ல வந்துள்ளேன். உங்கள் விடுதலையையும், உடைமையையும் பெற்றுத் தருவதில் அக்கறை கொண்டுள்ள சோவியத்து ரஷ்யாவின் கம்யூனிஸ்டுகள், ஜெர்மன்

கம்யூனிஸ்டுகள், மற்றும் உலகிலுள்ள கம்யூனிஸ்டுகளின் சார்பாக வாழ்த்துக்களைக் கூற நான் இங்கே வந்துள்ளேன்.

சிலர் புசிக்கவும், பலர் பசிக்கவுமான நிலை இந்த இந்திய மண்ணில் காணப்படுகின்றது. சிலரின் கையில் மட்டும் அதிகாரம் குவிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. இதைப் போக்கும் நல்ல நோக்கத்தை மையமாகக் கொண்டுதான் இந்தியக் காங்கிரஸ் கட்சி பாடுபடுகிறது. மக்கள் போதுமான அளவு உண்ணவும், உடுக்கவும், நிம்மதியாக வசிக்க வீடுகளைப் பெறவும்தான் இன்றைக்கு நாம் பாடுபடுகின்றோம். விடுதலைப் போரில் ஈடுபடுகின்ற காங்கிரஸ் இயக்கம் இந்த அடிப்படைத் தேவைகளை மக்கள் பெறுவதற்கு உறுதியளிக்க வேண்டும். இந்தக் கோரிக்கை குறித்து, தோழர்களே! உலகக் கம்யூனிஸ்டுகள் உங்களுக்கு உதவ உறுதி பூண்டுள்ளார்கள். உங்களுக்கு விடுதலையை வழங்கவும், அனைத்து வசதிகளைச் செய்து தரவும் உலகக் கம்யூனிஸ்டுகள் தயாராக உள்ளார்கள் என்கின்ற இரகசியத்தை, நுட்பத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களை நீங்கள் முதலில் நம்பவேண்டும்.

'தோழர்களே! முதலில் நாம் சுயராஜ்யத்தை அடைய வேண்டும். இந்தச் சுயராஜ்யத்தை அடைவதற்காகத்தான் அண்ணல் காந்தி இந்த மண்ணில் அன்றாடம் உழைக்கிறார். அவருடைய நெறி வன்முறையற்ற ஒத்துழையாமை நெறியாகும். காந்தியின் நெறியை ஏற்றுக் கொண்ட நமக்கு இந்த நெறியிலே நம்பிக்கை நிறையவே இருக்கிறது. வன்முறையால், பலாத்காரத்தால் விடுதலை பெற்ற சோவியத்து ரஷ்யா போன்ற நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகள் இந்தக் காந்திய நெறியை நம்ப மறுக்கிறார்கள்.

ஆனாலும் நான் அவர்களுக்கு ஓர் உண்மையை உணர்த்தி விட்டேன். உங்களுடைய கம்யூனிச நடவடிக்கையிலிருந்து மாறுபட்டதுதான் இந்திய விடுதலை நெறிமுறையென அவர்களுக்கு உணர்த்தி விட்டேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான

வன்முறையற்ற நெறி முறையைத்தான், காந்திய வழியைத்தான் நாங்கள் பின்பற்றப் போகிறோமென அவர்களுக்குத் தெளிவுபடுத்தி விட்டேன். தொடக்கத்தில் இந்த நெறியை நம்ப மறுக்கும் வெளிநாட்டுக் கம்யூனிஸ்டுகள் காலவெள்ளத்தில் நம் நெறியை நிச்சயம் நம்புவார்கள்.

ஆகவே தோழர்களே! உங்களுக்கு ஓர் உண்மையை இங்கே உணர்த்த விரும்புகிறேன். காங்கிரஸ் இயக்கம் இதுநாள் வரை தொழிலாளர்களை ஒரு பொருட்டாக எண்ணியதில்லை. இந்த நிலையை நாம் மாற்ற வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டுவது ஒன்றுதான். இந்தியாவிலுள்ள அனைத்துத் தொழிலாளர்களையும், காங்கிரஸ் அமைப்பின் ஒரு பகுதியாக நாம் ஆக்க வேண்டும். இந்த முயற்சியிலே நாம் மிகக் கடுமையாக உழைக்க வேண்டும். எந்த நடவடிக்கையும் அவரவர்கள் மண்ணுக்குரிய முறையில் நடைபெறும். நம்முடைய இந்திய மண்ணுக்கு ஏற்றமுறை இதுதான். இதில் சந்தேகம் வேண்டாம்![1]

தைரியமாகத் தொழிலாளர்கள் இயக்கத்தில் பங்கு பெற வேண்டும். துணிவாகச் செயலாற்ற வேண்டும். அப்படி தொழிலாளர்கள் தீவிரமாகச் செயல்படத் தவறியதால் மகாத்மா அவர்கள் 'பர்தோலி' தீர்மானத்தை நிறைவேற்றிக் காங்கிரஸ் இயக்கத்தை முடமாக்கினார்கள். ஓர் இயக்கச் செயல்பாட்டிலே வன்முறையென்பது தவிர்க்க முடியாதது. அரிசி வெந்தால் சோறாவதைப் போல், பெரும் புயலிலே சில மரங்கள் சாய்வதைப் போல, இயக்க நடவடிக்கையில் சில வன்முறைகள் நடைபெறுவது தவிர்க்க முடியாதது.

அப்படி நிகழ்ந்ததுதான் 'பர்தோலி' நிகழ்ச்சி. தொழிலாளர்கள் வலிமை பெற்று இயக்கத்தை வழி நடத்தியிருப்பார்களானால், பர்தோலித் தீர்மானத்தை மகாத்மா நிறைவேற்றியிருக்க மாட்டார். பர்தோலித் தீர்மானத்தால், அது மகாத்மாவே நிறைவேற்றி இருந்தாலும் கூட

---

1. கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, பக்.281-286.

அதனால் காங்கிரஸ் இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு கொஞ்சமல்ல. இதை நான் எந்த மேடையிலும் அஞ்சாமல் கூறுவேன். காங்கிரஸ் இயக்கம் இந்தியத் தொழிலாளர்களைச் சரியாகப் பயன்படுத்தாமைதான் இந்தச் சரிவுக்குப் பெருங்காரணம். இனியாவது தொழிலாளிகள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் உணர்வு ஒன்றிணைந்தால் ஒழிய இந்த நாட்டில் நாம் எதனையும் சாதிக்க முடியாது. இது உறுதி!

மயிலே! மயிலே! என்றால் அது இறகு போடாது. கொள்கையில் உறுதி மிக மிக அவசியம். நம்முடைய போர் முறையென்பது அமைதியான, சாத்வீகமான ஒத்துழையாமைதான். அதன் மூலம்தான் நாம் சாதிக்க வேண்டும். தேசிய அளவில் வேலை நிறுத்தங்கள் செய்யாமல் பிரிட்டிஷ் அரசை எள் அளவு கூட நம்மால் அசைக்க முடியாது. ஆகவே நாம் இந்தியக் காங்கிரஸ் தொழிற்சங்கத்துடன் தொடர்பு கொள்வதோடு தொழிலாளர்களையும் திரட்டிக் காங்கிரஸ் அமைப்பின் ஒரு பகுதியாக ஆக்க முயல வேண்டும். இது அவசிய அவசரத் தேவை.

தொழிலாளர் தோழர்களே! உங்களுடைய ஆற்றலை, அதாவது தொழிலாளர்களின் வலிமையைத் தொழிலாளிகளே இன்னும் உணரவில்லை என்பதுதான் உண்மை. ரஷ்யாவின் கதைகளிலே 'வீ' என்னும் அரக்கனைப் பற்றிச் சொல்வதுண்டு. அந்த அரக்கனின் கண்ணிமைகள் நிலத்தைத் தீண்டுமளவிற்கு நீளமானவை. மூடியே கிடந்த கண்ணிமைகளை இப்பொழுது அரக்கன் மெல்ல மெல்ல உயர்த்த ஆரம்பித்தான். அனைத்துப் பொருட்களும் அவன் கண்ணில் பட்டன. இப்போது அவன் எல்லைகளுக்கப்பால், குன்றுகளுக்கப்பால், மலைகளுக்கப்பால், கடல்களுக்கப்பால், பார்க்க முடிந்தது. உலகமே அவனுக்கு அடிமை ஆனது. இதைப் போல்தான், கண் மூடிக் கிடக்கின்ற 'வீ' என்னும் அரக்கனைப் போல்தான்

தொழிலாளர்கள் இன்று அறியாமையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அவர்களின் சக்தி அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களின் ஆற்றல் அவர்களுக்குப் புரியவில்லை.

இன்றைக்கு ஒரு புதிய முயற்சி தொடங்கியுள்ளது. ரஷ்யத் தொழிலாளர்கள் மூலமாக, இந்தியத் தொழிலாளர், ஆசியத் தொழிலாளர்கள், ஐரோப்பியத் தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்க முயற்சிக்கிறது. உங்களோடு உழைப்பதற்கு வெளிநாட்டுத் தோழர்கள் உறுதி பூண்டுள்ளனர். அவர்கள் எல்லாம் மனித இனத்தின் சகோதரத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். மனித இன ஒற்றுமைக்காகத் தங்களின் உயிரையும் கொடுக்கச் சித்தமாக உள்ளவர்கள். ஆகவே 'முதலாளிகளே! பூர்ஷ்வாக்களே! இந்தியத் தொழிலாளிகள் விழிப்புற்று விட்டார்கள் என்பதை உணருங்கள். 'வீ' என்னும் அரக்கனைப் போல்தான் இந்தியத் தொழிலாளர்கள் கடலுக்கப்பால், மலைக்கப்பால், குன்றுகளுக்கப்பால் அனைத்தையும் காணுகிறார்கள். உலகத் தொழிலாளர்கள் தங்களுக்குதவத் துடித்து நிற்கிறார்கள் என்பதை உணர்ந்து விட்டார்கள்.

இந்தியத் தொழிலாளர்களைச் 'சின்ரெல்லா' என்ற ஏழைப் பெண்ணுடன்தான் ஒப்பிடவேண்டும். சின்ரெல்லா சிற்றன்னையால் கொடுமை செய்யப் பட்டவள். இந்தியத் தொழிலாளர்களை முதலாளிகள் வஞ்சிக்கின்றார்கள். சின்ரெல்லா விற்கு அற்பப் பொருள்கள் ஒதுக்கப் பட்டதைப் போல், உலகின் எல்லாப் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், எல்லாத் துயரங்களும், தொழிலாளர்களும் ஒதுக்கப்பட்டதைப் போல இந்தியத் தொழிலாளர்களும் முதலாளிகளால் கீழ்த்தரமாகவே நடத்தப்படுகின்றனர்.

ஏ! முதலாளித்துவமே! சின்ரெல்லா நாடகத்தில் கடைசியில் அனைத்துத் தீமைகளும் ஒழிக்கப் பட்டதைப் போல நீங்களும் ஒழிக்கப்படுவீர்கள். ஒரு நாள் இந்தியத் தொழிலாளி வர்க்கம் அற்புதமாக ஆட்சி செய்யும். அன்றைக்கு அத்தனை

முதலாளிகளும், முதலாளித்துவமும் ஒதுக்கி வைக்கப்பட்டு ஓரங்கட்டப்படும்.

எனத் தொழிலாளர் தொடர்பான தீர்மானத்தை ஆதரித்துச் சிங்காரவேலர் 'இந்தியா சுயராஜ்யம் அரசியலிலும் தொழில்துறையிலும் சுயராஜ்யம் பெறும்' எனப் பேசி முடித்தார். சிங்காரவேலர் பேச்சைக் கேட்ட கூட்டத்தினரின் ஆரவாரம் அடங்க நெடுநேரமானது. [1]

அந்தக் கூட்டத்தினர் அனைவராலும் சிங்காரவேலர் 'காம்ரேட்' என்றே பரிவோடு அன்பொழுக அழைக்கப்பட்டார். கயா காங்கிரஸ் கூட்டத்தில் தொழிலாளர் அமைப்பொன்று புதிதாக அமைக்கப் பெற்றுத் தொழிலாளர்களுக்கு வழிகாட்டும் குழுவொன்றும் அமைக்கப் பெற்றது. அந்தப் புரட்சிக் குழுவில் 1. சி.எப். ஆன்ரூவ்ஸ் 2. ஜெ.எம். சென் குப்தா 3. எஸ்.என். ஹால்டர், 4. சுவாமி தயானந்த் 5. டாக்டர் டி.டி. சித்தையா 6. எம். சிங்காரவேலு ஆகியோர் நியமனம் பெற்றனர். தொழிலாளர் பற்றிய துணைக் குழுவிற்குச் சிங்காரவேலர் பெயரைப் பரிந்துரை செய்த பொழுது 400 உறுப்பினர்களும் எழுந்து நின்று சிங்காரவேலர் இத் தொழிலாளர் குழுவில் புகழ் பெற்ற ஆங்கிலேய தொழிற் சங்கத் தலைவர் 'நியூ போல்டு போலச்' செயல்பட வேண்டுமென வாழ்த்தினர். சிங்காரவேலர் பெயரைச் சொல்லும் பொழுதெல்லாம் கூட்டத்தினர் தவறாது கர ஒலி எழுப்பினர்; ஆரவாரம் செய்தனர். [2]

அது சரியானதுதானே? மற்றவர்களெல்லாம் ஒவ்வொரு அமைப்பிலிருந்து வந்தவர்கள். சிங்காரவேலர் மட்டும்தான் உலகத் தொழிலாளர் மேன்மைக்காகத் தம்மையே அழித்துக் கொண்டும் அழைக்காத அமைப்பிலும் கூட நுழைந்து, நுழைந்து நுட்பமாகப் பாடுபட்டவர் அல்லவா?

மே நாள் கூட்டத்திற்கு முன்

சிங்காரவேலர் மே நாளைக் கொண்டாடியதற்கு ஒரு நீண்ட நெடிய பின்னணி உண்டு. உலகில் இரு பெரும் சக்திகள் தொழிலாளிகளும் விவசாயிகளுமே. இந்த உலகத்திற்கு

---

1. நாகை கே. முருகேசன், சி. சுப்பிரமணியன், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, பக்.281-286.
2. மேற்படி, பக்.285-286.

முதலாளிகள் என்பவர்கள் தேவையற்றவர்கள். தொழிலாளிகளும், விவசாயிகளும் இந்த உலகின் இரு கண்களைப் போன்றவர்கள். இந்த உழைக்கும் சமூகத்தினர் தங்களைப் பற்றிய புரிதல் இல்லாத காரணத்தால் கண்மூடி நின்ற 'வீ' எனும் அரக்கனைப் போல அறியாமையில் தாழ்ந்து, வீழ்ந்து கிடக்கின்றனர். இந்தத் தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் நல்ல புரிதலை ஏற்படுத்த மே நாள் கொண்டாடுவதால் பெரும் பயன் விளையுமெனச் சிங்காரவேலர் நம்பினார்.

அன்றைய தொழிலாளர் துயரம்

இன்றைக்குத் தொழிலாளிகளுக்கு எட்டு மணி நேரம் என்பது உலகம் முழுமையும் சட்டமாகி விட்டது. ஒரு காலத்தில் தொழிலாளிகள் 20 மணி நேரம் கூட வேலை வாங்கப்பட்டனர். ஆலைகளிலும், விவசாயப் பண்ணைகளிலும் தொழிலாளிகள் கசக்கிப் பிழியப்பட்டனர். 1820, 1830களில் அமெரிக்க முதலாளிகள் 20 மணி நேரம் கூடத் தொழிலாளர்களிடம் வேலை வாங்கினர். 1884இல் அமெரிக்கச் சிக்காகோ தொழிற்சங்கம் தொழிலாளிகளுக்கு எட்டு மணி நேரம் மட்டுமே வேலை என்ற கொள்கையை வைத்துப் போராட்டம் நடத்தியது.

பொய்யான குற்றச்சாட்டு

1886இல் நியூயார்க், சிக்காகோ, சின்சிரைட்டி, லூயின் வேலி, பால்டிமோர் போன்ற இடங்களில் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளிகள் கூடிப் போராட்டம் நடத்தினர். 1886 மே மூன்றில் மிக்ரிப்பர் தொழிற்சாலையில் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டுமென்று போராட்டம் நடத்தினர். இதன் விளைவாகப் போராட்டம் நடத்திய தொழிலாளர்களில் ஆறு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அராஜகமான அமெரிக்க முதலாளித்துவம் வேண்டுமென்றே தொழிலாளர்கள் வெடிகுண்டை வெடித்தனர் என்று பொய்யான காரணம் கூறி ஹேமார்கெட் என்னும் இடத்தில் 27 தொழிலாளிகளைத் தூக்கிலிட்டது.

நீதிமன்ற அநீதியான தீர்ப்பு

1886 ஆகஸ்டு 20இல் சிக்காகோ நீதிமன்றம் கடுமையான தீர்ப்பொன்றை வழங்கியது. இந்தத் தீர்ப்பின்படி லூயிலிங், சாமுவேல் பீல்டஸ், ஆல்பர்ட் பார்சன், ஆகஸ்டு ஸ்பைஸ், அடால் பிஃபிஷர், ஜார்ஜ் ஏங்கெல்ஸ், மைக்கேல் ஸ்காப் ஆகிய ஏழு தொழிற் சங்கத் தலைவர்களுக்கு மரண தண்டனையும், ஆஸ்கார்

நீபேவுக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்பு வழங்கியது.

எதிர்ப்பியக்கம்

மேல் முறையீட்டில் எந்தப் பயனுமின்றி வழக்கு நிராகரிக்கப்பட்டது. எதிர்ப்புள்ள இடத்தில் இயக்கம் தீவிரமாகக் கிளர்ந்தெழும் என்பதற்கிணங்கத் தொழிலாளர்கள் சிறைப் பட்டவர்களை விடுவிக்க வேண்டுமெனப் போராடிக் கொண்டே இருந்தனர். இந்தப் போராட்டத்திற்குப் பாட்டாளி வர்க்கம் மட்டுமல்ல அறிஞர் பெருமக்களும் இணைந்து நின்று போராடினர். இறுதியில் சிறைப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்கள் விடுதலை பெற்றதுடன் எட்டுமணி நேரமே இனித் தொழிலாளர்களுக்கு வேலை என்ற அருமையான சட்டத்தை இல்லினாய் ஆளுநர் மூலம் தொழிலாளிகள் பெற்றனர்.

இதன் விளைவாக 1893இல் இல்லினாய் மாநிலத்தில் ஆளுநர் மே தினத் தியாகிகள் அடக்கம் செய்யப்பட்ட வால்ட் ஹீம் கல்லறையில் ஒரு நினைவுத் தூணையும் நிறுவினார். இதன் பின்னர் 1889இல் பாரிசின் இரண்டாவது தொழிலாளர் 'அகிலத்தின் முதல் காங்கிரஸ்' அனைத்து நாட்டுத் தொழிலாளர்களும் உலகம் முழுமையும் மே நாளைத் தொழிலாளர் எழுச்சி நாளாகக் கொண்டாட வேண்டுமென ஆணையிட்டது.

அமெரிக்காவின் 'பெடரேஷன் ஆஃப் லேபர்' என்ற அமைப்பு 1890 மே முதல் நாள் சர்வதேச ஆர்ப்பாட்ட நாளாகக் கொண்டாட வேண்டுமென்று ஆணையும் வெளியிட்டது. 1920இலேயே இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் தோற்றுவிக்கப் பட்டாலும் மே நாளை அது ஒரு நாளும் கொண்டாடியதில்லை. இந்தியாவிலேயே முதன் முதலாக மே தினத்தைத் தமிழகம்தான் கொண்டாடியது. சிங்காரவேலர்தான் 1923ஆம் ஆண்டு சென்னையில் இரு இடங்களில் மே நாளைக் கொண்டாடினார். சிங்காரவேலரின் வருகைக்குப் பிறகு தொழிலாளர் 'எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது; எது நடந்து கொண்டிருக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது; எது நடக்கப் போகிறதோ அது நன்றாகவே நடக்கும்' என்பன போன்ற முழக்கங்கள் வெற்று முழக்கங்கள் என்பதைக் கண்டனர்.

உழைக்க வைப்பது சிலரின் உரிமை. உழைத்துச் சாவது நமது கடமை என்பதை நம்பிக்கிடந்த தொழிலாளர் உலகம் எதற்காக உழைப்பது? அதில் எனக்கென்ன பங்கு? எனக் கேட்கத்

தொடங்கியது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை நம்பிய தொழிலாளர் உலகம் 'எவன் அந்த அவன்' என இப்பொழுது கேட்கத் தொடங்கியது. 'வாடித் தொழிலின்றி வறுமையில் சாவதெல்லாம், கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை மூடிய தொழிற்சாலை முக்கோடித் தோழர்களே! கூடை முறம் கட்டுநரும் கூடித் தொழில் செய்தால் தேடிவரும் நன்மை சிறப்புயரும் தோழர்களே'! என்ற தொழிற்சங்கக் கொள்கைகள் சிங்காரவேலர் தலைமையில் வீரியம் பெற்று உரக்க ஒலிக்கத் தொடங்கின.

முதல் அகிலம் முடிந்து இரண்டாவது அகிலம் இப்பொழுது அரும்பி இருந்தது. அது 'மே நாளைக் கொண்டாடுங்கள், உழைப்பவர் மேன்மையை உலகிற்கு உணர்த்துங்கள்' என ஆணையும் வெளியிட்டது. உலகத்தின் அன்றைய நிகழ்ச்சிகளோடு எப்பொழுதும் தம்மை இணைத்துக் கொள்ளுகின்ற சிங்காரவேலர் 1923இல் மே நாளைக் கொண்டாடுவதுடன் தொழிலாளர் விவசாயிகளுக்கான ஒரு அரசியல் இயக்கத்தையும் தொடங்கிவிட வேண்டுமென்று முடிவெடுத்தார்.

1920ஆம் ஆண்டு வாக்கில், சென்னையில் தொழிற்சங்கப் பணிகள் மிகுதியாக நடைபெற்றன. வாடியா, செல்வபதிச் செட்டி, சக்கரைச் செட்டி, ஏ.எல். அய்யர், திரு.வி.க. போன்றவர்கள் தொழிலாளர்கள் கூலி உயர்வு பெறுபவர்களாக மட்டும் இருந்தால் போதுமென நினைத்தனர். 'கூலி உயர்வுடன் மட்டும் நிறைவடைந்து விடக்கூடாது, உடைமைக்கும் உரிமை உடையவர்களாகத் தொழிலாளர்கள் உயர வேண்டு' மெனச் சிங்காரவேலர் முழங்கினார்.

அரசு கண்காணிப்பு

இந்த நேரத்தில்தான் சிங்காரவேலரின் தீவிரவாதச் செயல்பாடுகளை அரசு கண்காணிக்க ஆரம்பித்தது. அவரின் சைக்ளொஸ்டு ஏடும் முடக்கப்பட்டது. சிங்காரவேலர் வீடும் சோதனையிடப்பட்டது. ஆனாலும் சிங்காரவேலர் அஞ்சாமல் 1923 மே ஒன்றாம் நாள் மே நாளைக் கொண்டாடினார். இரு இடங்களில் சிங்காரவேலர் மே நாளைக் கொண்டாடினார். திருவல்லிக்கேணி கடற்கரையிலும், சென்னை உயர் நீதி மன்றக் கடற்கரையிலும் மே நாளைக் கொண்டாடினார். ஒத்துக் கொண்டபடி எஸ்.ஏ. டாங்கே விழாவிற்கு வரவில்லையென்றாலும்

மாவீரர் சின்ன காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மாவும், வீரமுரசு சுப்பிரமணிய சிவாவும் மே நாள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

முன்னோடி இயக்கம்

இந்த விழாவில்தான் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடி இயக்கமான **'இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கட்சி'** எனும் அரசியல் இயக்கத்தைத் தொடங்கி அரசியல் இயக்கத்தின் 14 பக்க அறிக்கைகளையும் சிங்காரவேலர் வெளியிட்டார். அச்சகத் தொழிலாளர் தலைவர் பி. நடேச முதலியார் தலைமையில் உயர் நீதிமன்றக் கடற்கரையில் உரையாற்றிய சிங்காரவேலர் '1908ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறையின் உச்ச கட்டத்தில் லாலா லஜபதியும், அஜீத்சிங்கும் நாடு கடத்தப்பட்ட பின்னரும், திருமலாச்சாரியின் 'இந்தியா' ஒடுக்கப்பட்ட பின்னரும் அஞ்சாத போர்முரசாக ஒலித்துப் புரட்சி செய்து கரூர் சதி வழக்கில் தண்டிக்கப்பட்ட காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா அவர்களின் வருகை தனிப்பட்ட பெருமைக்குரியது' எனச் சிங்காரவேலர் பாராட்டிப் பேசினார். 'படியுங்கள், படியுங்கள், தொடர்ந்து அஞ்சாமல் படியுங்கள். தடை செய்யப்பட்ட கார்ல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் புத்தகங்கள் என்பதற்காகத் தொடாமல் இருந்து விடாதீர்கள்; படிப்பதற்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை' எனச் சிங்காரவேலர் பேசினார்.

சிங்காரவேலர் ஏற்பாடு செய்த இன்னொரு மே நாள் கூட்டம் சென்னைக் கடற்கரையில் நடைபெற்றது. காங்கிரஸ் பெருந்தொண்டர் சின்ன காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா கலந்து கொண்டு பேசினார். வீரமுரசு சுப்பிரமணிய சிவா, சிங்காரவேலரின் அணுக்கத் தொண்டர் எம்.பி.எஸ். வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கட்சியின், சார்பாக 'இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கெஜட்' என்னும் பத்திரிகையும் வெளியிடப்பட்டது. 22, சவுத் பீச் சிங்காரவேலர் வீடே இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கட்சியின் அலுவலகமாக இருந்தது. பத்திரிகை அச்சிடுகின்ற அச்சகமும், சிங்காரவேலர் வீட்டிலேயே இடம் பெற்றிருந்தது.

காங்கிரஸ் கொடியுடன் சுத்தி அரிவாள் கொடி

மே நாள் விழாவின்போது சிங்காரவேலர் இரு இடங்களிலும் காங்கிரஸ் கொடியுடன், அரிவாள் சுத்தி, இராட்டினம் பொறிக்கப்பட்ட செங்கொடியையும் ஏற்றினார்.

அரசியல் இயக்கத்தின் கொள்கைப் பிரச்சார ஏட்டின் முகப்பில் ஒரு வளையம். அதனுள் ஒரு கை இராட்டினம். அதன் மேல் அரிவாள் சுத்தி, வளையத்தைச் சுற்றி 'For Food, Cloth and House' என்ற சொற்றொடரும் வளையத்தின் கீழே 'Workers of the world' என்னும் சொற்றொடரும் இடம்பெற்றிருந்தன.

இந்த மே நாள் பற்றிய அனைத்துத் தரவுகளும் 2.5.1923 இந்துவிலும், 24.4.1923 சுதேசமித்திரனிலும் வெளியாகியுள்ளன. இந்த நேரத்தில் ஒரு முக்கியமான தகவலைப் பதிவு செய்ய வேண்டுவது நமது கடமை. தென்னகத்திலே தனிப்பட்டவர்கள் நூலகங்களிலே மிகப் பெரிது சிங்காரவேலர் நூலகமென அறிஞர் அதிகாரி அவர்கள் பதிவு செய்துள்ளார்கள். 20,000க்கு மேற்பட்ட புத்தகங்கள் சிங்காரவேலர் நூலகத்தில் இடம் பெற்றிருந்தன. அத்தனையும் விலைமதிப்பற்ற புத்தகங்கள். அக்காலத்தில் சென்னையில் மகாதேவன் புத்தகக் கடை என்பது மிகப் பெரியது. பெரும் புகழ் பெற்றது. அந்தக் கம்பெனியே தங்களிடம் வருகின்ற அரிய புத்தகங்களை முதலில் சிங்காரவேலருக்குத்தான் தரும் எனச் சிங்காரவேலர் குடியரசில் ஒரு செய்தியைப் பதிவு செய்கின்றார். கடிகாரத் தத்துவம் என்னும் புத்தகத்தைச் சிங்காரவேலர் படித்திருந்தால் இப்படி நாஸ்திகம் பேச மாட்டார் என்பதற்குச் சிங்காரவேலர் 'அன்பர் குறிப்பிடும் அந்த அற்புதமான புத்தகத்தை முப்பது ஆண்டுகளுக்கு முன்பே படித்துத் திறனாய்வு செய்தவர்களில் நானும் ஒருவன்' எனக் குறிப்பிடுகின்றார்.

சிங்காரவேலர் புத்தகத்தை இலவசமாகக் கொடுப்பாரே தவிர, புத்தகத்தைக் கடன் கொடுக்கின்ற பழக்கம் அறவே கிடையாது. அரிய புத்தகத்தை ஏ.எஸ்.கே. அய்யங்கார் கடன் கேட்டபொழுது புத்தகத்தைத் தர மறுத்து ஒரு வாரம் அவரைத் தம் வீட்டிலே தங்க வைத்துப் படிக்கச் செய்தவர் சிங்காரவேலர். தமிழகத்தின் பல அறிஞர்களும் அவர் நூலகத்தைப் பயன்படுத்தித்தான் வளர்ந்தனர் என்பது வரலாறு. பேரறிஞர் அண்ணா, திரு.வி.க., குத்தூசி குருசாமி எனப் பட்டியல் நீண்டது. மே நாள் கூட்டத்தில், படியுங்கள், படியுங்கள் படிப்பதற்கு அஞ்சவேண்டாம். தடை செய்யப்பட்ட கார்ல் மார்க்ஸ், லெனின், ஏங்கெல்ஸ் புத்தகங்களைத் தேடிப் படியுங்கள். படிப்பதற்கு அஞ்சவேண்டாமென்ற சிங்காரவேலரை வாழ்வின் கடைசிக் காலத்தில் ஒரு வித்தியாசமான நோய் ஒன்று தாக்கியது.

கடைசிக் காலத்தில் சிங்காரவேலருக்குக் கண்ணின் இமைகள் செயலிழந்து விட்டன. கண்ணை மூடினால் திறக்க

முடியாது. திறந்தால் மூட முடியாது. இதனால் அவருக்குப் படிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இறுதிக் காலத்தில் சிங்காரவேலர் பக்கவாத நோயினாலும் கூட அவதிப்பட்டார். ஆனால் அதைப்பற்றிக் கூடச் சிங்காரவேலர் அவ்வளவாகக் கவலைப் பட்டதில்லை. படிக்கின்ற பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட சிங்காரவேலர் தாம் படிக்க முடிய வில்லையே என்றுதான் வருந்துவாராம்.

ஆனாலும் அவரால் படிக்காமல் மட்டும் இருக்க முடியாது. கண் செயலிழந்த நிலையிலும் கண் கண்ணாடிகளுக் கிடையே விரல்களை நுழைத்து இமைகளை விரித்துப் பிரித்துக் கொண்டு சிங்காரவேலர் படித்து இடர்ப்பட்டாரென அவரின் சொந்தப் பேத்திகளான ம. ஜெய்பாய், ம. ஜூபாய் மற்றும் சமதர்மம் சுப்பையா போன்றவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மாவீரனுக்கு எத்தனையோ வகையான துன்பங்கள். அவரின் உடல் உறுப்புகள் ஒத்துழைக்க மறுத்தன என்ற செய்தியைக் கேட்டு நாம் துடித்துப் போனோம்.

அடுத்து சிங்காரவேலர் காங்கிரசின் இடது சாரியாக இருந்த நிலையில் பொதுவுடைமை இயக்கத் தலைமையை ஏற்று எங்ஙனம் செயல்பட்டார் என்பதைக் காண்போம்.

நான்கு வகைப் போக்குகள்

தோழர் ஜி. அதிகாரி 'கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையில்' ரஷ்யாவில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியினால் இந்தியாவில் நான்கு வகையான புரட்சியாளர்கள் தோன்றினர். அவர்களில் வெளி நாடுகளில் வேலை செய்து வந்த இந்தியத் தேசியப் புரட்சியாளர்கள் விரேந்திரநாத் சட்டோபாத்தியாயா, லெனினைச் சந்தித்த எம்.பி.டி. ஆச்சார்யா, எம்.என். ராய், அபனி முகர்ஜி போன்றவர்கள் ஒரு வகையினர். இன்னொரு வகையினர் ஹிலாபத் இயக்கத்தில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உணர்வு கொண்டு ரஷ்யாவின் புரட்சியின் தாக்கத்திற்குட்பட்ட செளக்கத் உஸ்மானி, அப்துல் மஜீத் போன்றவர்கள். அமெரிக்காவில் குடியேறி இருந்த சீக்கியர் சோஷன்சிங், ஜோஷ் சர்தோக்சிங், சென்னை, டி. செஞ்சையா போன்றவர்கள் மூன்றாவது வகையினர். இந்தியாவிலேயே தேசிய விடுதலை இயக்கத்தில் புரட்சியாளர்களாகப் பணியாற்றிய பம்பாய் எஸ்.ஏ. டாங்கே, சென்னை, ம. சிங்காரவேலு, கல்கத்தா முசாபர் அகமத் போன்றவர்கள் என நான்கு வகையான புரட்சியாளர்களை அதிகாரி குறிப்பிடுகின்றார்.

இன்குலாப் அமைப்பினர்

இந்த அமைப்பினரே 'இன்குலாப்' அமைப்பினர் என்ற பிரிவில் பம்பாய், சென்னை, கல்கத்தா, லாகூர் ஆகிய இடங்களில் இருந்து சோஷலிச அமைப்பிற்கும் பாடுபட்டனர். அவர்களில் நாம், சிங்காரவேலர் தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக இந்தியாவில் குறிப்பாகச் சென்னையில் இரு இடங்களில் மே நாளை எங்ஙனம் கொண்டாடி வரலாறு படைத்தார் என்பதை அறிந்தோம்.

இரு முக்கிய நோக்கங்களுக்காகத்தான் மே நாளைக் கொண்டாடியதாகச் சிங்காரவேலர் தம் மே நாள் தொடர்பான கட்டுரையில் குறிப்பிடுகின்றார். சிதறிக் கிடக்கின்ற தொழிலாளிகளை ஒருங்கிணைப்பதும், போலித் தொழிற்சங்கத் தலைவர்களை அப்புறப்படுத்தவுமேதான் மே நாளைக் கொண்டாடியதாகச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார்.

மே நாள் கொண்டாடுவதற்கு முன்

தொழிலாளிகள், விவசாயிகள் இருவரும் நாட்டின் இரு கண்கள். இவர்களைக் காங்கிரசின் ஓர் அங்கமாக்கி நாட்டின் விடுதலையைத் தூண்ட வேண்டுமென்று சிங்காரவேலு முயன்றார். இந்த நோக்கத்திற்கு எதிராக யாராக இருந்தாலும் அவர்களையெல்லாம் எதிர்ப்பதில் சிங்காரவேலர் முனைப்பாக நின்றார்.

'ஜாலியன் வாலாபாக்' நாளன்று சென்னை நகரில் கடையடைப்புச் செய்ய வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் நடத்திச் சிங்காரவேலரும் அவர் தொண்டர்களும் வெற்றி பெற்றனர். கடைகளை மூடவேண்டுமென்று தொண்டர்கள் மக்களுக்குத் தொல்லைகள் தந்ததாக 'நியூ இந்தியா' என்ற பத்திரிகை கண்டித்து எழுதியது. இந்தப் பத்திரிகையின் செயல்பாட்டைச் சிங்காரவேலர் 3.4.1922 சுதேசமித்திரனில் கடுமையாகச் சாடினார். 'காங்கிரஸ் இயக்கத்தில் செய்யவிருக்கும் திருத்த'மென்று சிங்காரவேலர் 3.5.1922, 5.5.1922 ஆகிய இருநாள்களிலும் இந்து பத்திரிகையில் இரு கட்டுரைகளை எழுதி இருந்தார். இதில்தான் 'சௌரி சௌர' நிகழ்ச்சிக்குப் பின்னர் அண்ணல் காந்தியவர்கள் காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தியது தவறு' என்று சுட்டிக் காட்டினார்.

மெட்ராஸ் மெயில் என்ற ஆங்கிலேயர்களின் பத்திரிகை எப்பொழுதெல்லாம் முடிந்ததோ அப்பொழுதெல்லாம்

சிங்காரவேலரைக் கண்டித்துக் கொண்டும், காட்டிக் கொடுத்துக் கொண்டும் இருந்தது. இந்திய இயக்கத்தில் ரஷ்யர்களின் தூண்டுதல் இருக்கிறது என்பதற்காகத் 'தேசிய இயக்கத்தில் போல்ஷ்விக் தங்கம் செயல்படுகிறது' என்று எழுதியது. இதனைக் கண்டித்து அப்பொழுதே கறுப்பு அறிக்கையைச் சிங்காரவேலர் எழுதினார். 'யாருடைய தூண்டுதலும் காந்தியப் பாதையிலிருந்து அகிம்சை, உண்மை, அச்சமின்மை ஆகிய பாதைகளிலிருந்து நம்மை மாற்ற முடியாதெனச் சிங்காரவேலர் எழுதினார்.

1922இல் பண்டிதர் மோதிலால் நேருவும் பிறருமாகப் பெருங் குழுவாகச் சென்னை வந்தனர். அந்த ஒத்துழையாமைக் குழுவைச் சிங்காரவேலர் வரவேற்றதுடன் 15.7.1922இல் சுதேசமித்திரன் பத்திரிகையில் கட்டுரையும் எழுதினார். இக்காலக் கட்டத்தில் பி அண்டு சி மில் தொழிலாளர்களை ஜாதி, மதம், இனம் கடந்தும் தொழிலாளிகள் தொழிற்சங்க உணர்வுடன் செயல்படச் சிங்காரவேலர் முனைந்து செயல்பட்டார். சிங்காரவேலர் செயல்பாடு மிக அற்புதமானது.

மிகத் தீவிரமாகச் செயல்பட்ட சிங்காரவேலர் தீவிரமான கம்யூனிஸ்டு என்று காவலர்கள் ஐயுற்றனர். அதன் அடிப்படையிலேயே அவர் வீடு காவலர்களால் சோதனை இடப்பட்டது. 25.5.1922இல் சிங்காரவேலர் வீட்டில் தங்கி இருந்த நீலகண்ட பிரமச்சாரி என்ற தீவிரவாதி அரசால் கைது செய்யப்பட்டார். 'கம்யூனிஸ்டு பெடரல் லீக்' என்ற துண்டுப் பிரசுரத்தையும் அரசு கைப்பற்றியது. நீலகண்ட பிரமச்சாரி எந்த விவரத்தையும் வெளியிடாமையாலும், சிங்காரவேலர் வீட்டில் எந்தச் சட்ட விரோதமான ஆவணமும் கிடைக்காமையாலும் சிங்காரவேலரை அரசு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனாலும் சிங்காரவேலர் இயக்கச் செயல்பாடுகளில் மிகமிகத் தீவிரமாகவே இருந்தார்.

1923 பிப்ரவரியில் ஆர்க்காட்டில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் சிங்காரவேலர் கலந்து கொண்டார். 10.2.1923 சுதேசமித்திரனிலிருந்து இதனை அறிகிறோம். 'காந்தி சகாப்தம்' என்ற தலைப்பில் சுதேசமித்திரனில் கட்டுரையொன்றைச் சிங்காரவேலர் எழுதினார். 1923 மார்ச்சு 6, 7 ஆகிய நாள்களில் மாணவர்கள் தொண்டர் படையில் சேரவேண்டுமென்று சிங்காரவேலர் கோரிக்கை விடுத்தார். அதில் மாணவர்கள் காந்தியத்தைப் பின்பற்றும்படி கேட்டுக் கொண்டார்.

1923 மார்ச் 18ஐக் காந்தி நாளாகக் கொண்டாட வேண்டுமென்று சிங்காரவேலர் அறிக்கை வெளியிட்டார். 1923

ஏப்ரல் மாதத்தில் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற 'ஜாலியன் வாலாபாக்' கூட்டத்தில் சிங்காரவேலர் மிகக் கடுமையாக அரசைக் கண்டித்துப் பேசினார். கடையடைப்பு, ஹர்த்தால் இவற்றில் சிங்காரவேலர் மிகத் தீவிரமாகச் செயல்பட்டார். 1923 மே மாதத்தில் திருவல்லிக்கேணி கடற்கரையில் திருமதி கவிக்குயில் சரோஜினி தேவி பேசிய கூட்டத்திற்குச் சிங்காரவேலர்தான் தலைமை தாங்கினார்.

1923இல் மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிங்காரவேலர் 'சிறைப்பட்ட காங்கிரஸ் தொண்டர்கள்' சிறைக்குள்ளேயும் சட்ட மறுப்புச் செய்ய வேண்டுமெனப் பேசியதை இரகசியக் காவலர்கள் பதிவு செய்துள்ளனர். இரகசியக் குறிப்பு 1923 பி.சி. ஜோஷி சேகரித்த ஆவணங்ககள், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன. ஜாரியாவைச் சேர்ந்த சுவாமி தினாந்தா அவர்களுக்குச் சிங்காரவேலர் 'மே தின விழாவை உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளர்களுடன் இணைந்து கொண்டாட வேண்டு'மென ஒரு தந்தியையும் கொடுத்துள்ளார். இச்செய்தி 23.5.1923, 26.4.1923 ஆகிய இரு நாள்களில் 'சுதேசமித்திரனில்' காணப்படுகிறது.

சிங்காரவேலரும் எம்.பி.எஸ். வேலாயுதம் போன்ற தோழர்களும் விவசாயி, தொழிலாளி கட்சி என்ற அமைப்பைத் தொடங்கியபோதிலும் அக்கட்சி புரட்சிகர ஜனநாயகத் திட்டத்திற்காகச் செயல்படவேண்டுமென்றே விரும்பினர். ஜூலை 1923இல் 'தொழிலாளி விவசாயி' கட்சிகளின் பம்பாய், வங்காளம், பஞ்சாப் ஆகிய பிரிவுகளுக்குச் சிங்காரவேலர் தந்தியொன்றை அனுப்பி 18 ஜூலை 1923இல் செங்கொடி நாளாகக் கொண்டாடி மூவர்ணத் தேசியக் கொடியுடன் செங்கொடியையும் ஏற்றி, மகாத்மா உட்பட மற்றெல்லா அரசியல் கைதிகளையும், விடுதலை செய்ய வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் நடத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையில் மூன்றாவது அனைத்திந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் மாநாடு தேசபந்து சி.ஆர். தாஸ் தலைமையில் லாகூரில் கூடியது. இதன் பின் சி.ஆர்.தாஸ் சென்னைக்கு வந்திருந்தார். சிங்காரவேலர் தலைமை ஏற்றிருந்த மண்ணெண்ணெய்த் தொழிலாளர் கூட்டத்தில் சி.ஆர்.தாஸ் கலந்து கொண்டு பேசினார். 1924, 1925 ஆகிய இந்தக் காலக்கட்டத்தில் இரண்டு வகையான போக்குகள் உருவாகி இருந்தன.

காங்கிரசில் மாற்றம் வேண்டாதார் என்ற பிரிவினர் கதர் அணிவது, கைராட்டையில் நூற்பது, தொழிலாளர்களைப் பற்றி அறவே கவலைப்படாமல் இருப்பது என்று வாழ்ந்து வந்தனர். காங்கிரசின் இன்னொரு பிரிவினர் தொழிலாளிகள், விவசாயிகளைக் காங்கிரசில் இணைப்பது, சுயராஜ்யக் கட்சி என்ற அமைப்பின் மூலம் சட்டமன்றத் தேர்தல்களில் ஈடுபட்டுச் செயல்பட்டு வந்தனர். சிங்காரவேலர் சுயராஜ்யக் கட்சியில் ஈடுபட்டதுடன் தொழிற் சங்கப் பணிகளில் தம் முழு நேரத்தையும் செலவிட்டு வந்தார்.

2. பெல்ஹாம் மாநாட்டில் சிங்காரவேலர்

லெனின் மரணம்

கர்னாடகப் பெல்ஹாமில் 1924 ஜனவரியில் அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடு அண்ணல் மகாத்மா காந்தியவர்களின் தலைமையில் கூடியது. எந்த மாநாடுகளிலும் தவறாது கலந்து கொள்வது சிங்காரவேலரின் இயல்பு. 21.1.1924இல் நிகழ்ந்துவிட்ட நிக்கொலாய் லெனின் மரணம் சிங்காரவேலரைப் பேரளவில் பாதித்தது. உடல் பாதிக்கப்பட்டிருந்தாலும் எப்படியும் பெல்ஹாம் சென்று மறைந்த மாமேதை உலகப் பெருந்தலைவர் லெனினுக்குக் குறைந்த பட்சம் மாநாட்டில் ஓர் இரங்கல் தீர்மானத்தையாவது நிறைவேற்றுவது தமது கடமை எனச் சிங்காரவேலர் நினைத்தார்.

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினர் என்ற முறையில் அருமையான இரங்கல் தீர்மானம் ஒன்றைத் தயார் செய்து அண்ணல் காந்தியிடம் சிங்காரவேலர் வழங்கினார்.

> 21.1.1924ல் மறைந்த நிக்கொலாய் லெனின் மறைவென்பது உலகத்திற்கு ஏற்பட்ட பேரிழப் பாகும். அந்த மேதை தம்மைப் பற்றிக் கவலைப்படாமல் உலகிலுள்ள தொழிலாளிகளின் துன்பத்தை நீக்குவதைப் பற்றியே எப்பொழுதும் கவலைப்பட்டார். உலகத் தொழிலாளர்களுக்கு உன்னதமான நிவாரணத்தைத் தேடும் வேளையில் அவர் மறைந்தார். [1]
>
> அவர் மறைவென்பது ரஷ்யாவிற்கு மட்டுமல்ல, உலகத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பேரிழப் பாகும். அவர் உலகப் போரில் ரஷ்யாவைத் தலை நிமிரச் செய்தார். உண்மைக் கிறிஸ்துவராகிய 'ஜார்ஜ் லான்ஸ்பெரி' என்னும் பாதிரியார் லெனினை இவ்வுலகில் எம்மனிதனுக்கும்

1. ஏ.எஸ்.வேணு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், பக்.45-46.

> மேற்பட்ட மனிதரெனக் குறிப்பிட்டார். அறியாமையும், பேராசையும் உடைய தன்னலக் கூட்டம் லெனினைப் புறக்கணிக்கலாம். இன்றைக்கில்லை யென்றாலும் அவர் புகழை உலகம் ஒரு நாள் உணர்ந்தே தீரும். லெனின் புகழ்மிக்க ஆசான் கார்ல்மார்க்சின் கொள்கைகளைத்தான் பின்பற்றினார். ரஷ்யாவே லெனின் கொள்கைகளைப் புறக்கணித்தாலும் கூட ஒரு நாளில் மீண்டும் அக்கொள்கை உயிர்த்தெழும்.

என்று புகழாரம் சூட்டிய இரங்கல் தீர்மானத்தை அண்ணல் காந்தியிடம்-மாநாட்டுத் தலைவரிடம் சிங்காரவேலர் வழங்கினார்.

அக்காலத்தில் அண்ணல் காந்தியவர்கள் பொதுவுடைமைக் கொள்கைகளையும் அதன் தலைவர்களையும் மிகக் கடுமையாக வெறுப்பவராக இருந்தார். மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் பலரும் பொதுவுடைமை உணர்வில்லாதவராகவே இருந்தனர். உணர்வுடையவர்களும் தங்களின் உணர்வுகளைச் சொல்ல முடியாத சிறுபான்மையினராகவே இருந்தனர். இந்த நிலையில் மாநாட்டுத் தலைவராக இருந்த அண்ணல் காந்தி இந்த மாநாட்டில் நிறைவேற்றத் தகுந்த தகுதியுடைய தீர்மானம் இதுவல்ல என மறுத்துவிட்டார்.[1]

மறைந்துவிட்ட மாபெரும் உலகத் தலைவனுக்கு ஓர் இரங்கல் தீர்மானத்தைக் கூட நிறைவேற்ற முடியாத இந்த மாநாட்டில் தாம் இருக்க வேண்டிய அவசியமில்லை எனச் சிங்காரவேலர் மாநாட்டைப் புறக்கணித்துவிட்டுச் சென்னை திரும்பினார். மாமேதை லெனின் மறைவு அவரை நோயாளியாகவும் மாற்றியது.

1924இல் லெனினை ஒரு தலைவனாக ஏற்க மறுத்த அண்ணல் காந்தி 1928 காங்கிரசில் 'மகான் லெனின் மறைவு உலகிற்குப் பேரிழப்பு' எனக் குறிப்பிட்டது நாம் அறிய வேண்டிய அரசியல் செய்தியாகும். 1924லேயே சிங்காரவேலர் எவ்வளவு அரசியல் தெளிவுடனும் நுட்பமாகவும் செயல்பட்டார் என்பதும் நாம் அறிய வேண்டிய செய்தியாகும்.

மாமேதை லெனின் மறைவு

ஜார் மன்னனையே தம் புரட்சிகரக் கிளர்ச்சியால் வெற்றி வாகை சூடிய மாமேதை 'நிக்கொலாய் லெனின்', 21.1.1924இல்

1. ஏ.எஸ்.வேணு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப.46.

மரணமடைந்தார். மற்றவர்களுக்கு இது செய்தி என்றால் ம. சிங்காரவேலருக்குப் பேரிழப்பாகும். லெனின் காரல்மார்க்சின் தத்துவத்தை உண்மையாக உணர்ந்து கொண்டு, 1914இல் நடைபெற்ற முதல் உலகப் போருக்குப் பின், ரஷ்யாவை உன்னதமான பொதுவுடைமை வழியில் அழைத்துச் சென்ற ஒப்பற்ற தலைவராவார். உலகிலேயே பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் அடிப்படையில் முதன் முதல் தொழிலாளர், விவசாயிகள் அரசமைத்த மேதையவர். அவரின் மறைவு சிங்காரவேலரை உண்மையில் நொறுக்கிவிட்டது. சிங்காரவேலர் நோய் வாய்ப்பட்டார்.[1]

பல்வேறு தொழிற் சங்கங்கள்

நோய் வாய்ப்பட்ட நிலையிலும் தொழிற்சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டும் முயற்சியில் சிங்காரவேலர் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். 1924இல் சென்னையில் தொழிலாளர் மாகாண மாநாடு கூட்டப் பெற்றது. இக்கூட்டத்தில் தொழிற்சங்கப் பிரிதிநிதிகள், எம்.எஸ்.எம். இரயில் சங்கம், சிங்காரவேலரின் மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கம், உலோகத் தொழிலாளர் சங்கம், தபால்காரர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தொழிற்சங்கத் தலைவர்களான திரு.வி.க., வி. சக்கரைச் செட்டி, தண்டபாணி பிள்ளை, கே.எம். பணிக்கர் ஆகியவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நோய் வாய்ப்பட்ட சிங்காரவேலர்

இக்கூட்டத்தின் தலைவர் டாக்டர் பி. வரதராஜுலு லெனினுக்கு அஞ்சலி செலுத்திப் பேசினார்.

> இன்றைக்கு லெனின் சிலரால் பழிக்கப்படலாம். நாளைக்கு முதலாளித்துவம் தோற்று உழைக்கும் மக்கள் ஆட்சி மலரும் பொழுது, உலக உத்தமர்களில் ஒருவர் லெனின் எனக் கணிக்கப்படுவார்.

என வரதராஜுலு பேசினார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத அளவுக்கு ம.சிங்காரவேலர் நோய்வாய்ப் பட்டிருந்ததை 16.2.1924இன் சுதேசமித்திரன் பதிவு செய்துள்ளது.

தலைமை ஏற்க அழைக்கப்பட்டார்

1924 மார்ச்சு 30, 31 ஆகிய தேதிகளில் நான்காவது அனைத்திந்தியத் தொழிற் சங்க மாநாடு சி.ஆர். தாஸ் தலைமையில்

---

1. ஏ.எஸ்.வேணு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப. 46.

கூடியது. ஆனால் இந்த மாநாட்டிற்குத் தலைவராகச் சிங்காரவேலர்தான் பொறுப்பேற்க வேண்டுமெனச் சென்னை மவுண்ட் ரோடு அச்சகத் தொழிலாளர்களும், சென்னை அலுமினியத் தொழிலாளர்களும் கல்கத்தாவைச் சேர்ந்த மற்றொரு தொழிற்சங்கமும் முன் மொழிந்தன. இச்செய்தியை 'நியூ இந்தியா' பத்திரிகை 6.2.1924இல் பதிவு செய்துள்ளது.

நூதனமாக, அதர்மமாகச் சிங்காரவேலர் மீது தொடுக்கப்பட்ட 'கான்பூர் சதி வழக்கு' என்னும் வழக்கால் சிங்காரவேலர் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

கான்பூர் சதி வழக்கு

ரஷ்யப் புரட்சியை வரவேற்று, உலகப் பாட்டாளிகளின் உணர்வை ஒன்று திரட்ட முயன்ற உன்னதமான தலைவர் ம. சிங்காரவேலர். தேச விடுதலைப் போராட்டத்தில் சிங்காரவேலர் ஈடுபட்டுழைத்தாலும் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் ஒருங்கிணைத்து இயக்கம் நடத்த வேண்டுமென்று சிங்காரவேலர் தனித்தன்மையுடன் பாடுபட்டார். சிங்காரவேலருக்கு எதிராக அவரை அடக்க வேண்டுமென்று டெல்லி சர்க்காரும், சென்னைச் சர்க்காரும் சாதியமும் தோள்தட்டி நின்றன. [1]

1924இல் மார்ச்சு மாதத்தில் கான்பூரில் போல்ஸ்வீக் சதி வழக்கை மத்திய சர்க்கார் தொடர்ந்தது. ம. சிங்காரவேலர் உட்பட 8 பேர் மீது கான்பூர் சதி வழக்கு தொடரப்பட்டது. சிங்காரவேலர் 1924 மார்ச்சு 6ஆம் தேதி கான்பூர் மாஜிஸ்டிரேட் ஆணைக்கிணங்கக் கைது செய்யப்பட்டார். வெளிநாட்டில் இருந்த எம்.என்.ராய், ம. சிங்காரவேலு, முசாபர் அமகத், சௌக்கத் உஸ்மானி, நளினி குப்தா, குலாம் உசேன், மதுரை ஆர்.சி.எல்.சர்மா இவர்கள் மீது நூதனமான வழக்கு அரசால் செயற்கையாக ஜோடிக்கப்பட்டது.

காரணம் யார்

சிங்காரவேலர் மீது ஆங்கிலேயர்கள் கான்பூர் சதி வழக்கு தொடுக்கப்படுவதற்குச் சிங்காரவேலர் வகுப்புத் தோழர்-இந்து பத்திரிகையின் ஆசிரியர் கஸ்தூரி அய்யங்கார் ஒரு காரணமாவார். சிங்காரவேலர் மிகச் சாதுர்யமாக எம்.என். ராய் மூலமாக வெளிநாட்டுச் செய்திகளை இரகசியமாக இந்து பத்திரிகை மூலம் பெற்று வந்தார். பத்திரிகைகள் அக்காலத்தில் தணிக்கைக்கு

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப.150.

உட்படாத நிலையில், மிகத் திறமையாக இந்து பத்திரிகையின் மூலமாகச் சிங்காரவேலர் வெளிநாட்டிலிருந்து செய்திகளைப் பெற்று வந்தார்.

கம்யூனிஸ்டு வளர்ச்சிக்குப் பயன்படும் இச் செயலைக் கஸ்தூரி அய்யங்கார் வெறுத்தார். ஆகவே திடீரென்று ஒரு நாள் கஸ்தூரி அய்யங்கார் தமது இந்து பத்திரிகையில் 'சிலர் அரசுக்கு எதிரான தரவுகளை இந்து பத்திரிகை மூலம் பெறுகின்றனர். இத்ற்கு நாங்கள் தொடர்புடையவர்கள் அல்ல என்றும் விளம்பரம் செய்தார். இந்த விளம்பரத்தைக் கண்ட பின்னர்த்தான் பிரிட்டிஷ் அரசு விழித்துக் கொண்டு சிங்காரவேலர் மீது கான்பூர் சதி வழக்கைத் தொடர்ந்தது.

பேரறிஞர் அண்ணா இன்னொரு செய்தியையும் சிங்கார வேலரைப் பற்றிப் பதிவு செய்கின்றார். பார்ப்பனீயம் சிங்காரவேலரை முதல் எதிரியாக நினைத்ததாலும், சிங்காரவேலர் கான்பூர் வழக்காலும், தென்னிந்திய இரயில்வே சதி வழக்காலும் வீழ்த்தப்பட்டார் என்று குறிப்பிடுகின்றார். சாதியத்தால் வெறுக்கப்பட்டவராகவே சிங்காரவேலர் வாழ்ந்தார். இதனால் இராஜாஜி, சத்தியமூர்த்தி, சர்.சி.பி. இராமசாமி அய்யர் போன்றவர்களால் வெறுக்கவும் பட்டார்.

சர்.சி.பி.

உயர் நீதிமன்றத்தில் சிங்காரவேலரும் சர்.சி.பி. இராமசாமியும் ஒன்றாகவே பணியாற்றியவர்கள். இருவருக்கும் ஜாதியத்தால் பிணக்குண்டு என்பதைக் காலஞ்சென்ற கவிஞர் சுழல் துப்பாக்கி சுவையுடன் கூறுவதுண்டு. சர்.சி.பி. இராமசாமி அய்யர் சிங்காரவேலரினும் இளையவர்; என்றாலும் ஜாதிய ஆணவத்தால் சிங்காரவேலரைப் பெயர் சொல்லியும், ஒருமையிலும் அழைப்பதுண்டு. அதனைச் சிங்காரவேலர் அறவே வெறுத்தார். அப்படி அழைக்காதே என்று சர்.சி.பி. இராமசாமியை எச்சரிக்கவும் செய்தார். என்றாலும் இராமசாமி திருந்துவதாக இல்லை. இதைத் தடுக்க வேண்டுமென்று சிங்காரவேலர் திட்டமிட்டார். சர்.சி.பி. இராமசாமி இல்லத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியொன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதைச் சிங்காரவேலர் அறிந்தார். சிங்காரவேலர் தமக்கு நெருக்கமானவர்களோடு இராமசாமி அய்யர் வீட்டிற்குச் சென்று 'அடே இராமசாமி, இங்கே வாடா' என்றழைத்தார். இராமசாமி அய்யர் குன்றிப் போனார். என்ன செய்வது என்றறியாமல் திகைத்தார். மன்னிப்பு கேட்ட பின்னரே சிங்காரவேலர் அவரை விட்டார்.

இதைப் போலவே சிங்காரவேலர் தமது இனமான மீனவர் சமூகத்தை எவரும் இழித்துப் பேச அனுமதித்ததில்லை. தம்மைப் பற்றி வழக்கறிஞரான சர்.சி.பி.இராமசாமி அய்யர், சிங்காரவேலரின் ஆளுமையையும், செழுமையையும் கண்டு மனம் புழுங்கி அழுக்காறுடன் 'நீயெல்லாம் பறியோடு இருக்க வேண்டியவன். இப்பொழுது சட்டப் புத்தகங்களைச் சூட்கேசில் கொண்டு வருகிறாய்; உன் போன்றவர்களுக்குப் பழக்கமானது பறி தானே' என்றார். அடுத்த நாள் பறியிலே புத்தகங்களைப் போட்டுக் கொண்டு வந்த சிங்காரவேலர் அந்த வழக்கறிஞர் பார்க்க மேஜை மேல் பறியை வைத்தார். அந்த வழக்கறிஞர் கண்ணுற்றுத் துணுக்குற்றார். பறி என்பது பிடித்த மீனைப் போட்டு வைக்கப் பயன்படும் ஓலையால் செய்த பை.

> பறி தாழ்ந்தது, உயர்ந்தது என்பதில்லை. இடத்திற்கு ஏற்ற பொருளைப் பயன்படுத்துவது அறிவுடைமை. இந்த இடத்திற்குச் 'சூட்கேஸ்' வேண்டும். ஆனால் நீர் என்னைப் பறிகொண்டு வரச் செய்து விட்டீர் என்றார். ஆனால் இப்பொழுது நீர் திகைக்கிறீர். இனிமேலாவது அறிவார்ந்த முறையில் பேசக் கற்றுக் கொள்ளும்

என்றார் சிங்காரவேலர்.

இதைப் போலச் சர்.சி.பி. இராமசாமியோடு நிகழ்ந்த இன்னொரு உரையாடலும் சிங்காரவேலரின் தன்மானத்தையும், பார்ப்பனரின் ஜாதிய மேலாண்மையையும் உணர்த்தக் கூடியது. சர்.சி.பி. இராமசாமி,

> 'சிங்காரவேலு' காலம் எவ்வளவு மாறிவிட்டது பார்த்தாயா? நீ மீனவன். கடற்கரையில் நீ வலையோடு இருக்கக் கூடியவன். இன்றைக்கு நீ வழக்கறிஞர் ஆகிவிட்டாய். எவ்வளவு மாற்றம் பார்த்தாயா?

என்றார் சர்.சி.பி. இதனைப் பொறாத சுயமரியாதை மிக்க ம. சிங்காரவேலர் இராமசாமிக்குத் தக்க பதிலைத் தந்தார்.

> 'அன்றைக்கும் இன்றைக்கும் நான் பொருளாதாரத்தில் வளமுடைய மீனவன்தான். அன்றைக்கே எனக்குப் பல சொத்துக்களும் வலை, படகு, கட்டுமரம் எனப் பல வளமான சொத்துக்கும் சொந்தக்காரன் நான். உன் நிலையை நினைத்துப் பார்த்ததுண்டா? உனக்கும் உன் இனத்தவர்க்கும்

ஆற்றங்கரைப் பக்கத்தில் தெர்ப்பைப் புல் பிடுங்கி
மந்திரம் சொல்வதைத் தவிர வேறு என்ன
செல்வாக்கும், சொத்தும் உங்களுக்கு இருந்தன?

என்று கேட்டார் சிங்காரவேலர். சர்.சி.பி. வெட்கத்தால் நாணித் தலை கவிழ்ந்தார்.

இந்தச் சிங்காரவேலரைப் பழிவாங்க உயர் ஜாதிக்காரர்களும், பார்ப்பனர்களும் எப்பொழுதும் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டனர். கான்பூர் சதி வழக்கில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட நிலையில் சிங்காரவேலுவுக்காக வழக்கை நடத்த வேண்டிய அவசியமில்லையென்று **செசில் கேயி** என்ற காவல்துறை உயர் அதிகாரி கூறிவிட்டாலும், அப்பொழுது அரசின் சட்டச் செயலராக இருந்த சர்.சி.பி. இராமசாமி அய்யர் வேறு ஏதாவது காரணங்களைச் சொல்லிச் சிங்காரவேலரைத் தண்டிக்க முடியாதா? என்று கேட்டதை ஆவணக் காப்பக இரகசியக் குறிப்பால் அறிகின்றோம்.

கான்பூர் சதி வழக்கில் இணைக்கப்பட்ட சிங்காரவேலர் கைதாகிய பின்னர் நடமாட முடியாத நோயாளியாகவும் ஆனார். அவர் நோயாளிதான் என்பதை நம்பாமல் டெல்லி அரசு சென்னையிலுள்ள அரசு மருத்துவரை வைத்து ஆராய்ந்த பின்னர் உண்மையான நோயாளிதான் என்பதை அறிந்தே சிங்காரவேலர் வெளிவர அனுமதி தந்தது. இந்த ஜாமீன் 1924 ஏப்ரல் 30 ஆம் தேதிவரை தரப்பட்டது. (U.S.S. File 493, ப.157, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்).

6.3.1924இல் கைது செய்யப்பட்ட சிங்காரவேலர் 11.3.1924 வரை அவரது சொந்த வீட்டிலேயே போலீஸ் காவலில் இருந்தார். பின்னர் 11.3.1924 முதல் ஜாமீனில் விடுவிக்கப்பட்டவராக இருந்தார். இந்த ஜாமீன் 1.7.1924 வரை இருந்தது. சென்னைச் சர்க்கார் எப்படியும் சிங்காரவேலரைச் சிறைக்கோ, அல்லது அரசு மருத்துவ மனைக்கோ அனுப்பி விடவேண்டுமென்று முனைப்பாகச் செயல்பட்டது. நோய் வாய்ப்பட்ட சிங்காரவேலரை வேறு இடத்திற்கு மாற்றுவது ஆபத்தானது என்று மருத்துவர் டி. கணபதி ராய் என்பவரின் சான்றிதழைச் சந்தேகித்து ஐ.எம்.எஸ். கர்னல் மால்கம் சென் என்னும் வெள்ளை அதிகாரியே பரிசோதிக்க வேண்டுமென்று சென்னை அரசு ஆணையிட்டது. (U.S.S. File 493, ப.157, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்).

சிங்காரவேலரை எப்படியும் தண்டித்துவிட வேண்டுமென்று கவர்னர் வெலிங்டனும் முனைப்புடன்

செயல்பட்டதை அறிகிறோம் . (U.S.S. File 493, ப.157, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்). வெள்ளைக்கார அரசு மருத்துவர் டாக்டர் மால்கம் சென்னும் சிங்காரவேலர் உண்மையான நோயாளிதான் என்று சான்றளித்து விட்டதால் சிங்காரவேலர் அவரது வீட்டிலேயே அரசு காவலில் வைக்க அனுமதிக்கப்பட்டார்.

வீட்டுச் சிறையில் இருந்த சிங்காரவேலர் டெல்லி வைஸ்ராயிக்கு 21.4.1924 அன்றே தான் சீராகக் குணமடைந்து வருவதால் தன்மீதுள்ள வழக்கை இ.பி.கோ. 524வது செக்ஷன்படி சென்னைக்கோ அல்லது பம்பாய்க்கோ மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். 1.7.1924 அன்று கான்பூர் மாஜிஸ்டிரேட் முன்பு ஆஜராகவும் சிங்காரவேலர் ஒப்புக் கொண்டார்.

இந்த நிலையில் டெல்லி அரசின் இரகசியப் பிரிவின் இயக்குநராக இருந்த செசில் கேயி என்பவர் கான்பூர் சதி வழக்கின் குற்றவாளிகளான முசாபர் அகமட், சௌக்கத் உஸ்மானி, டாங்கே, நளினிகுப்தா ஆகியோர் 20.5.1924ஆம் தேதி நீதிமன்றத் தீர்ப்பின்படி குற்றவாளிகள் ஆக்கப்பட்டு, தலா நான்காண்டுகள் சிறைத் தண்டனையும் பெற்று விட்டனர்; வழக்கினுடைய நோக்கம் நிறைவேறிவிட்டது. கம்யூனிஸ்டுகளுக்கு அச்சத்தைப் போதுமான அளவு ஏற்படுத்திவிட்டோம்; இந்த நிலையில் சிங்காரவேலர் மீது தனியாக வழக்கை நடத்துவதால் எந்தப் பயனும் வரப்போவதில்லை; ஆகவே சிங்காரவேலர் மீதுள்ள வழக்கை நீக்கிவிடலாம் என்று தெரிவித்துவிட்டார். இதன் அடிப்படையில் இந்து பத்திரிகையும் 2.7.1924இல் சிங்காரவேலர் மீதிருந்த வழக்கு அரசால் நீக்கிக்கொள்ளப் பட்டுச் சிங்காரவேலர் விடுதலை அடைந்தார் என்ற செய்தியையும் வெளியிட்டது.[1]

இவ்விவரங்களைத் தெரிந்து கொள்ளாமலே வழக்கைச் சந்திப்பதற்காகச் சிங்காரவேலர் கான்பூர் புறப்பட்டுச் சென்றுவிட்டார். ஆனாலும், ஆங்கிலேயர்களின் 'பயனீர்', 'மெட்ராஸ் மெயில்' என்ற இரு பத்திரிகைகள் வேண்டுமென்றே சிங்காரவேலர் மீதுஅவதூறு செய்கின்ற முறையில் பொய்யான செய்தியை, சிங்காரவேலர் மன்னிப்பு கேட்டுக் கொண்டதால்தான் விடுதலை பெற்றார் என்ற தவறான செய்திகளை வெளியிட்டன. இறந்து கல்லறைக்குச் சென்றவர்களையும் தோண்டி எடுத்து அவமானப்படுத்துவதைப் போல இரு பத்திரிகைகளும் நடந்து கொண்டன (U.S.S. File 493, ப.157, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்). இச்செய்தியை அறிந்த

1. சி.எஸ். சுப்பிரமணியம், தோழர் சிங்காரவேலுவும் கான்பூர் சதி வழக்கும், பக்.5-23.

மானமுள்ள சிங்காரவேலர் துடித்துப் போனார். இதற்கான மறுப்பைப் 'பெங்காளி' என்ற பத்திரிகையில் கான்பூரிலிருந்தே சிங்காரவேலர் 3.7.1924இல் வெளியிட்டார். 'கல்லறைக்குள்ளே கூடக் கண் துஞ்ச ஒப்பமாட்டார்' என்பதைப் போலச் சிங்காரவேலரைச் சிறுமைப்படுத்த ஆதி நாள் தொடங்கி அவரின் இறுதி நாள் வரை ஒரு கூட்டம் அவர்மீது புழுதி வாரித் தூற்றுவதையே ஒரு வெறியுடைய நெறியாகக் கொண்டிருந்தது என்பதை நாம் அறிகிறோம். இத்தகவல்கள் தொடர்பாக மேலும் தெரிந்து கொள்ள விரும்பும் தோழர்கள் சி.எஸ்.சுப்பிரமணியத்தின் 'தோழர் சிங்காரவேலுவும் கான்பூர் சதி வழக்கும்' என்ற நூலைப் படித்து உண்மைகளை அறியலாம். மேலும் தகவல் அறிய விரும்புபவர்கள் (U.S.S. File 493, ப.157 தமிழ்நாடு ஆவணக் காப்பக இரகசியக் குறிப்பைப் படித்தும் அறியலாம்).

கான்பூர் சதி வழக்கு எந்தெந்தச் சூழலில் எதற்காகத் தொடுக்கப்பட்டது என்ற பின்னணியை நாம் அறிவது அவசியமாகும்.

கான்பூர் சதி வழக்கு ஏன் ஜோடிக்கப்பட்டது?

1917இல் மாவீரன் லெனின் தலைமையில் சோவியத் யூனியனில் ஜார் மன்னனின் வீழ்ச்சி உலகம் முழுமையும் ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. மக்கள் மத்தியில் எத்தகைய பேரரசையும் தூக்கி எறிந்துவிட்டு மக்களாட்சியை உருவாக்க முடியும் என்ற எண்ணத்தை மக்களிடையே சோவியத்து ரஷ்யா உருவாக்கியது. இதனால் பிரிட்டிஷ் பேரரசு பேரளவில் அதிர்ச்சியடைந்தது. அத்தகைய கம்யூனிச ஆட்சி எங்கும் ஏற்பட்டு விடக்கூடாது எனப் பிரிட்டிஷ் அரசு திட்டமிடத் தொடங்கிவிட்டது.

கம்யூனிசக் கருத்துகளுக்குச் சார்பாளராக இந்தியாவில் இருந்து செயல்படும் காங்கிரசின் இடதுசாரிகளை எச்சரிக்கையுடன் கையாள வேண்டுமென்றும், தேவைப்பட்டால் இந்தியாவில் கம்யூனிசப் பிரச்சாரத்தில் ஈடுபடும் முக்கியத் தலைவர்களைக் காவலில் வைத்தோ, குற்றச்சாட்டிற்கு ஆளாக்க வேண்டுவது அவசியமெனப் பிரிட்டிஷ் பேரரசு திட்டமிட்டது.

அரசுக்கு எதிராகச் செயல்படுபவர்களை இந்திய இரகசியக் காவல் துறையினர் ஒருபட்டியலையும் இப்பொழுது தயார் செய்திருந்தனர். சோவியத்து ரஷ்யாவில் இருந்து இந்திய இடதுசாரித் தலைவர்களுக்கு இணைப்புப் பாலமாகச்

செயல்பட்டு வந்த 1. எம்.என். ராய், இந்தியாவில் இருந்து செயல்பட்டு வந்த இடதுசாரித் தலைவர்களான 2. செளகத் உஸ்மானி 3. முசாபர் அகமட் 4. குலாம் உசேன் 5. நளினி குப்தா 6. எஸ்.ஏ. டாங்கே 7. மயிலாப்பூர் சிங்காரவேலு 8. பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஆர்.சி.எல். சர்மா இவர்களின் மேல் நடவடிக்கை எடுக்கலாம் என அரசு முடிவெடுத்தது. குலாம் உசேன் என்பவர் அரசுக்குச் சார்பானவராக மாறிவிட்டதால் அவரை மட்டும் நீக்கி விட்டு மீதமுள்ள ஏழுபேர் மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.

1. பெஷாவரில் நடைபெற்ற தாஷ்கெண்ட் மாஸ்கோ சதி வழக்கு, 2. கான்பூர் சதி வழக்கு, 3. மீரட் சதி வழக்கு போன்றவை இந்தியத் தீவிரவாதிகளின் மீது தொடுக்கப்பட்டன. தீவிரமான கம்யூனிஸ்டுகள் என்ற குற்றச்சாட்டுகள் பம்பாய் எஸ்.ஏ. டாங்கே மீதும், சென்னை ம. சிங்காரவேலர் மீதும் இ.பி.கோ.வின் அடிப்படையில் வழக்குத் தொடரலாம் என்ற கருத்து இந்திய அரசிடம் இருந்ததால் சிங்காரவேலர் மீது வழக்குத் தொடர்வது அரசுக்கு எளிமையாக இருந்தது. இதன் அடிப்படையில் கான்பூர் சதி வழக்கு என்னும் அரசியல் வழக்கு சிங்காரவேலர் மீது தொடுக்கப்பட்டது.

கம்யூனிஸ்டுகளைப் பயமுறுத்துவதே அரசின் முதல் நோக்கமாக இருந்தது. இந்த வழக்கில் 155 பேர்கள் சதி வழக்கில் உட்படுத்தப்பட்டனர். இந்தப் பட்டியலிலிருந்து சலித்தெடுத்து முதலில் 13 பேர்கள் மீது மட்டுமே வழக்குத் தொடுக்க முடிவெடுத்தனர். 1. எம்.என்.ராய் 2. முசாபர் அகமத் 3. செளகத் உஸ்மானி 4. குலாம் உசேன் 5. எஸ்.ஏ. டாங்கே 6. ம.சிங்காரவேலு 7. இராம் சரண்லால் சர்மா 8. நளினி குப்தா 9. சம்சுதீன்ஹாசன் 10. எம்.பி.எஸ். வேலாயுதம் 11. டாக்டர் மணிலால் 12. சம்பூர்ணானந்தா 13. சத்தியபத்தா ஆகியவர்கள் மீது வழக்குத் தொடுக்க அரசு விரும்பியது.

வழக்கின் வீரியம் குறைந்து விடும் என்பதற்காக முதலில் நாம் குறிப்பிட்ட அறுவர் மீது மட்டும் வழக்குத் தொடுக்க அரசு இறுதியாக முடிவெடுத்தது. தீவிரவாதம் பேசிக் கொண்டிருந்த சிங்காரவேலர் மீது வழக்குத் தொடுப்பது அரசுக்குச் சுலபமாகவும் அமைந்து விட்டது. அதுவரை ம. சிங்காரவேலர் பேசிவந்த கூட்டங்களின் பேச்சு, மாநாட்டு உரை, லேபர் கிஸ்ஸான் கெஜட்டில் லெனின் தொடர்பாக எழுதியவற்றை யெல்லாம் தொகுத்துச் சிங்காரவேலருக்கு எதிரான ஆவணங்களாகச் சித்திரித்தனர்.

கான்பூர் சதி வழக்கிற்குப் பின்னர்

கான்பூர் சதி வழக்கு அரசினாலேயே திரும்பப் பெறப் பெற்றது. இப்பொழுது சிங்காரவேலர் நோயிலிருந்து தேறி மீண்டும் தமது தொழிற் சங்கப் பணிகளைத் தொடங்கினார். தொய்வுற்றிருந்த தொழிற் சங்கங்களில் இப்பொழுது இரயில்வே தொழிற்சங்கங்கள் சென்னை, போத்தனூர், நாகபட்டினம், மதுரை, சேலம் முதலிய இடங்களில் தொழிற்சங்க மாநாடுகளை நடத்த ஆரம்பித்தன. தொய்வுற்றிருந்த தொழிற்சங்கத்தில் பி. வரதராஜுலு நாயுடு, வி. சக்கரைச் செட்டி போன்றவர்கள் சுறு சுறுப்புடன் இயங்க ஆரம்பித்தனர். [1]

நகராண்மைக் கழகத் தொழிற் சங்கத் தலைவர்

சென்னை நகராண்மைத் கழகத் தொழிலாளர்கள் தங்களுக்கென ஒரு தொழிற்சங்க அமைப்பை 30.8.1924இல் ஏற்படுத்தினர். ம. சிங்காரவேலரை அதற்குத் தலைமை ஏற்க வேண்டினர். சிங்காரவேலரும் மகிழ்ச்சியுடன் தலைமைப் பதவியை ஏற்றார். 1924 முதலே தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்களுக்கும் இரயில்வே நிர்வாகத்திற்கும் நல்ல உறவென்பது மங்கிக் கொண்டே வந்தது. ஆங்காங்கே நடைபெற்ற தொழிற்சங்கக் கூட்டங்களில் தொழிலாளிகளின் உரிமைக்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. இதன் அடிப்படையில் சிங்காரவேலர் போன்றவர்களின் பெருமுயற்சியால் எம்.என். ஜோஷி அவர்களால் தொழிற்சங்கச் சட்டம் இயற்றப்பட்டது.

சக்லத்வாலாவை அழைத்தல்

இந்தச் சூழலில் இந்தியாவின் பல தொழிற் சங்கத் தலைவர்களெல்லாம் ஒன்றாகக் கூடி இந்தியாவிற்கென ஒரு கம்யூனிஸ்டு இயக்கம் தேவை என்று முடிவெடுத்தனர். பிரிட்டிஷ் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சக்லத்வாலாவை வைத்து மாநாட்டை நடத்துவது என முடிவெடுத்தனர். ஆனாலும் ஏற்பட்ட நெருக்கடியின் காரணத்தால் ம. சிங்காரவேலரே கான்பூர் கம்யூனிஸ்டு மாநாட்டைத் தொடங்கி வைக்கும் நிலை ஏற்பட்டது. சிங்காரவேலர் மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதற்குத் தனியான ஒரு வரலாறும் உண்டு. கான்பூர் சதி வழக்கிற்குப் பின்னர்ப் பிரிட்டிஷ் அரசு இந்தியர்களின் நல்லெண்ணத்தைப் பெறும்பொருட்டு

1. சி.எஸ். சுப்பிரமணியம், தோழர் சக்லத்வாலா, ப.51.

இந்தியர்கள் தங்களுக்கென ஒரு 'பொதுவுடைமை' இயக்கத்தை அமைத்துக் கொள்ளலாம், அதில் தவறேதும் கிடையாது எனக் கான்பூர் நீதிமன்றம் அறிவித்தது.

ஒருங்கிணைந்த பம்பாய், கல்கத்தா, சென்னை, லாகூரில் செயல்பட்டுக் கொண்டிருந்த பொதுவுடைமை இயக்கத்தினர் தங்களுக்கென, இந்தியர்களுக்கென ஒரு பொதுவுடைமைக் கட்சியை உருவாக்கிக் கொள்ள விரும்பினர். வெளிநாட்டில் திருமலாச்சாரி போன்றவர்கள், கம்யூனிஸ்டுக் கட்சியை உருவாக்கி இருந்தாலும், சிங்காரவேலர் சென்னையில் கம்யூனிஸ்டு கட்சிக்கு முன்னோடி இயக்கமாக 'இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கட்சி என' ஒன்றை உருவாக்கி இருந்தாலும், அனைத்து இந்தியர்களுக்கும் பொதுவான ஒரு பொதுவுடைமை இயக்கத்தை இந்தியாவில் அமைத்துக் கொள்ள இந்தியர்கள் விரும்பினர்.

இந்தியாவெங்கும் துண்டு, துண்டாக இயங்கிக் கொண்டிருக்கும் முசாபர் அகமட், செளகத் உஸ்மானி, எஸ்.ஏ. டாங்கே, குலாம் உசேன், நளினி குப்தா, ம. சிங்காரவேலர், எம்.என். ராய் உள்பட அனைவரும் 'இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி' என்ற ஒன்றை உருவாக்கிவிடத் திட்டமிட்டனர். அந்த மாநாட்டை இந்தியாவில் பிறந்து, இலண்டனில் குடியேறி, பிரிட்டிஷ் தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு, இலண்டன் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெற்று, இலண்டன் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் உயர்ந்துள்ள சக்லத்வாலாவைத் தலைவராகக் கொண்டு நடத்த வேண்டுமென்று திட்டமிட்டனர்.

இப்பொழுது இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு சிக்கல் உருவானது. அப்பட்டமாக, முழுக்க முழுக்கத் தங்களின் கொள்கைகளை ஏற்றுச் செயல்படாத இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தொடக்க மாநாட்டிற்குச் சக்லத்வாலாவை அனுப்பு வதில்லை என இங்கிலாந்து பொதுவுடைமைக் கட்சி ஒரு வித்தியாசமான முடிவை எடுத்தது. அதுவுமில்லாமல் சக்லத் வாலா இந்தியா வர முடியாத அளவிற்குப் பிரிட்டிஷ் அரசு ஒரு பெரிய நெருக்கடியையும் ஏற்படுத்தியது. இந்த நிலையில் கம்யூனிஸ்டு கட்சியின் ஒருங்கிணைப்பாளர் 'சத்திய பத்தா' என்னும் பெருந்தலைவர் ஓர் உன்னதமான முடிவை வெளிப் படுத்தினார்.

கம்யூனிஸ்டு கட்சியின் தொடக்க விழாவைக் கான்பூரில் நடத்துவது, தொழிற்சங்கத் தலைவரும் பெரும் படிப்பாளியுமான சக்லத்வாலாவிற்கு இணையான ம. சிங்காரவேலரை மாநாட்டுத்

தலைவராக்கி மாநாட்டை நடத்துவது என முன் மொழிந்தார். சி.எஃப். ஆன்ருவ்ஸ், எஸ்.ஏ. டாங்கே போன்ற எண்ணற்ற தலைவர்கள் தொழிற்சங்க அமைப்பில் இருந்தாலும் ம. சிங்காரவேலரே மாநாட்டுத் தலைவராக இருக்கத் தகுதியுடையவர் எனத் தலைவர்கள் முடிவெடுத்தனர்.

கான்பூர் கம்யூனிஸ்டு மாநாடு

திட்டமிட்டபடி இந்தியாவில் உள்ள அனைத்துத் தலைவர்களும் ஒன்று கூடிச் சிங்காரவேலர் தலைமையில் கான்பூரில் மாநாட்டை நடத்தினர். மாநாட்டின் தலைவராக அமர்ந்த ம. சிங்காரவேலர் தலைமை உரையை அற்புதமாக நிகழ்த்தினார். ம. சிங்காரவேலர் தமது தலைமை உரையில் [1]

> அனைத்துலக மனித உயிர்களுக்கும் நன்மை செய்யவே இம்மாநாடு கூடியுள்ளது. இந்த உலகத்தை இன்பமும், செழுமையும் உடைய உலகமாக மாற்ற இந்த மாநாடு சிந்திக்கும். நம்முடைய எதிரிகளான முதலாளித்துவம் நம்மை நசுக்கிவிட முயற்சிக்கும் சூழலில்தான் நாம் இங்கே கூடியுள்ளோம். தொழிலாளிகள், விவசாயிகள் நன்மைக்காகவே நாம் இங்கே கூடியுள்ளோம்.
>
> இதுவரையிலும் நமது எதிரிகள் நம்மைத் தவறாகவே சிந்தித்து வந்துள்ளனர். 2000 ஆண்டுகளுக்கு முன்னர், கல்வாரி மலையில் ஏசுநாதர் சொன்னதையே நாம், நமது எதிரிகளுக்குக் கூற விரும்புகிறோம். 'என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோமென்பதை உணராமலே நம் எதிரிகள் நம் மீது பழி தூற்றுகின்றனர்'. எந்தச் சீர்திருத்தவாதியும் தொடக்கத்தில் பழிக்கப்படுவது இயல்பு. இதற்கு நாமும் விதிவிலக்காக இருக்க முடியாது. காலச்சக்கரம் சுழன்று கீழது மேலாய், மேலது கீழாய் மாறும். எந்தத் துன்பத்தை ஏற்க நாம் அஞ்சுகிறோமோ அந்தத் துன்பத்தை வலிந்து ஏற்றுக் கொள்ள இலட்சக்கணக்கான தொண்டர்கள் துடித்தெழுந்து முன் வருவார்கள். நம் இயக்கத்தில் பல தொண்டர்கள் நசுக்கப்பட்டு, மாண்டு மடிந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு

1. கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு, தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, பக்.404-430.

இளைஞர்கள் வடிவில் கொள்கையாளர்கள் நம் முன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மானிடத்தின் எதிரிகள் நம் தோழர்களைக் கொன்றுவிட்டதாக நினைக்கலாம். அவர்களெல்லாம் விதை நெற்களாக விதைக்கப் பட்டுள்ளனர். கம்யூனிச வரலாறும் இதுதான்.

புரட்சிகரமான பேச்சிற்காகவும், எழுத்திற்காகவும் மூன்று தோழர்கள் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள். முதலாளித்துவ நீதிமன்றம் அவர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்துள்ளது. நாம் நமது பரிவு உணர்ச்சியை அவர்களுக்குக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம். இந்த அரசுக்கு இனிமேலாவது நல்ல புத்தி வரவேண்டுமே என்றுதான் நாம் ஆதங்கப்படுகிறோம்.

இதைப்போலவே இலண்டனிலும் நம் கம்யூனிஸ்டு தோழர்கள் நரவேட்டை ஆடப்பட்டுள்ளனர். அவர்களுக்காக நாம் பரிவு கொள்ளுகிறோம். கண்ணீர் சிந்துகிறோம். சீரிய கொள்கைகளை ஏற்றுக் கொண்டு உயிர் துறந்த பெர்லீன் ரோசாலக் கம்பர்க், பொலீனில் அதர்மமாகக் கொல்லப் பட்டுள்ளனர். இதைப்போல ஜெர்மன் தொழிலாளி கார்ல்நெக்ட், ஃபிரான்சு தொழிலாளிகளுக்காக உயிர் துறந்த ‘எம் மூவாரே’ என்பவர்கள் எல்லாம் நமது சிறப்பான மரியாதைக்குரியவர்கள். இதைப் போல் இந்தியாவில் உயிர் துறந்த நல்லவர்களை யெல்லாம் நாம் நினைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.[1]

அண்மை நாள்களில் ஏற்பட்ட நிக்கொலாய் லெனின் மறைவு உலகக் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்ட சாதாரண இழப்பல்ல; பேரிழப்பாகும். அவர் உலகத் தொழிலாளிகளைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டார். தன்னலத்தைப் பற்றி அவர் என்றைக்கும் சிந்தித்தவரல்லர். மாபெரும் ரஷ்ய அரசுக்கு அவருடைய அறிவுரைகள் தேவைப் படும்போது அவர் மறைந்தார். உண்மையான

---

1. கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு, தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, பக்.404-430.

புரவலரை இழந்து சோவியத்து ரஷ்யா இன்றைக்குத் திகைத்து நிற்கிறது. லான்ஸ் பெரி என்னும் பாதிரியார் குறிப்பிட்ட புகழ் மொழிகளை அன்றைக்கு லெனின் மறைவைக் குறித்து இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கெஜட்டில் 1924இல் நான் குறிப்பிட்டேன். அதனை இன்றைக்கும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இதைப்போல இந்திய நலனுக்குப் பாடுபட்ட இந்தியத் தவப் புதல்வர்கள், கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த திலகர், தேசபந்துதாஸ் இவர்களை யெல்லாம் இந்த நேரத்தில் இழந்து நிற்கிறோம். தென்னிந்தியாவைச் சேர்ந்த எனது நண்பர் வீரமுரசு சுப்பிரமணிய சிவாவின் மறைவு சாதாரணமானதல்ல. அவரது இழப்பினால் நாம் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கி வருந்துகிறோம். கண்ணீரைச் சிந்துகிறோம். மேற்கண்ட தலைவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமென உங்களை வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இதுவரை இந்த மண்ணில் வாழ்ந்து மறைந்த மக்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். இனி இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைப் பற்றிப் பேச விரும்புகின்றேன். இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் அடித்தட்டு மக்கள், ஏழை எளியவர்கள், அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, குடியிருக்க வீடு, உரிமை, அறிவு இவையெல்லாம் கிட்டாமல் வாழுகின்றனர். உலக மக்களின் துயரத்துடன் ஒப்பிடுகையில் இந்தியர்களின் துயரம் பெரிது. 30 கோடிக்கு மேற்பட்ட மக்களென்றாலும் நான்கு கோடி மக்களுக்கு வேண்டிய உணவு கூட இவர்களுக்குக் கிட்டுவதில்லையெனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. காட்டில் வாழும் விலங்குகளுக்குக் கூட இருப்பிடங்கள் உள்ளன. இந்தியாவில் வாழும் இந்தப் பாமரர்களுக்கு இருப்பதற்கு வேண்டிய இருப்பிடங்கள் கூடக் கிடையாது.

இந்த நாட்டு மக்களில் 80 விழுக்காட்டினர் எழுத்தறிவற்றவர்கள். இந்த நாட்டில் மொத்த ஜனத் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் தீண்டத்தகாதவர்கள். நம்மோடு வாழும் மிகுதியான- மக்களை மண்ணின் மைந்தர்களைச் சேரியில் அடைத்து வைத்து விட்டு, இது அவர்களின் தலைவிதி என்கிறார்கள். இத்தகைய கொடுமை உலகில் வேறு எங்கேனும் உண்டா எனக் கேட்கிறேன்? இந்த மக்கள் ஆண்டைகளுக்குத் தொண்டூழியம் செய்யக் கடமைப் பட்டவர்களாம். ஆனால் ஆலயங்களில் நுழைய உரிமையற்றவர்கள் என்பது எவ்வளவு பெரிய கொடுமை? பொதுக் குளங்களில் குளிப்பது இருக்கட்டும்; அங்குள்ள நீரைக்கூட அருந்துவதற்கு உரிமையற்றவர்கள் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பது எவ்வளவு பெரிய கொடுமை?

பொதுமக்கள் பயன்படுத்தும் பொது நிறுவனங்களைக் கூடப் பயன்படுத்த இவர்களுக்கு உரிமை கிடையாது. நம் நாட்டில் படித்த அறிவாளிகள் 20 இலட்சம் பேர் இருக்கிறார்களாம். இருந்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் அகதிகளைப் போல அநீதி செய்யப் படுகிறார்கள். இந்த அநீதியை எதிர்ப்பது கூட இந்த நாட்டில் சட்டவிரோதம் என்கிறார்கள். இந்த நாட்டுச் சட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களைத் தண்டிக்கவும் செய்கின்றன. இது எவ்வளவு கொடுமையானது. நினைத்துப் பாருங்கள்!.

இந்த நாட்டு மக்களுக்கு விதிக்கப்படும் வரி கணக்கு அளவில்லை. இந்த வரிகளைத் தாங்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள். இந்த நிலையில் நம் நாட்டு இராணுவத்திற்கு 60 கோடிக்கு மேல் பணம் ஒதுக்கப்படுகிறது. அவன் வந்துவிடுவான், இவன் வந்து விடுவானெனக் கற்பனைப் பயத்திலேயே பணத்தை அரசு ஒதுக்குகிறது. உயர்ந்த ஜாதியினர்க்கு அரசு வேலைகள் ஒதுக்கப் படுகின்றன. உயிர்த் துடிப்பான கொள்கைகளை யெல்லாம் புறக்கணித்துவிட்டு எதற்கெல்லாமோ பணம் விரயம் செய்யப்படுகிறது.

இந்த நாட்டுச் சுகாதார நிலை பெருமைப் படும்படியாக இல்லை. சதாரண நோய்களுக்குக் கூட மருந்தில்லாமல், மருந்தளிக்கப்படாமல் மக்கள் மடிகிறார்கள். வெளிநாடுகளை ஒப்பிடும்போது நம்நாடு மிகமிகத் தாழ்ந்த நிலையில் உள்ளது. இந்தியாவில் உள்ள வறுமையைப் போல வேறு எங்கும் காணமுடியாது. அதே போல இந்தியாவில் உள்ள செல்வ வளத்தைப் போல வேறு எங்கும் காண முடியாது. ஆனால் குறிப்பிட்ட வகுப்பினரே, சில ஆயிரக்கணக்கானவர்களே அரசின் அனைத்து வசதிகளையும் அனுபவிக்கின்றார்கள். நாகரிக வாழ்வையும் பெறுகிறார்கள். இது அநாகரிக மென்று யாரும் நினைப்பதும் இல்லை. இதுதான் வேதனைக்குரியது.

மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்குள்ள விவசாயிகள், தொழிலாளிகளின் வாழ்வு மிகமிகக் கேவலமாக இருக்கிறது. விவசாயிகள் இந்த உலகத்தவர்களுக்கு வேண்டிய உணவைத் தயாரிக்கிறார்கள். ஆனால் அவன் உண்பதற்குக் கவளம் சோறும், அவனுக்குக் கிட்டுவதில்லை. ஆலையில் உழைக்கும் தொழிலாளிகள் மிகக் குறைந்த ஊதியத்தையே பெறுகிறார்கள். தொழிலாளிகள் கைக்கும் வாய்க்குமாகப் போராடுகிறார்கள். உலகமெங்கும் தொழிலாளிகள் நல்ல ஊதியத்தைப் பெறும்பொழுது இவர்கள் அடிப்படைத் தேவைகளுக்கான ஊதியத்தைக் கூடப் பெற முடிவதில்லை. எவ்வளவு வேதனை?

இந்தியா என்பது இல்லாமையும், வறுமையும் சூழும் நாடென்றாகி விட்டது. இந்த இடையூறான சூழலில்தான் நாம் வாழுகின்றோம். இவற்றை யெல்லாம் மாற்ற வேண்டிய நிலை பொதுவுடைமை இயக்கத்திற்குள்ளது. அதற்கான திட்டங்களைத் தீட்டுகின்ற இடமாக இந்தப் பொதுவுடைமை மாநாட்டு இயக்கம் திகழ வேண்டுமென்பது எனது பேராவல். மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்காக உள்ள தொழிலாளர்கள் வாழ்வு அவல வாழ்வாக உள்ளது. விவசாயிகளின் அவலத்தைக் குறிப்பிட வார்த்தைகளே கிடையாது. இந்த நிலையில் கிராமங்களின் நிலை என்பது நரகம்தான்.

பஞ்சம், தொற்று நோய், இவற்றால் மக்கள் தொடர்ந்து மடிகிறார்கள்.

வறுமை, ஆதரவின்மை இவற்றால் நசுக்கப்படும் ஏழை எளியவர்கள், கிராம மக்கள் உயர்ந்து வரும் பிறப்பு விகிதங்களால் தொடர்ந்து அழியாமல் உயிர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தலையெழுத்தை மாற்ற வேண்டிய பொறுப் புணர்ச்சி பொதுவுடைமை இயக்கத்திற்குள்ளது. விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் அடிப் படையான நல்வாழ்வை அமைத்துத் தர வேண்டுவது பொதுவுடைமை இயக்கத்தின் உயிர்ப்பணி, உயர்ந்த கடமை. வரப்போகின்ற சுயராஜ்யம் தன்னாட்சி அமைப்பாயினும், சுதந்திர நாடாயினும், குடியரசு நாடாயினும் தொழிலாளிகள் விவசாயிகள் அதில் நிறைவாகப் பங்குபெறும் உரிமையை இந்த நாட்டு அறிஞர்கள் மக்களுக்கு உருவாக்கித் தர வேண்டும்.

இந்த அரசியல் அமைப்பில் தொழிலாளிகளும், விவசாயிகளும் உரிமையைப் பெறவில்லை யென்றால் வேறு எந்த வகையிலும் சுதந்திரம் அவர்களுக்குப் பயன்படாது. இனி அமையப் போகின்ற சுயராஜ்யம் என்பது பூர்ஷ்வா தன்மை கொண்டதாக இல்லாமல் பாட்டாளி வர்க்கத் தன்மை கொண்டதாகப் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு பொதுவுடைமை இயக்கத்திற்குள்ளது. கம்யூனிஸ்டுகள் 'சுயராஜ்ய மின்றேல் வாழ்வில்லை; தொழிலாளிகள் இன்றேல் சுயராஜ்யமில்லை' என்ற கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும். இது மிக மிக அவசியமான கொள்கையாகும்.

காங்கிரஸ் இயக்கம் என்பது உள்ளாற்றல் உள்ள, வலிமையான ஒரு தேசிய இயக்கம். அதில் எத்தனையோ குறைபாடுகள் இருக்கலாம். ஆனாலும் அது தொடர்ந்து அரசியல் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிய ஒரு பேரியக்கமாகும். காந்தியின் தலைமையில் அது வளர்ந்து ஓராண்டாவது உயிருள்ள இயக்கமாகத் திகழ்ந்தது. ஒத்துழையாமை என்னும் கொள்கையில் அது உயிர்ப்புடன், உயிருடன் செயல்பட்டது.

சுயராஜ்யத்தின் உண்மைத் தன்மை என்ன என்பதை விளங்கிக் கொள்ளாமலே காங்கிரஸ் போராடி வந்துள்ளது. ஆனாலும் அது மக்களின் சார்பாகவும், மக்களுக்காகவும் போராடியது என்பதை மறுக்க முடியாது.

அதன் உன்னதமான தலைவர்கள் அதிகார வர்க்கத்திற்கு எதிராக, வன்முறையற்ற முறையில் போராட வேண்டுமென்றவுடன் அனைத்து மக்களும் போராட்டத்தில் குதித்தனர். அதற்கு மக்கள் சொல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப் பணித்தனர். ஆனால் அவ்வியக்கம் கட்டுப் பாடான இயக்கமாகச் செயல்படாமல் காட்டாற்று வெள்ளமாகச் செயல்பட்டது. அது அரசியல், பொருளாதாரம், மதம் எனும் அனைத்துத் துறைகளிலும் மூக்கை நுழைத்துக் கொண்டு இடர்ப்பட்டது. அதுதான் அதன் பலவீனம்.

இந்த இயக்கம் சுயராஜ்யத்திற்கு மட்டும் போராடி இருக்குமானால் காங்கிரஸ் இயக்கம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கும். அது தெளிவில்லாமல் நீதி, மதம், ஜாதி, வர்ணாசிரமம் என அனைத்துத் துறைகளிலும் ஈடுபட்டதால் அதன் பாரம் தாங்காமல் இயக்கம் நொறுங்கி விழுந்தது. 'பர்தோலி' இயக்கம் பின்னடைந்தது. அதன் புகழ் வாய்ந்த தலைவர் கைது செய்யப்பட்ட பின்னர் அவரைப் பின் பற்றுவோர் எதிர்ப்பைக் காட்டவில்லை. ஆகவே பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் வெற்றியடைந்தது. தலைவர்கள் தாழ்ச்சியுற்றனர்.

தேசிய அணிகளுக்கிடையே ஏற்பட்ட சலனம், குழப்பம் இவற்றால் குட்டித் தலைவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். பல்வேறு கட்சிகளாகப் பிரிந்தனர். பர்தோலி வீழ்ச்சிக்குப் பின்னர்க் காங்கிரஸ்காரர்கள் தாங்களாகவே 'சுயராஜ்யக் கட்சி' என்ற ஒன்றை அமைத்துக் கொண்டனர். தேசபந்துவின் தலைமையில் ஓரளவு கட்டுப்பாட்டுடன் இயங்கினாலும் அக் கட்சியில் பல பணக்காரர்களும் ஊடுருவினர். இதனால் கட்சியின்

நோக்கம் சிதறிவிட்டது. சுதந்திரம் பெறுவதற்குப் பணக்காரர்களாலும், கற்றறிந்த சுயநலமிகளாலும் உதவ முடியாதென்பதை மக்கள் தெளிவாக இன்றைக்கு உணர்ந்துவிட்டனர். பிளவுபட்ட காங்கிரசாலோ, சுயராஜ்யக் கட்சியாலோ, பூர்ஷ்வா மனப்பான்மை கொண்ட தொழிற் சங்கத் தலைவர்களாலோ மட்டும் சுதந்திரம் பெறமுடியா தென்பதை நாமும் உணருகின்றோம்.

சுதந்திரம் பெறுவதற்கு

அனைத்து மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய பெரும் முயற்சியது. ஆகவே கம்யூனிஸ்டுகளுக்கு ஓர் உன்னதமான கடமை யொன்றுள்ளது. முதலில் சுதந்திரத்திற்குழைப்பது அவர்களின் பெருங் கடமையாகும். மற்ற அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு தேவையா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டுவது இந்த மாநாட்டின் கடமை. அந்தப் பொறுப்பை இந்த மாநாட்டிடமே ஒப்படைத்து விடுகிறேன். நீங்களே முடிவு செய்யுங்கள். பதவி ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் சட்டமன்ற நுழைவு சுயராஜ்யக் கட்சியின் மிகச் சிறந்த கொள்கையாக ஆகியுள்ளது. அவர்கள் அதிகார வர்க்கத்தின் போக்கைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஆனாலும் அதிகார வர்க்கத்தின் செல்வாக்கு அளவில்லாதது. தனித்து நின்று சுயராஜ்யக் கட்சியினர் சில வெற்றிகளைப் பெற்றிருக்கலாம். அது நிலையானதல்ல; நீடித்த வெற்றியைத் தராது. அதிகார வர்க்கத்தின் ஆட்சியை முற்றிலுமாக முடக்கினால் ஒழிய, சுயராஜ்யக் கட்சியினர் முழுமையாக வெற்றி பெற முடியாது.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு கம்யூனிஸ்டுகளின் பெரும் பணி. இதனைக் கம்யூனிஸ்டு இயக்கம் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்பது எனது வேண்டுகோள். [1]

---

1. கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு, தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, பக்.404-430.

இப்படிப்பட்டதொரு அரிய தலைமை உரையை ஆற்றிவிட்டு ம. சிங்காரவேலர் அமர்ந்தார். கைத்தட்டல் ஓய நீண்ட நேரமானது. 1925லேயே சிங்காரவேலர் இவற்றிற்கெல்லாம் குரல் கொடுத்தார் என்பதை அறிகின்ற நாம் வியப்படைகிறோம்.

தாழ்த்தப்பட்டவர்கள் நல்வாழ்விற்கான முயற்சியிலே அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், அண்ணல் அம்பேத்கர் போன்றவர்கள் குரல் கொடுத்தாலும் அறிஞர் ம. சிங்காரவேலர் 1925லேயே தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கிராம மக்களுக்கும் குரல் கொடுத்திருப்பது நமக்கு வியப்பளிக்கிறது. காங்கிரஸ் இயக்கத்தின் பலம், பலவீனம் இவற்றைப் பற்றியெல்லாம் சிங்காரவேலர் போன்று திறனாய்வு செய்தவர்கள் யாரும் இலர். அண்ணல் காந்தியிடம் வர்ணாசிரமப் பற்றுப் போன்ற பலவீனங்கள் இருந்தாலும் இந்தியாவில் செல்வாக்குப் பெற்ற பெருந்தலைவர்களில் அவர் ஒருவர் என்பதைச் சிங்காரவேலர் முழுமையாக உணர்ந்து பாராட்டுகின்றார். இது சிங்காரவேலரின் கூர்த்த அறிவு.

பூர்ஷ்வா மனப்பான்மை கொண்ட போலித் தொழிற்சங்கத் தலைவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற சிங்காரவேலரின் சிந்தனை தனித் தன்மையானது. அமைய இருக்கின்ற அரசியல் அமைப்பில் விவசாயிகளையும், தொழிலாளிகளையும் ஒருங்கிணைக்க வேண்டிய பொறுப்பு கம்யூனிஸ்டு இயக்கத்திற்குள்ள பெரும் பொறுப்பு. இந்தியாவின் அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு பொதுவுடைமை இயக்கத்தின் பெரும்பணி எனச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார்.

பக்கத்தில் உள்ளவர்களை நம்ப வேண்டும். நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் கோடி கோடியாகப் பணத்தை அரசுகள் ஒதுக்குவது வியர்த்தம் மட்டுமல்ல, வீணான செயல். மனிதனை மனிதன் நம்புவது மனித நேயம். மனிதனை மனிதன் நம்பாமை விலங்குக் குணமெனச் சிங்காரவேலர் விளக்குகின்றார்.

நகராண்மைக் கழகத்தில் சிங்காரவேலர்

தொண்டு நிறுவனங்களில், கௌரவப் பணிகளில் சிங்காரவேலர் இருந்திருக்கிறாரே தவிரப் பெரும் அரசுப் பணிகளில் சிங்காரவேலர் இருந்ததில்லை. அதற்காக அவர் முயன்றதும் இல்லை. இவர் காலத்தவர்தாம் பச்சையப்பன் முதலியார். சிங்காரவேலரைப் போலப் பி.ஏ., பி.எல். படித்தவர் அல்லர். எப்.ஏ. என்கின்ற இன்டர்மீடியட் மட்டுமே படித்தவர்.

இரு பாஷைகளை அறிந்திருந்த அவர் துபாஷியாகிக் கோடிகோடியாகப் பொருள் திரட்டினார். ஆனால் சிங்காரவேலரோ தாம் படித்த பட்டங்களைத் துறந்தார். கொள்கைக்காக வக்கீல் அங்கியைத் தீவைத்துக் கொளுத்தினார். பல கோடிக் கணக்கான குடும்பச் சொத்தையும் இழந்தார். மக்களுக்காக வாழ்ந்தவர் சிங்காரவேலர். [1]

பொதுத் தொண்டில் ஆர்வம்

தொடக்கக் காலம் முதல் பொதுத் தொண்டுக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்ட சிங்காரவேலர் 1913 முதல் 1916 வரை சென்னை மகாஜன சபைச் செயலாளராக இருந்தார். சென்னைத் திருவல்லிக்கேணியைத் தாக்கிய இன்புளுயன்சா, பிளேக் போன்ற நோய்களுக்குத் தம்முடைய வீட்டையே மருத்துவமனையாக்கித் தொண்டாற்றினார். 1925இல் யானைக்கவுனி என்னும் பகுதியில் மதனகோபால் என்பவரை எதிர்த்துப் போட்டியிட்டுச் 'சுயராஜ்யக் கட்சி' வேட்பாளராகத் தேர்தலில் வென்றார். நகராண்மைக் கழக உறுப்பினராக இருந்த சிங்காரவேலர் இந்தியக் குடியரசுத் தலைவர் செய்யாத வேலைகளையெல்லாம் செய்தார்.

ஒரு காலத்தில் மின்சாரம், டிராம், தொலைபேசி ஆகியன சென்னையில் தனியார் உடைமையாக இருந்தன. அவற்றையெல்லாம் சிங்காரவேலர் நகராண்மைக் கழக உறுப்பினராக வந்த பின்னர்த்தான் தம்முடைய தீர்மானத்தால் பொதுவுடைமை ஆக்கினார். 1925களில் சென்னை நகராண்மைக் கழகத்தின் உறுப்பினர்கள் தெலுங்கிலே பேசுவார்கள். ஆங்கிலத்தில் பேசுவார்கள். உறுப்பினர்கள் தமிழில் பேச மறுப்பார்கள். தமிழில் பேசுவது அன்றைக்கு மதிப்பில்லாதது. சிங்காரவேலர் தம்முடைய கன்னிப்பேச்சை முதன் முதல் தமிழில் தான் பேசினார். அன்றைக்கு அவர் பேசிய பேச்சு இன்றைக்குள்ள அரசியல்வாதிகளுக்குப் படிப்பினையாக உள்ளது. ஆங்கில வல்லுனரான அவர் தமிழில்தான் பேசினார்.

நகரசபை உறுப்பினர்க்கு அறிவுரை

> நான் சுயராஜ்யக் கட்சியைச் சார்ந்திருப்பதைப் போல இங்குள்ள உறுப்பினர்கள் காங்கிரஸ், நீதிக்கட்சியைச் சார்ந்திருக்கலாம். இங்கு வந்துவிட்ட நிலையில் அவரவர்கள் கட்சி வளர்ச்சியைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக மக்கள்

1. கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு, தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, பக்.403-404.

> நலத்தைப் பற்றிப் பேச வேண்டும். எக்கட்சியைச் சார்ந்தவர் ஆயினும் மக்கள் நலத்திற்குக் குரல் கொடுக்க வேண்டும். நகராட்சி ஆண்டிற்கு மக்கள் நலத்திற்காக 80 இலட்சம் ரூபாயைச் செலவிடுகிறது. இருந்தும் மக்கள் இறப்புத் தொகை குறைந்தபாடில்லை. அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து கொண்டு எல்லாச் சாவுகளுக்கும் அரசைப் பொறுப்பாக்க வேண்டும்.

எனச் சிங்காரவேலர் பேசினார். அவர் பேசிய கன்னிப் பேச்சிலேயே நாம் ஒருவரை ஒருவர் பாராட்டிக் காலத்தைப் பாழாக்குவதைவிட 'நகர சுகாதாரத்தை மேம்படுத்த முழுக் கவனம் செலுத்த வேண்டு'மென்றார். சிங்காரவேலரின் அறிவாற்றலாலும், முதிர்ச்சிக்காகவும் நகரசபை உறுப்பினர்களால் நிரந்தரக் கல்விக் குழு உறுப்பினராக 3.11.1925இல் தேர்வு செய்யப்பட்டார்.

ஏழைப் பிள்ளைகளுக்கு மதிய உணவு

தமிழகத்தில் பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவளித்ததற்காகக் காமராஜர், எம்.ஜி.ஆர். போன்றவர்களெல்லாம் பாராட்டப் படுகின்றனர். தமிழகத்தில் முதன் முதல் ஏழைப் பிள்ளைகளுக்கு மதிய உணவளிக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்தவர் சிங்காரவேலர்தாம்.

சென்னை நகராட்சிக் கண்காட்சிகளில் வசூலிக்கின்ற உபரிப் பணத்தையெல்லாம் ஏழைப் பிள்ளைகளின் மதிய உணவிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்று சிங்காரவேலர் பேசினார். இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுவது செல்வந்தர்களின் நன்மைக்காகவே என்றார் சிங்காரவேலர். குறுக்கிட்டுப் பேசிய நகரசபை உறுப்பினர், இந்தத் திட்டம் எந்த வகையில் செல்வந்தர்களுக்கு உதவுமென்று வினா எழுப்பினார்.

> ஏழைகளுக்கு உதவும் இந்த மதிய உணவால் ஏழைக் குழந்தைகள் படித்துத் தங்களையும் வளர்த்துக் கொண்டு சமுதாயத்திற்கும் பயன்படுவார்கள். இத்திட்டம் இல்லை யென்றால் படிப்பற்ற மூடர்களான அவர்கள், கொலை, கொள்ளையில், திருட்டில் ஈடுபடுவார்கள். நாளைக்கு அவர்கள் யாரிடத்தில் திருடுவார்கள்? பணக்காரர்களிடத்தில் தாம் திருடுவார்கள். இன்றைக்கு அவர்களுக்குச் சோறிட்டு வளர்த்தால் நாளைக்கு அவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள் அல்லவா?

என்றார் சிங்காரவேலர். ஆகவே மதிய உணவுத்திட்டமே

செல்வந்தர்களுக்கு என்றென்றைக்கும் பாதுகாப்பானது என்றார் சிங்காரவேலர். 1925லேயே மதிய உணவுத்திட்டம் சிங்காரவேலர் அறிமுகப்படுத்தியது. அதற்கு முன்னர் நீதிக் கட்சியாலும் மதிய உணவு அளிக்கப்பட்ட வரலாறும் நமக்குண்டு.

யாருக்குப் பரிசு

> உலகிலுள்ள அனைத்து வசதிகளையும் அனைவர்க்கும் பொதுவாக்குவதுதான் கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை. உலகனைத்திலுமுள்ள கம்யூனிஸ்டுகளின் சார்பாளராக நான் வந்துள்ளேன். இனி வரும் நாளில் பள்ளிக் குழந்தைகளுக்குப் பரிசென்று ஒன்று கொடுக்கப் படுமானால் அது 50 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்க்கே பரிசுகள் தரப்பட வேண்டும்.

என்றார் சிங்காரவேலர். 1871இல் 'பாரிஸ் கம்யூன்' குழந்தைகளுக்குப் பால் வழங்கிக் காப்பாற்றியதைப் போலவே சென்னை நகராண்மைக் கழகமும் ஏழைக் குழந்தைகளுக்குப் பால் வழங்கவேண்டும் என்ற திட்டத்தைச் சிங்காரவேலர் நகராண்மைக் கழகத்தில் கொண்டு வந்தார். குழந்தைப் பராமரிப்பே அடிப்படையான சமூகத் தேவையென்றார் அவர்.

பல குழுக்களின் தலைவர்

இன்று வரை சென்னை நகராண்மைக் கழகத்தில் குதிரைப் பந்தயத்தையும், சூதாட்டத்தையும் தடுக்க முடியவில்லை. 1925லேயே அதற்கான தீர்மானத்தைச் சிங்காரவேலர் தந்தார். பாதாளச் சாக்கடை, கழிவு நீரகற்றல் ஆகியவை பற்றித் துடிப்புடன் செயல்பட்டவர் சிங்காரவேலர். தொற்று நோய்களை ஒழிப்பதற்கு நகரசபை துடித்தெழுந்து செயல்பட வேண்டுமென்று சிங்காரவேலர் எப்பொழுதும் வலியுறுத்துவார். குழந்தைகளின் புத்தகத்திற்குச் செலவிடுவதைவிட அவர்களின் பசிப்பிணியைப் போக்குவதுதான் அறிவுடைமை என்பது சிங்காரவேலர் கருத்து. சிங்காரவேலர் கல்விக் குழுவின் தலைவராக இருந்த காலத்தில் பள்ளிகளின் எண்ணிக்கை 78 விழுக்காட்டிலிருந்து 94 விழுக்காடாக உயர்ந்தது. பள்ளிக் குழந்தைகளுக்குப் பால் வார்க்கும் குழு, ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கும் குழு, விபத்தைத் தடுக்கும் குழு, பன்மொழி ஆய்வுக்குழு, வங்கி அமைப்புக் குழு, நகர ஒழுங்கமைப்புக் குழு, அவசர நிவாரண மருத்துவக் குழு எனப் பல

குழுக்கள் நகரசபையில் உருவாகச் சிங்காரவேலர் காரணமாக இருந்தார்.

கல்லுடைப்போர்க்கான மருத்துவக் குழு, பிச்சைக் காரர்கள் மறுவாழ்வுக் குழு ஆகியவையெல்லாம் உருவாகச் சிங்காரவேலர் காரணமாக இருந்தார். பல்லாவரம் கல்லுடைக்கும் தொழிலாளர்க்கென்று அமைந்த மருத்துவமனை 29.1.1926 அன்று சிங்காரவேலரின் தீர்மானத்தின் அடிப்படையில் உருவாக்கப் பட்டதாகும். ஏழைகளுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்கு அரசே வீடு தேடிச்சென்று மருத்துவம் செய்ய வேண்டுமென்ற திட்டம் 26.11.1926இல் சிங்காரவேலரால் தரப்பட்ட திட்டமாகும். இதைப்போலவே இன்றைக்குக் கடலில் குளிப்போர்களின் பாதுகாப்புக்கென்று சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன அல்லவா? அதற்கான முன் யோசனையுடன் கூடிய திட்டம் சிங்காரவேலரால் 9.2.1926இல் தரப்பட்டதாகும்.

மகாத்மா படம் வைக்கவேண்டும்

இன்றைக்கும் பள்ளிகளில் அனைத்து மதத்தவர்களாலும் திட்டமிட்டே கடவுள் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அது தவறு என்று 26.04.1926லேயே சிங்காரவேலர் நகராண்மைக் கழகத்தில் பேசினார். அதனை ஆதரித்துப் பேசியவர் யார் தெரியுமா? மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் தாம். மகாத்மாவைப் பொறுத்தவரை சிங்காரவேலர் இருவேறு நிலைகளை எடுத்ததுண்டு. தொடக்கக் காலத்தில் மகாத்மாவைக் கண்ணை மூடிக் கொண்டு சிங்காரவேலர் ஆதரித்ததுண்டு. 1922க்குப் பின்னர் மகாத்மாவிடமிருந்து சிங்காரவேலர் பல வகையிலும் மாறுபட்டார். ஆனாலும் மகாத்மாவிடம் மக்களுக்கு இருந்த செல்வாக்கை அவர் என்றும் குறைத்து மதிப்பிட்டதில்லை. ரஷ்யத் தலைவர்களுக்கு மகாத்மாவின் செல்வாக்கு அபரிமிதமானது என்பதைக் குறிப்பிட அவர் தவறியதே இல்லை. நகராண்மைக் கழகத்தின் பள்ளிகளில் மகாத்மாவின் படத்தை வைக்க வேண்டும் என்று 04.01.1927லேயே சிங்காரவேலர் தீர்மானம் கொடுத்தார். அதற்கான செலவைத் தனியாரும் நகராண்மைக் கழகமும் ஏற்கலாமென்ற தீர்மானம் சிங்காரவேலரால் 17.01.1927இல் தரப்பட்டது. நகரசபையிலுள்ள நீலன் சிலை நீக்கத்திற்கும் போர் வெறியைத் தூண்டும் பீரங்கியை அப்புறப்படுத்தவும் சிங்காரவேலர் முயன்றார்.[1]

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், பக்.108-109.

சிங்காரவேலர் நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராக இருந்தபொழுது அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. பண்டித ஜவகர்லால் நேரு, டாக்டர் அன்சாரி, சி.எப். ஆன்ருவ்ஸ், ஜே.எம். சென்குப்தா, சுபாஷ் சந்திரபோஸ் போன்ற பெருந்தலைவர்களெல்லாம் கலந்து கொண்டனர். வந்த தலைவர்களுக்கெல்லாம் வரவேற்பளித்ததுடன் 1927 டிசம்பரில் நடைபெற்ற அந்தக் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தண்ணீர் வழங்குதல் உட்பட அனைத்து வசதிகளையும் செய்து தந்தவர் நகராண்மைக் கழக உறுப்பினர் ம. சிங்காரவேலர்தாம்!

சக்லத்வாலாவிற்கு வரவேற்பு

இந்தக் காங்கிரஸ் மாநாட்டிற்கு எஸ்.ஏ. டாங்கே, எஸ்.எஸ். மிராஜ்கர், கே.என். ஜோக்லேக்கர், ஆர்.எஸ். நிம்கார், தரணி, கோஸ்வாமி, முசாபர் அகமத், எஸ்.வி. காட்டே, கோபால் பசக் போன்றவர்களெல்லாம் 22, சவுத் பீச் ரோடு என்ற சிங்காரவேலர் வீட்டில்தான் தங்கி இருந்தனர். பரிபூரண சுயராஜ்யம் என்ற கொள்கை சிங்காரவேலரால் தயாரிக்கப் பட்டதாகும். இதைப் போலவே 1927இல் இலண்டன் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சக்லத்வாலா என்னும் கம்யூனிஸ்டு கட்சித் தலைவரைச் சென்னை நகராண்மைக் கழகம் வரவேற்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் சிங்காரவேலர்.

சென்னையில் பல இடங்களில் சக்லத்வாலாவைக் கூட்டிச் சென்றதுடன் அவர் ஆங்கிலப் பேச்சைப் பல இடங்களிலும் ம. சிங்காரவேலர் மொழிபெயர்க்கவும் செய்தார். கல்வி என்பது மிக நுட்பமான செய்தியாக இருந்தாலும் இன்றைக்கே முதலாளித்துவ உலகம் அதனைக் கரடு முரடாகக் கையாள்வதைப் பார்க்கிறோம். படிக்காத பிள்ளைகளைக் கண்ணை மட்டும் வைத்துத் தோலை உரித்து விடுங்கள் என்று கூறும் பெற்றோர்களை நிறையவே பார்க்கிறோம். மாணவர்களைத் தலை கீழாகத் தொங்கவிட்டு அடியில் மிளகாயைப் போட்டுக் கொளுத்தியவர்கள் உண்டு. இத்தகைய இயல்புடைய அந்நாள் நகராண்மைக் கழக ஆசிரியர்கள் 'மாணவர்களைப் பிரம்பால் அடிப்பதில் தவறில்லை' என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றினர். 'மாணவர்கள் உள்ளம் மிக நுட்பமானது. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள் தேவையற்றவை' என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து நகர சபையில் சிங்காரவேலர் நிறைவேற்றினார்.

தாய்மொழிக் கல்வி

மாநிலங்களின் பொறுப்பில் இருந்த கல்வி இன்றைக்கு மத்திய அரசின் பொறுப்பில் மாற்றப்பட்டதால் தமிழகத்தில் கல்வியும், கல்வியின் தரமும் சீரழிவதை நிறையவே பார்க்கிறோம். நான்கு வகையான பாடத் திட்டங்களால் முதலாளிகள் மக்களை இன்றைக்கு நிறையவே சுரண்டுகின்றனர். அன்றைக்கு ஏழை எளியவர்கள் சமஸ்கிருதத்துடன் போராடினர். இன்றைக்குக் கிராம மக்கள் ஆங்கிலத்துடன் போராடிச் சாகின்றனர். தரமான தாய் மொழிக் கல்வி மண்ணின் மைந்தர்களுக்கு நிறையவே மறுக்கப்படுகின்ற நிலை, தனியார் மயமாதல், தாராள மயமாதல், உலக மயமாதல் என்னும் கோளாறான கொள்கைகளால் சுயநிதிக் கல்லூரிகளும், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களும் மாணவர் உலகத்தைக் கொத்திக் கூறு போடுவதை நிறையவே பார்க்கின்றோம்.

இவற்றையெல்லாம் எதிர்க்கின்ற முறையில் சிங்காரவேலர் 1927லேயே சென்னை நகரிலுள்ள தனியார் பள்ளிகளை நகராண்மைக் கழகமே எடுத்து நடத்த வேண்டுமென்ற தீர்மானங்களைக் கொடுத்தார் என்பது அதிசயமட்டுமல்ல, ஆச்சரியப்படத் தகுந்த தகவலுமாகும். தொற்று நோய்கள் இன்றைக்கும் தொடர்ந்து சென்னையைத் தாக்கி வருவதைப் பார்க்கின்றோம். எதிர்பாராமல் வருகின்ற நோய்களுக்கு உடனடியாகப் பெருந் தொகையைச் செலவிடுகின்ற உரிமை நகராண்மைக் கழகத்திற்கு வேண்டுமென்ற தீர்மானம் 09.02.1926லேயே சிங்காரவேலரால் தரப்பட்டதென்றால் அவரின் தொலை நோக்கையும், நுண்ணறிவையும் நாம் புரிந்து கொள்ள முடியுமல்லவா?.

நகராண்மைக் கழகத்தின் தேர்தல் என்பது அரசின் வசதிக்கேற்ப அரசால் ஏனோதானோ என்றுதான் நடத்தப் பட்டது. இதனால் பொதுமக்கள் முழுமையும் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனைப் போக்குகின்ற முறையில் சிங்காரவேலர் நகராண்மைக் கழகத்தின் தேர்தல் ஒரு விடுமுறை நாளில்தான் நடத்தப்படவேண்டுமென்று 29.01.1926இல் தீர்மானம் தந்தார். இன்றைக்கும் சென்னைக்கு வருபவர்கள் அதன் போக்குவரத்து வசதிகளையும், நீர்ப் பெருக்கத்தையும், சாலை, மின்சார, தொலைபேசி வசதிகளையும் கண்டு மலைப்பதுண்டு. பாதாளச் சாக்கடை முதல் அனைத்து வசதிகள் குறித்தும் 1925லேயே திட்டம் தந்தவர் பொதுவுடைமைத் தந்தை சிங்காரவேலர்தாம் என்பதை மக்கள் மறக்காமல் நினைவு கூர்தல் மிகமிக அவசியமாகும்!

நீலன் சிலையகற்றல் போராட்டம்

கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவிற்குள் வந்ததும் இந்திய நாடு ஏதோ உடனடியாக அடிமைப்பட்டு விட்டதெனச் சிலர் நினைக்கலாம். படிப்படியாக இந்திய மண் போராடித்தான் அடிமைப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் தளபதிகளில் பலர் இந்திய மண்ணில் இந்திய மக்களை அடிமைப்படுத்த இரத்த ஆற்றையே ஓட விட்டனர். தர்மபுரியில் சமாதியில் உறங்குகின்ற தளபதி மன்றோ, சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு ஆண்ட இராபர்ட் கிளைவ், ஜாலியன்வாலாபாக் படுகொலைக்குக் காரணமான ஜென்ரல் டையர் போன்றவர்கள்தாம் இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு தோற்றம் பெறுவதற்குக் கடைக்கால் போட்டவர்கள். இவர்களெல்லாம் கொடுமையின் உருவமென்றால் ஜேம்ஸ் ஸ்மித் நீல் கொடுமையின் மொத்த வடிவம்.[1]

இவனது பணியைப் பாராட்ட நினைத்த பிரிட்டிஷ் பேரரசு நீலன் சிலையைச் சென்னையில் மவுண்ட் சாலையில் வைக்கத் திட்டமிட்டது. சிலை செய்யப்பட்டு, சென்னைத் துறை முகத்துக்கு வந்த ஆண்டு எது தெரியுமா? 1860ஆம் ஆண்டு. அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் மாமேதை ம. சிங்காரவேலர் பிறந்த ஆண்டே 1860தான். சிங்காரவேலர் காங்கிரஸ் இயக்கத்தில் ஒன்றறக் கலந்து இருந்தவர். சென்னையின் மகாஜன சபையின் உறுப்பினராக இருந்தவர். இந்த இயக்கங்கள் தாம் சென்னையில் நீலன் சிலையகற்றப் போராடின.

சிலையகற்றும் முயற்சிக்குச் சிங்காரவேலர் போலவே பல அரசியல்வாதிகள் போராடினர். மூதறிஞர் இராஜாஜி, தம் விதவை மகளுக்கு மறுமணம் செய்து வைத்த எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர், சட்டமன்றப் புலி எஸ். சத்தியமூர்த்தி அய்யர், இந்தியச் சுதந்திரத்திற்காகத் தம் குடும்பத்தையே அழித்துக் கொண்ட மண்டையம் திருமலாச்சாரி சகோதரர்கள் இவர்களெல்லாம் சிறப்பாகவும், குறிப்பாகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவர்களெல்லாம் சிங்காரவேலரின் கெழுதகு நண்பர்கள். குறிப்பாகச் சிங்காரவேலரோடு மண்டையம் திருமலாச்சாரி குடும்பத்திற்கு இருந்த நட்பு மிக மிக நெருக்கமானது. சிங்காரவேலரின் பேத்திகளான ம. ஜெய்பாய், ம. ஜூபாய் இருவரும் திருமலாச்சாரி குடும்பத்துடன் செல்வந்தரான சிங்காரவேலர் வீட்டுக் குழந்தைகளானவர்கள்

---

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர்.

அவர்களைப் போன்ற செல்வந்தரான மண்டையம் திருமலாச்சாரியின் குழந்தைகளுடன் திருவல்லிக்கேணியின் திருமாலாச்சாரி மாளிகையில் போய் விளையாடுவர். தாத்தா சிங்காரவேலர் திருமலாச்சாரி வீட்டிற்குச் செல்வதைப் போலத் திருமலாச்சாரியும் அடிக்கடி 22, சௌத் பீச் ரோட்டிலுள்ள சிங்காரவேலர் வீட்டிற்கு வருவதுண்டு.

கொடுங்கோலன் நீலன் ஜென்ரல் டையரைப் போல 1000 மடங்கு கெட்டவன். ஜாலியன்வாலாபாக் மைதானத்திலே ஆயிரக் கணக்கானவர்களை, சுதந்திர வீரர்களைச் சுட்டுக் கொன்று விட்டீர்களே? என்ற பொழுது, ஜெனரல் டையர் ‘நான் என்ன செய்யட்டும்? குண்டுகள் தீர்ந்து விட்டன. இல்லையென்றால் இன்னும் சுட்டுக் கொண்டே இருந்திருப்பேன்’ என்றான் அந்தக் கொடியவன். அந்தக் கொடியவனை விட ‘நீலன்’ கொடியவன்; இன்னும் கெட்டவன்!

சிறு பொறி நெருப்புத்தான் பெரும் காட்டையே அழித்து விடுகிறது. 1856ஆம் ஆண்டில் ஆங்கில அரசு ஒரு விபரீதச் செயலில் ஈடுபட்டது. தங்கள் படைவீரர்கள் பயன்படுத்துகின்ற என்பீல்டு துப்பாக்கியில் கொழுப்பைத் தடவி இராணுவ வீரர்கள் பயன்படுத்த வேண்டுமென்றனர். இந்துக்கள் பயன்படுத்தும் துப்பாக்கியில் பசுவின் கொழுப்பைத் தடவினர். முகமதியர்கள் பயன்படுத்தும் துப்பாக்கிகளில் பன்றியின் கொழுப்பைப் பயன்படுத்தினர். இதன்மூலம் இரண்டு சமுதாயத்தையும் மோதவிட்டுவிடலாமெனத் தப்புக் கணக்குப் போட்டனர். பிள்ளையார் பிடிக்கக் குரங்கானதைப் போலச் சிப்பாய்கள் மத்தியில் அரசுக்கு எதிரான கல்கம் உருவாகிவிட்டது. இந்தச் சிப்பாய்க் கலகம்தான் இந்தியர்களின் முதல் புரட்சி என வரலாற்றாசிரியர்களால் எழுதப்படுகிறது.

அப்படி ஏற்பட்ட கலகம் மீரட்டில் தொடங்கி, ஜான்சி, கான்பூர், லக்னோ எனப் பல இடங்களுக்கும் பரவத் தொடங்கியது. இந்தக் கலகத்தை அடக்குவதற்குத் தகுந்த மூர்க்கன் நீலன்தான் எனக் கணித்து, அரசு அப்பொறுப்பை நீலனிடம் ஒப்படைத்தது. நல்ல நேரத்திலேயே கொலை செய்கின்ற கொடியவனிடம் இதைப் போன்ற பொறுப்பையும் கொடுத்துவிட்டால் பின்னர் விளைவுகளைப் பற்றிக்கேட்க வேண்டுமா? கையில் கிடைத்த வீரர்களையெல்லாம் கைது செய்து அவர்களைக் கொன்றதன் மூலம் அச்சத்தை நீலன் உலவ விட்டான். கிராமம் கிராமமாகத் தீ வைத்துக் கொளுத்தினான். அப்படி 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் சுற்றி வளைத்துத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

எதிர்த்து வந்த இந்திய வீரர்களைப் பீரங்கிப் படை கொண்டு நீலன் தாக்கினான். ஊரைக் கொளுத்துவதே நீலன் படை வீரர்களின் ஒரே வேலையாக இருந்ததாம். நூற்றுக்கணக் கானவர்களை நீலன் படையினர் தூக்கிலிட்டார்களாம். நீலன் தொடர்ந்து சென்ற காசி, கான்பூர், லக்னோ போன்ற இடங்களிலிருந்த வீரர்கள் கொல்லப்பட்டதுடன் பல ஊர்கள் தீக்கும் இரையாக்கப்பட்டதாம். 'கல்லடி சொக்கன் போன வழி காடு மேடெல்லாம் தவிடு பொடி' என்பதைப் போல நீலனால் இந்தியாவின் ஆன்மாவே அழிக்கப்பட்டது. இவ்வளவும் செய்த நீலனும் போர்க்களத்தில் மாண்டான்.

இத்தகைய கொடியவனுக்குச் சிலை வைப்பதென அந்நாளைய பிரிட்டிஷ் அரசு முடிவெடுத்தது. சென்னை மவுண்ட் சாலையில் ஸ்பென்சர் பிளாசா எதிரில் 33 மீட்டர் உயரமுள்ள பீடத்தில் 9 அடி உயரமுடைய நீலன் சிலை வைக்கப்பட்டது. 1861இல் சென்னையில் சிலை வைக்கப்பட்டாலும் இந்திய மக்கள் அவனைப் பற்றி எதுவும் தெரியாதவராகவே இருந்தனர்.

சுதந்திர வேள்வியில் தம்மை அழித்துக் கொண்ட, அந்தமான் சிறையில் அவதிப்பட்ட சாவர்க்கர் இலண்டனில் இருந்தபொழுது ஹோவர்டு ரசல், ஜான் வில்லியம் கேயி, மாலிசன், ஹோம்ஸ் போன்றவர்களின் வரலாற்றுக் குறிப்புகளைப் படித்து 'நீலன்' குறித்தொரு வரலாற்று நூல் ஒன்றை எழுதினார். ஆங்கில நாட்டு வரலாற்றாசிரியர்கள் நடுநிலைமைக்குப் பெயர் பெற்றவர்கள். அந்தக் குறிப்புகளைக் கொண்டு சுதந்திர உணர்வு மிக்க சாவர்க்கர் ஆங்கிலத்தில் நூல் எழுதி, நீலனின் கொடுமைகளை மக்களுக்கு உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார். டி.எஸ். சௌந்தரம் என்னும் அம்மையார் அந்த நூலைத் தமிழ்ப்படுத்தினார்.

சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர்ச் சுதந்திரக் கிளர்ச்சி வெகு மக்கள் இயக்கமானது. ஆங்கிலக் கொடுங்கோன்மையான அதிகாரிகளின் சிலைகளை நீக்க வேண்டுமென்ற கிளர்ச்சி மக்களிடையே கிளர்ந்தெழுந்தது. பஞ்சாப் லாகூரில் லாரன்ஸ் என்னும் கொடுங்கோலனின் சிலை நீக்கப் பெற வேண்டுமென்ற போராட்டத்தின் அடிப்படையில் 1923இல் அச்சிலை நீக்கப்பெற்றது. தமிழகத்திலும் அது போன்றதொரு இயக்கம் தோற்றம் பெற்றது. வ.உ.சி. ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கப்பல் ஓட்டுவதற்கும் பெருந் தொகையை நிதியாகத் தந்த சிங்காரவேலரின் கெழுதகு நண்பர் மண்டையம்

திருமலாச்சாரிதான் 1923க்குப் பின்னர் நீலன் சிலையை அகற்ற வேண்டிய அவசியம் குறித்தொரு அறிக்கையை வெளியிட்டார். நீலன் சிலையகற்றல் என்பது இப்பொழுது காங்கிரசின் கொள்கையானது.[1]

சென்னை நகராட்சியின் உறுப்பினராக இருந்த ம. சிங்காரவேலர் 1927இல் நீலன் சிலையகற்றல் அவசியமெனக் கடிதம் எழுதினார். நீலன் சிலையை அகற்ற வேண்டிய அவசியமில்லையென நகராட்சியின் நிர்வாகம் மறுப்புக் கூறிவிட்டது. எடுத்த எக்காரியத்தையும் இறுதிவரை போராடி முடிக்கின்ற ம. சிங்காரவேலர் நீலன் சிலையகற்றலுக்காக நகரின் பல பகுதிகளில் கண்டனக் கூட்டங்களை நடத்தினார். அரங்கையா நாயுடுவும் இன்னும் பல நகராட்சி உறுப்பினர்களும் சிங்காரவேலருடன் இணைந்து போராடினர். இதற்கிடையில் மதுரையிலிருந்து வந்து நீலன் சிலையைச் சேதப்படுத்தியதற்காகச் சுப்புராயலு, முகமது சாலி என்ற இரு நபர்களும் வழக்குமன்றத்தில் நிறுத்தப் பெற்றனர். அந்நாளைய மாநில முதன்மைக் குற்றவியல் நீதிபதியான பம்மல் சம்பந்த முதலியார் அந்த இருவருக்கும் மூன்றுமாதங்கள் சிறைக் காவலும் ரூ. 300 அபராதமும் விதித்தார்.

காங்கிரஸ் இயக்கம் பின்னர் நீலன் சிலையகற்றலை ஒரு கொள்கையாகவே ஏற்றது. இப்போராட்டத்தில் பெண்கள் உட்படப் பலர் ஈடுபட்டனர். நீலன் சிலையகற்றல் போராட்டத்திற்காக விருத்தாசலம் அங்கச்சி அம்மையார், அஞ்சலை, லீலாவதி, குமரப்பா, கே.ஆர். ஜமதக்கினி, குப்புசாமி, எஸ். திருமலாச்சாரி, சம்பந்தம், குமாரசாமி எனப் பலர் போராடிச் சிறை சென்றனர். சிங்காரவேலரின் நண்பர்களான பெருந் தலைவர்கள் எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர், வேணுகோபால் போன்றவர்கள் வெளியிலிருந்து தொண்டர்களுக்கு ஆதரவு கொடுத்தனர். சட்ட சபையின் தனிப் புலியான எஸ். சத்தியமூர்த்தி அய்யர் நீலன் சிலையகற்றல் அவசியமெனச் சட்டமன்றத்தில் குரல் கொடுத்தார். எதிர்ப்பியக்கம் பேரியக்கமானது.

நீலன் சிலையகற்றலுக்காகச் சிங்காரவேலர் வெளியில் கண்டனக் கூட்டங்கள் நடத்துவதுடன் இல்லாமல், நகரசபையில் குரல் கொடுத்ததுடன் இன்னொரு வீரமிக்க செயலையும் மேற்கொண்டார். பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதிமன்றம் சென்று வழக்காடவே வழக்கறிஞர்கள் அஞ்சிக் கொண்டிருந்த அந்தச்

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர், பக்.169-174.

சூழலில் நீலன் சிலை நீக்க வழக்கிற்காகச் சிறை செய்யப்பட்ட அங்கம்மை, லோகைய நாயுடு இவர்களுக்கு மட்டுமல்ல இன்னும் பலருக்காகவும் சிங்காரவேலர் நீதி மன்றத்தில் வழக்காடினார். சிங்காரவேலரின் இரும்பு இதயத்திற்கு இது நல்ல எடுத்துக்காட்டு. இதிலே வேடிக்கை என்னவென்றால் எல்லா வழக்குகளையும் இலவசமாகவே சிங்காரவேலர் நடத்திக் கொடுத்தார்.

நீலன் சிலையகற்றலுக்காகக் காங்கிரஸ் தோழர்கள், மண்டையம் திருமலாச்சாரி குடும்பத்தினர், சிங்காரவேலர், இவர்களின் பேருழைப்பையும், தைரியத்தையும் நிறையவே அறிந்தவர் மூதறிஞர் இராஜாஜி. சிங்காரவேலர் இறப்பைக் குறிப்பிடும் இராஜாஜி 'சுதந்திரப் பித்தரும் அரசியல் யோக்கியரும் மறைந்தார்' என்று குறிப்பிட்டார். அந்த உணர்வுடன்தான் இராஜாஜி தமிழகத்தின் முதலமைச்சராக ஆன பின்னர், 1937இல் சிங்காரவேலர் போன்ற தியாகிகளுக்குச் செய்கின்ற நன்றிக் கடனாக நீலன் சிலையைச் சென்னையிலிருந்து அகற்றி அப்புறப்படுத்தினார்! [1]

1926இல் தொழிற்சங்கச் சட்டம் இயற்றுவதில் பங்களிப்பு

1925 டிசம்பரில் நடைபெற்ற கம்யூனிஸ்டு கட்சியின் இயக்கம் தொழிற்சங்கங்களுக்கு ஒரு புத்துணர்ச்சியைத் தந்தது. கான்பூர் மாநாட்டிற்குப் பின்னர் அனைத்திந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் ஆறாவது மாநாடு 9,10-1-1926இல் சென்னை நகரில் கூடியது. இம்மாநாட்டின் தலைவராக வி.வி. கிரி அவர்கள் தலைமை ஏற்றார். இந்த மாநாட்டைச் சிறப்புற நடத்த சிங்காரவேலர், வி. சக்கரைச் செட்டியார், திரு.வி.க. ஆகியவர்கள் முன்னின்று உழைத்தனர். [2]

1926ஆம் ஆண்டில் மத்திய சட்டசபை இந்தியத் தொழிற் சங்கச் சட்டத்தை இயற்றியது. இந்தச் சட்டத்தை இயற்றியதில் என்.எம். ஜோஷி அயராது அரும் பணியாற்றினார். ஆனாலும் இந்தச் சட்டம் நிறைவேற்ற அடிப்படையாக இருந்தவர் ம. சிங்காரவேலர். தொழிற்சங்கச் சட்டத்தின் தேவையை வலியுறுத்திப் பிரிட்டிஷ் பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் சக்லத்வாலா இலண்டனில் இருந்த இந்திய அமைச்சரிடம் ஒரு கோரிக்கை மனுவைக் கொடுத்தார். இப்படிப்பட்ட கோரிக்கைகள் வைக்கப்படுவதற்கு, 1920 முதலே சிங்காரவேலரால் நடத்தப்பெற்ற

1. கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு, தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, ப.292.
2. மேற்படி

தொழிற்சங்கப் போராட்டங்களே பெருங்காரணமாகும். சக்லத் வாலாவைத் தூண்டியதில் சிங்காரவேலருக்குப் பெரும் பங்கிருந்தது. சக்லத்வாலாவும், சிங்காரவேலரும் நண்பர்கள் மட்டுமல்ல, கொள்கையால் இணைந்தவர்கள்.

இந்த நிலையில்தான் என்.எம். ஜோதி அவர்கள் டெல்லி பாராளுமன்றத்தில் தொழிற் சங்கச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஆனாலும் இலண்டன் மத்திய சட்டசபையில் இதற்கான தீர்மானம் வருமெனவும், இப்பொழுது ஜோஷி இதனை வலியுறுத்த வேண்டாமெனவும் கூறப்பட்டு, தீர்மானம் திரும்பப் பெறப் பட்டது. அதன்பின் ஐந்தாண்டுகள் கழித்து மத்திய சட்டமன்றத்தில் தொழிலாளர் உரிமைக்கான தொழிற்சங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தொடக்கக்கால முதலே சிங்காரவேலர் தொழிலாளிகள் உரிமையைப் பற்றி மிகுதியும் கவலைப்பட்டதுடன் அப்படியொரு சட்டம் அவசியமென அறிவுப் பூர்வமாகத் தொடர்ந்து சிந்தித்து வந்தவர். 1920 முதலே ஒவ்வொரு தொழிற் சங்க மாநாடுகளிலும் தொழிற் சங்கச் சட்டம் வேண்டுமென்று வற்புறுத்தி வந்தவர். ஒவ்வொரு தொழிற் சங்கக் கூட்டத்திலும் தொழிற் சங்கச் சட்டம் குறித்து விவாதிக்கச் சிங்காரவேலர் தவறியதில்லை. இந்தத் தொழிற்சங்கச் சட்டம் குறித்து இந்து, சுதேசமித்திரன் ஆசிரியர்களுடன் மசோதாவின் விதிகள் குறித்துச் சிங்காரவேலர் விவாதித்துச் சிறப்பாகவும் பணியாற்றினார். இவ்விரு பத்திரிகைகளும் இம் மசோதா குறித்துச் சிறப்பான தலையங்கங்கள் எழுதுவதற்குச் சிங்காரவேலரே முழுமுதற் காரணமாக இருந்தார்.

காங்கிரஸ் இயக்கம் காட்டிய அக்கறை என்பது பெரிதும் தேர்தலுக்காக இருந்தது. தொழிலாளர்களுக்கென்று ஒரு பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி தோன்றினால் ஒழிய, தொழிலாளிகளின் பிரச்சினைகள் தீரா என்று காலங்காலமாக முழங்கிக் கொண்டிருந்த ம.சிங்காரவேலரின் உள்ளுணர்வை இப்பொழுது திரு.வி.க., சக்கரைச் செட்டி போன்றவர்களும் உணர ஆரம்பித்து விட்டனர். 1923இல் சிங்காரவேலர் ஏற்படுத்திய இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கட்சியைக் கண்டஞ்சிய திரு.வி.க. இப்பொழுது காலத்தின் தேவை கருதிச் சிங்காரவேலரின் கருத்தை முற்றிலும் முழுமையாக ஏற்றார். தமது நவசக்தி ஏட்டில் 17.12.1926இல் தொழிலாளிகளுக்குத் தனி அரசியல் கட்சி வேண்டுமென்று எழுதவும் ஆரம்பித்துவிட்டார்.

மத்திய சட்டமன்றத்தில் தொழிலாளர்க்கான தொழிற் சங்க மசோதா நிறைவேற்றப்பட்ட பொழுது திவான் சமன்லால் என்பவர் என்.எம். ஜோஷியை அவர் செய்த எல்லா முயற்சிக்காகவும் பாராட்டிவிட்டு இறுதியில் இந்தச் சட்டத்தில் துளி கம்யூனிஸ்டு இரத்தமும் கலந்துள்ளது எனக் குறிப்பிட்டார். அப்படி குறிப்பிடுவதற்கு இச்சட்டம் நிறைவேற்றப்படக் காலமெல்லாம் உழைத்த சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலருக்கு மரியாதை செய்யவும், இச்சட்ட வரைவுக்குத் துணை நின்ற சக்லத் வாலாவைப் பாராட்டவும், அதற்காகத் துணைநின்ற தொழிற்சங்கத் தலைவர்களைப் பாராட்டவுமே என்பதை நாம் உணருவது மிகமிக அவசியமாகும்.

பாட்டாளி வர்க்கத் தொழிலாளர் கட்சி

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத் தொழிலாளர் கட்சி சார்பில் 1927 ஆகஸ்டில் சென்னை நகராண்மைக் கழகத்திற்கு நடைபெற்ற தேர்தலில் கலந்து கொண்ட செல்வபதிச் செட்டி பெரம்பூர்த் தொகுதி யிலிருந்தும் வி. சக்கரைச்செட்டி பெத்த நாய்க்கன் பேட்டைத் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொழி லாளர்களின் இந்த அரசியல் கட்சி தனியான அரசியல் அமைப்பு என்ற முறையில் நிலைத்துவிட்டதை அரசும் உணர்ந்தது என சி.எஸ். சுப்பிரமணியம் உறுதி செய்கின்றார். தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான் சிங்காரவேலரை மேலும் மேலும் தூண்டி வட இந்திய இரயில்வே போராட்டம், தென்னிந்திய இரயில்வே போராட்டம் எனவும் செயல்பட வைத்தது.

பாட்டாளி வர்க்கத் தொழிலாளர் கட்சி இவ்விழாவைக் கொண்டாட விரும்பியது. ம. சிங்காரவேலர் இவ்விழாவை விமரிசையுடன் நடத்த முடிவெடுத்தார். இதற்கான அழைப்பு 4.5.1927 நவசக்தியில் இடம் பெற்றது. இவ்விழாவை வழக்கம் போலச் சிங்காரவேலர் ஒரு ஞாயிற்றுக் கிழமையில் 22, சவுத் பீச் ரோடிலுள்ள தமது பங்களாவிலேயே ஏற்பாடு செய்திருந்தார். பகல் 12 மணியளவில் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் மாபெரும் விருந்து சிங்காரவேலர் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டது.

சிங்காரவேலர் வீட்டு நந்தவனத்திலேயே கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலை 4 மணியளவில் தொழிலாளர்கள் இயக்கப் பாடல்களைப் பாடிக் கொண்டு வட சென்னை, தென்

சென்னைத் தோழர்கள் அனைவரும் வந்து கூடிவிட்டனர். 'தமிழ்நாடு' பத்திரிகையாசிரியர் டாக்டர் வரதராஜுலு நாயுடு தலைமை ஏற்றார். நாயுடு பேசத் தொடங்குவதற்கு முன்னர் 101 அதிர்வேட்டுகள் முழங்கின. இதன் தொடர்பான செய்திகள் 11.5.1927 நவசக்தியில் காணப்படுகின்றன.

பர்மா ஆயில் கம்பெனி மண்ணெண்ணெய்த் தொழிலாளர்கள் இயக்கப் பாடல்களுடன், கொடிகளுடன் வந்து கலந்து கொண்டனர். சென்னையின் மற்ற தொழிலாளர்களும் தெருக்களின் வழியாக வந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர். சென்னையில் மட்டுமல்ல தமிழகத்தின் அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்களும் மே நாள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ம. சிங்காரவேலு, ஜி. செல்வபதி செட்டி, என். தண்டபாணி பிள்ளை, எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர், மணி அய்யர், ஆதி கேசவலு நாயுடு, ஷஃபி முகமது, கும்பகோணம் சாரங்கபாணி பக்தர் ஆகியோர் கூட்டத்தில் சிறப்பாகப் பேசினர். கூட்டத்தின் தலைவர் பி. வரதராஜுலு நாயுடு தாய் நாட்டுப் பற்றைப் பற்றியும் தொழிலாளர் ஒற்றுமை குறித்தும் சிறப்பாகப் பேசினார்.

தொழிலாளர் மண்ணெண்ணெய்க் கிளர்ச்சி

பல வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்கள் இந்தியாவில் எண்ணெய் வழங்கி வணிகம் செய்து வந்தன. இவற்றில் பர்மா ஆயில் கம்பெனி, ஆசியாட்டிக் பெட்ரோலியம் கம்பெனி, ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி ஆகியவை இந்தியாவில் வணிகம் செய்து வந்தன. இந்நிறுவனங்கள் அனைத்தும் தென் சென்னையில் இடம்பெற்றிருந்தன. இந்தக் குழுமங்களில் இப்பொழுது தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைக்காக வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர்.

முதன் முதல் பர்மா ஆயில் கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் ம. சிங்காரவேலர் தலைமையில் கோரிக்கைக்காக ஊர்வலமாகச் சென்று கம்பெனிக்குத் திரும்பினர். இதைப்போல ஆஷியாடிக் பெட்ரோலியம் கம்பெனி ஊழியர்களும், ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி ஊழியர்களும் வி. சக்கரைச் செட்டி தலைமையில் கோரிக்கைக்காக ஊர்வலமாகச் சென்று வேலைக்குத் திரும்பினர். தொழிலாளர்கள் அனைவருக்கும் பெரும் விழிப்புணர்ச்சி ஏற்படுவதற்குப் பெருங்காரணமாக இருந்தவர் ம.சிங்காரவேலர்தாம் என்பதைச் சி.எஸ். சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார். காங்கிரஸ் இயக்கத்திற்கும், சுயராஜ்ய கட்சிக்கும் தொழிலாளர்களின் சக்தியை உணர்த்தியதில் ம. சிங்காரவேலருக்குப் பெரும் பங்குண்டு என்கிறார் அவர்.

எத்தனையோ தொழிற் சங்கத் தலைவர்கள் அப்பொழுது இருந்திருக்கலாம். அவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நகரத் தொழிலாளர் ஒற்றுமை என்ற நோக்கில் மட்டுமல்லாது உலகத் தொழிலாளிகள் ஒன்று என்ற அளவில் தொழிற் சங்கங்களைக் அன்றைக்குக் கொண்டு சென்றவர் சிங்காரவேலர் மட்டுமே என்பதை அறிஞர் சி.எஸ். சுப்பிரமணியம் உளமுருகப் பாராட்டுகின்றார். சிங்காரவேலர் மட்டுமே சிற்றூர், பேரூர், வட்டம், மாவட்டம், மாநிலம், இந்தியா, உலகம் என்றளவில் தொழிலாளர்களை இணைத்து இயக்கம் நடத்தித் தொழிலாளர்களைப் பேரியக்கமாக மாற்ற நினைத்தார் என்று குறிப்பிடுகின்றார்.[1]

சாக்கோ, வான்சிட்டி கண்டனக் கூட்டம்

1927லேயே அமெரிக்க வல்லரசு சாக்கோ, வான்சிட்டி என்ற இரு தொழிலாளர்களை வேண்டுமென்றே குற்றம் சாட்டி மின்சார நாற்காலியில் வைத்துக் கொன்றது. அதனைப் பேர் இயக்கமாக ஆக்கிச் சென்னையில் கண்டனக் கூட்டம் நடத்திப் பெரும் வரலாறு படைத்தவர் ம. சிங்காரவேலர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அஞ்சா நெஞ்சன் அழகிரி சாமியாலும், எஸ்.வி. இலிங்கத்தாலும் பெரியாரும், சிங்காரவேலரும் இணைந்து சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் நடத்தும் நிலை ஏற்பட்டது.

1927இல் மண்ணெண்ணெய்க் கிளர்ச்சி

சிங்காரவேலரைப் போலவே சக்கரைச் செட்டி, செல்வபதிச் செட்டி போன்றவர்களும் இக்காலக் கட்டத்தில் தொழிலாளர்களுக்கெனத் தனித்த அரசியல் இயக்கம் தேவை என உணர ஆரம்பித்துவிட்டனர். 1922இல் முரண்பட்டு நின்ற திரு.வி.க.வும் தம் போக்கை இப்பொழுது சிங்காரவேலர் பக்கம் திருப்பினார். தொழிலாளர்களுக்குத் தனித்து அரசியல் அமைப்பு தேவை என்பதை உணர்ந்தார். திரு.வி.க. தம்முடைய 27.4.1927 நவ சத்தியில் 'தொழிலாளர் இயக்கம்' பற்றித்[2]

> தொழிலாளர்கள் தங்களுக்கென ஓர் இயக்கத்தை உருவாக்க முயன்று வருகின்றனர். காங்கிரஸ் இயக்கம் தொழிலாளர் பற்றி நிறையத் தீர்மானங்கள்

1. கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, ப.207.
2. மேற்படி

> நிறைவேற்றினாலும் அவை பெரிதும் ஏட்டளவிலேயே காணப்படுகின்றன. சென்னையில் காணப்படும் தொழிலாளர் கட்சியைக் கண்டு சில காங்கிரஸ் தலைவர்கள் மருண்டு போய் நிற்கிறார்கள். காங்கிரசிற்கு மாறாகத் தொழிலாளர் கட்சி தோன்றிற்று என்று சொல்வதற்கு ஆதாரமில்லை. காங்கிரஸ் தொழிலாளரோடு இணைந்து போவதுதான் நல்லது.

என்று எழுதினார்.

இக்காலத்தில் தொழிலாளர்களின் ஆதரவைப் பெறுவதற்குக் காங்கிரஸ் உட்பட, சுயராஜ்யக் கட்சிவரை பல கட்சிகளும் முயன்றன. ஆனாலும் தோல்வியடைந்தன. 1923 முதலே மே தினத்தை ஆர்வமுடன் கொண்டாடி வந்த சிங்காரவேலர் 1927இல் மே தினத்தை மிக விமரிசையுடன் கொண்டாடினார்.

1927 மே தினம் சிங்காரவேலர் வீட்டில் கொண்டாடப் பட்டது. அந்தக் கூட்டத்தில்தான் சிங்காரவேலர் உன்னதமான சில தீர்மானங்களை முன்வைத்துப் பேசினார். இந்தியா மட்டுமல்ல, உலகளவிலுள்ள தொழிலாளர் அனைவருக்கும் சென்னையிலுள்ள தொழிலாளர்களின் நெருக்கத்தைப் பற்றிச் சிங்காரவேலர் குறிப்பிட்டுப் பேசினார்.

இந்தக் கூட்டத்தில்தான் பர்மா ஆயில் கம்பெனியினுடைய வேலை நிறுத்தத்தைப் பற்றிச் சிங்காரவேலர் குறிப்பிட்டார். கூடி இருந்த எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களையும் நோக்கிப் பர்மா ஆயில் கம்பெனி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போது அவர்களை இடர்ப்படாமல் காக்க வேண்டிய பொறுப்பு தொழிற்சங்கத் தலைவர்களுடையது என்று குறிப்பிட்டார். எந்தத் தொழிலாளியின் குடும்பமும் வேலை நிறுத்தத்தின்போது இடர்ப் படாமல் காப்பது நமது கடமை எனச் சிங்காரவேலர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில்தான் பக்கிங்ஹாம் கர்னாட்டிக் மில் ஆலையில் இருந்து நீக்கப்பட்ட 105 பேர்களுக்கும் நிர்வாகம் மீண்டும் வேலை தர வேண்டுமெனச் சிங்காரவேலர் கேட்டுக் கொண்டார். இச்செய்தி 4.5.1927 நவசக்தியில் பதிவாகியுள்ளது. மண்ணெண்ணெய்த் தொழிலாளர் வேலை நிறுத்தம் 26 நாள்கள் நடைபெற்றது. சிங்காரவேலரின் திறமைமிக்க ஆளுமையாலும்,

தொழிலாளர்களின் மன உறுதியாலும் போராட்டம் பெரும் வெற்றி பெற்றது.

தொழிலாளர்களின் நான்கு கோரிக்கைகளில் மூன்றை நிறைவேற்ற அந்நாளைய ஆங்கிலேய நிர்வாகம் ஒப்புக் கொண்டது. 119 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கமர்த்திக் கொண்டது. 23 ஊழியர்களின் ஊதிய வெட்டை நீக்கிப் பழைய படியே ஊதியத்தை அளித்தனர். ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு அணா உயர்த்துவது என்பது மட்டும் பின்னர்ப் பார்க்கலாமென நிர்வாகம் ஒத்தி வைத்தது.

இப்போராட்ட வெற்றிக்குக் காரணம் சிங்காரவேலரின் தீவிரமான தலைமையும் மற்ற தொழிற் சங்கத் தலைவர்களின் முழுமையான ஒத்துழைப்புமே. வி. சக்கரைச் செட்டி, செல்வபதிச் செட்டி, ஆதிகேசவலு நாயக்கர் போன்றவர்கள், சிங்காரவேலருடன் முழு அளவில் ஒத்துழைத்தனர். 1922இல் இருந்ததைப் போலச் சிங்காரவேலரிடமிருந்து தொழிற்சங்கத் தலைவர்கள் முரண்படாமல் ஒத்துழைத்தனர்.

எண்ணெய்க் கம்பெனி வெள்ளைக்காரர்களுக்கு உரிமையுடையது. ஆதலால் வெள்ளைக்கார ஆளுநரும், காவல் துறையின் பெரிய அதிகாரிகளும் சாம, பேத, தான, தண்டம் என்ற வகையில் சிங்காரவேலரை மிரட்டிப் பார்த்தனர். சிங்காரவேலர் கோரிக்கைகளில் உறுதியுடன் கொஞ்சமும் அசையாமல் குன்றென நிமிர்ந்து நின்றார். ஒரு கட்டத்தில் சிங்காரவேலரை மிரட்டவும் செய்தனர். 'எண்ணெய் எளிதில் தீப்பற்றி விடும். அங்கே வாலாட்ட வேண்டாம்' என்று அதிகாரிகள் மிரட்டவும் செய்தனர். சிங்காரவேலரும் 'ஊழியரின் உணர்ச்சிகள் அதைவிட மிக விரைவில் தீப்பிடித்து விடும். எங்கள் உணர்ச்சியோடு நீங்களும் விளையாடாதீர்கள்' என்று அதிகாரிகளை எச்சரிக்கவும் செய்தார்.

இக்கட்டத்தில்தான் இரகசியக் காவலர்கள் சிங்காரவேலரைப் பற்றி 'Noted Agitator, Notorious agitator' என்றெல்லாம் குறிப்புகள் எழுதினர். சிங்காரவேலர் எப்பொழுதுமே பதிலுக்குப் பதில் தருவதில் சமர்த்தர். கான்பூர் சதி வழக்கின்போது யார் அந்த மாஸ்கோ ராஸ்கேல்? என்று சிங்காரவேலரைக் கேட்டபொழுது, நான்தான் அந்த மாஸ்கோ ராஸ்கேல் சிங்காரவேலு, அப்படியானால் நீங்களென்ன பிரிட்டிஷ் ராஸ்கேலா? என நீதிபதியையே கேட்டுத் தலைகுனிய வைத்தவர் சிங்காரவேலர் என்று நினைவு கூர்வார் காலஞ்சென்ற கவிஞர் சுழல் துப்பாக்கி.

பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனிக்காரர்கள் ஏன் அடங்கிப் போனார்கள் என்பதற்குச் சிங்காரவேலரின் உன்னதமான செயல்பாடுதான் காரணமென்று குறிப்பிடுவார் கவிஞர் சுழல் துப்பாக்கி.

எண்ணெய்க் கம்பெனியின் போராட்டம் மற்றும் பேச்சு வார்த்தைகள் ஏனோ, தானோ என்று நடந்து கொண்டிருந்த பொழுது, தனிமையில் சந்தித்த தொழிலாளர்களிடம் சிங்காரவேலர், முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். உங்கள் உணர்வுகள் தீப்பற்றி எரிய வேண்டாமா?' என்று கேட்டார்களாம். அன்று இரவுதான் எஸ். ஓ. டேங் என்னும் இராயபுரம் பகுதி எண்ணெய்க் கம்பெனி தீப்பற்றி எரிந்தது. வேறு வழியின்றி வெள்ளைக்கார நிர்வாகம் அடியோடு பணிந்தது என்று கூறுவார் கவிஞர் சுழல் துப்பாக்கி.

ஒரு கட்டத்தில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது இருமுறை காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அன்று இரவுதான் மண்ணெண்ணெய்க் கம்பெனிகள் தீப்பற்றி எரிந்தன. வட சென்னையில் ஏற்பட்ட மிகப் பெரிய தீ விபத்து என்று இன்றைக்கும் வட சென்னை மக்கள் நினைவு கூர்வர். இந்தச் சமயத்தில் மற்றொரு பிரிட்டிஷ் எஞ்சினீரிங் 'மாசி' கம்பெனியில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் அதில் வெற்றியும் பெற்றனர்.

இப்பொழுது சென்னையின் மூன்று தலைவர்களான சிங்காரவேலு, வி. சக்கரைச் செட்டி, ஆதிகேசவலு நாய்க்கர் ஆகியவர்கள் தீவிரவாதத்தைக் தூண்டி வருவதாக அரசு வழக்கும் தொடுத்தது. இதனை மூன்று தலைவர்களும் மறுத்தனர். அதனால் அரசு மூவருக்கும் விதித்திருந்த தடையுத்தரவைத் திரும்பப் பெற்றது. இச்செய்தி 10.6.1927 இந்து பத்திரிகையிலும் பதிவாகியுள்ளது.

தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையில் வெற்றி பெற்றதற்குச் சி.எஸ். சுப்பிரமணியம் ஒரு நுட்பமான காரணத்தைக் கூறுகின்றார். 1922, 1923களில் திரு.வி.க., சக்கரைச் செட்டி, ஆதிகேசவலு போன்றவர்கள் முரண்பட்டனர். அப்பொழுதே சிங்காரவேலருக்கு அனைத்துத் தலைவர்களும் முழு ஒத்துழைப்பைத் தந்திருந்தால், தொழிலாளர்கள் என்றென்றும் பெரும் வெற்றியைப் பெற்றிருப்பர் என்கிறார் சி.எஸ். சுப்பிரமணியம்.[1]

1. கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, ப.208-213.

தொழிலாளிகளின் வட இந்திய இரயில்வே போராட்டம்

1927, 1928 ஆண்டுகள் இந்தியன் இரயில்வே தொழிலாளிகளின் போராட்டம் மிகுந்த காலமாகும். இந்தக் காலங்களில் இரயில்வே தொழிலாளர்களின் சிக்கலைப் புரிந்து கொண்டு தொழிலாளர்களுக்காகத் தாமே முன் வந்து சில தலைவர்கள் உழைத்தனர். அவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள் ம. சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார், டி. கிருஷ்ணசாமிப் பிள்ளை போன்றவர்கள். இன்றைக்குள்ள இரயில்வே தொழிற் சங்கத் தலைவர்களுக்கு இவர்களின் பெயர்கள் கூடத் தெரியவில்லை என்பதுதான் வேதனைக் குரியது.

1925 ஆண்டில் இரயில்வே நிர்வாகம் ஓர் அதிர்ச்சியான அறிக்கையை வெளியிட்டது. யுத்தக் காலத்தில் நின்று போன செப்பனிடுதல், பழுது பார்த்தல், பராமரித்தல் போன்ற வேலைகள் எல்லாம் நிறைவேறிவிட்டதால் 'சிக்கனச் சீரமைப்பும் ஆட் குறைப்பும்' என்னும் திட்டத்தை முன் வைக்க வேண்டியுள்ளது என அறிவித்தது. அறிவித்ததுடன் நில்லாமல் நிர்வாகம் ஆட்குறைப்புச் செய்யும் வேலையிலும் தீவிரமாக இறங்கியது. அன்று பல நிர்வாகம் வெள்ளையர்களின் தலைமையில் இயங்கி வந்தன. அரசும் அவர்களுக்கும், இரயில்வே நிர்வாகத்திற்கும் ஆதரவாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

தொழிலாளர்கள் மத்தியில் வேலை இழப்பு ஏற்படும் என்ற அச்சம் ஏற்பட்டது. சில இடங்களில் தொழிலாளர்கள் தன்னிச்சையாகத் தாங்களே திரண்டு நின்று வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். முதன் முதலாக வடமேற்கு இரயில்வேயிலும், அதனை அடுத்து வங்காள-நாகபுரி இரயில்வேக்களிலும், அதன் பின்னர்க் கிழக்கிந்திய இரயில்வே ஓர்க்ஷாப்பிலும் வேலை நிறுத்தங்கள் தொடங்கின.

1927 பிப்ரவரியில் வங்காள-நாகபுரி இரயில்வேயின் வேலை நிறுத்தம் முதலில் தொடங்கியது. அந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து ஒரு மாதம் வரை நடந்தது. இந்தப் போராட்டத்தில் 21,000 தொழிலாளிகள் கலந்து கொண்டதாக அறிஞர் சி.எஸ். சுப்பிரமணியம் பதிவு செய்கிறார். அவர்களில் 10,000 தொழிலாளர்கள் மட்டும் கரக்பூர் ஓர்க்ஷாப்பைச் சேர்ந்தவர்கள். இந்தத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்ட ஆட்குறைப்பு பெரும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தியது. வேலை இன்மை என்ற நிலை தொழிலாளர்கள் மத்தியில் பெரும் அமைதியின்மையை ஏற்படுத்தியது.

நிர்வாகம் ஆட்குறைப்புச் செய்யத் தொடங்கியது. இதன் விளைவாக முதலில் பேரளவில் வங்காள-நாக்பூர், தென்னிந்திய இரயில்வேக்களில் உள்ள ஒர்க்ஷாப்புகளில் ஆட்குறைப்பை எதிர்த்து வேலை நிறுத்தத்தைத் தொழிலாளர்கள் தொடங்கினர். முதல் கட்டமாகக் கரக்பூர் ஒர்க்ஷாப்பில் 1,600 பேர்கள் ஆட்குறைப்புச் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்த தொழிலாளர்கள் ஒர்க்ஷாப்பிற்குள் நுழைந்து வேலை செய்யாமல் இருத்தல் என்ற சாத்வீகப் போராட்டத்தைத் தொடங்கினர். இதனால் ஆத்திரமுற்ற இரயில்வேயின் வெள்ளைக்கார முகவர்கள் என்கின்ற ஏஜெண்டுகள், ஒர்க்ஷாப்பையே 12.9.1927 மூடிவிட்டனர். இதனால் அத்தனை தொழிலாளர்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

தொழிலாளர்கள் தங்களுக்குள் பேதப்படாமல் திரண்டு ஒன்றாக நின்றனர். வேறு வழியற்ற இரயில்வே நிர்வாகம் ஒர்க்ஷாப்பை 8.12.1927இல் மீண்டும் திறந்தது. மூடப்பட்டிருந்த காலம் முழுமைக்கும் தொழிலாளர்களுக்குரிய ஊதியத்தை முழுமையாகக் கொடுக்கவும் செய்தது.

இந்த இரயில் போராட்டம் குறித்து மீரட் சதி வழக்கின் குற்றவாளியான கோபன் சக்கரவர்த்தி, 'கம்யூனிசமும் வங்காள விடுதலை இயக்கமும்' என்ற நூல் எழுதிய கௌதம் சட்டோபாத்தியாயா ஆகிய இருவரின் தகவல்களைத் திரட்டி சி.எஸ். சுப்பிரமணியம் அரிய தகவல்களைத் தருகிறார்கள். அவர்கள் கூறுவதைக் கொண்டுதான் சிங்காரவேலரின் உன்னதமான, அற்புதமான, தொழிற்சங்கத்திற்கான அர்ப்பணிப்பை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அடாவடி நிறைந்த வேலை நிறுத்தத்தை எதிர்கொள்ள முடியாமல் தொழிலாளர்கள் திண்டாடினர். ஆனாலும் ஆங்காங்கிருந்த தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேரும் கரக்பூரில் கூடினர். வங்காள மாநிலத் தொழிற்சங்க மையத்திலிருந்து முகுந்தலால் சர்க்காரும், இராதாராமன் மித்திராவும், சணல் தொழிற்சங்கத் தலைவர் காளிதாஸ் பாபுவும், கோபன் சக்கரவர்த்தியும், நாக்பூரிலிருந்து தர்பரே என்பவரும் வந்து சேர்ந்தனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள ம. சிங்காரவேலரும் வந்திருந்தார். அக்காலத்தில் மிகமிக உண்மையான தலைவர்களில் ஒருவர் சிங்காரவேலர். அவருடன் காளப்பா என்பவரும் சென்னையிலிருந்து வந்திருந்தார். தொழிலாளிகளில் பாதிக்கு

மேற்பட்டவர்கள் தென்னிந்தியாவிலிருந்து, சென்னையிலிருந்து வந்திருந்தனர். கோபன் சக்கரவர்த்தியும் கௌதம் சட்டோபாத்தியாவும் இப்படித்தான் செய்திகளை அங்கு அப்பொழுது கரக்பூரில் நடைபெற்றதைப் பதிவு செய்துள்ளனர்.

கரக்பூரில் தொழிற்சங்கத் தலைவர்கள் 'ஸ்குவார்டு ஒர்க்' என்ற முறையில் தொழிலாளர்களின் குடிசைப் பகுதியில் சென்று பிரச்சாரம் செய்துவந்தனர். இந்த நிலையில் வேலை நிறுத்தம் ஒரு மாதத்திற்கு மேலாகவும் தொடர்ந்தது. தொழிலாளர்களின் ஒற்றுமையை, நிர்வாகத்திற்கு உணர்த்துவதற்காகக் கரக்பூரில் அனைத்துத் தொழிற் சங்கங்களின் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

இந்த மாநாட்டிற்குப் பல தொழிற்சங்கத் தலைவர்கள் வந்திருந்தனர். பி.என். தொழிலாளர் சங்கத்தின் தலைவராக வி.வி. கிரி வந்திருந்தார். வி.வி. கிரி அவர்கள்தாம் அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்கள் கூடுவதற்குக் காரணமாவார்.

கிரேட் இண்டியன் தொழிலாளர் சங்கத்தினர், பம்பாயின் கிர்னி காம்கார் யூனியன் தலைவர்கள், மகாத்மாவின் நண்பர் சி.எஃப். ஆண்ட்ரூஸ், கோபன் சக்கரவர்த்தி, கௌதம் சட்டோபாத்தியாயா உட்படப் பலரும் இந்த மாநாட்டின் ஆலோசனைக்கு வந்திருந்தனர். இவர்கள் அணியில் மற்ற தொழிற்சங்கத் தலைவர்களான தரணி ஷலீம், முஜாஃபர், கோபால்பசக், இராதாராமன், காளிதாஸ் பாபு ஆகியோரும் வந்திருந்தனர்.

கோபன் சக்கரவர்த்தி தலைமையில் கம்யூனிஸ்டுகளை யெல்லாம் சேர்த்துக் குழு ஒன்றையும் ஏற்படுத்திக் கொண்டனர். உண்மையான கம்யூனிஸ்டான சிங்காரவேலரைக் கோபன் சக்கரவர்த்தி அக்குழுவில் சேர்த்துக் கொள்ளவில்லை. மாநாட்டுத் தலைமைக் குழுவில் ஒருவராகச் சிங்காரவேலர் இருந்தார். அதுமட்டுமல்ல, சிங்காரவேலர் ஒரு வழக்கறிஞர். நெருக்கடிகள் வரும்பொழுது அவர் மட்டுமே எங்களுக்கு உதவமுடியும் என்பதால் அவரை நாங்கள் வெளியிலே வைத்துக் கொண்டோம். எங்கள் குழுவில் இணைக்கவில்லை எனக் கோபன்சக்கரவர்த்தி கூறுகின்றார். முக்கியமான ஆவணங்களில் சிங்காரவேலர் பெயர் இல்லாமல் போவதற்குக் காரணம் என்ன என்பது வாசகர்களுக்கு இப்பொழுது புரிந்திருக்கும்.

உண்மையான கம்யூனிஸ்டான சிங்காரவேலரைக் கம்யூனிஸ்டு குழுவில் சேர்த்துக் கொள்ளவில்லை எனக்

குறிப்பிடுகின்றனர். இவ்வேலை நிறுத்தம் கரக்பூரில் மட்டும் இருந்தால் அது தோற்றுவிடும். எனவே அதனை விரிவுபடுத்தக் கம்யூனிஸ்டுக் குழு முடிவெடுத்தது. வங்காளத்தில் இரயில் பாதை செல்லும் இடத்திலெல்லாம் விரிவுபடுத்தினர். கிழக்கிந்திய இரயில்வே தொழிற் சங்கத்திலிருந்து யாரும் வரவில்லையாம். எப்பொழுதும், யாரோடும் சமரசம் செய்து கொள்வதையே கொள்கையாகக் கொண்ட வி.வி.கிரியும், சி.எஃப். ஆண்ட்ரூவ்ஸ் அவர்களும் நிர்வாகத்துடன் ஒத்துப் போய் விடுவோமென்று வந்தார்களாம். இதற்குச் சிங்காரவேலரும், அவர் தோழர் டாங்கேயும் உடன்படவில்லை என்பதைக் கோபன் சக்கரவர்த்தி நினைவுபடுத்துகிறார். சிங்காரவேலரும், டாங்கேயும் பேசிய உருக்கமான, உன்னதமான பேச்சை இங்கே நாம் அறிய வேண்டும்.

நிர்வாக அதிகாரிகளுடன் பேச வேண்டுமென்று வி.வி. கிரியும், சி.எஃப். ஆண்ட்ரூவ்ஸ்சும் முன்வைத்த பேச்சைச் சிங்காரவேலர் எதிர்த்தார். இப்பொழுது பேச்சாற்றலுள்ள சிங்காரவேலரின் நண்பர் எஸ்.ஏ. டாங்கே மிகத் திறமையாக, சாதுர்யமாக

> ‘ஆண்ட்ரூவ்ஸ் அவர்களே! பாட்டாளி வர்க்கத்தின் புனிதப் புரவலராக நீங்கள் உங்களை நினைத்துக் கொள்ளுகிறீர்கள். தொழிற்சங்க இயக்கத்தைத் தவறான வழியில் திசை திருப்பும் ஹெச்.யூ. ஹியூமாக இருக்க நீங்கள் விரும்புகிறீர்கள். காங்கிரசைத் தடம் மாற்றுவதற்கு ஹியூம் பயன்பட்டிருக்கலாம். இங்கே அப்படி நீங்கள் நடந்து கொள்ள நாங்கள் ஒரு நாளும் ஒத்துக் கொள்ள மாட்டோம்.
>
> இங்குக் கூடியுள்ள தொழிலாளர்களான நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். எங்களின் தலைவிதியை நாங்களே தீர்மானித்துக் கொள்வோம். ஆங்கிலேயர்களான உங்களைப் போன்றவர்கள் முடிவு செய்ய நாங்கள் விடமாட்டோம்

என டாங்கே பேசிமுடித்தார். இதற்குப் பின்புலமாக இருந்தவர் சிங்காரவேலர்தாம் என்பதைக் கோபன் நினைவூட்டுகின்றார்; ஏனென்றால் சிங்காரவேலர் உண்மைத் தலைவர் மட்டுமல்ல; உன்னதத் தலைவர் எனவும் குறிப்பிடும் கோபன் சக்கரவர்த்தி பின்னர் நடைபெற்றதையும் அதனால் சி.எஃப். ஆண்ட்ரூவ்ஸ்க்கு ஏற்பட்ட அவமானத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

டாங்கேயின் பேச்சை மிகமிகக் கவனமாகவும், உன்னிப்பாகவும் கேட்ட ஆண்ட்ரூவ்சின் முகம் சிவந்து விட்டது மட்டுமல்ல, அவர் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியதையும் கண்டதாகக் கோபன் சக்கரவர்த்தி குறிப்பிடுகின்றார். அதன் பிறகு நடந்ததையும் கோபன் சக்கரவர்த்தி மிகப் பொறுப்புடன் பதிவு செய்துள்ளார்.

தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் வி.வி. கிரிக்கும், ஆண்ட்ரூவ்சிற்கும் எதிராகக் கருத்துகளை வைத்தனர். ஒரு கட்டத்தில் அனைவரும் வெளிநடப்பும் செய்தனர். ஆனால் சிங்காரவேலரின் செயல்பாடுகள்தாம் பெரும் வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. என்கிறார் கோபன் சக்கரவர்த்தி. கம்யூனிஸ்டுகள் வெளியேறிவிட்டாலும் சிங்காரவேலர் மட்டும் வீரியத்தை விடக் காரியம் பெரிது என்பதைப் போலச் செயல்பட்டார். போராட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற திட்டத்திற்கு அனைவரையும் திரட்டியதுடன் ஆதரவாகவும் வெகு நேர்த்தியாகவும், தம்முடைய ஆணித்தரமான பேச்சாலும் அனைவரையும் அடக்கியதோடு மட்டுமல்ல, தீர்மானம் நிறைவேற்றித் தொழிலாளர்கள் வெற்றி பெறவும் சிங்காரவேலர்தான் காரணம் எனக் கோபன் சக்கரவர்த்தி பதிவு செய்துள்ளார்.

இதன் பின்னர் முக்கியத் தொழிற்சங்கத் தலைவர்கள் இயக்கச் செயல்பாடுகளில் மிகவும் பின் தங்கியுள்ள கிழக்கிந்திய இரயில்வே தொழிற்சங்கத் தோழர்களிடம் தங்களின் பிரச்சாரத்தைத் தொடங்கினர். சிங்காரவேலரின் யோசனையின் பேரில் ‘லிலுவா’ தொழிலாளர்கள் கரக்பூர் தொழிலாளர்களை முன் மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டுமென்ற துண்டறிக்கைகள் விநியோகம் செய்யப்பட்டன.

கரக்பூர் தொழிலாளர் கூட்டத்தில் சிங்காரவேலர் இந்தியாவின் பல மொழிகளிலும் பேசி உணர்வினை ஊட்டினார். சமஸ்கிருதம், ரஷ்யன், பிரெஞ்ச், ஆங்கிலம் உட்படப் பல உலக மொழிகளை அறிந்த சிங்காரவேலர் இந்திய மொழிகள்-பாலி உட்பட அனைத்து மொழிகளையும் அறிந்திருந்தார் என்பது நமக்கு வியப்பளிக்கும் செய்தியாகும். அவர் வட இந்தியாவில் தொழிலாளிகளிடத்தில் ஹிந்தியிலும், பிற தென்னிந்திய மொழிகளிலும் பேசியதில் என்ன வியப்பிருக்க முடியும் என வியப்படைகிறார் கோபன் சக்கரவர்த்தி.

இந்த முயற்சிக்குப் பின் இதுநாள் வரை பின்னால் இருந்துவந்த கிழக்கிந்திய இரயில்வே இப்பொழுது இரயில்வே தொழிற்சங்க நடவடிக்கைகளில் முன் நிற்க ஆரம்பித்து விட்டது. இதற்கெல்லாம் காரணம் சிங்காரவேலர்தாம் எனப் புகழ்ந்து பாராட்டுகிறார் கோபன் சக்கரவர்த்தி.

அகில இந்திய 42ஆவது காங்கிரஸ் மாநாடு

1927இல் சென்னையில் நடைபெற்ற 42ஆவது அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடு தனித்தன்மை வாய்ந்ததாகும். 1927 டிசம்பரில் நடைபெற்ற இந்த மாநாட்டில்தான் பரிபூரணச் சுதந்திரம் என்ற கொள்கை சிங்காரவேலரால் முன்வைக்கப்பட்டது. 1922 கயா காங்கிரசில் பரிபூரண சுதந்திரம் என்ற கொள்கைக்குக் குரல் கொடுத்தார் சிங்காரவேலர். அதைப் போலவே 1927இல் சிங்காரவேலர் ஆளுமையில் பரிபூரண சுதந்திரத்திற்குக் குரல் கொடுக்கப்பட்டது.

1927 டிசம்பரில் டாக்டர் அன்சாரியின் தலைமையில் சென்னையில் 42ஆவது காங்கிரஸ் மாநாடு கூடியது. பண்டித ஜவஹர்லால் நேரு ஐரோப்பாவிலிருந்து திரும்பி இருந்தார். அவரும் இக்காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். கம்யூனிஸ்டு இயக்கத் தோழர்கள், சிங்காரவேலர் நண்பர்கள் அத்தனை பேரும் சிங்காரவேலர் 22, சௌத் பீச் ரோடில் உள்ள மாளிகையின் மாடியில் பந்தல் அமைத்துத் தங்கினர். இந்தியக் காங்கிரசு மாநாட்டில் கம்யூனிஸ்டு உறுப்பினர்களாக இருந்த எஸ்.ஏ. டாங்கே, எஸ்.எஸ். மிராஜ்கர், கே.என். ஜோக்லேக்கர், ஆர்.எஸ். நிம்கார், தரணி கோஸ்வாமி, முசாபர் அகமட், எஸ்.வி. காட்டே, கோபால் பசக் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

காங்கிரசிற்கான முக்கியமான பல தீர்மானங்கள் இங்குத் தயாரிக்கப்பட்டன. பண்டித ஜவஹர்லால் நேரு இக்கூட்டத்தில் பரிபூரணச் சுதந்திரம், ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியுடன் இணைதல் முதலிய தீர்மானங்களை முன் வைத்தார். சைமன் புறக்கணிப்பு, இந்திய அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் போன்ற பல தீர்மானங்கள் முன் வைக்கப்பட்டன.

காங்கிரஸ் இயக்கத்திலும் பேரியக்கமாக இருந்த சிங்காரவேலர், உழைப்பும் செயல்பாடுகளும் புறக்கணிக்கப் பட்டதற்கு அவர் மறைவும் ஒரு காரணமாக இருக்க வேண்டும். இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு ஓராண்டிற்கு முன்பு அதாவது 1946 பிப்ரவரி 11லேயே அவர் மரணமடைந்தார்.

ஒரு காங்கிரஸ்காரர் என்ற முறையில் காங்கிரசிலேயே அவர் ஓர் இடது சாரி என்பதுடன், இந்தியாவின் பரிபூரணச் சுதந்திரத்தைப் பற்றிச் சிந்தித்த உன்னதமான மனிதர் அவர். எதிலும் தீவிரத்தன்மை அவரது உயிர்க் கொள்கையாகும். சென்னை நகரில் மட்டுமல்ல, தமிழகம், இந்தியா அளவில் இயக்கம் நடத்தியவர் சிங்காரவேலர். அவர் இருந்த இயக்கங்களிலெல்லாம் முன்னணியில் மட்டுமல்ல அவர் எப்பொழுதும் முதல் மனிதராகவே இருந்தார்.

ஒடுக்கப்பட்ட மக்கள் நலத்திற்கு எப்பொழுதுமே ஓயாத குரல் கொடுத்த ஓர் உன்னத மனிதர் எனச் சிங்காரவேலரைச் சி.எஸ். சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார். சமுதாய மேம்பாட்டுக் குழைத்த ஈ.வெ.ரா., தீவிரவாதத்திற்குப் பெயர்பெற்ற வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா மற்றும் அனைவரோடும் சிங்காரவேலர் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். ஆகவேதான் சி.எஸ். சுப்பிரமணியம் 'சிங்காரவேலரை உழைக்கும் மக்களின் உண்மையான சார்பாளர். அவரை இடையறாது நினைப்பது மானிடத்தின் பெருங்கடமை' எனக் கூறுகின்றார்.

சைமன் புறக்கணிப்பு

சென்னையில் நடைபெற்ற 42ஆவது இந்தியத் தேசியக் காங்கிரஸ் மாநாட்டில் அரசியல் சீர்திருத்தம் கருதி இந்தியா வருகின்ற சைமனைப் புறக்கணிக்க வேண்டுமென முடிவெடுத்ததைக் கண்டோம். திட்டமிட்டபடி சைமன் இந்தியா வந்தார். திட்டமிட்டபடி வட இந்தியா முழுமையும் சைமனுக்கு எதிராகக் கதவடைப்புகளும் பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களும் நிறைய நடைபெற்றன. 'கொடுங்கோன்மை மிக்க அரசின் சைமனே திரும்பிப் போ' என்ற முழக்கம் எங்கும் எதிரொலித்தது.

இந்த நிலையில்தான் சைமன் 1928 பிப்ரவரியில் சென்னைக்கு வந்தார். நீதிக் கட்சியைச் சேர்ந்த இரட்டைமலை சீனிவாசன், தந்தை பெரியார் மற்றும் பலரும் கூடி வித்தியாசமான முடிவொன்றை எடுத்தனர். மனு கொடுத்தே ஆளும் ஆங்கிலேயர்களின் மூலம் அடித்தட்டு மக்களின் நலத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற இவர்கள் சைமனிடம் சென்று பார்ப்பனர்களைப் பற்றிக் குறை சொல்வதுடன் சைமனிடம் சாட்சியமளிக்கவும் முடிவெடுத்தனர். அதைப் போலவே நீதிக் கட்சியைச் சேர்ந்த பலர் சைமனிடம் சாட்சியமளித்துக் கோரிக்கை மனுக்களையும் தந்தனர்.

இந்த நிலையில் சென்னையில் இருந்த ம. சிங்காரவேலர் அகில இந்தியக் காங்கிரசின் தீர்மானப்படி சைமனை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கடுமையாக உழைத்து வந்தார். சைமனுக்கு எதிராகக் காங்கிரஸ் தொண்டர்கள் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டுமெனத் தொண்டர்களிடம் தூண்டியும் வந்தார். பேரியக்கமாக இருந்த சிங்காரவேலரை வெளியிலே வைத்திருந்தால் சைமனுக்குக் கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்து, அவமானமும் செய்வார் என்பதை இரகசிய ஒற்றர்களால் உணர்ந்த சென்னை மாநில அரசு இப்பொழுது சிங்காரவேலரை வீட்டுக் காவலிலும் வைத்து அடைக்கவும் செய்தது. 22, சௌத் பீச் ரோட்டிலுள்ள கடற்கரை வீட்டிற்குள் ம. சிங்காரவேலர் அடைக்கப்பட்டாலும் அவரின் அடங்காத சிந்தனை எப்படியும் சைமனுக்குக் கருப்புக் கொடி காட்டியே தீரவேண்டுமென்று முடிவெடுத்தது. அவருடைய வீடு மாளிகை போன்ற அமைப்புடையது. எப்படியும் கருப்புக் கொடி காட்டி விடவேண்டுமென்று முடிவெடுத்த சிங்காரவேலர் தம் பேத்திகளான ஜெய்பாய், ஜூபாய் போன்ற கல்லூரி மாணவிகளைக் கருப்புத் துணியை எடுத்து வரவேண்டுமென்றார். கருப்புத் துணிகளே வீட்டில் இல்லாத நிலையில் வீட்டிலிருந்த கருப்புப் பட்டுப் புடவையைக் கொண்டு வந்து தந்தனர்.

வெளியிலே காவலர்கள் வீட்டைப் பூட்டியும் விட்டனர். உள்ளுக்குள் இருந்த சிங்காரவேலர் பட்டுப் புடவையை நான்கு கீற்றாகக் கிழித்தார். வீட்டிற்குள் இருந்தே வீட்டின் நான்கு மூலைகளிலும் பெரிய கோல்களை நாட்டிய சிங்காரவேலர், அந்தக் கோல்களிலே கருப்பு வண்ணப் புடவைகளை ஆர்ப்பாட்டத்திற்கான கருப்புக் கொடிகளாகக் கட்டினார். சைமன் வருகின்ற அந்த வேளையிலே கடற்கரையில் இருந்த சிங்காரவேலர் வீட்டில் ஒன்றுக்கு நான்காகக் கருப்புக் கொடிகள் பறந்தன. ஒரு கொடி கூடப் பறக்கக் கூடாது என்பதற்காகவே அன்றைய காவலர்கள் சிங்காரவேலரை வீட்டிற்குள்ளும் அடைத்துப் பூட்டியும் வைத்தனர். ஆனால் ஆளுநர் வீட்டிற்குச் செல்லுகின்ற சைமன் ஒன்றுக்கு நான்காகக் கொடிகளைக் காணும் நிலை உருவானது. இதனால் சைமனே வெட்கப்பட்டான் என்பர்.

தொடர்ந்து 22, சௌத் பீச் ரோட்டில் இடம் பெற்றிருந்த சிங்காரவேலர் மாளிகையை வெள்ளைக்காரர்களைப் பொறுத்த வரை அதனையும், சிங்காரவேலரையும் எப்பொழுதும் எதிரிகளாகவே கருதினர். 1923லேயே அவர் வீட்டில் காங்கிரஸ் கொடியுடன் கதிர் அரிவாள் சின்னம் பொறித்த கம்யூனிசக்

கொடியும் பறந்ததுண்டு. 1928இல் சைமனுக்கு எதிராகப் பறந்த கருப்புக் கொடியும் பிரிட்டிஷ் அரசுக்கு இன்னும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. 1930களில் ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபு சிங்காரவேலரை அப்புறப்படுத்திவிட்டே மறுவேலை என முடிவெடுத்து, சிங்காரவேலரையும் அங்கு வாழ்ந்த மீனவர்களையும் சேர்த்தே அப்புறப்படுத்தினான். இதற்காகவே மாணவர்களுக்குப் பயன்படுகின்ற கல்லூரி ஒன்றையும் ஏற்படுத்தி அந்தப் பகுதிக்கே வெலிங்டன் வளாகம் என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தான். பெருஞ் செல்வந்தரான சிங்காரவேலர் அப்பகுதியிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டாலும் தம்முடைய முன்னோர்களான 'கந்தப்பச் செட்டி, அருணாச்சலசெட்டி' ஆகியோர்களின் சமாதிகள் அப்பகுதியிலிருந்து அப்புறப் படுத்தக் கூடாது என வழக்கு மன்றத்தில் போராடி வெற்றியும் பெற்றார். இன்றைக்கும் சென்னைக் கடற்கரையில் விவேகானந்தர் சிலைக்குப் பக்கதில்'கந்தப்பச் செட்டி, அருணாச்சல செட்டி'யின் சமாதிகளைக் காணமுடியும்.

அங்கிருந்து வெலிங்டனால் கம்யூனிஸ்டு எனக் குற்றம் சாட்டப்பட்டு, அப்புறப்படுத்தப்பட்ட சிங்காரவேலர், மயிலாப்பூர் முண்டகக் கண்ணி அம்மன் கோயிலை அடுத்துள்ள இடத்தில் மிகப் பெரிய மாளிகையொன்றைக் கட்டி வாழ்ந்தார். அங்குதான் அவரின் இறுதி மூச்சு 11.2.1946இல் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு ஓராண்டிற்கு முன்னமேயே அடங்கியது.

சாக்கோ, வான்சிட்டி கண்டனக் கூட்டம்

அமெரிக்கா எப்பொழுதுமே முதலாளித்துவ நாடு. அது எளிய நாடுகளின் மீது படை எடுப்பதை ஒரு கொள்கையாகவே கொண்டுள்ளது. பொதுவுடைமை உணர்வுடைய நாடுகளை நசுக்குவதில் அதற்குத் தணியாத வெறியே உண்டு. அமெரிக்காவையும் அதன் முதலாளித் தன்மைகளையும் சிங்காரவேலர் இறுதி மூச்சு உள்ளவரை எதிர்த்தே வந்தார். வெறுத்தே வாழ்ந்தார். [1]

1920களில் உன்னதமான இரு தொழிற் சங்கத் தலைவர்கள் வாழ்ந்தனர். ஒருவர் மீன் பிடிக்கும் தொழில் செய்த வந்த வான்சிட்டி; இன்னொருவர் செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் சாக்கோ. இருவருமே அமெரிக்கப் பிளிமத் நகரில் தொழிற் சாலையில் வேலை செய்து வந்த தொழிற்சங்கத் தலைவர்கள். தொழிலாளர்களுக்குக் குரல் கொடுத்து வந்த இருவரும் மானிடத்திற்கு எதிரான செயல்களையும் கண்டித்து வந்தனர்.

1. சி.என். அண்ணாதுரை, சிந்தனைச்சிற்பி ம. சிங்காரவேலர், ப.5.

'ஆயுதத்தைச் செய்து குவிப்பதை அமெரிக்கா செய்தாலும் தவறுதானே'? என்று இருவரும் வெளிப்படையாகவே பேசினர். இருவருமே உலக ஒற்றுமைக்கு ஓங்கிக் குரல் கொடுத்த உத்தமர்கள்.

அந்த நேரத்தில் அமெரிக்கப் பிளிமத் நகரில் 'பிரிஜ்வாட்டர் கொள்ளை' என்ற ஒன்று ஊரையே உலுக்கி எடுத்தது. சாக்கோ, வான்சிட்டி வேலை செய்த கயிற்றாலையில் ஒரு முறை குண்டு வெடித்தது. இந்த நேரத்தில் அமெரிக்கச் செம்பாலையில் பெரும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அமெரிக்காவிற்கு ஒரு இயல்புண்டு. அது குற்றவாளி என முடிவு செய்து விட்ட பின்னர்தான் அவர் மீது வழக்கையே தொடுக்கும். அமெரிக்கச் செம்பாலை வேலை நிறுத்தத்திற்குச் சாக்கோ, வான்சிட்டியே காரணமெனக் கூறி வழக்கையும் தொடுத்தது.

சாக்கோ, வான் சிட்டி போன்றவர்கள் உயிர்ப்புடன் உள்ளவரை முதலாளித்துவம் வாழமுடியாது என அமெரிக்கா முடிவெடுத்துச் செயல்பட்டது. சாக்கோ, வான்சிட்டிக்கு எதிராக 1920இல் ஜோடிக்கப்பட்ட வழக்கு 1927வரை நடைபெற்ற தென்றால் அரசின் உக்கிரத்தை உணரமுடியும். சாக்கோ, வான்சிட்டிக்கு ஆதரவாகச் சாட்சி சொன்னவர்கள் வாக்கு மூலங்களெல்லாம் நீக்கப்பட்டன. இருவருக்கும் எதிராகச் சொன்ன வாக்கு மூலங்களெல்லாம் ஏற்கப்பட்டன.

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுதே இன்னொரு வேடிக்கையும் நடைபெற்றது. சதி வழக்கில், குண்டு வைத்ததில் தொடர்புடையவனே மனம்மாறி 'நான்தான் கொலை செய்தேன், இந்தக் கொலைக்கும் சாக்கோ, வான்சிட்டிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது' என அறிவிக்கவும் செய்தான். ஆயிரத்திற்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நிலையிலும் சாக்கோ, வான்சிட்டி குற்றவாளிகள் இல்லையெனத் தெரிந்த பின்னரும் இரக்கமற்ற அமெரிக்க ஆதரவு நீதிபதிகள் 'சாக்கோவும் வான்சிட்டியும் நாஸ்திகர்கள், புரட்சிக்காரரர்கள். வெடிகுண்டு வீசும் கொலை பாதகர்கள். இவர்களை மின்சார நாற்காலியில் வைத்துக் கொல்ல வேண்டு'மெனத் தீர்ப்பளித்தனர்.

இத்தீர்ப்பைக் கேட்டு உலகம் துடித்துப் பதறியது. உலகப் பெரும் அறிஞர் 'ரோமன் ரோலண்ட்' இந்தத் தீர்ப்புக் குறித்து 'அமெரிக்கா உலகத்தின் மனசாட்சியைப் புண்படுத்திவிட்டது' என அறிவித்தார். இத்தீர்ப்பின் மூலம் அமெரிக்கா தனக்கும் உலகத்திற்கும் ஆழங் காணமுடியாத பாதாளத்தை உருவாக்கிக் கொண்டுவிட்டது' என அறிஞர்கள் கூறினர். 'மேரிடோனா'

என்ற தொழிற்சங்கத் தலைவர் 'சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு மதவாதிகள் பெண்களைப் பேய் பிடித்தவர்கள் என்று கூறிக் கொன்றார்கள். அவர்கள் தங்கள் அறியாமையினால் அதனைச் செய்தனர். மூடத்தனத்தினால் அவர்கள் இத்தகைய கொடுமைகளைச் செய்தனர். ஆனால் சாக்கோ வான்சிட்டிக்குத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் அம் மதவாதிகளுக்கு முன்னால் 'வெறும் தூசுகள்' என்று கூறினார்.

இங்கிலாந்தின் தொழிற் கட்சியின் 12 பாராளுமன்ற உறுப்பினர்கள், சாக்கோ, வான்சிட்டியை மன்னிக்க வேண்டுமெனக் கருணை மனுவை அனுப்பினர். 'முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையே உள்ள குரோத விரோதம் காரணமாக நல்லவர்கள் கொல்லப்பட்டுவிடக் கூடாது. என வாதாடினர். ஆஸ்திரேலியாவும், பாரிசும் சாக்கோ, வான்சிட்டிக்கு ஆதரவாகப் பொது வேலை நிறுத்தம் நடத்தின.

தென்னாப்பிரிக்கா, அமெரிக்காவின் தேசியக் கொடியை எரித்தது. உலகின் மேதாவிகளும், அறிஞர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் நல்ல உயிர்கள் அழிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக இலட்சக்கணக்கான நிதியைத் திரட்டி அமெரிக்கச் சுப்ரீம் கோட்டுக்கு அப்பீல் செய்தனர். அத்தனை கோரிக்கைகளையும் குப்பைக் கூடையில் போட்டுவிட்டுச் செயல்படுவதைப் போலச் சாக்கோ, வான்சிட்டியை அமெரிக்க நீதிமன்றம் நாஸ்திகர்கள், புரட்சியாளர்கள், வெடிகுண்டு வீசும் கொலை பாதகர்கள் என்று வக்கிரமாகத் தீர்ப்பைக் கூறி மின்சார நாற்காலியில் வைத்து இருவரையும் கொன்றது. சுதந்திரத் தீபச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதாகச் சிலைவடித்த அமெரிக்காவில் தான் இப்படியொரு அவமானத் தீர்ப்பு கூறப்பட்டது.

உலகமே கொதித்தெழுந்து ஆரவாரமும், ஆர்ப்பாட்டமும், கண்டனக் கூட்டங்களும் செய்யும் நிலையில் மாவீரர் ம. சிங்காரவேலர் இந்த அதர்மதத்தைக் கண்டு பொறுப்பாரா? வாளா இருப்பாரா? 'பூவிற்கும் சிறுவர்களுடைய மென்மையான இதயம் வருந்தக் கூடாதே என அனைத்துப் பூக்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டு சிறுவர்களைச் சிரிக்க வைத்த நல்லவர்களுக்கா இப்படியொரு தீர்ப்பு எனச் சிங்காரவேலர் பதறினார்.

தன்னினும் எளியவன், செருப்பில்லாமல் நடக்க முடியாமல் இடர்ப்படும் ஏழையின் துயரம் கண்டு, தன் செருப்பையே தானமாகத் தந்துவிட்டு, கல்லிலும் முள்ளிலும் நடந்து இடர்ப்பட்ட ஏந்தல்களுக்கா இந்த இடையூறெனச்

சிங்காரவேலர் கலங்கினார். உலகமே திரண்டெழுந்து ஆர்ப்பாட்டங்கள் செய்யும்பொழுது இந்தியாவிலும் அரசுக்கு எதிரான இத்தகைய கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது அவசியமெனச் சிங்காரவேலர் கருதினார். 1928ஆம் ஆண்டில் இந்தியாவில் இத்தகைய தொழிலாளர்கள் உணர்வுகள் துளியும் வெளிவரக் கூடாது என இந்திய அரசு கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்ட வேளையில் சிங்காரவேலர் சென்னையில் நேப்பியர் பூங்காவில் சாக்கோ, வான்சிட்டி கொலை செய்யப்பட்டதற்கு எதிரான கண்டனக் கூட்டத்தை நடத்தி வரலாறு படைத்தார். இன்றைக்கு 'மேதினப் பூங்கா' எனப் பெயர் சூட்டியுள்ளனர். சிங்காரவேலரின் ஆளுமையை உணர்ந்தவர்கள் கலைஞரின் சிந்தனையை, நிச்சயம் பாராட்டவே செய்வர்.

இக்கூட்டத்தைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா மிகச் சுவையாகக் குறிப்பிடுகின்றார். தட்டிக்கேட்க ஆளில்லாதபோது தம்பி சண்டப் பிரசண்டன் எனச் செயல்படுவது அரசியல் வாதிகளின் இயல்பு. பல பெரும் தலைவர்கள் கூட்டத்திற்கு வருவதாக ஒப்புதல் அளித்திருந்தாலும், அரசின் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளைப் பார்த்து, காவலர்களின் ஆர்ப்பாட்ட அணிவகுப்பைக் கண்டு கூட்டம் தடை செய்யப்பட்ட நிலையில் பல தலைவர்கள், முன்னணித்தலைவர் நேப்பியர் கூட்டத்திற்கு வராமலேயே ஒதுங்கிவிட்டனர்.

பொதுமக்கள்தாம் எந்த இயக்கத்திற்கும் உயிர் கொடுப்பவர்கள். இப்பொழுது கூட்டத்தில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் திரண்டு நின்றனர். அவர்களும் கூடக் கடைசிவரை நிற்கலாமா? போகலாமா? என்கின்ற ஊடாட்டத்தோடு நின்றதாக அறிஞர் அண்ணா பதிவு செய்கின்றார்கள். சரியாக மாலை ஆறு மணி அளவில் சிங்காரவேலர் மேடைக்கு வந்தார். குறிப்பிட்ட பெருந்தலைவர்கள் வரவில்லையென்றாலும், தலைமையேற்க ஒப்புக் கொண்டவர்களே வரவில்லை என்றாலும் பொதுமக்கள் நூற்றுக் கணக்கில் அச்சமற்றுத் திரண்டு நின்றனர். 'ஒன்று மட்டும் உண்மையறி ஊற்றிலொரு பாட்டெழுதும், செந்தமிழ் மாக்கவிக்கு மரணம், அது வந்த பின்புதான் பெருமை ஜனனம், என்பதைப் போலக் கூட்டத்தில் சிங்காரவேலர் இப்பொழுது ஒரு புதுமையான காட்சியைக் கண்டார். முன்பின் பாத்திராத, தொடர்பில்லாத இளைஞர்கள் மேடையில் ஏறிச் சமதர்மப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். வெகு தீவிரமாக இயங்கிக் கொண்டும் இருந்தனர்.

இந்தக் கூட்டத்திற்குத்தான் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியும், தளபதி எஸ்.வி. இலிங்கமும் வந்திருந்தனர்.

கூட்டத்தில் முதலில் எஸ்.வி. இலிங்கம் தொழிற்சங்க இயக்கம் பற்றிப் பேசினார். அடுத்து அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியைச் சிங்காரவேலர் மேடையில் பேசவைத்தார். அஞ்சா நெஞ்சன் எப்பொழுதும் தைரியத்திற்கும் நெஞ்ச ஊற்றத்திற்கும் பெயர் பெற்றவர். அண்ணா அஞ்சா நெஞ்சனின் நெஞ்ச உரத்திற்கும் வீரத்திற்கும் தனிப் புகழ் பெற்ற மேதை எனப் பாராட்டுவார். அழகிரிசாமியின் உடம்பைக் காசநோய் பாதி தின்றது. மீதியைப் பெரியார் இயக்கம் தின்றது எனப் பாராட்டுவார். கேட்பவர்களை மேடையிலே கட்டிப் போடுகின்ற சொல்லாற்றல் உடையவர் அழகிரிசாமி.

நேரத்திற்குத் தகுந்தாற் போல் தைரியத்தை வெளிப் படுத்துபவர் அழகிரிசாமி. ஒருமுறை ஓசூரில் சுயமரியாதைச் சமதர்மப் பேச்சாளரைப் பேசவிடாமல் கல்லெறிந்து கூட்டத்தைத் தடுத்துவிட்டனர். இதனை அறிந்த அழகிரி அடுத்த வாரமே அதே ஊரில் பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்யச் சொன்னார். கூட்டத்தில் முன் நின்ற அழகிரி இப்பொழுது ஒரு விந்தையான செயலைச் செய்தார். கிடுகிடுவென மேடையை விட்டுக் கீழிறங்கிய அழகிரிசாமி பெருங்கல் ஒன்றை அனைவரும் பார்க்க மேடை மேல் வைத்துவிட்டு இந்த ஊரில் கடந்த வாரம் கூட்டத்தில் கல்லெறிந்து கூட்டத்தைக் கலைத்து விட்டதாக அறிந்தேன். அதற்குப் பரிகாரம் 'தேடவே நான் இங்கே வந்துள்ளேன். தைரியமிருந்தால் இப்பொழுது கல்லெறியுங்கள். நானும் இதோ கல்லை வைத்திருக்கிறேன். யார் கல்லெறிவதில் வெற்றி பெறுகிறார் என்பதைப் பார்ப்போம்' என அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி பேசினார் என்பர். எந்த வித இடையூறுகளும் இல்லாமல் மூன்று மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்து பேசி அழகிரிசாமி சாதனை படைத்தார்.

பெண்கள் மாநாட்டில் சிங்காரவேலருக்கு எதிராகப் பேசிச் சாதனைப் படைத்த அழகிரிசாமியைச் சிங்காரவேலர் இப்பொழுது பேச வைத்தார்.

> மீன் பிடிக்கும் இத்தாலியச் சகோதரன் வான் சிட்டியும், செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் சாக்கோவும் அமெரிக்காவால் கொல்லப்பட்டு உலகெங்கிலும் பொதுவுடைமை இயக்கத்தின் மீது பற்றும் பரிவும் உருவாகியதைப் போல இந்த மண்ணிலும் மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த ம. சிங்காரவேலர் முதலாளித்துவத்தால்

> கொல்லப்பட்டு இந்திய மண்ணில் புரட்சி வெடிக்கின்ற நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

என அஞ்சாநெஞ்சன் அழகிரி பேசி முடித்தார்.

அதன் பின்னர்ப் புரட்சிவீரர் அஞ்சாத நெஞ்சமுடைய சிங்காரவேலர் சாக்கோ, வான்சிட்டியினுடைய அற்புதமான மனித நேயமிக்க வரலாற்றை விரிவாகப் பேசினார். மனிதனின் மரணம் கூடப் பொருளுடையதாக இருக்க வேண்டுமென அவர் பேசினார். சில கோடீஸ்வரர்கள் எவ்வளவு அற்பத்தனமாகச் சாகின்றார்கள். சில சாதாரண எளிய தொழிலாளிகள் எவ்வளவு உயர்ந்த, நேரிய கொள்கையுடன் வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்பதைச் சிங்காரவேலர் ‘கேரி’ என்ற கோடீஸ்வரனையும் வான் சிட்டியின் பேராண்மை மிக்க பெருவாழ்வையும் சிங்காரவேலர் ஒப்பிட்டுக் காட்டி அற்புதமாகக் கூட்டத்தில் பேசினார்.

அமெரிக்காவில் வாழ்ந்த பல கோடீஸ்வரர்களில் மிகப் பெரும் கோடீஸ்வரன் ‘கேரி’ என்ற பணக்காரன். இவன் தன் மரணத்தின்போது எவ்வளவு ஈனத்தனமான உயிலை எழுதி வைத்தான் என்பதைச் சிங்காரவேலர் விளக்கினார். கேரி தன் மரணத்திற்குப் பின் மகன் எப்படி வாழவேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளான்

> மகனே! என் மரணத்திற்குப் பின் யாரையும் நம்பாதே, யாரையும் நம்பிக் கடன் கொடுக்காதே. நீ, உன் தாய் என்றளவில் உங்கள் வாழ்வைச் சுருக்கிக் கொள்ளுங்கள்.

என்று பணக்கார கேரி எழுதிய உயிலை விளக்கிய சிங்காரவேலர் வான் சிட்டி தன் மகனுக்கு எழுதிய உயிலையும் எடுத்துக் காட்டுகிறார். மனிதர்களைச் சிங்காரவேலர் இனங்காட்டுகின்றார்.

> வான் சிட்டி தன் மகனுக்கு
>
> மகனே ! நீ உலகத்திற்கு உதவுகின்ற முயற்சியில் யாரினும் யாரினும் முன் நில். ஏழை, எளியவர்களுக்குக் குறிப்பாகத் தொழிலாளிகளுக்கு உதவி செய்யத் தயங்காதே. ஏனென்றால் நீ துயரப் படுகின்றபொழுது தங்கள் உயிரையும் கொடுக்கத் தொழிலாளர்கள் தயங்கமாட்டார்கள்.

என்று வான்சிட்டியின் கடைசி ஆசை என்ன என்பதை உலகிற்கு

விளக்கமாகச் சொல்லி, கூட்டத்தவர்களைச் சிங்காரவேலர் தெளிவுபடுத்தினார்.

சிங்காரவேலர் வாழ்ந்த காலத்தில் தம் வீட்டுச் சுவரில் மாட்டப்பட்டிருந்த உலகப் படத்தை வைத்துக் கொண்டு இந்த நாடுதான், ஆக்கிரமித்த நாடு, இந்த நாடுதான் ஆக்கிரமிக்கப்பட்ட நாடு என்று தம் வீட்டுப் பிள்ளைகளுக்கு விளக்குவதையே ஒரு கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர்.

உலகில் எத்தனை நாடுகள் உண்டோ அத்தனை நாடுகளைப் பற்றியும் சிங்காரவேலர் திறனாய்வு செய்து தமிழர்களுக்கு எழுதியுள்ளதை அறிய முடியும். உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய், புகல்வேன், உடைமை மக்களுக்குப் பொது, தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு என்று வாழ்கின்ற வாழ்க்கை பாழும் வாழ்க்கை, பயனில்லாத வாழ்க்கை என்றவர் சிங்காரவேலர். 1917 நவம்பர் சோஷலிச ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்ற பின்னர் 14 முதலாளித்துவ நாடுகள் ஒன்று சேர்ந்து ரஷ்யாவை எதிர்த்தன. ஜெர்மனியை வீழ்த்திச் சோஷலிச அரசை நிறுவி முதலடி எடுத்து வைக்கத் தொடங்கிய காலக்கட்டத்தில் இத்தகைய நெருக்கடியை மாவீரன் லெனின் எதிர்பார்க்கவில்லை. சோவியத்து ரஷ்யா திணறியது.

உலகப் பாட்டாளி மக்களின் தலைவரான லெனின் உலகப் பாட்டாளிகளுக்கு ஏகாதிபத்திய படை எடுப்பாளர்களின் கொடுமையை உணர்த்தி, ஏகாதிபத்தியம் வெற்றிகரமாகப் பின் வாங்குவதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று அறை கூவல் விடுத்தார். ரஷ்யாவின் மீது கை வைக்காதே என்ற முழக்கம் உலகெங்கும் எதிரொலித்தது. பிரிட்டன், அமெரிக்கத் தொழிலாளிகள் திரண்டு தொழிலாளி, விவசாயி அரசான சோவியத்து ரஷ்யாவிற்குக் குரல் கொடுத்தனர். இலண்டனில் இருந்து பிரிட்டிஷ் துருப்புகள் ரஷ்யா செல்வதை அனுமதிக்க முடியாதென இலண்டன் துறைமுகத் தொழிலாளர்கள் போராடினர். அமெரிக்கத் தொழிலாளிகளும் வாஷிங்டனில் சோவியத்து மக்களாட்சியைக் காக்கப் போராடினர். இந்தக் காலச் சூழலில் ம. சிங்காரவேலர் தம் பணியைச் சரியாகவே செய்தார். ஏகாதிபத்தியப் படைகள் ரஷ்யாவைச் சுற்றிலுமிருந்து வாபஸ் ஆக வேண்டுமென்று அமெரிக்க, பிரிட்டீஷ் அரசுகளுக்குத் தந்தியும் கொடுத்தார். கடல், வான், ஆழ் அகலக் கல்வியைக் கற்றுக் கண்ணாய், உயிராய்த் தமிழர்க்குற்ற சிங்காரவேலர் சாக்கோ, வான்சிட்டியின் துயரங் கண்டும்,

துடித்தெழுந்தார். செயல் பட்டார். போராடினார், கண்டனக் கூட்டம் நடத்தினார்.

சில நூறு பேர்களாகவே கூடிய நேப்பியர் பூங்காவின் கூட்டம் சிங்காரவேலரின் பேச்சுக்குப் பின்னர், பல ஆயிரமாக உயர்ந்தது எனப் பேரறிஞர் அண்ணா பதிவு செய்கின்றார்.

> இராணுவப் படை எடுப்பைப் போலக் காவலர் அணி வகுப்பை நடத்தி மக்களுக்கு அச்ச மூட்டிய அரசு, மக்களின் எழுச்சி கண்டு அடங்கி ஒடுங்கிப் பின்வாங்கியது. சிங்காரவேலர் மிக வெற்றிகரமாகச் சாக்கோ, வான்சிட்டி கண்டனக் கூட்டத்தை நடத்தி முடித்தார்.

என அண்ணா குறிப்பிடுகின்றார். உலகில் எந்த மூலையில் மனித சமூகத்திற்கு இடையூறு நேர்ந்தாலும் அதனைக் கண்டு துடித்தெழுந்த மானிட நேயமிக்க மாமனிதர் சிங்காரவேலர்.

காங்கிரஸ் தோல்வி

சென்னை இராஜதானியில் 1926இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் மிகப் பெரிய அதிர்ச்சியை அளித்தது. காங்கிரஸ் இயக்கத்தின் ஒரு பகுதியாக இருந்து தேர்தலில் போட்டியிட்ட காங்கிரசின் சுயராஜ்யக் கட்சியினர் வெற்றியைப் பெற்றனர். நீதிக்கட்சி மிகப் பெரும் தொல்வியைக் கண்டது. நீதிக்கட்சியினர் நடத்திய இரண்டு மாநாடுகளாலும் பயனேதும் ஏற்படவில்லை. நீதிக்கட்சியின் வலிமை குன்றத் தொடங்கியது. 3.7.1927இல் கோயம்புத்தூரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நீதிக்கட்சியினர் காங்கிரசில் கூடச் சேர்ந்து கொள்ளலாம். கதராடையும் அணிந்து கொள்ளலாமென்ற நீதிக் கட்சி நெகிழ்ச்சியையும் தளர்ச்சியையும் அடைந்தது.

தமிழர்களை ஒருங்கிணைத்தல்

இந்த நிலையில் காங்கிரசில் முரண்பட்டு வெளியேறிய பெரியார், பார்ப்பனர்க்கு எதிரான அனைத்துச் சமுதாயத் தினர்களும் தங்கள் தங்கள் சுயமரியாதையைக் காக்கப் போரிடுவது அவசியமெனத் தொடர்ந்து பேசினார். அந்த இயக்கத்தைப் பெரியார் ‘சுயமரியாதை இயக்கமென அழைத்தார். அந்த இயக்க வளர்ச்சிக்காக நாளும் உழைத்து வரலானார். 1927இல் அண்ணல் காந்தியடிகள் தென்னிந்தியாவிற்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அவர் பயணம் முழுமையும் வர்ணாசிரமத் தர்மத்தைப் பரப்புவதிலேயே செலவிடப்பட்டது.

காந்தியுடன் சந்திப்பு

ஜாதி ஒழிப்பைப் பற்றிப் பேசுகிற மகாத்மா தம்மிடம் உள்ள நியாயத்தை நிச்சயம் ஒத்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் பெரியார் தமது தோழர் எஸ். இராமநாதனுடன் காந்தியைக் கண்டு நேரில் பேசினார். தங்கள் கொள்கை தொடர்பாக மூவரும் விவாதித்தனர். விவாதத்தின் பின்னர் ஒரு பேருண்மையைத் தந்தை பெரியார் புரிந்து கொண்டார். ஆன்மீகவாதியான அண்ணல் காந்தி வர்ணாசிரமக் கொள்கையில் முழுமையும் அழுந்திக் கிடப்பதை அறிந்தார்.

> ஒவ்வொரு ஜாதியும் அந்தந்த ஜாதிகளுக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்தே தீரவேண்டும். இதுவே ஒவ்வொரு ஜாதியும் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய கடமை.

எனக் காந்தி சொன்னதும் காந்தியின் உள்ளப் போக்கைப் புரிந்து கொண்ட பெரியார் காந்தியிடம் இருந்து விடை பெற்றார்.

மூன்று கொள்கைகள்

தம்முடைய சுயமரியாதைக் கொள்கையுடன் இம் மூன்று கொள்கைகளையும் இணைத்துக் கொண்டு 1. இனி வரும் நாளில் காங்கிரசை ஒழிப்பது 2. இந்து மதத்தை ஒழிப்பது 3. பார்ப்பன ஆதிக்கத்தைத் தகர்ப்பது என்ற மூன்று கொள்கையோடு தம்முடைய சுயமரியாதை இயக்கத்தை முன்னிலும் பன்மடங்கு வீரியத்துடன் நடத்தத் தொடங்கினார். மதத்தின் மீது பெரியார் தொடுத்த தாக்குதல் என்பது மிக வன்மையானது, ஆழமானது, அழுத்தமானது. இதனால் பார்ப்பனர் அல்லாத மற்ற இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அனைவரும் பெரியாரால் கவரப்பட்டனர். தாழ்ந்து வீழ்ந்து கிடந்த அடித்தட்டு மக்கள் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் நிறையவே சேர்ந்தனர்.

பல்வேறு மாநாடுகள்

பெரியார் நடத்திய சுயமரியாதை மாநாடுகளில் பல்வேறு தலைப்புகளில் மாநாடுகள் நடைபெற்றன. 'ஜமீன் விவசாயிகள் மாநாடு' 'லேவாதேவி செய்வோர் எதிர்ப்பு மாநாடு', 'ஜாதி ஒழிப்பு மாநாடு', 'மத ஒழிப்பு மாநாடு' எனப் பல மாநாடுகள் நடைபெற்றன. சுரண்டப்பட்ட ஏழை எளியவர்கள், தாழ்த்தப் பட்டவர்கள், பிற்பட்டவர்கள், மிகப்பிற்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் பெரியாரைத் தேடி அணி அணியாகத் திரண்டனர்.

சிங்காரவேலருக்காகப் பெரியார் கைதாதல்

1928இல் நடைபெற்ற தென்னிந்திய இரயில்வே போராட்டத்தில் தலைமையேற்ற பெரியார் ம.சிங்கார வேலரையும், முகுந்தலால் சர்க்காரையும் பரிவுடன் ஆதரித்தார். சிங்காரவேலரின் போராட்டத்தை ஆதரித்துப் பேசிய பெரியார் 1928லேயே நாகபட்டினத்தில் கைது செய்யப்பட்டாலும் பிறகு வழக்கின்றி நீதிக் கட்சியினரால் விடுதலை செய்யப்பட்டார். பெரியாருக்கும், சிங்காரவேலருக்கும் இதனால் பேரளவில் ஒரு நெருக்கம் ஏற்பட்டது.

பெரியார் உதவல்

பெரியார் இயக்கத்தின் முன்னணித் தொண்டர்களில் பலரும் சிங்காரவேலரிடமும் நெருக்கமாக இருந்தனர். குறிப்பாக நாகை கே. முருகேசன், நாகை டி.என். இராமச்சந்திரன், அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, எஸ்.வி. இலிங்கம், குத்தூசி குருசாமி மற்றும் பலரும் சிங்காரவேலர், பெரியார் இருவரிடமும் மிக நெருக்கமாக இருந்தனர். பத்தாண்டுச் சிறைத்தண்டனை பெற்ற சிங்காரவேலரைப் பெரியார் ஆதரித்தசதுடன் அந்நாளைய நீதிக்கட்சி முதலமைச்சர் டாக்டர் பி. சுப்பராயன் அவர்களைப் பார்த்துப் பத்தாண்டுச் சிறைத் தண்டனையை ஆறுமாதத் தண்டனையாகக் குறைப்பதற்குப் பெரியார் உதவினார்.

பொதுவுடைமை இயக்கத்தை அச்சம் தரும் பேயாக, பிசாசாக நினைத்த பிரிட்டிஷ் பேரரசு அந்நாளில், வெறி நாயாக மாறிக் கம்யூனிஸ்டுகளையெல்லாம் வேட்டையாடிய வரன்முறை இன்றிப் பொதுவுடைமைத் தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டனர். இந்தச் சமயத்தில் பெரியார் பொதுவுடைமைத் தலைவர்களுக்கெல்லாம் அரணாக இருந்து காப்பாற்றினார். இதன் பின்னர்ப் பெரியாருக்கும் சிங்காரவேலருக்கும் அரசியல் ரீதியான ஒரு பிணைப்பும், நெருக்கமும் ஏற்பட்டன.

செங்கற்பட்டு மாநாட்டிற்குப்பின்

1929இல் செங்கற்பட்டில் நீதிக் கட்சி நடத்திய மாநாட்டுத் தீர்மானங்கள் சிங்காரவேலரைப் பெரியார் பற்றி மிக உன்னதமாக நினைக்க வைத்தன. அந்த மாநாட்டில் தீண்டாமையை ஒழித்தல், ஜாதியை ஒழித்தல், ஜாதிப் பட்டங்களைத் துறத்தல், பெண்ணுரிமையைப் போற்றல், லேவா தேவிக்காரர்களை ஒழித்தல், ஜமீன்தார் ஒழிப்பு போன்ற தீர்மானங்கள் சிங்காரவேலரைக் கவர்ந்தன.

பெரியாரும், சிங்காரவேலரும் இணைந்து செயல் படுவதற்குப் பல தொண்டர்கள் காரணமாக இருந்தனர். பலமுறை இருவரும் சென்னைச் சிங்காரவேலர் வீட்டில் சந்தித்தனர், விவாதித்தனர். இந்தக் காலக்கட்டத்தில்தான் பெரியார் சிங்காரவேலரைத் தமது குடியரசு பத்திரிகைக்குப் பொதுவுடைமை தொடர்பாகவும், விஞ்ஞானம் தொடர்பாகவும் தொடர்ந்து எழுதுமாறு கேட்டுக் கொண்டார். பெரியாரின் குடியரசில் சிங்காரவேலர் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன.

சிங்காரவேலர் கட்டுரைகள்

மிகுதியான பொதுவுடைமை இயக்க உணர்வுள்ள பல இளைஞர்கள் தங்களுக்கு அறிமுகமான குத்தூசி குருசாமி, ப. முருகானந்தம், நாகை கே. முருகேசன், அழகிரி, எஸ்.வி. இலிங்கம் எனப் பலர் பெரியாரோடு கலந்துள்ள நிலையில் தங்களுடைய சமதர்மக் கொள்கைகளையும் சுயமரியாதைக் கொள்கைகளையும் பரப்பச் சிங்காரவேலரும், பெரியாரும் திட்டமிட்டனர்.[1]

மாநாடுகளுக்குச் சிங்காரவேலரை அழைத்தல்

1931இல் விருதுநகரில் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தலைமையில் சுயமரியாதைக் கட்சியின் மூன்றாவது மாநாட்டிற்குச் சிறப்பு விருந்தினராகச் சிங்காரவேலர் அழைக்கப் பெற்றார். உடல் நலம் இன்மை காரணமாக அந்த மாநாட்டில் சிங்காரவேலர் கலந்து கொள்ளவில்லையென்றாலும் அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை 3.8.1931 அன்றைய குடியரசுப் பத்திரிகையில் சிங்காரவேலர் மனமுவந்து பாராட்டினார். அதைப்போல 1931 டிசம்பர் 26இல் சென்னையில் நடைபெற்ற சுயமரியாதைக்காரர்களின் மாநாட்டைத் திறந்து வைக்கும் வாய்ப்பைப் பெரியார் சிங்காரவேலருக்கு அளித்தார். அந்த வாய்ப்பைச் சிங்காரவேலர் மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இச் செய்தி 3.1.1932 குடியரசில் பதிவாகியுள்ளது.

சிங்காரவேலர் எழுத்தோவியங்கள்

இந்தக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய சிங்காரவேலர் பெரியாரின் ஜாதி, மத, கடவுள் ஒழிப்பு இவற்றுடன் உண்மையான சோஷலிசம் மட்டுமே சமுதாயத்தின் உண்மையான ஏற்றத் தாழ்வுகளைப் போக்கும் என்றும் குறிப்பிட்டார். இச்சமயத்தில் சிங்காரவேலர் எழுத்தோவியங்கள் குடியரசில் தவறாது

---

1. பசீனிவாசன், ம. சிங்காரவேலரின் வரலாறு-உண்மையும் புரட்டும், ப.50.

இடம்பெற்றன. ஒரு குடியரசு இதழில் ஒரு வாரத்தில் சிங்காரவேலரின் இரு கட்டுரைகள்கூட இடம்பெற்றன. அப்பத்திரிகையில் சமதர்மக் கொள்கைகள் காட்டாற்று வெள்ளமாகப் பாய்ந்து பரவின. இக்கட்டுரையால் சுயமரியாதைத் தோழர்கள் அனைவரையும் சிங்காரவேலர் சமதர்மத் தோழர்களாக மாற்றி வந்தார். 'நம்முள் உள்ள பணிகள்' என்ற தலைப்பில் சிங்காரவேலர் 12 கட்டுரைகள் எழுதித் தொண்டர்களைத் தெளிவுபடுத்தினார்.

அதற்கு மேலும் தொண்டர்களுக்கு, சுயமரியாதைத் தோழர்களுக்குச் 'சமதர்மம்' என்ற தலைப்பில் 17.1.1932இல் தொடங்கி 23.4.1932வரை எழுதி மிகப்பெரும் தெளிவை, சமதர்மக் கொள்கைகளைச் சிங்காரவேலர் விளக்கினார். சமதர்மக் கொள்கைக்கு வெளிச்சம் தருகின்ற அறிவியலைப் பற்றித் தொடர்ந்து சிங்காரவேலர் எழுதிவந்தார். மானிடச் சமூகத்திற்கு என்றென்றைக்கும் கைவிளக்காக உதவி வருவது விஞ்ஞானம் மட்டுமே என்பதைத் தொண்டர்களிடம் தெளிவாகச் சிங்காரவேலர் விளக்கினார். உலகத்திலுள்ள தமிழர்களெல்லாம் சிங்காரவேலருடைய விளக்கத்தால் தெளிவு பெற்றனர். உலகம் முழுமையும் உள்ள தமிழர்கள் கேள்வி கேட்க அவற்றிற்கெல்லாம் சிங்காரவேலர் விளக்கமளித்தார்.

இதனைப் பற்றிப் பாவேந்தர் பாரதிதாசன் அது என்ன? இது என்ன என்றே கேட்டு நிற்கின்ற தோழர்களுக்கு ஆயிரக்கணக்கான நூல்களைப் படித்து விளக்கம் தருகின்ற சிங்காரவேலர் பணி மிக நுட்பமானது என்று பாராட்டுகின்றார். இதன் விளைவாக உலகம் முழுமையும் சிங்கப்பூர், மலாயா, பர்மா, சிலோன், தாய்லாந்து எனப் பல நாடுகளிலும் உள்ள தமிழர்கள் அறிவியல் தொடர்பான கேள்விகளைக் கேட்டனர். அத்தனை கேள்விகளுக்கும் சிங்காரவேலர் உன்னதமான பதில்களை அளித்து வரலாறு படைத்தார். இக் கேள்வி-பதில்களை யெல்லாம் பெரியாரின் சுயமரியாதை நிறுவனம் வினா விடையாகவே வெளியிட்டுள்ளது. இதனால் இயக்கத்தில் பெரும் விளைவுகள் ஏற்பட்டன. பெரியாரும், சிங்காரவேலரும் இணைந்து பேரியக்கமாகச் செயல்பட்டனர்.

தொடர்ந்து வெளிவந்த சிங்காரவேலரின் கட்டுரைகள் பிரிட்டிஷ் அரசையே கதி கலங்க வைத்தன. அக்காலத்தில் தென்னாப்பிரிக்காவிலிருந்தெல்லாம் தமிழர்கள் கேள்வி கேட்டார்கள். சிங்காரவேலர் பதிலளித்தார் என்பது சாதாரண விஷயமல்ல. 'பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகள், மதமும்,

அரசியலும், ஜாதி ஒழிப்பு, சமூக அமைப்பும் பொருளாதாரமும், நீதிக் கட்சியின் கூட்டுறவு, கடவுளும் பிரபஞ்சமும் என்ற கட்டுரைகள் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தின.

சிங்காரவேலரின் தனித்தன்மை

மற்றவர்களிடம் இல்லாத தனித்தன்மையைச் சிங்காரவேலரிடம் காணுகின்றோம். தாங்கள் கண்ட உண்மைகளைத் தாங்கள் மட்டுமே பயன்படுத்திக் கொண்டு மூலத் தரவுகளை மறைத்துத் தங்கள் மட்டுமே பிறவி அறிஞர்கள் போலக் காட்டி மக்களை இருட்டிலே வைத்துக் கொள்வர். இந்த நோக்கத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவர் சிங்காரவேலர். தாம் கற்ற நூல்கள் எவை என்பதைக் கட்டுரையின் இறுதியில் குறிப்பிடுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார். 1927இல் எடிங்டன் எழுதிய 'நட்சத்திரங்களும், அணுக்களும்' என்னும் நூலைப் படித்துத்தான் கட்டுரை எழுதியதைச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார்.

அதைப்போல உளவியல் தொடர்பான கருத்தை உணர்த்த வந்த சிங்காரவேலர் 1931இல் ஷெல்லி எழுதிய 'குழப்பத்திலிருந்து ஓட்டம்' என்ற நூலை மேற்கோளாகக் காட்டுகின்றார். இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி எழுதிய சிங்காரவேலர் 1930இல் ஜீன்ஸ் எழுதிய 'கடவுளும், பிரபஞ்சமும்' என்ற நூலைக் குறிப்பிடுகின்றார். 'உலகத்தில் உயிர்களின் தோற்றம்' பற்றி 1909இல் ஆர்க்கெனியஸ் எழுதிய 'பிரபஞ்சத்தில் உயிர்கள்' என்ற நூலைக் குறிப்பிடுகின்றார். 1912இல் ராம்சே எழுதிய 'எலக்ட்ரான்களும் மூலக் கூறுகளும்' என்ற நூலை வாசகர்கள் படித்து மிகுதியான செய்திகளைப் பெறலாம் என அறிவுறுத்துகின்றார். 1913இல் அறிஞர் காக்ஸ் எழுதிய 'அணுக்களுக்கு அப்பால்' என்ற நூலைச் சிங்காரவேலர் மேற்கோளாகக் காட்டுகின்றார்.

பகுத்தறிவுக் கட்டுரைகள்

வானியல் தொடர்பாக இன்றளவும் தெளிவற்று, மக்கள் கிரக தோஷம், இராகு காலம், எம கண்டம் என இடர்ப்படுவதை நிறையவே பார்க்கின்றோம். பாமர மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி எத்தர்கள் பிழைப்பதை இன்றும் நிறையவே காணுகின்றோம். அறிவியல் தொடர்பான தொலைக் காட்சியைப் பயன்படுத்தி ஜாதகம், பெயர் இராசி என மக்களை ஏமாற்றுவதைப் பார்க்கிறோம். இதன் தொடர்பான

உண்மைகளைச் சொல்ல வரும் சிங்காரவேலர் 1928இல் ஜீன்ஸ் எழுதிய 'வான சாஸ்திரமும், பிரபஞ்ச அமைப்பும்' என்ற நூலை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

புத்தொளி பாய்ச்சினார்

மானிட இயல் தொடர்பான செய்திகளை விளக்க வந்த சிங்காரவேலர் அறிஞர் டெய்லர் எழுதிய 'ஆந்த்ரோ பயாலஜி' என்ற நூலை மேற்கோளாகக் காட்டுகின்றார். இதைப் போலவே பேரறிஞர் பிரேசர் எழுதிய 'தங்கக் கிளை' என்ற நூலைத் தம்முடைய கட்டுரையில் மேற்கோளாகக் காட்டி விளக்கம் தருகின்றார். பேரறிஞர் பிரேசர் எழுதிய 'மனிதனும் கடவுளும் சாதனையும்' என்ற நூலை வாசகர்க்கு அறிமுகம் செய்கின்றார். இதைப் போலவே வாட்சனின் 'பிகேவியரிசம்' என்றும் நூலையும் மனிதனின் பழக்க வழக்கங்கள், நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது மேற்கோளாகக் காட்டுகின்றார்.

அறிவியல் கட்டுரைகள்

சிங்காரவேலரின் விஞ்ஞானம் தொடர்பான பல கட்டுரைகள் தொண்டர்கள் மத்தியில் அறிவுத் தேடலையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தின. 'விஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்' என்ற நூல் பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் அ. இராகவன் மூலம் வெளியிடப்பட்டு மக்களிடையே பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது.

தொடர்ந்து குடியரசில் எழுதுமாறு பெரியாரும் சிங்காரவேலரைக் கேட்டுக் கொண்டார். சிங்காரவேலரும் தம்முடைய சுயமரியாதைச் சமதர்மக் கொள்கைகளுக்குக் குடியரசை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். இருவரும் இணைந்ததால் சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் பேரியக்கமாக, மக்கள் இயக்கமாக மாறியது.

சிங்காரவேலரும், பெரியாரும் பிறப்பால் பெருஞ் செல்வந்தர்கள்; என்றாலும் இருவருமே தங்களை முதலாளித்துவ ஆடம்பரங்களிலிருந்து முற்றிலும் விடுவித்துக் கொண்டனர். கூடுமானவரை இருவருமே பகட்டை, ஆடம்பரத்தைக் கண்டிக்கவே செய்தனர். தாங்கள் பேசுகின்றபொழுது மேடைகளில் பொதுமக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தால் அவற்றை இருவருமே கண்டிக்கவும் செய்தனர். மேடையில் பேசுகின்றவர்கள் பெரிதும் செயல் வீரர்களாக இருக்க வேண்டுமென்று பெரியாரும், சிங்காரவேலரும் வற்புறுத்தினர்; வலியுறுத்தினர்.

பெரியார், சிங்காரவேலர் செயற்பாடுகள்

காங்கிரஸ் இயக்கத்தில் பேரியக்கமாகப் பெரியார் இருந்து வந்தார். அடித்தட்டு மக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும், மிகப் பிற்பட்டவர்களுக்கும் தொண்டு செய்வதுதான் பெரியாரின் மிக உன்னதமான கொள்கையாக இருந்தது. மேல் ஜாதிக்காரர்களால் காங்கிரஸ் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் வ.உ.சி. போன்ற பெருந்தலைவர்களுக்கே இடமில்லை யென்று ஆன பின்னர், காங்கிரசில் பெரியார் போன்றவர்களால் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

இருவரும் மதித்தனர்

சிங்காரவேலர் வெளிப்படையாகவே தம்மைக் கம்யூனிஸ்டு என்று கூறிக் கொண்டு அதற்காகவே அஞ்சாமல் பணி செய்தார். சிங்காரவேலர் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தாலும் தொழிலாளிகள் விவசாயிகளை ஒருங்கிணைத்துக் காங்கிரஸ் இயக்கத்திலேயே ஒரு முற்போக்கு அமைப்பை உருவாக்கப் பாடுபட்டார். சிங்காரவேலர் ஒரு முதுபெரும் தலைவர் என்பதால் பெரியார் அவரை மதித்தார். பெரியார் சுயமரியாதைக் கொள்கைகளுக்காக உழைப்பதை அறிந்து சிங்காரவேலரும் பெரியாரை மதித்தார்.

நல்லதை ஏற்றவர்

1925 காஞ்சிபுரம் காங்கிரசிலிருந்து பெரியார் வெளியேறி விட்டாலும் அடித்தட்டு மக்களுக்கான சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகவே வளர்த்து வந்தார். தஞ்சாவூரில் நடைபெற்ற ஒரு காங்கிரஸ் மாநாட்டில் இருவரும் சந்தித்ததைப் பெரியாரும் நினைவூட்டுகின்றார். ஜாதி, மதம், கடவுள், வர்ணாசிரமம் இவற்றில் துளியும் நம்பிக்கையற்றவர் என்றாலும் சிங்காரவேலர் மதத் தொடர்பான கருத்துகளில் தமக்குடன்பாடு இல்லை யென்றாலும் அதில் காணப்படுகின்ற சில நல்ல தன்மைகளுக்காகவே பாராட்டவும் செய்தார். ‘அவரவர் சமூகத்தவர்களே அவரவர்கள் வழிபாட்டிற்குத் தலைவர்களாக, பூசாரிகளாக, குருக்களாக இருந்து செயல்படலாம்’ என்று பெரியார் கூறிய கருத்தைச் சிங்காரவேலர் ஆதரித்துக் குடியரசில் 1927லேயே எழுதி இருப்பதை நாம் அறிய முடிகிறது.

பெரியார் சார்ந்திருந்த நீதிக் கட்சியினர் கொள்கைகளில் சிங்காரவேலருக்கு நம்பிக்கை இல்லை யென்றாலும்

நீதிக்கட்சியினர் கொண்டு வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையையும், ஆலயங்களை அரசின் கண்காணிப்பில் கொண்டு வருவது என்ற கொள்கையையும் அதிலுள்ள சில நல்ல தன்மைகளுக்காகச் சிங்காரவேலர் பாராட்டவே செய்தார்.

இருவரையும் இணைத்த தொண்டர்கள்

பெரியாருக்கும், சிங்காரவேலருக்கும் வெளிப்படையான அரசியல் தொடர்பு 1931க்குப் பின்னர்த்தான் ஏற்பட்ட தென்றாலும் பெரியாருடைய தீவிரத் தொண்டர்களில் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, எஸ்.வி. இலிங்கம், குத்தூசி குருசாமி, நாகை கே. முருகேசன், நாகை டி.என். இராமச்சந்திரன் போன்றவர்கள் இருவருக்கும் இடையே நட்புப் பாலமாக இருந்தனர். இத் தொடர்புதான் 1932க்குப் பின்னர் அரசியல் தொடர்பாகவும், சிங்காரவேலரின் சமதர்மத்தையும் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தையும் இணைக்கின்ற இணைப் பியக்கமாகவும் மலர்ந்தது.

தொடக்கக் காலக் காங்கிரஸ்

பெரியார் ஈ.வெ.ரா. 1919க்குப் பின்னரோ அல்லது அதற்கு முன்போ காங்கிரஸ் இயக்கத்திற்கு உடன்படுகின்றார். 1907லேயே காங்கிரசிற்கு வந்திருக்கலாம் எனக் கூறுகின்றார் வே. ஆனைமுத்து. எனினும் பெரியார் இளமையிலேயே காங்கிரசில் தீவிரத் தொண்டராக இருந்தார். 1905 என்பது காங்கிரசின் தீவிர வாதிகளின் காலம். திலகர், வ.உ.சி. போன்றவர்கள் தீவிரவாதம் பேசிப் பிரிட்டிஷ்காரர்களால் அழிக்கப்பட்ட காலம் அது. அதன்பின்னர், தமிழகத்தில் பல தலைவர்கள் காங்கிரசில் ஈடுபாடு கொண்டார்கள்

காங்கிரசில் ஒன்றாகக் கலந்த பெரியார்

காங்கிரஸ்காரர்கள் உறுதியுடன் கைக்கொண்டிருந்த கதரைப் பெரியாரும் கைக்கொண்டார். சட்டமன்ற நுழைவைக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்ததைப் போலப் பெரியாரும் எதிர்த்தார். காங்கிரசின் பெருங் கொள்கைகளான கள்ளை ஒழிப்பது, தீண்டாமையை எதிர்ப்பது, இவற்றிலெல்லாம் யாரினும் யாரினும் மிகமிகத் தீவிரமாகப் பெரியார் செயல்பட்டார். குடும்பத்தவர்களையெல்லாம் காங்கிரஸ்காரர்களாகப் பெரியார் மாற்றினார். இயல்பாகவே அறிஞரான, சிந்தனையாளரான அவர் மிகச் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். 1920களில் தமிழகத்தில் மிகப் பெருந்தலைவர்களில் ஒருவராகப் பெரியார் மதிக்கப்

பெற்றார். இரண்டாண்டுகள் தமிழகக் காங்கிரசின் செயலாளராகவும் பெரியார் பணியாற்றினார். 1924இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் தலைவராகவே பெரியார் விளங்கினார்.

காங்கிரசின் போக்கு

காங்கிரஸ் இயக்கத்தில் பொதுமக்கள் மிகுதியாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் பாமரர்களாகவே இருந்தனர். பொறுப்பாளர்கள் அனைவரும் பார்ப்பனர்களாகவே இருந்தனர். 5,000 ஆண்டுகளாக வர்ணாசிரத் தர்மங்கள் பார்ப்பனர்களைப் படித்தவர்களாகவும், சூத்திரர்களைப் படிக்காதவர்களாகவும் வைத்திருந்தாலும் அடித்தட்டு மக்களுக்குக் கல்வி என்பது எட்டாக் கனியாகவே இருந்தது. வெள்ளைக்காரர்களின் சலுகையைப் பயன்படுத்திப் படித்திருந்த பார்ப்பனர்கள் அரசு வேலைகளில் மட்டுமல்ல, காங்கிரஸ் இயக்கப் பணிகளிலும் மிகுதியாக இருந்தனர். அவர்கள் தங்களது சமூக நலத்தைப் பார்த்துக் கொள்வதிலே எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

பார்ப்பனர்களாக இருப்பவர்கள் எவ்வளவுதான் படித்தவர்கள் என்றாலும், புரட்சிகாரர்களாக இருந்தாலும் வர்ணாசிரமத் தர்மத்தில் பழகிவிட்டதால் பழைய மரபுகளையும், ஜாதி பேதங்களையும் பேணுவதில் கண்ணும் கருத்துமாகவே இருந்தனர். மிகச் சிறந்த பாராளுமன்றப் பேச்சாளர் என்றாலும் எஸ். சத்தியமூர்த்தி அய்யர் ‘பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கத்தை விடக் கூடாது என்பதிலே எவ்வளவு பிடிவாதமாக இருந்தார்’ என்பதைச் சட்டமன்ற நடவடிக்கைகளைக் கொண்டு அறிகிறோம். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூட ‘ஆசாரி என்பவர்கள் வேறு, ஆச்சாரிகள் என்பவர்கள் வேறு’ என்று கற்பிப்பதிலே எவ்வளவு பிடிவாதம் கொண்டிருந்தார் என்பதைப் பார்க்கிறோம்.

இதைப் போலவே சாவர்க்கர் என்ற பார்ப்பனர் ஆன்மிகத் தர்மத்தில் எவ்வளவு அழுத்தமாகச் செயல்பட்டார் என்பதையும் பார்க்கின்றோம். வெளிநாடுகளில் புரட்சிப் பணிகளில் ஈடுபட்டவர் வ.வே.சு. அய்யர். அவர் தேசிய இயக்கத்தின் சார்பில் நடத்திய ‘சேரமாதேவி குருகுலம்’தான் பெரியார் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேறுவதற்கு முதல் கட்டமாக அமைந்தது.

வ.வே.சு. அய்யர்

வ.வே.சு. அய்யர் என்பது வ.வே. சுப்பிரமணிய அய்யர் என்பவரைக் குறிப்பதாகும். 1910லேயே இலண்டன் புரட்சி இயக்கத்தில் சாவர்க்கரோடு பணியாற்றியவர். இந்தியா வந்துவிட்ட பின்னர்ப் புதுவையில் அரவிந்தர், கவி சுப்பிரமணிய பாரதி இவர்களோடெல்லாம் இயக்கம் நடத்தினார். மிகச் சிறந்த பேச்சாளர் என்பதுடன் சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் உட்படப் பல மொழிகளறிந்த பன்மொழியறிஞர் அவர். தமிழகத்திற்குச் சிறுகதை இலக்கியத்திற்கு வழிகாட்டியவர். ஒப்பிலக்கியத் துறையில் முன்னோடி என்றெல்லாம் போற்றப்பட்டவர்.

வ.வே.சு. அய்யர் எழுதிய ‘கம்பராமாயணத் திறனாய்வு’ நூலைப் போல இன்றளவும் ஒரு நூல் வரவில்லை என்று கூறுமளவிற்குக் கல்வித் துறையில் கொடிகட்டிப் பறந்தவர். திரு.வி.க. நடத்தி வந்த ‘தேசபக்தன்’ பத்திரிகையின் ஆசிரியராக இருந்து தம்முடைய புரட்சிகரமான எழுத்தால் பிரிட்டிஷ் அரசை நடுங்க வைத்தவர். தண்டனைக் காலத்தை முடித்து வெளிவந்த வ.வே.சு. அய்யர் ஒரு குருகுலத்தைத் தொடங்கினார். தேசியம், இந்திய மரபு, இந்தியப் பாரம்பரியம் ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட பள்ளி. அதன் பெயர் ‘சேரமாதேவி குருகுலம்’ என்பது.

சேரமாதேவி குருகுலம்

அப்பள்ளி தனியார் தரும் நிதியாலும், காங்கிரஸ் இயக்கம் தந்த நிதி ரூபாய் 5,000த்தாலும் நடத்தப்பட்ட குருகுலமாகும். அப்பள்ளி சேரமாதேவி என்னும் இடத்தில் அமைந்திருந்ததால் சேரமாதேவி குருகுலம் என்றே அழைக்கப்பட்டது. உலகிற்கெல்லாம் விளக்கம் தருகின்ற விளக்கென்றாலும் அதன் அடியிலும் இருட்டு உண்டல்லவா? அதைப் போல உலகப் புகழ் பெற்ற புரட்சியாளர், சிந்தனையாளர், இலண்டனில் பயின்றவர் என்ற பெருமைகளையுடைய வ.வே.சு. அய்யர் தம்முடைய குருகுலத்தில் ஜாதிய அடிப்படையிலே பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தரமான உணவு வழங்கப்பட்ட நிலையில் பார்ப்பனர் அல்லாத பிள்ளைகளுக்குக் குருகுலத்தின் வெளியிலேயும் உணவும் வழங்கப்பட்டது.

காங்கிரஸ் நிதியைக் கொண்டு நடத்தப்படுகின்ற குருகுலத்தில் மாணவர்களிடையே ஜாதி வேறுபாடுகள் காட்டப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு பரவலாக எங்கும் பேசப்பட்டது. காங்கிரசின் மிகப் பெரிய பொறுப்பிலிருந்த

பெரியாரால் இதனைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. பெரியார் இயல்பான நாத்திகர். ஜாதியை, மதத்தை, மூட நம்பிக்கையை அறவே ஒழிக்க வேண்டும் என்னும் கொள்கையுடையவர்.

இட ஒதுக்கீட்டிற்குக் குரல் கொடுத்தவர் பெரியார்

காங்கிரசில் இருந்தபொழுதே 1920ஆம் ஆண்டில் திருநெல்வேலிக் காங்கிரசிலும், 1921ஆம் ஆண்டில் தஞ்சாவூர்க் காங்கிரஸ் மாநாட்டிலும், 1922ஆம் ஆண்டு திருப்பூர்க் காங்கிரஸ் மாநாட்டிலும், 1923ஆம் ஆண்டு சேலம் காங்கிரஸ் மாநாட்டிலும், 1924ஆம் ஆண்டு திருவண்ணாமலைக் காங்கிரஸ் மாநாட்டிலும் ஜாதி அடிப்படையில் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வேண்டுமென்று குரல் கொடுத்தவர். 1925ஆம் ஆண்டு காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் இட ஒதுக்கீட்டிற்கு இடமில்லை என அறிந்தவுடன் காங்கிரசை ஒழித்துவிட்டு, பார்ப்பனரை ஒழித்துவிட்டுத்தான் மறு வேலை என்று முனைப்புடன் பாடுபட்டுச் சுயமரியாதை இயக்கம் என்றொரு உன்னதமான இயக்கத்தையே கண்டவர் பெரியார்.

காங்கிரசில் பொறுப்பிலுள்ளபொழுதே சேரமாதேவி குருகுலத்தில் இப்படியொரு பேதம் இருக்கலாமா? எனப் பெரியார் பொங்கி எழுந்தார். வ.வே.சு. அய்யருக்கு எதிராகச் சினந்து செயல்பட்டார். காங்கிரஸ் இயக்கத்தின் செயலாளர் பெரியார்தான் என்றபோதும் காங்கிரசிலிருந்து நிதி தரக்கூடாது என்று தடுத்தபோதும், சந்தானம் அய்யர் என்ற ஒரு காங்கிரஸ் செயலர் மூலம் நிதி பெற்றதை அறிந்த பெரியார் கடுமையாக முரண்பட்டார்; சினந்து செயல்பட்டார்.

இரு கூறாயினர்

பெரியாரை ஆதரித்துத் தமிழர்களான வரதராஜுலு நாயுடு, தண்டபாணிப் பிள்ளை, திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் போன்றவர்களெல்லாம் ஓரணியில் நின்றனர். எதிர்ப்பு மிகக் கடுமையான நிலையில் குருகுலத்திற்குக் காங்கிரஸ் இயக்கம் நிதி தருவதை நிறுத்திக் கொண்டது. மற்றவர்களும் நிதியை நிறுத்திக் கொண்டனர். அண்ணல் காந்தியே வ.வே.சு. அய்யரை வர்ணாசிரமத் தர்ம அடிப்படையில் ஆதரித்த போதும், பெரியார் கடைசி வரை, தம் எதிர்ப்பில் முனைப்புடன் செயல்பட்டார். கால வெள்ளத்தில் சேரமாதேவி குருகுலம் செயலற்றுப் போனது.

தமிழர்கள் தனியாயினர்

பார்ப்பனர் அல்லாதார் நெஞ்சங்களில் ஒரு கருத்து ஆழமாக வேர் ஊன்றியது. 'என்னதான் பார்ப்பனர்கள் தமிழ்ச் சமுதாயத்தோடு ஊடாடி வளர்ந்தாலும் தங்கள் இன நலத்தையும் குல தர்மத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் தமிழர்கள் நீரோட்டத் திலிருந்து விலகியே செயல்படுகின்றனர்; தங்களுக்கென ஒரு மொழியைத் தேர்வு செய்து அதனையே ஆழமாக நேசிக்கின்றனர். தங்களுக்கென ஒரு பிரத்தியேகமான மொழி நடையைப் பயன் படுத்தித் தங்களை வேறுபடுத்திக் கொள்கிறார்கள். படித்தவர்கள் கூட இந்தத் தர்மத்தில் சற்றும் மாறுபடுவதில்லை என்பதைத் தமிழர்கள் இந்தக் குருகுல நிகழ்ச்சியைக் கொண்டு தெளிவாக விளங்கிக் கொண்டனர்.

சுயமரியாதை இயக்கம்

தந்தை பெரியார் இனியும் இந்தப் பார்ப்பனர்களுடன் இணைந்து செயல்பட முடியாதென்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார். தமிழர் நலத்திற்கெனத் தனி அமைப்பொன்று, காங்கிரசிலிருந்து வேறுபட்ட தனி அமைப்பு அவசியம் என்பதை உணர்ந்தார். இதனைப் பற்றித் தந்தை பெரியார் 1924இல் திருவண்ணாமலை காங்கிரஸ் மாநாட்டில் தெளிவாகவே பேசினார். அச்செய்தி 21.11.1924 நவசக்தியில் பதிவாகி உள்ளது.

> தென்னிந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமை குலையாதிருப்பினும் இந்துக்களுக்குள்ளேயே ஒற்றுமை குலைந்து வருவதைப் பார்க்கிறோம். பார்ப்பனர் என்றும், பார்ப்பனர் அல்லாதார் என்றும் பேதங்கள் இருப்பதை யாரும் மறைக்க முடியாது. அதனால்தான் காங்கிரஸ் இயக்கத்தி லிருந்தாலும் டிஎம். நாயர் திடீரெனப் பார்ப்பனர் அல்லாதார் நலம் நாடுவதற்காக நீதிக்கட்சி என்றொரு கட்சியைத் தோற்றுவித்ததைக் காணுகின்றோம். ஆகவே இன்னமும் பார்ப்பனர்கள் தங்களின் இனநலம் தேடுகின்ற முயற்சி இருக்கிறது. அதற்குப் பரிகாரம் காணவேண்டிய முயற்சி நம்மைப் போன்றவர்களைப் பொறுத்துள்ளது. நாயர் தனிக்கட்சி தோற்றுவித்ததற்குரிய காரணம் இன்னமும் தெளிவாகவே நாட்டில் காணப்படுகிறது. தேச சேவையில் ஈடுபட்ட காங்கிரஸ் செயலாளராகவும், தலைவராகவும் இருந்த அனுபவத்தைக் கொண்டே இதனை இங்கே குறிப்பிடுகின்றேன்

என்று பெரியார் பேசினார்.

ஜாதி வேறுபாடு கூடாது

பெரியார் எப்பொழுதும் எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்கவேண்டும் என்பதிலே கண்ணுங் கருத்துமாக இருந்தார். வாயடியும், கையடியுமுள்ள மக்கள் ஏழை எளியவர்களின் வாழ்வைச் சூறையாடி, ஒரு குறிப்பிட்ட சமூகம் திறமை என்ற பெயரால் தங்களை வளப்படுத்திக் கொள்வதைப் பெரியார் குடியரசின் முதல் வெளியீட்டில் கூட வெளியிட்டுள்ளார்.

> ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும் . இதை அறவே விடுத்து வெறும் 'தேசம், தேசம்' என்று கூக்குரலிடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று. மக்களுக்குள் சுயமரியாதையும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும். உயர்வு தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இந்த ஜாதிய உணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர்களும் ஒன்றென்று எண்ணும் அறிவு மக்களிடம் வரவேண்டும்

என்று பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

இட ஒதுக்கீட்டுத் தீர்மானம்

இந்த நிலையில் ஈ.வெ.ரா. மற்றும் எஸ். இராமநாதன் ஆகியோர் மாநாட்டில் ஒரு தீர்மானம் கொடுத்தனர். அந்தத் தீர்மானம் என்ன என்பதைத் திரு.வி.க. தமது 'திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்பில்' பதிவு செய்துள்ளார். அந்தத் தீர்மானத்தில்

> தேசிய முன்னேற்றத்திற்கு இந்து சமூகத்திலுள்ள பற்பல ஜாதிகளுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையும், வேற்றுமை இன்மையும் ஏற்படவேண்டுவது அவசியமாகும். ஆகவே ராஜிய சபைகளிலும், பொது நிறுவனங்களிலும் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் மற்றும் தீண்டத் தகாதவர்கள் எனப்படும் இந்த மூன்று பிரிவினருக்கும் தனித்தனியாக ஜனத்தொகை அடிப்படையில் தங்கள் சமூகத்திலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை தரப்பட வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

என்ற தீர்மானத்தைத் தந்தனர்.

திரு.வி.க. புறக்கணித்த தீர்மானம்

இந்த மாநாட்டின் தலைவராக இருந்தவர் திரு.வி.க. இந்தக் காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டிற்குக் காங்கிரஸ் கொடி ஏற்றித் தொடங்கி வைத்தவரே ம. சிங்காரவேலர்தாம். இந்த மாநாட்டில் ஜி. சுப்பிரமணிய அய்யர், எஸ். சத்தியமூர்த்தி அய்யர், சி. இராஜகோபாலாச்சாரி போன்ற பார்ப்பனர்களே மிகுதியாக இருந்து காங்கிரசில் ஆளுமை செலுத்தி வந்தனர். அவர்கள் நினைத்தவற்றை மட்டுமே, விரும்பியதை மட்டுமே தீர்மானமாக அனுமதித்தனர். இந்த மாநாட்டில் சிங்காரவேலரே ஒரு தீர்மானம் கொடுத்திருந்தார். அதனை இராஜாஜி எப்படி புறக்கணித்தார் என்பது நாம் நுட்பமாக அறிய வேண்டிய ஒன்றாகும்.

> இங்கு வந்துள்ள ஜி. சுப்பிரமணிய அய்யர் சுயராயக் கட்சியின் தலைவர். அவரின் கீழ்தான் ம.சிங்காரவேலர் சுயராஜ்யக் கட்சியில் செயல்படுகிறார். ஜி.சுப்பிரமணிய அய்யரே சுயராஜ்யக் கட்சி சார்பாகத் தீர்மானங்கள் தேவை இல்லையென்று தீர்மானம் தந்து விட்டபின்னர், சிங்காரவேலர் தனியாக, சுயராஜ்யக் கட்சி சார்பாகத் தீர்மானம் தருவது தேவை இல்லை

என்று தீர்மானத்தையே இராஜாஜி மிக மிக நுட்பமான காரணம் காட்டிப் புறக்கணித்து விட்டார். அந்த மாநாட்டில் பார்ப்பனர்கள் விரும்பியது மட்டும் நடைபெற்றது. விரும்பாதவை புறக்கணிக்கப்பட்டன.

இந்த நிலையில் மாநாட்டின் தலைவராக இருந்த திரு.வி.க. பெரியார், எஸ். இராமநாதன் கொண்டு வந்த நியாயமான தீர்மானத்தையே புறக்கணித்தார். காரணம் திரு.வி.க. என்பவர் மேதை என்றாலும், தொழிற் சங்க உணர்வுடையவர் என்றாலும் எப்பொழுதும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசாதவர். நளினமான நாகரிக அரசியல்வாதியவர். வெளிப்படையாகத் தம்மை ஒரு கம்யூனிஸ்டு என்று சொல்லிக் கொண்ட சிங்காரவேலரிடம் இருந்த ஒரு வெறுப்புணர்ச்சியே திரு.வி.க.வை அந்த நிலைக்கு ஆட்படுத்தியது.

இப்பொழுது பெரியார், எஸ். இராமநாதன் தந்த அற்புதமான தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளத் திரு.வி.க. மறுத்தார். திரு.வி.க. ஆன்மீகவாதி என்பது மட்டுமல்ல, மிகுதியான பார்ப்பனர்களின் வெறுப்பைச் சம்பாதிப்பது நல்லதல்ல என்று

முடிவெடுத்தார். ஆகவே இப்பொழுது திரு.வி.க. பெரியார், எஸ். இராமநாதன் தீர்மானத்தை மறுப்பதற்கு ஒரு நுட்பமான காரணத்தைக் கூறினார். இத் தீர்மானம் 'விஷயாலோசனை கமிட்டியில்' அடிபட்டுப்போனது. ஆகவே இந்தத் தீர்மானத்தை ஏற்க முடியாது எனத் திரு.வி.க. கூறினார்.

மேலும் இப்பிரச்சினை சுயராஜ்யக் கட்சிக்குரியது, இந்த நிலையில் காங்கிரஸ் இதைப்பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லை என்றும் கூறித் தீர்மானத்தைப் புறக்கணித்தார். திரு.வி.க. போன்றவர்களே பார்ப்பனர் சார்பாகச் செயல்படுவதைப் பெரியார் விரும்பவில்லையென்பதுடன் கோபமும் கொண்டார். இதைப் போன்ற நடைமுறைக்குப் பயன்படாத போக்குகளால் பார்ப்பனர் அல்லாதாருக்கு நன்மை செய்ய முடியாதென்று முடிவெடுத்த பெரியார் மூன்று பேர்களுடன் காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டைவிட்டு வெளியேறினார். 'பார்ப்பன தர்மத்தை ஒழிப்பேன், அவர்களுக்குச் சார்பாக உள்ள காங்கிரசை ஒழிப்பேன், இவர்களுக்கு ஆதரவான வர்ணாசிரமப் பிடிப்புடைய காந்தியக் கொள்கைகளையும் ஒழிப்பேன்' என்ற சூளுரையுடன் பெரியார் மாநாட்டை விட்டு வெளியேறினார்.

தனிக் கூட்டம் நடத்தல்

பெரியார் கூறியதில் உள்ள நியாயத்தை உணர்ந்த எஸ். இராமநாதன், சுரேந்திரநாத் ஆர்யா, சக்கரைச்செட்டியார், டி.ஏ. இராமலிங்கச் செட்டியார் என்போர் பெரியாருடன் மாநாட்டைவிட்டு வெளியேறினர். இந்தச் சூழலில் பெரியார் பிரிட்டிஷ் கொடுமையைவிடப் பார்ப்பனக் கொடுமை இன்னும் கடுமையானது. பிரிட்டிஷாருடன் விடுதலைக்குப் போராடுவதைக் கூடக் கொஞ்ச நாள் தள்ளிப் போடலாம். அவசியமான, அவசரமான தேவை நாட்டில் பார்ப்பன ஒழிப்புதான் என்ற முடிவுக்கும் சென்றார்.

வெகுண்டெழுந்து காங்கிரஸ் மாநாட்டிலிருந்து வெளியேறிய பெரியார் காஞ்சிபுரத்திலேயே காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலுக்கு அருகிலேயே போட்டியாக ஒரு மாநாட்டைப் பார்ப்பனர் அல்லாதார்-காங்கிரஸ்காரர்கள் மாநாட்டை நடத்தினார். பார்ப்பனர்கள் எங்கிருந்தாலும் தங்கள் நலத்தை மட்டுமே எப்பொழுதும் கருதுகின்றனர். தமிழர் நலத்தை அவர்கள் முற்றாகப் புறக்கணிக்கின்றார்கள். ஜாதி அடிப்படையில் வகுப்புரிமை தராதது அநீதி எனப் பெரியார் நினைத்தார். இதைக் காங்கிரசிலுள்ள பார்ப்பனர்களும், மதவாதிகளும் வேண்டுமென்றே பார்ப்பனர் அல்லாதார் உரிமைகளை

மறுக்கின்றனர். காங்கிரஸ் பார்ப்பனர்கள் புண்ணை மூடி வைத்து அதற்குப் புனுகு பூசும் வேலையைச் செய்து மேலும் சிக்கல்களை ஏற்படுத்துகிறார்கள். ஆகவே தமிழர்களுக்குத் தனித்த அமைப்பொன்று மிகமிக அவசியமெனப் பெரியார் முடிவெடுத்தார். தமிழர் நலத்திற்கெனச் சுயமரியாதை இயக்கம் என்ற அமைப்பைத் தோற்றுவித்துக் காங்கிரசிலிருந்து பிரிந்து வெளியேறிய தோழர்களைக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் மிக விமரிசையாக நடத்த ஆரம்பித்தார்.[1]

தென்னிந்திய இரயில்வே வேலை நிறுத்தம்

1918லேயே நாகபட்டினத்தில் ஓர் இரயில்வே தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த இரயில்வே ஒர்க்ஷாப் மிகப் பெரியது. அந்தத் தொழிற்கூடம் மிக நன்றாகவும் இயங்கிவந்தது. அக்காலத்தில் தோழர் பக்கிரிசாமிப் பிள்ளை மிகப்பெரிய தொழிற்சங்கத் தலைவராக இருந்தார். காங்கிரசின் பெருந்தலைவர்களில் ஒருவராக இருந்த டாக்டர் வரதராஜுலு நாயுடு தொழிற் சங்கம் தொடர்பாகவும் நிறைய அறிந்தவராவார். இவர் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்க உணர்வு ஊற்றெடுக்கப் பேசக் கூடியவராவார். ஆங்காங்கே தொழிற் சங்க அமைப்புகளை ஏற்படுத்தும் பொறுப்பினை மேற்கொண்டு உழைத்த அவர் மதுரை, சேலம், போத்தனூர் போன்ற இடங்களிலும் இரயில்வே தொழிற் சங்கங்களை ஏற்படுத்த முயன்று வந்தார்.

காங்கிரஸ் இயக்க வளர்ச்சிக்காக 1919இல் மகாத்மா காந்தியடிகள் நாகபட்டினம் வருகை தந்தார். இதனால் அப்பகுதியில் அரசியல் உணர்வும், சுதந்திர வேட்கையும் தொழிலாளிகளிடம் ஊற்றெடுத்தன. அப்பகுதி இரயில் தொழிலாளிகளும் அடிக்கடி வருகை தந்த திரு.வி.க. போன்றவர்களும் வந்து பேசித் தொழிலாளர் மத்தியில் நல்லதொரு கிளர்ச்சியை உருவாக்கி இருந்தனர். 1924இல் தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் மாநாடொன்று நாகபட்டினத்தில் விமரிசையாக நடந்தேறியது.

இந்த மாநாட்டிலேயே நிலக்கரி தள்ளுவோர், எஞ்சின் ஓட்டுவோர் தங்களுக்கான கோரிக்கைகளை முன் வைத்தனர். இதன் அடிப்படையில் இரயில்வே நிர்வாகத்திற்குப் பல கோரிக்கைகளை முன் வைத்தனர். கோரிக்கைகள் சரியாகக் கவனிக்கப்படாத நிலையில் தொழிலாளர்கள் அடிக்கடி

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப.154.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். 1924 மே, ஜூன் மாதங்களில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முனைந்தனர். அப்பொழுதைய இரயில்வே தொழிற் சங்கத் தனிப்பெரும் தலைவரான டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு நாகபட்டினம் லோக்கோ ஷெட்டுகளை எல்லாம் பார்வை இட்டார்.

1927இல் ஏற்பட்ட பல போராட்டங்கள் நாகபட்டினம் தொழிலாளர்களை யெல்லாம் உரமேற்றி இருந்தன. தொடர்ந்து நாகபட்டினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடிய மே தின விழாக்களால் தொழிலாளர்கள் உணர்வு பெற்றிருந்தனர். அமெரிக்காவில் கொல்லப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்கள் சாக்கோ, வான்சிட்டி இவர்களுக்கெல்லாம் கண்டன ஆர்ப்பாட்டக் கூட்டங்கள் நடத்தித் தொழிலாளர்கள் நல்ல தொழிற் சங்க உணர்வுடன் இருந்தனர்.

இந்த நேரத்தில்தான் வெள்ளையர்களுக்கு உரிமையுடைய இரயில்வே நிர்வாகம் வேண்டாத சில நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தது. முதலாளிகளுக்கும், முதலாளித்துவத்திற்கும் ஒரு பண்புண்டு. வருகின்ற இலாபத்தைத் தொழிலாளிகளுக்கும் கொடுத்து, தாங்களும் வாழவேண்டும் என்பது நல்ல மனிதத் தன்மை. முதலாளித்துவமே அனைத்துத் தொழிலாளிகளையும் வஞ்சித்துத் தங்களை மட்டுமே வாழவைத்துக் கொள்ள நினைக்கும். நாகபட்டினம் இரயில்வே நிர்வாகத்தினர் அனைவருமே வெள்ளைக்காரர்கள். ஆகவே தொழிலாளர்களை வஞ்சிப்பது, ஆட்குறைப்பு செய்வது, தொல்லை தரும் தொழிலாளிகளை இடமாற்றம் செய்வது, இவையே நிர்வாகத்தின் செயல்பாடுகளாக இருந்தன.

1927இல் நாகபட்டினம் இரயில்வே நிருவாகம் சிக்கனச் சீரமைப்பு, ஆட்குறைப்பு ஆகியவற்றைக் கடைப்பிடிக்கத் தொடங்கிற்று. பல ஊர்களில் இரயில்வே தொழிற்சாலைகள் உள்ளதால் நிறைய முயற்சியும் பொருள் விரயமும் ஏற்பட்டன. இவையெல்லாம் ஒரே இடத்தில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென நிர்வாகம் நினைக்கத் தொடங்கியது. நாகபட்டினம், போத்தனூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இருந்த இரயில்வே தொழிற்சங்க இடங்களையெல்லாம் கொண்டு வந்து பொன்மலையில் வைத்து விட்டால் நன்றாக இருக்குமென இதுவரை பேசிவந்த நிர்வாகம் இப்பொழுது அதனைச் செயல்படுத்தவும் தொடங்கிவிட்டது.

இதனால் வரப்போகின்ற இடையூறுகளை நினைத்துத் தொழிலாளர்கள் கவலைப்பட ஆரம்பித்தனர். இந்தத் திட்டம்

செயல்பாட்டிற்கு வந்துவிடக் கூடாதே என அஞ்சவும் செய்தனர். பொன்மலைக்கு ஓர்க்ஷாப்பை மாற்றக் கூடாதெனப் பேசிய தொழிலாளர்கள், இப்பொழுது ஆர்ப்பாட்டமும், கண்டனக் கூட்டங்களும் நடத்தத் தொடங்கினர். எக்காரணம் கொண்டும் ஆட்குறைப்பு இருக்கவே கூடாது என எச்சரிக்கவும் செய்தனர். 1927 செப்டம்பரில் இரயில்வே குழுமத்தின் முகவர் ஆட்குறைப்பு இருக்குமென அறிவித்தார். இதனை எதிர்த்த தொழிலாளர்கள் நாகபட்டினத்தில் முதன்முறையாக வேலை நிறுத்தம் செய்தனர். நாகபட்டினம் மிகுதியான தொழிலாளர்கள் நிரம்பிய பகுதியாகும். விவசாயிகளும், மீனவர்களும் இரயில்வே தொழிலாளிகளும் நிரம்பிய ஊர் நாகபட்டினம். ஆகவே 1927இல் தொழிலாளிகள் ஏற்பாடு செய்த வேலை நிறுத்தத்திற்குப் பொது மக்களும் மிகுதியான ஆதரவை வாரி வழங்கினர்.

மக்கள் மத்தியில் பேரியக்கமாக இருந்த தலைவர் ஈ.வெ.ரா.வும் வலிய வந்த தொழிலாளர்களுக்கு ஆதரவளித்து மேடைகளில் ஏறிப் பேசவும் செய்தார். இந்த நிலையில் சென்னை மாநில அரசு இரயில்வே நிருவாகத்திற்கு ஆதரவாகத் தொழிலாளர்கள் எக்கூட்டத்தையும் நடத்தக் கூடாதென்ற தடை யுத்தரவையும் பிறப்பித்தது. தடையை மீறிப் பேசவந்த பெரியார் பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டார். வழக்கு விசாரணையின்போது அரசாங்கம் அவர் மேலுள்ள வழக்கைத் திரும்பப் பெற்றது.

ஆனாலும் பிரிட்டிஷ் அரசு ஆங்கில இரயில்வே கம்பெனிக்கு ஆதரவாக நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியது. 1928இல் 3,200 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய இருப்பதாக இரயில்வே நிருவாகம் அறிவித்தது. தாமாகவே வேலையிலிருந்து விலகுபவர்களுக்கு நிறையச் சலுகைகள் செய்கிறோமென முகவர்கள் ஆசைகாட்டினர். வேண்டாத தொழிலாளர்களை நீக்குவதற்காகத் தேர்வு ஒன்றை நடத்த இருப்பதாகவும் அதில் தேறியவர்கள் மட்டுமே பணியில் நிரந்தர மாக்கப்படுவர் எனவும் நிருவாகம் அறிவித்தது. தொழிலாளர்கள் தங்களுக்கு வர இருக்கின்ற ஆபத்தை உணரத் தொடங்கினர். இதன் அடிப்படையில் பல்வேறு நிலைகளாகச் சிதறிக் கிடந்த தொழிலாளர்கள் அனைவரும் ஓரணியில் ஒன்றாகத் திரண்டனர். அரசினுடைய வேண்டாத இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையால் தொழிலாளர்கள் ஒன்றாகத் திரண்டனர்.

தகுதியான தலைமை ஒன்று தற்காலிகமாகத் தேவையென உணர்ந்த தொழிலாளர்கள் அப்பொழுதைக்கு டி. கிருஷ்ணசாமிப்

பிள்ளையின் தலைமையில் கீழ் ஒரு மத்திய வேலை நிறுத்தக் குழுவை அமைத்துக் கொண்டனர். ஓர் அமைப்பாகத் திரண்டு போராடினாலன்றி இனித் தங்களைத் காப்பாற்றிக் கொள்ள முடியாதென்பதைத் தொழிலாளர்கள் உணர்ந்தனர். ஆட்குறைப்புக்கு எதிரான ஒரு போராட்டக் குழுவை அமைத்துக் கொள்ள முயன்றனர்.

இந்தப் போராட்ட உணர்வைக் குலைக்க நினைத்த அரசுக்கு ஆதரவான தொழிற் சங்கத் தலைவர்களான பி. சிவராவ், சிர்க் போன்ற தலைவர்களைப் பிரச்சினையில் தலையிடச் செய்தது. ஆனாலும் உணர்வுடைய தொழிலாளர்கள் அரசின் இத்திட்டங்களுக்கு உட்பட மறுத்தனர். நிலைமைகள் மோசமாக ஆகிவிட்ட பின்னர் இப்பொழுது ம.சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்காரும் வந்து வேலை நிறுத்தக் குழுவிற்குள் நுழைந்தனர்.

ம.சிங்காரவேலர் வட இந்திய இரயில்வே போராட்டத்திற்குப் பின்னர்த் தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்களுக்குப் போதுமான அளவிற்கு எச்சரிக்கையும் செய்திருந்தார்.

> இது போராடுவதற்குரிய காலமல்ல; சூழல்களும் நமக்குச் சாதமாக இல்லை. தொழிலாளர்கள் பலரும் ஜாதிய உணர்வுடையவர்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் பலரும் தொழிற்சங்க அமைப்பைச் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் அல்லர். கூலி உயர்வைப் பற்றி மட்டுமே கவலைப்படுகின்ற இந்தத் தொழிற்சங்கத் தலைவர்களை நம்ப முடியாது. இங்குள்ள பல தொழிற்சங்கத் தலைவர்களும் ஜாதிய மேலாண்மைக்குக் கட்டுப்பட்டவர்கள். இந்தச் சூழலில் வேலை நிறுத்தம் தேவை இல்லை.

என்று சிங்காரவேலர் எவ்வளவோ எச்சரித்தாலும் சிறு பிள்ளை விட்ட வேளாண்மை வீடு வந்து சேராது என்பதற்கிணங்கத் தொழிலாளர்கள் சிங்காரவேலரின் எச்சரிக்கையையும் புறக்கணித்து விட்டு வேலை நிறுத்தத்தைத் தொடங்கி விட்டனர். வேறுவழி இல்லாமல் தொழிலாளர்களைக் காக்க வேண்டிய பொறுப்பில் இருந்த சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்காரும் தீவிரமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு உழைக்க ஆரம்பித்தனர். இந்த நிலையில் தொழிலாளர்கள் தங்கள் சொந்தப் பலத்தில் நிற்பதுடன், பொதுமக்களின் பேராதரவையும் பெற்றிருப்பது

அவசியமென்பதையும் உணர்த்தினர். வட இந்திய இரயில்வே போராட்டத்தின் வெற்றியே அப்படி அமைந்ததுதான் என்பதையும் சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்காரும் தொழிலாளர்களுக்குத் தெளிவாக உணர்த்தினர்.

தொழிலாளர் மறுப்பு

1928 ஜூன் மாத இறுதிக்குள்ளாகத் தொழிலாளர்கள் தங்களுக்குரிய தொழில் திறமை பரிசோதனைக்கு உட்பட வேண்டுமென இரயில்வே நிருவாகம் வற்புறுத்தியது. போத்தனூர், நாகபட்டினம் தொழிலாளர்கள் தொழில் திறமை பரிசோதனைக்கு உட்பட மறுத்தனர். இத்திட்டத்தை உடனடியாக நிருவாகம் திரும்பப் பெற வேண்டுமெனவும் தொழிலாளர்கள் வற்புறுத்தினர். முரட்டுத் தனமான இரயில்வே நிருவாகம் தொழிலாளர் அத்தனை பேரையும் தொழிற் கூடங்களிலிருந்து வெளியே தள்ளிக் கதவடைப்புச் செய்தது. இச்செய்தி அனைத்துத் தொழிலாளர்களிடமும் காட்டுத் தீயைப் போலப் பரவியது. சிக்னல் தொழிலாளர்களும், ஓட்டுநர்களும், இரயில் கரி தள்ளுபவர்களும் இப்பிரச்சாரப் பணியை ஒரு கடமையாகவே செய்தனர்.

வேலை நிறுத்தம் தொடங்கியது

30.6.1928இல் முகுந்தலால் சர்க்கார் தலைமையில் திருச்சிராப்பள்ளியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. 'இரயில்வே நிருவாகம் உடனடியாக வேலை நிறுத்தத்தை நீக்கிக்கொள்ள வேண்டும். திறமைக்கான சோதனையையும் உடன் நீக்கிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் 14.7.1928 முதல் வேலை நிறுத்தம் தொடங்குமெனத் தென்னிந்திய ஏஜெண்ட் ரோத்ராவுக்கு எச்சரிக்கையும் விடப் பட்டது. மெத்தனமாக இருந்த நிருவாகத்திற்குத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த இறுதி நாளை மேலும் ஒரு மாதத்திற்கு ஒத்தியும் வைத்தனர். முகவர் ஆணவத்துடன் தொழிலாளர் வேண்டு கோளைப் புறக்கணித்தார். வேறு என்ன செய்வது என்பதை அறியாத தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தை 19.7.1928 நள்ளிரவில் தொடங்கினர்.

இரகசியக் குறிப்புகள்

இந்த வேலை நிறுத்தம் குறித்துச் சென்னை அரசாங்கம் என்ன நினைத்தது என்பதை அரசின் நிருவாக அறிக்கை அரசு ஆணை 928, பொது இரகசியக் குறிப்பு 22.10.1928, தமிழ்நாடு, ஆவணக் காப்பகக் குறிப்புகளினால் அறிகிறோம்.

தென்னிந்திய இரயில்வேயில் விரைவில் வேலை நிறுத்தம் தொடங்கலாம். தொழிலாளர்கள் மிக மிக உற்சாகத்துடன் இருக்கின்றனர். தைரியமாகவும் இருக்கின்றனர். மிதவாதிகளான தொழிற்சங்கத் தலைவர்களின் யோசனைகளைக் கேட்டுக்கொள்ளத் தொழிலாளர்கள் மறுக்கின்றனர். இதற்கு மேலும் இரண்டு கம்யூனிஸ்டு தலைவர்கள் தொழிலாளர்களை ம.சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்காரும் வழி நடத்துகின்றனர். இவர்கள் இருவரும் 1928 ஜனவரியில் நடந்த தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள்.

என இரகசியக் காவலர்கள் குறிப்பெழுதி வைத்துள்ளனர்.

தொழிற்சங்கத்தில் தொழிலாளர்கள் எப்படி செயல் பட்டனர் என்பது தொடர்பான குறிப்புகளும் காவலர்கள் எழுதி யுள்ளனர். 1928 ஜூன் மாதத்தில் தொழிலாளர் சத்தியாக் கிரகத்தால் தவிர்க்க முடியாத நிலையில் கதவடைப்பும் ஏற் பட்டது; இருந்தும் இன்னமும் தொழிலாளர்கள் ஓரணியில் சேராது சிதறியே பல்வேறு அமைப்புகளாக இருந்தனர். இது நன்றாக இருக்காது என்பதால் தொழிலாளர்களில் சில முனைப்பான தோழர்கள் தொழிலாளர்களின் பல்வேறு இருப்பிடங்களுக்குச் சென்று தொழிலாளர்களின் குடும்பத் தவர்களுக்கு நல்ல தைரியத்தை ஊட்டினர். தொழிலாளர்களின் மனைவியர்கள் தைரியமூட்டப்பட்டனர். அனைத்துத் தொழி லாளர்களின் ஆதாரவைத் திரட்டுவதற்காகத் தொழிலாளர்கள் நாலாப் பக்கங்களுக்கும் அனுப்பப்பெற்றனர்.

பலவீனமான பகுதிகளுக்கு நல்ல பேச்சாளர்களைத் தேர்வு செய்து அங்கெல்லாம் சென்று சிறப்பாகப் பேசித் தொழி லாளர்களை ஒருங்கிணைக்கும் பணியைச் சிறப்பாகச் செய்தனர். இத்தனை செயல்பாட்டிற்கும் ம. சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்காரும் கல்கத்தா இரயில்வே ஏஜெண்டுகள் எவ்வளவோ தந்திரமாகக் காலங் கடத்தல், ஒத்திப்போடல் போன்ற யுத்திகளைப் பயன்படுத்தினாலும் இந்த இரு தலைவர்களின் செயல்பாட்டால் வேலை நிறுத்தத்தை 19.7.1928 அன்று நள்ளிரவில் தொடங்கி விட்டனர் என இரகசியக் காவலர்கள் குறிப்பெழுதினர்.

இரயில் ஓட்டும் டிரைவர்கள், கரி அள்ளிப் போடும் ஊழியர்கள் ஆகியவர்கள் தொடக்கத்தில் நிருவாகத்திற்கு

ஆதரவாகவே செயல்பட்டனர்; ஆகவே தொடக்கத்தில் இரயில்கள் எல்லாம் ஒழுங்காகவே ஓடின. திடீரென எதிர்பாராத வகையில் நாச வேலைகள் நிறைய நடைபெற்றன. நிறையச் சேதங்கள் ஏற்பட்டன. மோசமான கோர விபத்துகளும் நடைபெற்றன. இதன் விளைவாகத் தொடக்கத்தில் வேலை நிறுத்தத்திற்குப் பொதுமக்களின் ஆதரவு மிகவும் குறைந்து போனது.

இந்த நிலையில் அரசு விழிப்படைந்து தொழிலாளர் செயல்பாட்டிற்கு இரண்டு தலைவர்கள்தாம் பெருங் காரணமெனக் கண்டனர். எரிவதை இழுத்தால் கொதிப்பது நின்று விடும் என்பதற்கேற்ப இதற்குக் காரணமான சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார் இருவரையும் கைது செய்தனர். இந்தக் கைதுகளுக்குப் பின்னர்த் தொழிலாளர்கள் பெரிதும் அஞ்சினர். இயக்க வழிகாட்டுதலுக்கு இரண்டாங் கட்டத் தலைவர்கள் இல்லாத நிலையில் தொழிலாளர்கள் திகைத்தனர். நிருவாகமும் இப்பொழுது சாம, பேத, தான, தண்டம் என்ற யுக்திகளைப் பயன்படுத்தித் தொழிலாளர்களை நசுக்க ஆரம்பித்தது. [1]

தென்னிந்தியாவை நடுங்க வைத்த பத்து நாள்கள்

வேலை நிறுத்தம் பத்து நாள்கள் வரை நடந்தது என அறிகிறோம். அந்தப் போராட்டம் எந்தப் போராட்டத்தையும் விட மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய போராட்டமாகும். இந்தப் போராட்டத்தைத்தான் அரசு அந்த ஆண்டின் மிகப் பெரிய நிகழ்வாகப் பதிவு செய்துள்ளது. நியாயமான கோரிக்கைக்காகத் தொழிலாளர்கள் இணைந்து நடத்திய உன்னதமான போராட்டமென மக்கள் பதிவு செய்துள்ளனர். இந்தப் போராட்டத்தில் இந்த இருபெரும் தலைவர்களின் செயல்பாட்டால் சாதாரண ஊழியர் முதல் பெரும் பெரும் அதிகாரிகள் வரை இயக்கச் செயல்பாட்டில் துணை நின்றனர். சில அதிகாரிகளும் சில ஆங்கிலோ இந்தியர்களும் பிரட்டிஷ் அரசின் விசுவாசத்தால் வேலை நிறுத்தத்திலிருந்து விலகி நின்றனர். மற்ற தொழிலாளர் களெல்லாம் இயக்கத்திற்கு உற்ற துணையாக நின்றனர். இரயில்கள் வரும் வழியில் பெரும் பெரும் கற்பாறைகளை உருட்டி விட்டனர். டிரைவர்கள் வேண்டுமென்றே இரயில் எஞ்சின்களைப் பாறைகள் மீது மோதினர். வேண்டுமென்றே இரயில் பெட்டிகளைக் கழற்றி விட்டனர். பல இரயில் பாதைகளிலும் தடைகளை ஏற்படுத்தி மெயில், பாசஞ்சர்

---

1. நாகை கே. முருகேசன், சி.எஸ். சுப்பிரமணியம், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, ப.115-118.

இரயில்களை எல்லாம் தடுத்து நிறுத்தினர். சாதாரண வண்டிகள், விரைவு வண்டிகள் அனைத்தும் ஓடாது நின்றன.

நிருவாகம் இப்பொழுது காவலர்கள் துணையுடன் இரயில்களை ஓட்ட முயன்றது. தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு தங்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்தால் அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தினர். தொழிலாளர்கள் சில வேளைகளில் தண்டவாளத்தின் குறுக்கே படுத்து இரயில்களை நிறுத்தினர். ஆத்திரம் கொண்ட காவலர்கள் இப்பொழுது நிருவாகத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டனர். காவலர்கள் தொழிலாளர்களைத் தடியால் தாக்கினர். துப்பாக்கி முனையால் குத்தினர். தொழிலாளர்களின் போராட்டம் உக்கிரமான பொழுது காவலர்கள் அரசுக்கு ஆதரவாக நின்றனர். நிறைய இடங்களில் தொழிலாளர்கள் மீது காவலர்கள் துப்பாக்கிச் சூடும் நடத்தினர். பல தொழிலாளர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றனர். 1928 ஜூலை 21ஆம் நாளில் இரயில்வே நிருவாகம் அனைத்து வண்டிகளையும் நிறுத்தியது.

இப்பொழுது இரயில்வே நிருவாகம் அரசுடன் இணைந்து கொண்டது. எப்படியும் வேலை நிறுத்தத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று முடிவெடுத்தது. நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் சிக்கல் என்று வருகின்றபொழுது அரசு நடுநிலையில் நின்று செயல்பட்டால் நிச்சயம் உரியவர்களுக்கு உரிய நியாயம் கிடைக்க முடியும். ஆனால் அரசே ஒரு தலைப்பட்சமாகச் செயல்படும்பொழுது நியாயம் செத்து விடுகிறது. இப்பொழுதும் நிலைமைகள் அப்படித்தான் ஆயின.

இதற்குக் காரணமான சிங்காரவேலரையும், முகுந்தலால் சர்க்காரையும் 23.7.1928இல் அரசு கைது செய்தது. இதன் பின்னர்த் தொடர்ந்து பல தொழிற் சங்க நிர்வாகிகள் அனைவரையும் ஈவு இரக்கமின்றி அரசு கைது செய்தது. மிதவாதத் தலைவர்களான அன்னிபெசண்ட் போன்றவர்களை அரசு இப்பொழுது இயக்கத்தில் நுழைத்தது. நிருவாகமும், அரசும் இந்தத் தொழிற் சங்க இயக்கத்தை ஒடுக்க ஜாதியம் என்னும் நுட்பமான கருவியைத் திறமையாகப் பயன்படுத்தியது. தொழிலாளர்கள் மத்தியில் ஜாதியப் பிளவுகளை ஏற்படுத்தியது. ஆங்கிலோ இந்தியர்கள் நிருவாகத்திற்கு ஆதரவாகத் திரட்டப்பட்டனர்.

தொழிலாளர்களின் அனைத்துத் தலைவர்களும் கைது செய்யப்பட்டதுடன் அனைத்து அலுவலகங்களும் சோதனையிடப்பட்டன. அரசுக்கு எதிரான அனைத்துத் தரவுகளும் திரட்டப்பட்டன. இரயில்வே தொழிலாளர் இயக்கம் நடத்திய பத்திரிகையான ‘தொழிலாளி’ என்னும் ஏட்டைச்

சோதனை என்னும் பேரால் முடக்கி முடமாக்கினர். பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

நியாயம் வேண்டுமென்று திரண்டு ஊர்வலம் சென்ற தொழிலாளர்கள் திட்டமிட்டே மிருகத்தனமாகத் தாக்கப் பட்டனர். இயக்கத்திற்குத் தலைவர்களே இல்லையென்கின்ற அளவிற்கு அனைத்துத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். இப்பொழுது அரசாங்கம் நேரடியாகவே இரயில்வே இயக்கத்திற்குத் துணைசெய்தது. மேல் ஜாதிக்காரரர்கள் தெளிவாகவே இப்பொழுது நிருவாகத்திற்கு ஆதரவாக மாறினர். பலவகையான தந்திரமான உபாயங்களைக் கையாண்டு அரசும், நிருவாகமும் தொழிலாளர்களையும், தொழிற்சங்க இயக்கத்தையும் தோற்கடித்தது. வீரஞ் செறிந்த தென்னிந்திய இரயில்வே போராட்டம் தந்திரமான ஜாதியத்தால் வீழ்ந்தது.

இந்தப் போராட்டத்தைச் சி.எஸ். சுப்பிரமணியம் அவர்கள்

> இரத்தத்தால் எழுதப்பட்ட போராட்டம், நீண்ட காலம் சிறைவாசம் பெற்றவர்களால் நிகழ்த்தப்பட்ட போராட்டம், காவலர்களின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்குள்ளான போராட்டம், எண்ணற்ற தொழிலாளர்களில், உடல்களின் தழும்புகளால் எழுதப்பெற்ற போராட்டம், அரசினுடைய தடையற்ற கட்டுப்பாடான அடக்குமுறையால் தோற்றது.

எனப் பதிவு செய்கின்றார். இதனையே பேரறிஞர் அண்ணா 'ஜாதியத்தால் தோற்ற போராட்டம்' எனப் பதிவு செய்கிறார். தென்னிந்தியாவைக் குலுக்கிய பத்து நாள்கள் போராட்டம் அரசின் அடாவடித் தனத்தால் நிருவாகத்தின் தந்திரத்தால் ஜாதிய இராஜ தந்திரத்தால், தென்னிந்திய இரயில்வே போராட்டம் தோற்றது.

இந்தப் போராட்டத்தின்போது இதன் விளைவுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் மட்டுமல்லாது வட இந்தியாவின் பல பகுதிகளிலும் இந்தப் போராட்டத்தை ஆதரித்துப் போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டத்தில் சிங்காரவேலரின் செயல்பாடுகள் அளவில்லாமல் இருந்தன. சிங்காரவேலரை நேரடி எதிரியாகவே கருதும் நிலை ஏற்பட்டது. கப்பல் ஓட்டிய தமிழன் வ.உ.சி.யின் மீது ஆங்கிலேயர்களுக்கு மிகப்

பெரிய கோபம் உருவானதற்கு அவரின் சாதுர்யமான பேச்சுதான் காரணமென்பர்.

> நம்மை ஆளும் ஆங்கிலேயர்கள் எண்ணிக்கையில் 5,000 பேர். ஆளப்படும் நாமோ 30 கோடிக்கும் மேலானவர்கள். அத்தனை பேரும் காறி உமிழ்ந்தால் அதிலேயே ஆங்கிலேயர்கள் அழிந்துபோவார்கள்

எனப் பேசுவாராம்.

இந்தப் பேச்சிற்குப் பின்னர்த்தான் ஆங்கிலேயர்கள் தூத்துக்குடியில் இரவைக் கடலில் உள்ள கப்பலில் கழித்தார்கள். வ.உ.சி.யைப் போலச் சிங்காரவேலர் மீது அளவுக்கதிகமான கோபத்திற்குக் காரணம் சிங்காரவேலரின் செயல்பாடுகள்தாம். இந்தியாவில் இருபெரும் சக்திகள் தொழிலாளர்களும், விவசாயிகளும். இந்த இரண்டு சக்திகளையும் ஒன்றாக இணைத்து இயக்கம் நடத்த முனைந்தவர் சிங்காரவேலர். இந்த இரு சக்திகளும் இணைந்தால் என்னாகும் என்பதை இந்தியர்கள் இன்றளவும் உணரவில்லை. ஆனால் அன்றைக்கு இந்த இரு சக்திகளின் ஆற்றலைத் தெளிவாக உணர்ந்தவர்கள் ஆங்கிலேயர்கள். விவசாயிகளையும், தொழிலாளர்களையும் ஒருங்கிணைக்க நினைத்து அதற்காகவே செயல்பட்ட சிங்காரவேலர் மீது ஆங்கிலேயர்களுக்குக் கோபம் ஏற்படுவதில் வியப்பு என்ன இருக்க முடியும்?

ஆகவேதான் காந்தியைக் கூட ஏற்றுக் கொண்ட பிரிட்டிஷ் அரசு சிங்காரவேலரைத் தனிப் பெரும் எதிரியாகவே நினைத்தது. வெலிங்டன் போன்ற ஆளுநர்கள் அவரை வாழ்விடத்திலிருந்தும் அப்புறப்படுத்த முயன்று அதில் வெற்றியும் பெற்றனர். தென்னிந்திய இரயில்வே போராட்டம் தோற்றது.

பலவகை குற்றச்சாட்டுகள்

இந்தியக் குற்றவியல் சட்டங்கள் என்னென்ன சொல்கின்றனவோ அப்பிரிவுகளிலெல்லாம் அரசு சிங்காரவேலர் மீது வழக்குத் தொடர்ந்தது. அரசுக்கு இந்த வழக்கில் எல்லாரையும் விடச் சிங்காரவேலர் மீதுதான் அதிகக் கோபம் இருந்தது. ஆகவே பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கைத் தொடர்ந்திருந்தனர். சிங்காரவேலர் மீதும் முகுந்தலால் சர்க்கார் மீதும் கடுமையான வழக்குகள் ஜோடிக்கப்பட்டிருந்தன.

குற்றச்சாட்டுகள்

> கம்யூனிஸ்டு பிரச்சாரம் செய்தது, தொழிலாளர்களைத் திரட்டியது, அரசுக்கு எதிராகத் தொழிலாளர்களைத் தூண்டியது, வன்முறையில் ஈடுபடத் தொழிலாளர்களை ஊக்கப் படுத்தியது, இரயில்வே சொத்திற்கு அளவில்லாத சேதத்தையும், நாசத்தையும் ஏற்படுத்த முயன்றது

என்கின்ற பிரிவுகளில் வழக்குகள் ஜோடிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் சிங்காரவேலரின் நண்பர்கள், வழக்கறிஞர்கள், காங்கிரஸ் தோழர்கள் பலரும் கூடிச் சிங்காரவேலரைப் பிணையில் கொண்டு வந்ததுடன் வழக்கும் நடத்தினர்.

வாதிட்ட வழக்கறிஞர்கள்

இவ்வழக்கில் சிங்காரவேலருக்காக வழக்கறிஞர்கள் ஜார்ஜ் ஜோசப், காங்கிரஸ் தலைவர் எஸ். சத்தியமூர்த்தி, புகழ்பெற்ற வழக்கறிஞர் நியூஜெண்டகிராண்ட், கே.எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், கோயம்புத்தூர் என்.எஸ். இராமசாமி அய்யங்காரும் வழக்காடினர். என்னதான் திறமையாக வழக்காடினாலும், குற்றம் சுமத்தப்பட்டவர் நிரபராதியே என்றாலும் அந்தக் குற்றவாளி அரசுக்கும் எதிரானவர் என்றால் இன்றளவும் நீதிபதிகள் துடித்தெழுந்து, தொடையைத் தட்டி நீதி வழங்குவதையும் பார்க்கிறோம். சிங்காரவேலருக்கு முழுக்க முழுக்க வெள்ளைக் காரர்களின் ஆளுமையில் இருந்த நீதிமன்றங்களும், நீதிபதிகளும் என்ன நியாயமான தீர்ப்பை வழங்கிவிட முடியும்?

தென்னிந்திய இரயில்வே சதி வழக்கில் சிங்காரவேலரும், கல்கத்தாவின் முகுந்தலால் சர்க்காரும் தென்னிந்திய இரயில்வே சங்கத் தலைவரான டி. கிருஷ்ணசாமிப் பிள்ளையும் மேலும் பல தொழிலாளர்களும் அடாவடித்தனத்துடன் வன்முறையிலும் ஈடுபட்டனரெனத் தலா ஒவ்வொருவருக்கும் பத்தாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றனர். குற்றம் சாட்டப்பட்ட இன்னொரு தொழிலாளியான பெருமாள் என்பவர் கடுமையான வன்முறையில் ஈடுபட்டாரெனக் காரணங்கள் கூறி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதாக 30.4.1929 சுதேசமித்திரன் பதிவு செய்துள்ளது. வழக்கில் சம்பந்தப் படுத்தப்பட்ட 19 குற்றவாளிகளில் 15 பேர் மீது கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது.

தந்தை பெரியார் எப்பொழுதும் நீதியின்பாலும், தொழிலாளர்கள் மீதும் பெரும் பரிவு உடையவர். ஆகவே

இதுநாள்வரை சிங்காரவேலரோடு தொடர்பற்றிருந்த பெரியார் இப்பொழுது நீதிக் கட்சியினர் துணையுடன் சிங்காரவேலருக்கு உதவி செய்ய முன் வந்தார். இக்காலக் கட்டத்தில் பெரியாரிடம் இருந்த பல அணுக்கத் தொண்டர்களான முத்துச்சாமி, அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, எஸ்.வி. இலிங்கம் போன்றவர்களெல்லாம் சிங்காரவேலருக்குத் துணைசெய்ய வேண்டுமெனத் தூண்டினர். இதன் காரணமாகவே பெரியார் அவர்களும் அதிகாரத்தில் உள்ள பல நீதிக் கட்சியினர் துணையால் சிங்காரவேலர் தண்டனைக் குறைப்புக்குப் பெரிதும் முயன்றார். அதில் பெரியாரின் உதவியினால் சிங்காரவேலர் தண்டனை குறைக்கப்பட்டுச் சிறையில் இருந்த காலத்தையும் கணக்கிட்டு அக்காலத்தைக் கழித்துக் கொண்டு சிங்காரவேலரை விடுதலை செய்தனர்.

இந்தக் கடுமையான நீதி பரிபாலனத்தைப் பற்றியும் நீதிபதிகளின் எதிர்பார்ப்புப் பற்றியும், நாகை கே. முருகேசனும், சி.எஸ். சுப்பிரமணியமும் கூறுவது வேடிக்கையானதாகும். குற்றவாளிகள் முதலில் அரசுக்கு எதிரானவர்களோ இல்லையோ தன்னலமிக்க இந்தச் சுயநலப் போலி நீதிபதிகளுக்கு முதலில் கடும் எதிரியாகி விடுவார்கள். இவர்களின் நீதி பரிபாலனம் என்பதை ஒன்றை எதிர்பார்த்துத் தன்னலத்திற்காகவே நீதியின் தீர்ப்புகள் அமைந்துவிடுமென்கின்றனர். சிங்காரவேலரைத் தண்டித்த நீதிபதி இலட்சுமணராவின் வரலாற்றைப் பற்றி இருவரும் சுவையாகக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய நீதிபதிகளையும் சரியாகப் புரிந்து கொள்ளும் அரசு அவர்கள் மூலமாகவே அரசு நினைப்பதை யெல்லாம் சாதித்துக் கொள்ளும் என்கின்றனர். இன்றைக்கும் நீதிபதிகளும், அரசும் இத்தகைய போக்கிலேயே நடந்து கொள்வதுதான் வேடிக்கையானது என்கின்றனர் இருவரும்.

சிங்காரவேலரைக் கடுமையாகத் தண்டித்த அந்நாளைய பிரிட்டிஷ் அரசு வெள்ளைக்கார நீதிபதிகளை விட இதைப் போன்ற போலி சுதேசி நீதிபதிகளைத்தாம் அதிகமாக விரும்பினர். சிங்காரவேலரைக் கடுமையாகத் தண்டித்த நீதிபதி இலட்சுமண ராவிற்குப் பிரிட்டிஷ் அரசு உயர் நீதிமன்ற நீதிபதி பதவியைப் பரிசாகத் தந்ததும், வெள்ளைக்காரர்களின் பிரிட்டிஷ் அரசு மட்டுமல்ல இத்தகையவர்களைப் பிற்காலத்தில் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் ஆட்சிகூட விரும்பியதுதான் வேடிக்கையானது என்கிறார் நாகை கே. முருகேசன்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்கள் காலத்தில் நடைபெற்ற பி அண்டு சி வேலை நிறுத்தம் பற்றி விசாரிக்க அதே

இலட்சுமணராவைத்தான் விசாரணைக் கமிஷன் தலைவராக நியமித்தது. பிரிட்டிஷ் நிருவாகத்திற்கும் ஆலை நிருவாகத்திற்கும் சாதகமான தீர்ப்பளித்த இலட்சுமணராவ் 1950களில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சிறைக்குள்ளேயே 22 கம்யூனிஸ்டு கைதிகள் சேலத்தில் கொல்லப்பட்டனர். இதனை விசாரிக்கின்ற பொறுப்பிலிருந்த இலட்சுமணராவ் ‘கைதிகளைச் சுட்டது மிக மிகச் சரியானது’ எனத் தீர்ப்பளித்துக் காங்கிரசின் நன்மதிப்பையும் பெற்றார். பிற்காலத்தில் தொழிலாளர்களின் சச்சரவுகளை விசாரிக்கின்ற நடுவராகவே அரசால் இலட்சுமண ராவ் உயர்த்தப் பெற்றார்.

சுயமரியாதைச் சமதர்மக் கட்சி தொடக்கம்

1932 டிசம்பர் 28, 29 ஆகிய இருநாள்களிலும் சுயமரியாதைச் சமதர்மக் கட்சித் தொண்டர்களை எல்லாம் ஈரோட்டில் கூட்டிப் புதிய இயக்கம் தொடங்கப் பெரியார் திட்டமிட்டார். 300க்கு அதிகமான தொண்டர்கள் வந்து சேர்ந்தனர். இந்தக் கூட்டத்திற்குச் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்குத் தனி அழைப்பைக் கொடுத்தார்.

பெரியார் ரஷ்யாவில் இருந்தபொழுதே சேலம் மாநாட்டில், சிங்காரவேலர் சிறப்பு அழைப்பாளராகச் சென்று அற்புதமாகச் சுயமரியாதைத் தொண்டர்களுக்கு வழிகாட்டி இருந்தார். 7.5.1932 குடியரசில் சிங்காரவேலரின் முழுப் பேச்சும் பதிவாகியுள்ளது. அதில் சிங்காரவேலர்[1]

> ஆதலால் தோழர்களே! நமது நாட்டிலுள்ள 34 கோடி சாமான்ய மக்கள் உண்மைச் சுதந்திரம் பெற்று, பசி இல்லாமலும், மத கற்பனை இல்லாமலும், ஜாதி சமயம் இல்லாமலும், உண்ண, உடுக்க, இருக்க, படுக்க, வசதிகள் யாவருக்கும் சரிநிகர் சமான வாழ்வைப் பெற, சமதர்ம இராஜியத்தை ஸ்தாபியுங்கள். அதற்கு உங்களிடம் உள்ள இடம், பொருள், ஏவல் அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். வேண்டும் சகல சம்பத்துகளையும் துறந்து உழைத்து வாருங்கள். நமஸ்காரம்.

என்று முடித்திருந்தார்.

---

1. முத்து. குணசேகரன், செஞ்சூரியன் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலு, பக்.122-130.

ஏற்கெனவே பெரியாரும் சிங்காரவேலரும் செய்து கொண்ட உடன்பாட்டின்படி சிங்காரவேலர் 'சுயமரியாதை இயக்கச் சமதர்மக் கட்சியாரின் உத்தேசத் திட்டம்' என்ற பெயரில் சிங்காரவேலர் ஒரு திட்டத்தையும் கூட்டத்தின் பரிசீலனைக்கு அனுப்பி இருந்தார். சிங்காரவேலரால் அனுப்பப்பட்ட திட்டம் எனச் சி.எஸ். சுப்பிரமணியம் அதனைக் குறிப்பிடுகின்றார்.

1. தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் அனுப்பப்பட்டது

சுயமரியாதை இயக்கமானது தென்னிந்தியாவில் சென்ற 7, 8 வருஷ காலமாகப் பாமர மக்களிடையே ஏராளமாகப் புதைந்து கிடந்த ஜாதி, மதம், முதலானவற்றைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றியும், பொருளாதாரத் தலைமையின் கீழ்நிலைமையைப் பற்றியும் செய்து வந்த புரட்சிப் பிரச்சாரத்தின் பயனாய் ஒரு பெருத்த உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருப்பதாலும், பகுத்தறிவிற்கு ஏற்காத முறையில் நடை பெற்றுவரும் மேற்கண்ட பழக்க வழக்க முறைகளைச் சட்ட மூலமாகவன்றி வேறு வழியில் ஒழிப்பது என்பது முடியாது என்கின்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதாலும், பாமர மக்களைப் பல அரசியல் ஸ்தாபனங்களும் மத ஸ்தாபனங்களும், சமூகக் கட்டுப்பாடுகளும் அந்தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத்துறையில் ஒடுக்கியும் வைப்பதற்குச் சாதகமான அரசியல் ஸ்தாபனங்களே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும், வட்டமேஜை மாநாட்டின் பயனாயும் இந்து, முஸ்லீம் மாநாடுகளாலும் செய்யப்பட்ட முடிவுகளானது பொது நன்மைக்கு என்று ஏற்படுத்தப்படுகின்ற வசதிகள் தொழில் முறைகள் ஆகியவற்றின் பயன் எல்லாம் தனிப்பட்ட மனிதர்களையே சேரும்படியான வழிக்கே ஆதாரமாக இருப்பதோடு மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு நாசத்தை உண்டாக்கும் கொடுமையான மதக் கோட்பாடுகளுக்கும், மனிதத் தன்மைக்கும் முரணான ஜாதி வித்தியாசங்களுக்கும் ஆக்கம் அளிப்பதாய் இருப்பதாலும், சுயமரியாதை இயக்கத்தாருக்குள் சமதர்மக் கட்சி (Social Party) என்பதாக ஓர் அரசியல் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு அடியிற் காணும் திட்டத்தை வகுத்து, அதன் மூலம் பரிகாரம் தேடுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 1. பொதுஜன சவுரியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களைத் தனிப்பட்ட மனிதர்கள் அனுபவிப்பது என்பதற்கும் ஜாதி, மதச்

சம்பந்தமான கொடுமைகளுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வா முறைகளை இரத்து செய்ய வேண்டும்.

விளக்கம் : பாமர ஜனங்களைப் பொருளாதாரக் கொடுமையில் இருந்தும், மூடப் பழக்க வழக்கங்களிலிருந்தும் ஜாதி மதக் கொடுமையிலிருந்தும், விடுவித்துச் சுதந்திர மனிதர்கள் ஆக்குவதற்கும், பொதுஜன அவசியத்திற்கும் என்று ஏற்படுத்தப் படுகின்ற தொழில் முறைகள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றின் நிருவாகத்தையும் அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிப்பதற்கும் வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்ய வேண்டும்.

தீர்மானம் 2. எல்லாச் சட்டசபை, முனிசிபல், தாலுக்கா, ஜில்லா சபை ஆகியவற்றின் தேர்தலுக்கு வயது வந்த யாவருக்கும் ஓட்டுரிமை ஏற்படும்படி செய்ய வேண்டும். தனிப்பட்ட தொழிற் சாலைகள், இரயில், கப்பல் முதலியவற்றில் தொழிலாளர்களுக்கு எப்பொழுதும் தொழிலில் இருப்பதற்கு ஒரு ஜவாப்தாரி தனத்தையும் அவர்களுடைய நல்வாழ்விற்கு ஒரு உறுதிப் பாட்டையும், ஏற்பாட்டையும் செய்ய வேண்டும்.

தீர்மானம் 3. தேசியத்தின் பேரால் கொடுக்கப்பட வேண்டிய கடன்களையெல்லாம் இரத்து செய்வது.

தீர்மானம் 4. நிலச் சொந்தக்காரராய் இல்லாமல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு வெள்ளாமையில் ஒரு நியாயமான பங்கு விகிதம் கிடைக்க வேண்டும்.

தீர்மானம் 5. கோயில் பிரார்த்தனை இடங்கள் முதலிய மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள், வரும்படிகள் ஆகியவற்றைப் பொது ஜனங்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, அனாதைப் பிள்ளைகள் விடுதி ஆகியவற்றுக்குப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

தீர்மானம் 6. இந்தியச் சமூகத்தில் ஜாதி மதப் பிரிவு முதலியவற்றைக் குறிக்கக் கூடிய குறிப்புகள் எதையும் பொது ஆதாரங்களில் (ரிக்கார்டுகளிலிருந்து) எடுத்து விடுவதற்கும், அம்மாதிரி பட்டம் உடையவர்களைப் பொது வேலைகளில் இடம் பெறாமல் இருக்கும்படி செய்வதற்கும் அனுமதி பெறுதல்.

தீர்மானம் 7. முனிசிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் மூலமாகவே, போக்குவரத்துச் சாதன வசதி, வீட்டு வசதி, பால்

வசதி, வைத்திய வசதி முதலியவை நடைபெறும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

தீர்மானம் 8. இவற்றை நிறைவேற்றச் சட்டசபை, முனிசிபாலிட்டி முதலிய ஜன ஸ்தாபனங்களுக்கு மேற்கண்ட கட்சியினர் பேரால் அபேட்சகர்கள் நிறுத்தப்பட வேண்டும்.

தீர்மானம் 9. கட்சி அபேட்சகர்கள் மேற்கண்ட திட்டங்களுக்கு உறுதி கூறிக் கையெழுத்திட வேண்டும்,

தீர்மானம் 10. மேற்கண்ட சட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலியவற்றை எல்லாம் சட்டசபைப் பிரவேசம் மூலம், பிரசங்கம் மூலம் சொல்லுவதன் மூலம், பத்திரிகை, துண்டுப் பிரசுரம் முதலியவற்றின் மூலம் சட்டத்தை அனுசரித்துச் செய்ய வேண்டியது.

சுயமரியாதைக் கட்சியின் அடிப்படைக் கொள்கை என்றொரு இரண்டாவது அறிக்கையையும் இந்த மாநாட்டிற்குச் சிங்காரவேலரே அனுப்பி இருந்தார்.

தீர்மானம் 1. பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித்தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவைப் பூரண விடுதலை அடையச் செய்தல்.

குறிப்பு: 1922இல் கயா காங்கிரசிலேயே சிங்காரவேலர் பரிபூரண சுதந்திரம் பற்றிப் பேசினார். 1927இல் சென்னையில் நடைபெற்ற 42ஆம் இந்தியக் காங்கிரஸ் கூட்டத் தீர்மானங்கள் தயாரித்த சிங்காரவேலர் அதிலேயும் பரிபூரண சுதந்திரம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது அறியத்தக்கது.

தீர்மானம் 2. தேசத்தின் பேரால் கொடுக்கப்பட வேண்டிய கடன்களை யெல்லாம் இரத்து செய்தல்.

தீர்மானம் 3. எல்லாத் தொழிற்சாலைகளையும், இரயில்வேக் களையும், வங்கிகளையும், கப்பல் நீர்வழிப் போக்குவரத்துச் சாதனங்களையும் பொதுமக்களுக்கு உரிமை ஆக்குவது.

தீர்மானம் 4. எந்தவிதமான பிரதி பிரயோஜனமும் கொடுபடாமல் தேசத்திலுள்ள எல்லா விவசாய நிலங்களையும், காடுகளையும் மற்ற ஸ்தாபன சொத்துக்களையும் பொது ஜனங்களுக்கு உரிமை ஆக்குவது.

தீர்மானம் 5. குடியானவர்களும், தொழிலாளிகளும், லேவா தேவிகளிடம் பட்டிருக்கும் கடன்களை எல்லாம் (Cancel)

செல்லுபடி அற்றதாக ஆக்கி இரத்து செய்து விடுவது, அடிமை ஒப்பந்தங்களை இரத்து செய்து விடுவது.

தீர்மானம் 6. சுதேச சமஸ்தானங்கள் என்பனவற்றை எல்லாம் கலைத்து இந்தியா முழுவதையும் தொழிலாளர்கள், குடியானவர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்குக் கொண்டு வருதல்.

தீர்மானம் 7. தொழில் செய்பவர்கள் 7 மணிநேரத்திற்கு மேல் வேலை செய்யக் கூடாது என்பதுடன் அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது, தொழிலாளர்களுக்குக் கூலி உயர்த்தி உயர் தொழில் இல்லாமல் இருக்கிறவர்களைக் காப்பாற்றுவது, சர்க்கார் போஷிக்கும்படி செய்வது என்பவை சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான இலட்சியங்களாய் இருக்க வேண்டும்.

குறிப்பு : தொழிலாளர்கள் ஏழு மணி நேரம் மட்டுமே வேலை செய்தால் போதுமெனவும், தொழிலாளர்களின் 6 மணி நேர உழைப்பிலேயே உலகத்திற்கு வேண்டிய அனைத்து வளமும் கிடைத்து விடுமெனச் சிங்காரவேலர் 1923லே இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் கட்சி அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளதை அறிதல் வேண்டும். இவற்றை யெல்லாம் அறிந்தவர்கள் இத் திட்டங்கள் அனைத்தும் சிங்காரவேலருடையனவே என்பதை ஒப்புக் கொள்வர். சிங்காரவேலர் எதனையும் முழுமையாகச் செய்பவர். நுனிப்புல் மேயும் பழக்கம் அவருக்குக் கிடையாது. ஆகவேதான் சுயமரியாதைச் சமதர்மக் கட்சி அறிக்கை என்ற பெயரிலும், சுயமரியாதைக் கட்சியின் அறிக்கை என்ற பெயரிலும் இரு அறிக்கைகளை அனுப்பினார்.

ஆனால் சுயமரியாதைச் சமதர்ம அறிக்கைகள் பெரியாரால் தயாரிக்கப்பட்டதென வே. ஆனைமுத்து அவர்களும் கி.வீரமணியவர்களும் குறிப்பிட்டுள்ள செய்திகள் தவறானவைகளாகும். இரு அறிக்கைகளும் சிங்காரவேலரால் அனுப்பப்பட்டதாகும்.

ஏற்கெனவே திட்டமிட்டுள்ளபடி பெரியார், ஈரோட்டில், தம் வீட்டில் கூட்டத்தைக் கூட்டினார். அனைத்துச் சுயமரியாதைத் தோழர்களையும் வரவேற்றுப் பேசினார். இக்கூட்டத்தில் பெரியார் ஏற்கெனவே 'குடியரசு' பத்திரிகையில், வெளியிட்டுள்ள 'சுயமரியாதைச் சமதர்மத் திட்டத்தைப் பற்றிச் சிங்காரவேலரைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

சிங்காரவேலர் ஓர் இயக்கம் சமூக இயக்கமாக இருப்பதன் தீமைகளையும் அதுவே அரசியல் இயக்கமாக இருக்க வேண்டிய

அவசியத்தைப் பற்றியும் நீண்ட நேரம் விரிவாகவும், விளக்கமாகவும் பேசினார்.

கூட்டத்தில் வந்திருந்த பலரும் சிங்காரவேலரின் திட்டத்தை ஒத்துக் கொண்டாலும் இப்பொழுது கூட்டத்தில் ஒரு வித்தியாசமான முடிவு எடுக்கப்பட்டது. எப்பொழுதும் போலச் சுய மரியாதை இயக்கம் இயங்கி வரலாம்; ஆனால் அதே சமயத்தில் சுயமரியாதை இயக்கத்தில் 'சமதர்மக் கட்சி' என்றொரு தனிப் பிரிவை வைத்துக் கொள்ளலாம் என யோசனையும் கூறப்பட்டது.

தந்தை பெரியாரும் 'சுயமரியாதை இயக்கத்தின் மாநாட்டைக் கூட்டி இத் திட்டத்தைச் செயல்படுத்தும் செயல்பாடுகளைப் பற்றிச் சிந்திக்கலாம் என முடிவெடுத்தார். சுயமரியாதைத் தொண்டர்கள் கூட்டம் பெரியார் வீட்டில் முடிந்த பின்னர் அன்றைக்கே ஈரோட்டில் மாபெரும் பொதுக் கூட்டம் கூட்டப் பெற்றது. இக்கூட்டத்தில் சிங்காரவேலர், பெரியார், ப. ஜீவானந்தம் ஆகியவர்கள் விரிவாகப் பேசினர். இளைஞர்களும், பொதுமக்களும் பரவலாக இயக்கத்தை ஆதரித்தனர். சுயமரியாதைச் சமதர்ம இயக்கமெனப் பல இடங்களிலும் இயக்கங்கள் தோன்றின. கேரளம் உட்படப் பல இடங்களிலும் பல சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

ஈரோட்டுத் திட்டத்தைப் பாராட்டுவதற்காகவும், பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காகவும் தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல மாநாடுகள் கூட்டப் பெற்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஈரோட்டுத் திட்டத்தை ஆதரித்துத் தீர்மானங்களை நிறைவேற்றி மாநில மாநாட்டிற்கு அனுப்பினர்.

சிங்காரவேலர் பெரியாரின் சுயமரியாதைச் சமதர்ம இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு வெள்ளமெனப் பெருகி வந்தது. ஆங்காங்குள்ள இளைஞர்கள், முற்போக்காளர்கள் சமதர்ம இயக்கத்தைத் தொடங்கினர். தமிழ் நாட்டில் மட்டும் 154 சமதர்மச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டதாகத் தமிழ்நாடு ஆவணக் காப்பகக் குறிப்பு குறிப்பிடுகின்றது. தோழர் வே. ஆனைமுத்து 400க்கு மேற்பட்ட மன்றங்கள் தோற்றுவிக்கப் பட்டதாகக் கூறுகிறார்.

குடியரசு பத்திரிகையின் துணையாசிரியராக இருந்த சு. இராகவன் இயக்கத்திற்கு ஓர் அரிய பணியைச் செய்தார். இவர்தான் பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் செயலராக இருந்தவர். இந்தப் பதிப்புக் கழகத்தின் தலைவர் பெரியார். இந்தப்

பதிப்புக் கழகம் சுயமரியாதைச் சமதர்மக் கொள்கைகளை மையமாகக் கொண்ட பல நூல்களைப் பதிப்பித்தது. சிங்காரவேலருடைய குடியரசின் பல கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றன. பெரியாருடைய பல பேச்சுகளும் நூல் வடிவம் பெற்றன. அறிஞர்களின் சமதர்மம் தொடர்பான பல நூல்களை இப்பதிப்பகம் வெளியிட்டது. விலை குறைந்த இந்த நூல்கள் சமதர்மத்தை மக்களிடம் பேரளவில் கொண்டு சென்றன.

இந்தச் சமயத்தில் சிங்காரவேலர் பணி அளப்பரியதாக இருந்தது. குடியரசில் நிறைய எழுதினார். ஒரு வாரத்திய குடியரசில் சிங்காரவேலரின் இரண்டு கட்டுரைகள் கூட வெளிவந்தன. வெளி இடங்களுக்கும் சிங்காரவேலர் அழைக்கப் பெற்றுக் கூட்டங்களில் சமதர்மப் பிரச்சாரம் செய்தார். 1933 ஜனவரி 15இல் காஞ்சிபுரத்தில் சிங்காரவேலர் சமதர்மம் பற்றிப் பேசினார். அந்த மாதத்திலேயே ஈரோடு, விருதுநகர், வேலூர் ஆகிய மாநாடுகளில் பேசச் சிங்காரவேலருக்கு அழைப்புகள் வந்தன. எப்பொழுதும் உடல் நலமற்றிருந்த சிங்காரவேலர் அக் கூட்டங்களையெல்லாம் தவிர்த்தார். சமதர்மப் பிரச்சாரம் நிறைய நடைபெற வேண்டுமென்று பொதுமக்களே விரும்பினர்.

பொதுமக்கள் சமதர்மப் பிரச்சார நிதி உதவி அளித்ததைப் பற்றிச் சிங்காரவேலரே 15.1.1933 குடியரசில் குறிப்பிட்டுள்ளார். 1933இல் வழக்கமாகக் கலந்து கொண்டு பேசுகின்ற மே நாள் கூட்டத்திலும் சிங்காரவேலர் பேசினார்.

இந்தக் கூட்டத்தில் சிங்காரவேலருக்குப் பெருந் துணையாக இருந்து செயல்பட்டவர் ஜீவானந்தம். சமதர்மப் பிரச்சாரத்தை ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, சென்னை வில்லிவாக்கம், வாணியம்பாடி, ஈரோடு, கோவில்பட்டி, கேரளம் இங்கெல்லாம் சென்று பேசியதைத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத் துணைச் செயலர் பாதுகாப்புக் கோப்பு எண் 896 குறிப்பிடுகின்றது.

இந்தச் சமயத்தில் தமிழ் நாடெங்கும் பெரியாருக்குச் சோவியத்து ரஷ்யா சென்று வந்ததற்கான வரவேற்புகள் நிறையவே தரப்பட்டன. பெரியார் வெளிநாட்டில் குறிப்பாக ரஷ்யாவில் கண்டதையெல்லாம் மிகமிக விரிவாகப் பேசினார். அந்த நாட்டில் மக்கள் எப்படியெல்லாம் மதத்திற்கு எதிராக, ஜாதிக்கு எதிராக, கடவுளுக்கு எதிராகப் பொதுவுடைமை இயக்கம் எப்படி வெற்றி பெற்றுள்ளது என்பதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசினார்.

அந்த நாட்டில் ஆணும், பெண்ணும் சமத்துவமாக நடப்பதைப் பற்றியும் பெண்கள் அடைந்துள்ள விடுதலையைப்

பற்றியும் நிறையவே பேசினார். ரஷ்யாவிலுள்ள சோஷலிச சமுதாயத்தில் வேலை இல்லை என்பதே கிடையாது என்பதைப் பற்றி விரிவாகப் பேசினார். இந்த நாட்டு மக்களுக்கு வேண்டியது சமதர்மச் சமுதாயம்தான் என்பதை ஆணித்தரமாகப் பேசினார். சிங்காரவேலரின் குடியரசின் எழுத்து இக்காலத்தில் சண்ட மாருதமாகத் தமிழகத்தில் சுழன்று வீசியது. எங்கும் பொதுவுடைமை முழக்கமே எதிரொலித்தது. குடியரசு பத்திரிகையுடன் புதுவை நோயேலின் 'புதுவைமுரசு' என்னும் பத்திரிகையும் குடியரசுக்கு இணையாகப் பொதுவுடைமைப் பிரச்சாரம் செய்தது. சிங்காரவேலரின் கட்டுரைகள் அதில் நிறையவே இடம் பெற்றன.

குடியரசு பத்திரிகையில் சமதர்மம் காட்டாற்று வெள்ளமாகப் பாய்ந்தது. இதழ் முழுமையும் ரஷ்யாவின் சாதனைகளைப் படம் பிடித்தது. மதத்தைப் பற்றி லெனின் எழுதிய கட்டுரைகள் தொடராகவே வெளிவந்தன. காரல்மார்க்ஸ் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. ஏங்கெல்ஸ் எழுதிய கட்டுரைகள் தமிழாக்கம் செய்யப்பெற்று வெளியிடப் பெற்றன. கம்யூனிசம் பற்றியே தனியாக அப்பத்திரிகையில் கட்டுரைகள் வெளிவந்தன. பொதுவுடைமை தொடர்பாகச் சிங்காரவேலர் கட்டுரைகள் குடியரசில் புதிய வெளிச்சத்தைத் தந்தன.[1]

இளைஞர்களெல்லாம் பொதுவுடைமை உணர்வைப் பெற்றனர். இக்காலத்தில் பொதுவுடைமை தொடர்பாகக் குறிப்பாகத் தமிழகத்தில் மட்டுமே வீரியமான கட்டுரைகள் வெளிவந்தன எனச் சி. சுப்பிரமணியமும், நாகை கே. முருகேசனும் குறிப்பிடுகின்றனர். இந்தியாவில் இத்தகைய பொதுவுடைமை தொடர்பான பிரச்சாரம் வேறெங்கும் நடைபெறவில்லையென அவர்கள் பதிவு செய்கின்றனர். இயக்கத்தின் ஒரு பிரிவினர் அரசியலைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டிய அவசியமில்லை; இயக்கம் சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக இருந்தாலே போதுமென்றனர்.

இயக்கத்தில் இன்னொரு பிரிவினரோ மிகத் தீவிரமாகச் செயல்பட்டனர். எதற்கும் அஞ்சத் தேவை இல்லை; உண்மையான சோஷலிசத்தைப் பரப்ப வேண்டுமென்று இளைஞர்கள், முற்போக்குக்காரர்கள் துடித்தெழுந்து செயல்பட்டனர். ஜமீன்தார் எதிர்ப்பு மாநாடுகள், லேவாதேவி எதிர்ப்பு மாநாடுகள்,

1. ப. சீனிவாசன், ம. சிங்காரவேலரின் வரலாறு, உண்மையும் புரட்டும், பக். 26,27.

இவற்றுடன் மே தினம், ரஷ்யப்புரட்சி, லெனின் தினம் எனப் புரட்சிகரமான பல நாள்களையும் தொண்டர்கள் கொண்டாடினர்.

குடியரசை ஒடுக்க வேண்டுமென்று திட்டமிட்ட அரசு இப்பொழுது இயக்கத்தைத் தீவிரமாகக் கண்காணிக்கவும் ஆரம்பித்திருந்தது. கண் கொத்திப் பாம்பாகக் காத்துக் கொண்டிருந்த அரசு குடியரசில் வெளியான ஒரு தலைப்புக்காக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. குடியரசு பத்திரிகை மீதும், உண்மை விளக்க அச்சுக் கூடத்தின் மீதும் நடவடிக்கை எடுத்தது. ஜாமீன் தொகை கேட்டது. இதனால் குடியரசு பத்திரிகை நின்றது. திறமையாகச் செயல்படுகின்ற பெரியார் இப்பொழுது குடியரசு வேலை நிலையத்திலிருந்தே 'புரட்சி' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். இந்த நிலையில் பெரியார் 'இந்த ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரையை எழுதினார். இதற்காகப் பெரியார் 30.12.1933இல் சிறை பிடிக்கப்பட்டார். குடியரசின் பதிப்பாளர் கண்ணம்மாவும் கைது செய்யப்பட்டார். இவர்கள் மீது அரசு 'அரசு வெறுப்பு'க் குற்றம் சாட்டியது. கோவை நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது.

வழக்கம் போலப் பெரியார் எதிர் வழக்காடவில்லை. எழுத்து மூலம் வாக்குமூலம் மட்டுமே தந்தார். மிகக் கடுமையாகத் தண்டிக்க விரும்பிய அரசு பெரியாருக்கு 9 மாதச் சிறைத் தண்டனையும் ரூ. 300 அபராதமும், கட்டாதபோது மேலும் ஒரு மாதச் சிறைத் தண்டனையும் விதித்தது. பெரியாரின் தங்கை கண்ணம்மாளுக்குப் பதிப்பாளர் என்ற முறையில் 6 மாதச் சிறைத் தண்டனையும் ரூ. 300 அபராதமும் கட்டாதபோது ஒரு மாதம் சிறைத்தண்டனையும் விதித்தது. பெரியார் கோவை சிறையில் அடைக்கப்பட்டார்.

இக்காலத்தில் அரசாங்கத்தின் அடக்குமுறை அளவுக்கு மீறிச் சென்றது. பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இரகசியக் காவலர்கள் சுயமரியாதைக் கூட்டங்களுக்குக் கூட்டம் கூட்டமாக வந்து கூட்டத்தைக் கண்காணித்தனர். பெரியாரின் 'புரட்சி' பத்திரிகையும் அரசால் தடை செய்யப்பட்டது. புரட்சி பத்திரிகைக்கு மாற்றாக வந்த 'பகுத்தறிவு' என்னும் வார ஏட்டைப் பெரியார் இப்பொழுது கொண்டு வந்தார். அதனையும் அரசு பறிமுதல் செய்தது.

அதைப் போலவே பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடாக வெளிவந்திருந்த மாவீரர் பகத்சிங் எழுதிய 'நான் ஏன் நாஸ்திகன் ஆனேன்' என்னும் நூல். இதனைப் புரட்சியாளர்

ப. ஜீவானந்தம் மொழிபெயர்த்திருந்தார்-பெரியாரின் உண்மை விளக்கம் அச்சகத்தில் வெளியிட்டிருந்தனர். இந்தப் புத்தகத்தை அரசு தடை செய்து, அதனைப் பறிமுதல் செய்தது. அதன் பதிப்பாளரான ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களைக் கைது செய்ததுடன் ப. ஜீவானந்தம் அவர்களையும் கைது செய்து வழக்கு தொடர்ந்தது. அளவில்லாத அடக்கு முறைகளை அரசு இப்பொழுது கட்டவிழ்த்து விடத் தொடங்கியது.

சிங்காரவேலர் எப்படியும் சுயமரியதைச் சமதர்ம இயக்கத்தைச் செயல் நிறைந்த இயக்கமாக மாற்றும் முயற்சியில் முழுமையாக நின்றார். சிங்காரவேலரைப் பின்பற்றி நின்ற இளைஞர்களான ப. ஜீவானந்தம், நாகை கே. முருகேசன், நாகை டி.என். இராமச்சந்திரன் போன்றவர்களெல்லாம் பழமை வாதிகளைக் கண்டு, பிற்போக்குத் தனமான சுயமரியாதை வீரர்களைக் கண்டு எள்ளி நகையாடி இன்னும் தீவிரமாக இயக்கத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்றனர். பழமைவாதிகளும், கோழைகளும் பேச்சோடு நின்றால் போதுமானது. அரசியல் ரீதியான செயல் வடிவம் எதுவும் தேவை இல்லை என்றே நினைத்தனர். முன்னணியில் இருந்த பல தலைவர்கள், குறிப்பாக எஸ். இராமநாதன், கி.ஆ.பெ. விசுவநாதம், சௌந்திரபாண்டிய நாடார், ஆர்.கே. சண்முகம் செட்டியார் போன்றவர்கள் இயக்கம் பொதுவுடைமைப் போக்கிற்குப் போகக் கூடாது என்பதிலே குறியாக இருந்தனர்.

சுயமரியாதைச் சமதர்மக் கட்சி மாநாட்டைக் கூட்டி ஒப்புதலைப் பெற்ற பின்னர் இயக்கத்தை இன்னும் தீவிரமாகக் கொண்டு செல்வது என்று முடிவெடுத்தார்கள் அல்லவா? அத்தகைய முயற்சி எதையும் அனைத்துத் தலைவர்களும் எடுக்கவில்லை. புரட்சியாளர்களும், புதிதாக இயக்கத்திற்கு வந்துள்ள இளைஞர்களும் முற்போக்காளர்களும் மட்டுமே இயக்கத்தைச் சமதர்ம இயக்கமாக மாற்ற வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். பெரும் நிலச்சுவான்தார்களும், ஜமீன்தார்களும், நீதிக் கட்சி ஆட்சியால் இலாபம் பெற்ற சுயநல வாதிகளும், சந்தர்ப்பவாதிகளும், பிரிட்டிஷ் அரசுக்கு அஞ்சுகின்றவர்களும், இந்த இயக்கம் சமதர்ம இயக்கமாகக் கூடாது என்பதுடன் யார் யார் தீவிரமாகச் செயல் படுகின்றார்களோ, அவர்களையெல்லாம் அரசுக்குக் காட்டிக் கொடுக்கின்ற வேலையையும் செய்தனர். இந்தக் கங்காணி வேலையை அன்றைய காங்கிரஸ்காரர்கள் தெளிவாகவே செய்தனர்.

சுயமரியாதைச் சமதர்மக் கட்சி புரட்சிப் பாதையில் செல்லக் கூடாது என்பதைக் குடியரசில் வெளிப்படையாகவே சொல்லுகின்ற அளவில் செல்வாக்குள்ளவர்கள் இயக்கத்தில் இருக்கவே செய்தனர். இவர்களையெல்லாம் கண்டிக்கின்ற முறையில் 1933 ஜனவரி 21லும், 1933 ஆகஸ்டு 18லும் குடியரசில் தலையங்கங்கள் வெளியாயின. குடியரசுப் பத்திரிகை மீரட் சதி வழக்கில் தண்டிக்கப்பட்டும், அப்பீலில் வெளிவந்திருந்த சிலரை ஆதரித்தும் குடியரசு எழுதியது. 1932 முதல் 1934 வரை அரசு காங்கிரசின் மீதும், தீவிரவாதிகளின் மீதும் அடக்கு முறைகள் அளவுக்கு மீறிப் பயன்படுத்திய காலமாகும். இதன் விளைவாக 1934இல் அரசு கம்யூனிஸ்டு கட்சிக்குத் தடையையும் விதித்தது. இந்த நிலையிலும் 'சுயமரியாதைச் சமதர்மக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சோஷலிசப் பிரச்சாரத்தை மிகத் தீவிரமாகவும், உற்சாகவும் செய்து வந்தனர். இக்காலத்தில் சிங்காரவேலர் மிக மிக ஆர்வமாகச் செயல்பட்டு வந்தார். இளைஞர்கள் செயல்பட்டனர். சுயமரியாதைச் சமதர்மக் கட்சி சார்பில் இளைஞர்கள் மாவட்ட மாநாடுகளை ஆங்காங்கே உற்சாகத்துடன் நடத்தி வந்தனர்.

கோவை மாநாட்டின் தலைவராக டாக்டர் எம். கிருஷ்ணசாமி வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். இந்த மாநாட்டில் ரஷ்யாவின் மாபெரும் தலைவர் லெனின் உருவப் படம் திரு.வி.க.வால் திறக்கப்பட்டது. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு தலைமை தாங்கினார். இக்காலத்தில் பெரியார், சிங்காரவேலர் செயல்பாடுகள் இளைஞர்களுக்கெல்லாம் விழிப்புணர்ச்சி யூட்டுவதாகவும், வழிகாட்டுவதாகவும் இருந்தன. 1933 டிசம்பரில் சென்னையில் நாஸ்திகர் மாநாடு என்ற ஒன்று சிறப்பாகக் கூட்டப்பட்டது. சிங்காரவேலர் மாநாட்டின் தலைவராக இருந்து சிறப்புரையாற்றினார். நாத்திகத்தின் அவசியத்தையும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளையும் மிகச் சிறப்பாக விளக்கினார்.

இதைப் போல இன்னும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்த மன்னார்குடி சுயமரியாதை மாநாடும், 1934 மார்ச்சு 4ஆம் நாள் கூடியது. இந்த மாநாட்டின் சிறப்புப் பேச்சாளர் ம. சிங்காரவேலர் என்றாலும் அவரால் மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை; ஆனாலும் அவர் முழுப் பேச்சையும் தயாரித்து மாநாட்டிற்கு அனுப்பி இருந்தார். சிங்காரவேலரின் அந்தப் பேச்சை மாயவரம் இளைஞர் நடராஜன் படித்தார். அதில் ம. சிங்காரவேலர் உலக மக்களுக்குச் சோஷலிசம் மட்டுமே வழிகாட்ட முடியும் என்பதைத் தெளிவாக விளக்கி இருந்தார்.

தொடர்ந்து பெரியாரும் சிங்காரவேலருக்கு இணையாகப் பேசியும், எழுதியும் வந்தார். 'இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' என்ற கட்டுரையால் ஆத்திரமுற்ற அரசு பெரியாரையும், அவர் அண்ணன் ஈ.வெ. கிருஷ்ணசாமியையும், சகோதரி கண்ணம்மாவையும் 124Aயின்படி சிறையில் அடைத்ததையும் அபராதம் விதித்ததையும் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். 'குடியரசு' தடுக்கப்பட்டது. அதன்பின் வந்த 'புரட்சி' தடுக்கப்பட்டது. அதன்பின் வெளிவந்த 'பகுத்தறிவும்' தடை செய்யப்பட்டது.

சிறையில் இருந்த பெரியாருக்கு அளவில்லாத நெருக்கடிகள் தரப்பட்டன. பெரிய பெரிய அரசியல் மாற்றங்களெல்லாம் இப்பொழுது நடைபெற்றன.

3. சிங்காரவேலரின் எழுத்தாற்றல்

எத்துறையிலும் முன்னோடியாக இருந்த சிங்காரவேலர் எழுத்துத் துறையிலும் முன்னோடியாகவே திகழ்ந்தார். தமிழின் உரைநடை வளர்ச்சிக்கு வித்திட்ட வித்தகர்களில் சிங்காரவேலரும் முன்னோடி. ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதுவதில் மிகச் சிறந்த விற்பன்னர். பன்மொழி அறிஞரான அவர் தமிழில் அறிவியல் கருத்துகளை விளக்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

எழுதிய பத்திரிகைகள்

அக்காலத்தில் வெளிவந்த பல முன்னணிப் பத்திரிகைகளிலும் சிங்காரவேலர் எழுதினார். இந்து, சுதேசமித்திரன், நவசக்தி, வேன்கார்டு, குடியரசு, புதுவை முரசு, புரட்சி, பகுத்தறிவு, இந்துஸ்தான் லேபர், கிஸ்ஸான் கெஜட், தொழிலாளர் தோழன், வேன்கார்டு, நான் கோவாப்பரேட்டர் என எண்ணிறந்த பத்திரிகைகளில் சிங்காரவேலர் எழுதினார். சுதர்மா, புதுவுலகம் போன்ற பத்திரிகைகள் யாவும் சிங்காரவேலரின் புரட்சிகரமான எழுத்துகளைத் தாங்கி வெளிவந்தவையாகும்.

புனைபெயர்கள்

பத்திரிகையில் பொருளுக்கேற்பப் பலவிதப் புனை பெயர்களில் எழுதுவது சிங்காரவேலரின் இயல்பு. சிங்கிரண்டு, காம்ரேட், தோழர், சயின்ட்டிஸ்டு, சிந்தனாவாதி, கிரிட்டிக், முகமூடி, எமினெண்ட் லாயர், அப்சர்வர் எனப் பல புனை பெயர்களில் சிங்காரவேலர் எழுதினார். உலகின் பல பகுதிகளான தென்னாப்பிரிக்கா, பர்மா, மலாயா, சிங்கப்பூர், இலங்கை இன்னும் பல நாடுகளில் வாழ்ந்த தமிழர்களெல்லாம் தங்களின் அய்யங்களைப் போக்கிக் கொள்ளச் சிங்காரவேலரிடமே கேள்விகளைக் கேட்டுப் பதிலையும் பெற்றுத் தெளிவடைந்தனர். உலகத் தமிழர்களையெல்லாம் ஒருங்கிணைத்த முதல் தமிழர் சிங்காரவேலர் என்று நாம் பெருமையுடன் கூறிக் கொள்ள முடியும்.

அரசியல் திறனாய்வாளர்

அவர் காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த திறனாய்வாளராக இருந்த அரசியல் அறிஞர்களையும், அவர் காலத்து அரசியல் இயக்கங்களையும் மக்கள் நலம் கருதிப் பத்திரிகைகளில் திறனாய்வு செய்தார்.

அரசியல் கட்சிகள்

சிங்காரவேலர் காலத்தில் இந்தியாவில் காங்கிரஸ்கட்சி, லிபரல் கட்சி, சுயராஜ்யக் கட்சி, இந்து சனாதனக் கட்சி, சுயமரியாதைக் கட்சி, சமதர்மக் கட்சி, சுயேச்சைக் கட்சி, முஸ்லீம் லீக், சீக்கியர் கட்சி, இராஜ விசுவாசக் கட்சி, கிறிஸ்துவர் கட்சி, ஆங்கிலோ இந்தியர் கட்சி எனப் பல கட்சிகள் இருந்தன. அவற்றையெல்லாம் திறனாய்வு செய்யத் தவறியதே இல்லை.

சிங்காரவேலர் பங்கு பெறாத கட்சி என்றால் அது நீதிக் கட்சி மட்டுமே. தமக்குத் தொடர்பில்லாத கட்சியென்றாலும் சிங்காரவேலர் நடு நிலையுடன் அதனையும் திறனாய்வு செய்தார். நீதிக்கட்சி 1916இல் டி. மாதவ நாயர், சர்.பி. தியாகராயர், டாக்டர் நடேசன் ஆகியவர்களால் தோற்றம் பெற்றதாகச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார். நீதிக் கட்சியின் தேவை குறித்து வரலாற்றில் எந்தப் பொதுவுடைமையாளரும் புகழ்ந்து பேசியதில்லை. ஆனால் சிங்காரவேலர் அக்கட்சி காலத்தின் தேவை என்றார்.

காலத்தின் தேவை

> நீதிக் கட்சி இந்திய அரசியலில் தோன்ற வேண்டுவது காலத்தின் தேவை. வருணாசிரமத்தின் அடிப்படையில் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட சலுகையின் அடிப்படையில் பார்ப்பனர் அல்லாதார்க்கு ஏற்பட்ட நெருடல்களே அப்படியொரு கட்சி தோன்றச் சாத்தியமாயிற்று. சரித்திரக் காரணங்களால் பிரிட்டிஷ் அரசியலில் பார்ப்பனர்கள் மட்டுமே செல்வாக்கை அடைந்து வந்தனர். ஆனால் இவ்விதப் பலன்கள் ஏதோ ஒரு சிலருடைய செல்வாக்கையும் அதிக ஆதிக்கத்தையும் பெருகச் செய்யுமே ஒழியப் பாமர ஜனங்களுக்கு யாதொரு பிரயோஜனத்தையும் தராது.

என்று சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார். இத்தகைய கொள்கைகளால்

> முதலாளிதுவத் திட்டத்தால் சகலரும் சமத்துவச் செல்வாக்குப் பெற முடியாதாகையால் யூகமும், தந்திரமும் பெற்ற சிலரே சகல சம்பத்தையும் அடைய முடியும்.

என்பதையும் சிங்காரவேலர் தெளிவு படுத்துகின்றார்.

காந்தியின் புரிதலின்மை

இந்த அமைப்பில் கிறிஸ்துவர்களுக்கும், முகமதியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித் தொகுதி ஒதுக்கப் படலாமென்று ஒத்துக் கொண்ட காந்தி அரிஜனங்களுக்கு அளிக்கப்படுகின்ற தனித் தொகுதி இந்துக்களிடையே பிளவை ஏற்படுத்துமெனக் கூறுவது தவறான புரிதலாகும் எனக் காந்தியையும் சிங்காரவேலர் இடித்துரைக்கின்றார். இதனால் அம்பேத்கர் ஏற்ற அவதிகள் அதிகம் எனவும் பரிந்தும் பேசுகின்றார். நியாயம் கருதிக் காந்தியையும் இடித்துரைத்து, அம்பேத்கருக்கும் பரிந்து பேசுகின்ற பேரறிவால்தான் அந்நாளில் சிங்காரவேலர் சிந்தனைச் சிற்பி எனவும் மக்களால் அழைக்கவும் பெற்றார்.

தனித்தன்மையான சிந்தனையாளர்

ஜாதிய அமைப்புடைய இந்தியச் சமுதாயத்தில் அந்தந்த வகுப்பாரே அவரவர் மக்களைக் காக்க முடியும் என்பதையும் சிங்காரவேலர் தெளிவுபடுத்துகின்றார்.

> இந்த முதலாளித்துவத் திட்டத்தில் பஞ்சமருக்குப் பஞ்சமரும், இந்துக்களுக்கு இந்துக்களும், மகமதியர்களுக்கு மகமதியர்களுமே தகுந்த பிரிதிநிதியாவார்கள்.

என்பதையும் சிங்காரவேலர் தெளிவுபடுத்துகின்றார்.

இட ஒதுக்கீடு என்பதும், தனித்தொகுதி என்பதும் தற்காலிகமானதே என்பதை உணர்த்த சிங்காரவேலர் தவற வில்லை.

> பொதுவுடைமைத் திட்டம் ஒன்றில்தான் எல்லாருடைய நன்மைகளும் சமமாகப் பார்க்கப்படும். அந்தக் காலம் வரும்வரை சிறிய சமூகங்களுக்குக் காப்பும், சலுகையும் தேவை என்பதை எந்தப் பகுத்தறிவுடையோரும் மறுக்க மாட்டார்கள்.

என்று கூறுவதன் மூலம் இட ஒதுக்கீடும், தனித் தொகுதியும் தேவையே; ஆனால் பொதுவுடைமை ஆட்சியில் அவை தேவையில்லாமல் போகலாமெனச் சிங்காரவேலர் கூறுகின்றார்.

நல்லதை வரவேற்கும் சிந்தனையாளர்

சிங்காரவேலரின் நேரிய சிந்தனைக்கான சான்றொன்று 1927லேயே நமக்குக் கிடைக்கின்றது. 1927இல் தஞ்சையில் தந்தை பெரியார் தலைமையில் சுயமரியதை மாநாடொன்று நடந்தேறியது. அந்த மாநாட்டில் தந்தை பெரியார்

> பார்ப்பனர்களைத் தமிழர்தம் சடங்குகளிலிருந்து ஒழித்துக்கட்ட அந்தந்த ஜாதிக்காரர்களே அந்தந்த ஜாதிக் குருக்களையே சடங்குகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

என ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றி இருந்தார்.

மூட நம்பிக்கைகளை ஒழிக்க முயன்றார்

சிங்காரவேலர் கடவுள், ஜாதி, மதம், குருக்கள் இவற்றில் அறவே நம்பிக்கையற்றவர். ஆனாலும் நடைமுறை சாத்தியம் கருதி, இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்பதைப்போல, இத்தீர்மானத்தை ஆதரித்து நடைமுறையில் இத்தீர்மானம் எந்தளவு பொருத்தமுடையது என்பதைச் சுட்டிக் காட்டிப் பெரியாரின் 'குடியரசுக்கு'ச் சிங்காரவேலர் கடிதமொன்றையும் எழுதி இருந்தார். மரியாதைக்குரிய கடிதமாகக் கருதிப் பெரியாரும் தமது குடியரசில் அக்கடிதத்தை வெளியிட்டிருந்தார்.

இதனால் எதனையும் நடைமுறைச் சாத்தியக் கூறுடன் சிந்திக்கின்ற அறிஞராகச் சிங்காரவேலர் இருந்தார். முரட்டுத் தனமாகப் பேசும் மனிதராக இல்லாமல் சிங்காரவேலர் இருந்தார்.

அண்ணல் அம்பேத்கர் முரண் சுட்டல்

சிங்காரவேலரும், அண்ணல் அம்பேத்கரும் புத்தமதம் என்னும் மாளிகைக்குள் நுழைந்தனர். அண்ணல் அம்பேத்கர் மட்டும் நிரந்தரமாகவே புத்தமதப் பற்றாளராக மாறினார்; மற்றவர்களும் புத்த மதத்திற்கு மாறவேண்டுமென வேண்டினார். ஜாதி என்னும் இழிவைத் துடைத்துக் கொள்ள அதுவே பரிகாரம் எனவும் கூறினார்.

---

1. முத்து. குணசேகரன், பா. வீரமணி, ம. சிங்காரவேலரின் சிந்தனைக்களஞ்சியம், பக். 1634-1636.

சிங்காரவேலர் பகுத்தறிவு, நாத்திகம், பொதுவுடைமை என்று தம்மை வளர்த்துக் கொண்டு அனைத்து மதங்களுமே மனிதனின் படைப்புகள்; அவை மனித நலத்திற்கு என்றென்றைக்கும் தேவையற்றவை என்பதை உலகிற்கும் உணர்த்தினார். [1]

மதம் மாற வேண்டல்

அண்ணல் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட ஏழு கோடி மக்கள் தங்களை உயர்த்திக் கொள்ள இந்துமதத்திலிருந்து வெளியேறிப் புத்த மதத்திற்குச் செல்ல வேண்டும் என ஆணையிட்டார். இந்த மதமாற்றம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த நன்மையும் தராது என்பதைச் சிங்காரவேலர் உணர்த்துவதற்காக அம்பேத்கருக்குத் திறந்த கடிதத்தின் மூலம் தமது கருத்தைப் பதிவு செய்கின்றார்.

மதங்கள் அறியாமையின் வெளிப்பாடுகள்

மதங்கள் யாவும் அறியாமையின் வெளிப்பாடுகள். இந்த நிலையில் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்குச் செல்வதால் என்ன பயன்? வந்து விடமுடியுமெனச் சிங்காரவேலர் கேட்கிறார்.

> மதங்கள் யாவும் கற்பனைகள். மதங்கள் கூறும் கோட்பாடுகளும் பொருளற்றவை. ஒருகாலத்தில் மனிதன் ஆப்ர கடாப்ரா போன்ற சொற்களைக் கேட்டு அவை பொருளுடைய சொற்கள் என நம்பினான். பின்னர்த்தான் இவை முன்னோர்கள் பயன்படுத்திய வெற்றுச் சொற்கள்; பயனற்றவை என்பதைக் கண்டான்.

இதைப் போலத்தான் மதம் தொடர்பான செய்திகளும்.

> பொய்யான, பொருளற்ற மதங்களை விட்டு நீங்குவதுதான் 'அறிவுடைமைக் கழகு'. மதங்களைப் பொறுத்தவரை எல்லாமே சனியன்கள்தாம். இதில் இந்துமதம் என்னும் ஒரு சனியனை விட்டுப் புத்தமதம் என்றும் இன்னொரு சனியனைப் பின் பற்றுவதில் என்ன பொருள் இருக்க முடியும்? புத்திமான்கள் எல்லாச் சனியன்களையும் விட்டொழிக்கப் பார்ப்பார்களே யன்றி, ஒன்றைவிட்டு மற்றொன்றிற்கு மாற நினையார்.[1]

என்று அம்பேத்கருக்கு அறிவுறுத்துகின்றார்.

---

1. ம. சிங்காரவேலு, மெஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும், பக். 21-31.

அறிவியல் முன்னேற்றத்திற்குக் குரல் கொடுத்தவர்

சிங்காரவேலர் போலத் தமிழகத்தில் அறிவியல் மேம் பாட்டிற்காகக் குரல் கொடுத்தவர் வேறு யாரும் இல்லையென்றே கூறிவிடலாம். மக்களின் மூடப்பழக்க வழக்கங்களைக் கண்ட சிங்காரவேலர் துடித்தார். எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைக் கிறதோ அப்பொழுதெல்லாம் சிங்காரவேலர் எழுதினார்; பேசினார். அதற்காகவே விஞ்ஞானம் என்ற பெயரில் பத்திரிகை யொன்றையும் நடத்த முயன்றார். விஞ்ஞான ஏற்றத்திற்காகப் பாடுபட்ட அறிவியல் அறிஞர்களை மக்களிடம் அறிமுகப் படுத்துவதே தமது கடமையென நினைத்தார். அந்த நோக்கத்திற் காகவே டார்வின் முதல் ஐன்ஸ்டீன் வரை அனைத்து விஞ்ஞானி களைப் பற்றியும் மக்களுக்கு அறிமுகம் செய்வதை ஒரு கடமை யாகவே சிங்காரவேலர் கொண்டிருந்தார்.

அறிஞர்களை அறிமுகப்படுத்தல்

மக்கள் மத்தியில் 'ஜார்டனோ புருனோ' போன்ற அறிஞர்களை அறிமுகம் செய்கின்ற வேளையில் விஞ்ஞானிகளாக இருந்தாலும் பழக்க தோஷத்தால் மூடத்தனமாகச் சிந்தனையின்றி நடந்து கொள்ளும் சர்.சி.வி. இராமன் போன்றவர்களையும் மக்களுக்கு இனங்காட்டி, உண்மையான மேதைகள் யார்? என்பதையும் சிங்காரவேலர் விளக்குகின்றார். சிறந்த விஞ்ஞானிகளாகச் சாக்கிரட்டீஸ், வானினி, கம்பெனலா, கலிலியோ, சாவேதஸ் போன்ற அறிஞர்களிடையே ஜார்டனோ புருனோ எங்ஙனம் தனித்தன்மை வாய்ந்தவராக விளங்கினார் என்பதைச் சிங்காரவேலர் விளக்குகின்றார்.

ஒரு காலத்தில் போப் அதிகாரத்திற்கும் மதக் கொடுங் கோன்மைக்கும் ஐரோப்பிய தேசம் முழுமையும் கட்டுப்பட்டுக் கிடந்தது. காப்பர், நிக்கஸ் என்ற மேதை இதுவரை உலகம் மூடத்தனமாக நம்பிக் கிடந்த நம்பிக்கைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். 'உயரே சொர்க்கம்; அதிலே நரகம்; அதிலே பாவிகள்; பூமி அழிவற்றது; சூரியன் கிழக்கும் மேற்குமாக ஓடிக் கொண்டிருக்கிறது என்று மதங்கள் கூறிக் கொண்டிருக்கின்ற நம்பிக்கைக்கு எதிராகக் காப்பர் நிக்கஸ் குரல் கொடுத்தார்.

மதவாதிகள் புறக்கணித்த அறிஞர்கள்

காப்பர் நிக்கஸ் பூமி சூரியனை மையமாகக் கொண்டு சுற்றி வருகிறது. பல கோள்களைக் கொண்டது இந்தச் சூரிய மண்டலம் என்று உண்மையை எடுத்துரைத்தார். இதனாலேயே காப்பர் நிக்கஸ்சின் பல நூல்கள் கத்தோலிக்க மத அமைப்பால் தடை

செய்யப்பட்டன. காப்பர் நிக்கஸ்சும் அவர் தத்துவங்களும் மூட உலகத்தால் மூடிவைக்கப்பட்டன.

ஜார்டனோ புருனோ

இந்த நிலையில்தான் ஜார்டனோ புருனோ தோன்றி விஞ்ஞானிகளுக்கு இயல்பாக இருக்க வேண்டிய தைரியத்துடன் காப்பர் நிக்கஸ், கெப்ளர் போன்றவர்களின் கண்டுபிடிப்புகளை உலகிற்கு அஞ்சாமல் எடுத்துரைத்தார். மதங்களின் மூடத் தனத்தையும் அஞ்சாமல் உலகிற்கு எடுத்துரைத்தார். இந்த ஜார்டானோ புருனோவை உலகம் அறிய வேண்டுவது அவசியம் என்பதால் அவரைத் தமது 'புதுவுலகம்' பத்திரிகையில் அற்புதமாகச் சிங்காரவேலர் அறிமுகம் செய்கின்றார். ஜார்டனோ புருனோ இயல்பாகவே துடிப்புள்ளவர். பிடிவாதக்காரரர்; விவாதத்திற்கு அஞ்சாதவர்; விதண்டாவாதி; பலவிதமான விஷய ஞானங்களுக்காகத் தாகங் கொண்டிருப்பவர். ஆகவே அவர் சீக்கிரத்திலேயே தொல்லையில் மாட்டிக் கொண்டார். சட்டையின் ஒரு பொத்தானை முதலில் பிசகாக மாட்டி விட்டால் மற்ற பொத்தான்களும் பிறகு ஒழுங்காக வராது என்று ஜார்டனோ புருனோ சொன்னதைப் போலவே அவருக்கே நிகழ்ந்து விட்டது என்று புருனோவைச் சிங்காரவேலர் அறிமுகம் செய்கின்றார்.[1]

ஜார்டனோ புருனோவின் சிந்தனைகள் மதத்திற்குத் துரோகம் செய்வதால் கட்டளைக்குக் கீழ்ப்படியவும் மறுத்தார். அறிஞர் 'ஹாப்பிங்' கூறுவதைப் போல நாகரிகச் சகாப்தத்தின் மூலவராக, முதல்வராக இருந்த ஜார்டனோ புருனோ, மத அதிகாரிகளின் ஒற்றர்களால் வெனிசில் கைது செய்யப்பட்டு, மத நீதிஸ்தலத்தால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப் பட்டு, மன்னிப்பு கேட்க மறுத்ததால், அந்த அறிஞன் நெருப்பில் உயிருடன் எரிக்கப்பட்டான் என்னும் கொடிய செய்தியைச் சிங்காரவேலர் உலகிற்கு உணர்த்துகின்றார். சிங்காரவேலர் வாழ்ந்த காலம் மத உலகம் பேராண்மையோடு வலம் வந்த காலம். இதைப் போன்ற உண்மையான, உன்னதமான கருத்துக்களை விதைப்போர் அப்பொழுது பெரிதும் இலர். இத்தகைய விஞ்ஞானிகளை உலகிற்கு அறிமுகம் செய்வதுதான் தமது தலையாய கடமை எனச் சிங்காரவேலர் நம்பினார். ஜார்டனோ புருனோ போலவே வாழ்ந்த

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம. சிங்காரவேலரின் சிந்தனைக்களஞ்சியம், பக். 1578-1585.

சிங்காரவேலர் உலகிற்குத் தெளிவு ஏற்படவும், விஞ்ஞானத்தின் மேன்மையை உலகிற்கு உணர்த்தவும் ஜார்டனோ புருனோவின் இறுதி வாக்குமூலத்தை உலகிற்குப் பதிவு செய்கின்றார்.

ஜார்டனோ புருனோ இறுதி உரை

> நான் போராடினேன். அதுவே போதும். வெற்றியைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் இப்பொழுது தண்டனை அனுபவிப்பது என்னோடு இருக்கட்டும். பிற்காலத்தவர் நான் சொல்லியதை மறுக்க மாட்டார்கள். நான் சாவதற்குக் கவலைப் படவில்லை. இக்கோழை மதவாதிகள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது, பேடித்தனமாக வாழ்வதை விட, எனது திடமான கொள்கைகளான விட்டுக் கொடுக்காது நிலை நாட்ட, உணர்ச்சி மேலீட்டால் உண்டாகும் சாவை நான் பெரிதாக விரும்புகிறேன்.

என்று ஜார்டனோ புருனோ குறிப்பிட்டதாகச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார்.

சிங்காரவேலரின் கொள்கைகளையும், கோட்பாட்டையும், உள்ள உறுதியையும் உணர்ந்தவர்கள், அவரின் எழுத்தை, எண்ணத்தை உணர்ந்தவர்கள், சிங்காரவேலர் இக்காலத்தில் வாழ்ந்த ஜார்டனோ புருனோதான் என்பதை நிச்சயம் உணருவார்கள்.

அறிஞர்களையும் திறனாய்வு செய்தார்

சிங்காரவேலரின் அனைத்து எழுத்துகளும் 'சிங்கார வேலரின் சிந்தனைக் களஞ்சியம்' என்ற தலைப்பில் தொகுக்கப் பட்டுள்ளன. சிங்காரவேலர் எழுதாத துறைகளோ, பொருள்களோ கிடையாது . இதன்கண் இல்லாத எப்பொருளும் இல்லையால் என்பதைப் போல அனைத்தைப் பற்றியும் சிங்காரவேலர் திறனாய்வு செய்துள்ளார். மூட உலகம் எதனையெல்லாம் உண்மை என நம்பியதோ அவற்றையெல்லாம் எதிர்த்துச் சிங்காரவேலர் அன்றைக்குக் குரல் கொடுத்துள்ளார். பெரும்பெரும் அறிஞர்களைக் கூட அவர்களின் அறியாமைக்காகக் கடுமையாகச் சிங்காரவேலர் சாடியுள்ளார். இதில் சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன் உட்பட, தப்பவில்லை.

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்.1692-1696.

பூர்ஷ்வா பண்டிதர் எஸ். இராதாகிருஷ்டிணன் என்னும் கட்டுரை இன்றைக்கும் மக்களின் தெளிவிற்கும் அறிவாராய்ச்சிக்கும் பயன்படுவதாகும். [1]

பூர்ஷ்வா பண்டிதர்

டாக்டர் சர்வப்பள்ளி எஸ். இராதாகிருஷ்ணன் இந்தியாவின் குடியரசுத் தலைவராக வாழ்ந்தவர். இந்தியத் தத்துவ ஞானத்தை விளக்கிப் பேசுவதற்காக இங்கிலாந்துப் பல்கலைக் கழகமான ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திற்குக் கூடச் சிறப்புச் சொற்பொழிவாளராக அழைக்கப்பெற்றவர். இவர் இந்தியத் தத்துவ ஞானத்தைப் பற்றி வானளாவப் புகழ்ந்து பேசுபவர். இவர் பேசும் தத்துவஞானம் என்னும் வேதாந்தம், உலகத்தை மித்தை, அதாவது சூனியம் என்று கூறுவது.

> இருப்பது பிரமம் என்றும் உலகமும் அதில் வாழும் மக்களும் மற்ற ஜீவ அஜீ க' பொருள்களும், கானல் நீர் எனவும், பழுதைப் பாம்பெனவும், கட்டையைக் கள்ளனெனவும், கிளிஞ்சலை வெள்ளி எனவும் தோன்றும் தோற்றங்கள்.

எனவும் விவாதிப்பது தத்துவ ஞானங்களாகும்.

இந்தத் தத்துவ வார்த்தைகள் யாவும் சொல்லடுக்குகளே தவிர நடைமுறையில் எந்த உண்மைகளையும் உள்ளடக்கியதல்ல எனச் சிங்காரவேலர் கூறுகின்றார்.

அறிவியல் முறை

அறிவியல் தத்துவப்படி ஒரு பொருளை உள்ளதா? இல்லையா? என்பதை மூன்று வகையால் அறியலாம். ஒன்று பார்க்க வேண்டும். இல்லையென்றால் அதனைக் கேட்க வேண்டும். அதுவும் இல்லையென்றால் உணரவாவது செய்ய வேண்டும். இம் மூன்றுக்குள் அடங்காத, எப்பொழுதும் உலகில் இல்லாத பொருளே, அது கடவுள். மோட்சம், மேல் லோகமும், கீழ் லோகம், சொர்க்கம், நரகம் அனைத்தும் அதில் அடங்கும் எனச் சிங்கார வேலர் விளக்குகின்றார்.

சொல்லடுக்குகளே

உலகில் இல்லாத ஒன்றை எண்ணற்ற சொற்களால் விளக்குவது வீண் என்கிறார் சிங்காரவேலர். துவைதம், துவைதா துவைதம், விசிஸ்டா துவைதம், அத்வைதம் என்பவையெல்லாம் சொல்லடுக்குகளேயன்றி உண்மைகள் அல்ல. இல்லாத ஒன்றை எண்ணற்ற சொற்களால் விளக்குவதில் என்ன பயன்? எனக் கேட்கும் சிங்காரவேலர்

> எந்தத் தத்துவமும் நமது தினசரி வாழ்க்கைக்கு உதவியாக நிற்க வேண்டும். அப்படி உதவவில்லையென்றால் அவற்றை வெற்றுச் சொற்கள் என நீக்கி விட வேண்டும். டாக்டர் இராதாகிருஷ்ணனின் தத்துவத்தையும் சேர்த்துதான்.

என்று கூறும் சிங்காரவேலர்,

> தினசரி வாழ்க்கைக்கு வேண்டியவற்றை அடையச் செய்யாமல் நமது நாட்டை இராதாகிருஷ்ணன் ஞான பூமியென்றும் மேல் நாட்டை லோகாயுத பூமி என்றும் விதந்து பேசுவது பயனில்லாதது

என்கிறார் சிங்காரவேலர்.

ஒரு புராணத் தத்துவஞானி தன் காலடியில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றிக் கவலைப் படாமல் ஆகாயத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டே நடந்து போகையில் கிணற்றில் விழுந்தானாம். மித்தை யென்றும், பிரமம் என்றும் பரப்பிரமம் என்றும், வார்த்தைகளை, சொல்லடுக்குகளை வைத்து விளையாடும் டாக்டர் இராதாகிருஷ்ணனின் தத்துவம் கூடப் பயனற்றதுவே. ஆகவேதான் பயனற்ற தத்துவத்தைப் பேசும் மனிதர்தாம் இராதாகிருஷ்ணன் என்பதற்கு அடையாளமாகப் பூர்ஷ்வா பண்டிதர் என்று தன் கட்டுரைக்குத் தலைப்பையே சிங்காரவேலர் தருகிறார்.

தத்துவமும் வாழ்வும்

இதைப் போலச் சிங்காரவேலர் ''தத்துவமும் வாழ்வும்'' என்ற தலைப்பில் இந்தியத் தத்துவங்கள் அனைத்தும் குறையுடைய தத்துவங்களே என்பதையும் விளக்குகின்றார். இந்தியத் தத்துவ உத்தேசங்களுக்கு அனுபவத்தில் ஆதாரம் கிடையாது. அனைத்தும் சொல் ஜாலங்களே; வார்த்தை வர்ணனைகளே என்பதைச் சிங்காரவேலர் விளக்குகின்றார். இந்த வகையில் சங்கரர், இராமானுஜர், மத்துவர் அனைவரும் குறையுடையவர்களே என்பதைச் சிங்காரவேலர் தெளிவாக விளக்குகின்றார். இல்லாத ஒன்றிற்கு எண்ணற்ற சொற்களை விதைப்பதில் என்ன பயன்? என்று கேட்கிறார் சிங்காரவேலர்.

நடைமுறைக்கு உதவாத தத்துவங்கள்

இத் தத்துவங்களுக்கு அனுபவத்தில் ஆதாரம் ஒன்றும் இல்லையாதலாலும் பரீட்சித்துப் பார்க்க முடியாததாலும் யார் யார் என்னென்ன யோசித்தார்களோ அதுவே பெயரால் வழங்கும் தத்துவமெனச் சிங்காரவேலர் விளக்குகின்றார். கடவுளைக் குறிக்கின்ற ஒரு சொல்லுக்கு மூன்று விளக்கங்கள்

தரப்படுகின்றன. சங்கராச்சாரியுடையது அத்வைதமென்றும், மத்துவாச் சாரியுடையது துவைதம் என்றும், இராமானுஜருடையது விசிஷ்டாத்துவைதம் எனவும் வழங்கும் தத்துவம் ஒரு சொல்லுக்கு மூன்று வித அர்த்தம் கொடுத்து வந்த வித்தியாசத்தால் உண்டான தத்துவ வேற்றுமையேயன்றி உண்மையை விளக்கும் சொற்கள் அல்ல எனச் சிங்காரவேலர் விளக்குகின்றார்.

> 'அதுவே நீ ஆனாய்' என்பது அத்துவைதம். 'அதனைப் போல் நீ ஆனாய்' விசிஷ்டாதுவைதம். அதுவும் நீ ஆனாய் என்பது துவைதம், என்பது அறிஞர்கள் விளக்கமாகும். அது என்பது எது என்று விளக்காதபோது இதுவும் கண்டவர்கள் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பதைப் போன்ற விளங்காத, பயனற்ற சொல்லடுக்குகள்தானே?

எனச் சிங்காரவேலர் கேட்கிறார். மேலை நாட்டுத் தத்துவ வாதிகளான பிளாட்டோ, அரிஸ்டாட்டில், தற்காலத்தைய ஸ்பென்சர், காண்டியன், ஹெகலியன் போன்றவர்களின் தத்துவங்கள் ஓரளவிற்காவது ஏற்பதாக அமையலாம். நம் நாட்டுத் தத்துவங்களான துவைதம் என்பதும், அத்துவைதம் என்பதும், விசிஷ்டாத்துவைதம் என்பதும், சாங்கியம், மீமாம்சம், வேதாந்தம் என்பவையும் சொல்லடுக்குகளேயன்றிப் பொருளுடையன அல்ல என்பது சிங்காரவேலரின் வாதம்.

சக்லத்வாலா இறப்பு

அக்காலத்தில் மேலை நாட்டறிஞர்களைத் தமிழர்களுக்கு அறிமுகம் செய்வதில் சிங்காரவேலர் யாரினும் முன் நின்றவராவார். குறிப்பாக இங்கிலாந்தின் எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்பட்ட, பொதுவுடைமைக் கொள்கை யாளரான தோழர் சக்கலத்வாலாவைச் சிங்காரவேலர்தாம் தமிழர்க்கு அறிமுகம் செய்கின்றார்.

1927இல் சக்லத்வாலா இந்தியா வந்தபொழுது சக்லத் வாலாவுடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் 22, சௌத் பீச் ரோட்டிலுள்ள ம. சிங்காரவேலருடன் தொடர்பு கொள்க என்று இந்து பத்திரிகையில் விளம்பரம் வந்துள்ளது. சிங்காரவேலருக்குச் சக்லத்வாலாவுடன் இருந்த நெருக்கத்தையும் சிங்காரவேலர் கட்டுரையால் அறிகின்றோம்.[1]

---

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்.1652-1655.

சக்லத்வாலா செயல்பாடுகள்

சக்லத்வாலா சென்னை வந்திருந்தபொழுது, தாம் கூட இருந்து பொதுக் கூட்டத்தில் உதவியதையும், இந்தியாவிலேயே தங்கிப் பொதுவுடைமைப் பணியாற்றுங்கள் என்று சிங்காரவேலர் கேட்டதற்கிணங்கச் சக்லத்வாலா வர முயன்றும் அதிகாரிகள் தடுத்ததையும் நினைவு படுத்துகின்றார். மீண்டும் வருவேன் என்ற சக்லத்வாலாவிற்கு 1936இல் இந்தியா வரமுடியாமல் மரணம் சம்பவித்ததைக் குறித்து அற்புதமான இரங்கல் கடிதமொன்றைச் சிங்காரவேலர் எழுதுகின்றார்.

சக்லத்வாலாவிற்கு ஏற்பட்ட மரணத்தைச் சிங்காரவேலர் இலக்கிய நயம் ததும்ப எழுதுகின்றார். சக்லத்வாலாவிற்கு ஏற்பட்ட இறப்பை உலகம் வேண்டுமானால் மரணம் என்று கூறலாம். நான் அவ்வாறு கூறமாட்டேன் என்றும் சிங்காரவேலர் நுட்பமான விளக்கத்தையும் கூறுகின்றார்.

சக்லத்வாலா 1936ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் தேதிக்கு முன்பு உலகம் நேரில் கண்டு அந்தத்தோழர் சக்லத் வாலாவின் வாழ்க்கை, அன்றைய தினம் ஞாபகார்த்தமாக உலகில் நிலவும்படி நேரிட்டது. சாமானிய உலகம் இந்த மாறுதலை இறந்ததாகக் கூறும். ஆனால் உண்மையில் அவர் இறந்தாரென்று சொல்வது தவறு. நேரில் கண்டுவந்த சக்லத்வாலாவை நினைவில் மட்டுமே காண்பதுடன், நமது ஞாபகத்தில் மாத்திரம் தங்கும்படியாக நேரிட்டதே ஒழிய, முடிவு அடையவில்லை. இதுதான் நமது சமதர்ம நோக்கம் என்று சிங்காரவேலர் புதுமையாக விளக்கம் கூறுகின்றார்.

கொள்கையாளர் சக்லத்வாலா

சக்லத்வாலா ஒரு மாபெரும் சமதர்மி. இவருடைய சமதர்மம் கலப்பற்ற சமதர்மமெனக் கூறலாம். இவர் தமது சமதர்மத்தைச் சமயத்திற்கு ஏற்றவாறு பொருள் படுத்தியவரல்லர். தமது வாழ்க்கையிலும் சமதர்மத்தைக் கையாண்டு வந்தார். சமதர்ம வாழ்க்கையை அனுசரித்து வந்ததன் பயனாக உலகச் சம்பத்தை இவர் அடைய முடியாமல் போயிற்று. சமதர்மத்தைப் பேசி வந்த, அவர் சாமானியர்களுடனேயே வாழ்ந்து வந்தார் எனச் சக்லத்வாலாவைப் புகழ்ந்து பேசுகின்றார்.

மக்களுக்காக வேண்டும்

முதலாளித்துவம் இந்த உலக மக்களுக்குக் கொடுமையே செய்து வருகிறது. உலகில், மக்களுக்கு வேண்டிய உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க வீடும் தெரிந்து கொள்ளக்

கல்வியும், அனுபவிக்கச் சுகமும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்னும் பொதுவுடமைக் கொள்கைக்காகவே சக்லத்வாலா வாழ்ந்தார். இப்படிப்பட்ட நல்லவரின் கொள்கைப் பிரச்சாரக் கூட்டத்திற்குப் பொது மக்களும், மாணவர்களும் வந்தார்களே தவிர, முதலாளிகளும், அதிகாரிகளும் வரவே இல்லை. உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் மக்களுக்குப் பொதுவாக வேண்டும் என்னும் பொதுவுடைமைக் கொள்கைக்காகத்தான் சக்லத்வாலா உழைத்தார். சிறுபான்மையினரான முதலாளிகளிடம் உள்ள பொருள் சுதந்திரம், பொருள் விநியோகம் இவர்கள் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அவையெல்லாம் பெரும்பான்மையோர் ஆதிக்கத்திற்கு வர உழைப்பதுதான் பொதுவுடைமைச் சித்தாந்தம். அந்தச் சித்தாந்தத்தை நோக்கி நடைபோடுவதுதான் சக்லத்வாலாவிற்கு நாம் செய்கின்ற நன்றிக் கடனாகும் எனச் சிங்காரவேலர் நினைவு கூர்கின்றார்.

மூலதனம் அறிமுகம்

இன்றைக்குப் பல அறிஞர்களும் ‘மூலதனம்’ என்பதைப் பற்றி நிறையவே பேசுகின்றனர். கார்ல்மார்க்சின் தஷ் கேப்பிடலை ஜமதக்னி, தியாகு போன்றவர்களெல்லாம் மொழியாக்கம் செய்துள்ளனர். 1920களிலேயே கார்ல் மார்க்சின் மூலதனம் என்னும் நூலைப் படித்து இந்தியர்களுக்கு, குறிப்பாகத் தமிழர்களுக்கு மிகத் தெளிவாக விளக்கியவர் சிங்காரவேலர்தாம். ஆகவேதான் பாவேந்தர் பாரதிதாசன், மூலதனத்தின் பொருள் புரிந்தது சிங்காரவேலரால்தான் எனப் புகழ்ந்து பாடினார்.

மூலதனம் என்னும் மூல நூலைப் படித்து உள்ளம் நெகிழ்ந்த சிங்காரவேலர் அந்த ஆங்கில நூலை அவரின் தொண்டர் நாகை கே. முருகேசனிடம் கொடுத்துப் படித்துப்பார் என்றாராம். மூன்று நாள் முயன்றும் எதையும் புரிந்து கொள்ள முடியாமல் இடர்ப்பட்ட கே. முருகேசன் போன்றவர்கள் தெளிவு அடையவே மூலதனம் என்னும் சிறு நூலைச் சிங்காரவேலர் மொழியாக்கம் செய்து வெளியிட்டார்.

உலகம் மக்களுக்குப் பொது

> உலகம் முழுமையும் பொருள் விளைந்து, நிறைந்து கிடக்கின்றது. தொழிலாளிகள், விவசாயிகள் கைப்பட்டவுடன் பொருள்கள் பண்டமாகின்றன. சரியான வினியோக முறையால் அப்பண்டங்களை அனைவர்க்கும் கிடைக்கச்செய்ய வேண்டுவது அரசின் கடமை. அரசுகள் முதலாளிகளின்

> வசமிருப்பதால் சரியான விநியோகமில்லாமல் இடைத்தரகர்களான வணிகர்கள் வசம் பொருள்கள் செல்லுகின்றன. கைத்திறனும், வாய்த்திறனும் கொண்ட மக்கள் கண்மூடி மக்களின் நிலத்தையெல்லாம் கைப்பற்றி வஞ்சித்தார்கள். இடைத்தரகர் என்னும் முதலாளிகளால் இலாபம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டு உழைக்கும் மக்கள் வஞ்சிக்கப்பட்டார்கள்.

என்னும் நுட்பத்தையெல்லாம் 'மூலதனம் என்னும் கட்டுரையின் மூலம் எழுதித் தெளிவு படுத்துகின்றார். 2,000 பக்கங்களுக்கு மேல் தொகுக்கப்பட்டுள்ள சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியத்தில் 'விஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் என்ற தலைப்பில் உலகின் பல பகுதிகளிலிருந்து கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சிங்காரவேலர் விடையளித்துள்ளார். அவற்றையெல்லாம் புத்தகங்களாக வெளியிட்டுத் தந்தை பெரியார் மக்களுக்குப் பெருந் தெளிவை ஏற்படுத்தினார்.

உலகில் கோழி முந்தியா? முட்டை முந்தியா? பூமி அந்தரத்தில் எப்படி நிற்கிறது? உலகிற்கப்பால் மழையுண்டா? மீன் மழை, இரத்த மழை உலகில் பெய்வதுண்டா? பேய் பிசாசுகள் உலகில் உண்டா? கடவுள் என்பது உலகில் உண்மையா? பொய்யா? என்றெல்லாம் பொதுமக்கள் உலகின் பல பகுதியில் இருந்து கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க பதிலளித்துச் சிங்காரவேலர் மக்களைத் தெளிவு படுத்தினார்.

மூட நம்பிக்கையின் கொடுமை

பாமர மக்கள் உலகில் அடைகின்ற துன்பங்களுக் கெல்லாம் மூல காரணம் மூட நம்பிக்கைகளே என்னும் சிங்காரவேலர்

> பொதுமக்கள் சரியாக ஆலோசிப்பதில்லை, அப்படியே சிந்தித்தாலும் தகுதியான முறைப்படி சிந்திப்பதில்லை. இரண்டு வகையான நம்பிக்கைகள் உலகில் உள்ளன. ஒன்று சரியான நம்பிக்கை, மற்றொன்று சரியற்ற நம்பிக்கை.

என விளக்கும் சிங்காரவேலர் பாமரர்களுக்கும் விளங்கும் முறையில் நீராவி குளிர்ச்சி பட்டதும் மழையாகப் பெய்கிறது என்பது சரியான நம்பிக்கையென்றும் வருணபகவானால் மழை பெய்கிறது என்பது தவறான நம்பிக்கை எனவும் சிங்காரவேலர் விளக்குகின்றார்.

அவசர முடிவுகள்

ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிற பொழுது, அது எந்தச் சூழலில் நடைபெற்றது என்பதைச் சரிய ாக ஆராயாமல் பாமரர்கள் அவசர முடிவெடுப்பதாலேயே பல தவறான விளைவுகள் ஏற்பட்டு விடுவதாகச் சிங்காரவேலர் விளக்குகின்றார். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது என்பதைப் போல் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகின்றபொழுது இன்னொரு நிகழ்ச்சியும், நடைபெறுவதுண்டு. இதற்கு 'உடனிகழ்ச்சி' என்று பெயர். ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறபொழுது அங்கு நடைபெற்ற இன்னொரு நிகழ்ச்சி என்ன என்பதைச் சரியாக ஆராயாமல், முடிவெடுப்பது பாமரத்தன்மை என்கிறார் சிங்காரவேலர். பாம்பின் விஷம் மந்திரத்தால் முறிந்ததா? இல்லை இதற்குமுன் சாப்பிட்ட மருந்தின் விளைவா? இல்லை விஷம் இல்லாத சூழலில் மந்திரவாதி மந்திரம் செய்து வெற்றி பெற்றாரா என்பதை 'உடனிகழ்ச்சி' என்னும் கொள்கையைக் கொண்டு ஆராய வேண்டும் என்கிறார் சிங்காரவேலர்.

பொய் நிரம்பியுள்ள உலகம்

பார்த்தல், பரீட்சித்தல் இவ்விரண்டு கருவிகளை உபயோகிக்காததால்தான் கடவுள்களாலும், மந்திரங்களாலும், பொய் பித்தலாட்டங்களாலும் உலகை நிரப்பி வைத்துள்ளோம் என மக்களுக்குச் சிங்காரவேலர் கூறுகின்றார். உலகம் முழுமையும் பாம்பு வழிபாடு ஏற்பட்டதற்குக் காரணம் பாம்பினிடம் உள்ள விஷத்தால் ஏற்பட்ட அச்சமே பெருங்காரணம் என விளக்குகின்றார். கவிஞர்கள் பாம்பைக் கட் செவியன் என்பதற்குக் கவிஞர்களின் அறியாமையே காரணம் எனச் சிங்காரவேலர் விளக்குகின்றார். நம் கவிஞர்கள் பார்த்தல் என்னும் நுட்பமான ஆய்வின்மையால் பாம்பு கண்ணால் கேட்கிறது என்கிறார்கள். இது ஒருவகை மூட நம்பிக்கையே என்கின்றார் சிங்காரவேலர்.

எந்தெந்த நோய்களுக்குக் காரணம் தெரியவில்லையோ அந்த நோய்களின் மேலெல்லாம் மந்திரத்தில் நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது என விளக்குகிறார் சிங்காரவேலர். அறியாமையால் பாமர மக்கள் மந்திரம், மந்திரம் என்று மயங்குகிறார்கள். அறியாமையை வளர்க்கவே மந்திரங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பித்தலாட்டம் வேதத்திலும் உண்டு. ஓம், ஓம் என்பதும், ஹர, ஹர என்பதும் வெற்றுச் சொற்களே. பாமரர்களை மிரட்டுவதற்காகப் படைக்கப்பட்ட வெற்றுச் சொற்களே அவை எனச் சிங்காரவேலர் தெளிவு படுத்துகின்றார்.

பெரியாரும், சிங்காரவேலரும் இணைந்து பணியாற்றிய பொழுது தமிழகத்தில் விஞ்ஞானம் விரிவானமாகத் திகழ்ந்தது. மூட, அறியாமைகள் அனைத்தும் பெரியார், சிங்காரவேலர் முயற்சிகளால் தமிழகத்தில் ஒழிக்கப்பட்டன. இக்காலக் கட்டத்தில் இந்தியாவிலேயே இத்தகைய சுயமரியாதைச் சமதர்மக் கொள்கைகள் விளைந்தது தமிழகத்தில்தான். இந்தப் பணியைப் பெரியாரும், சிங்காரவேலரும் மிக மிக நிறைவாகச் செய்தனர்.

ஆன்மீகத்திற்கு அதிக இடம்

நம்முடைய நாடு ஆன்மீகத்தில் ஊறித் திளைத்த நாடு. ஆன்மீகவாதியாக ஒருவன் இல்லை யென்றாலே அவனை இழித்தும், பழித்தும் பேசுகின்ற நாடு நம் நாடு. இந்த நாட்டிலே பழக்கங்கள் இருவகைப்படும். ஒன்று, நல்ல பழக்கம்; மற்றொன்று தீய பழக்கம். ஆன்மீகம் தொடர்பான பழக்கத்தைத் தீய வழக்கமென்று சொல்பவர்கள் ஒன்று பழிக்கப்படுவர். இல்லையென்றால் கொல்லப்படுவர்.

ஆன்மீக ஆதரவு அரசு

பிரிட்டிஷ் அரசு ஆளுகின்ற காலத்தில் இந்தியாவில் ஆன்மீகத்திற்கு எதிரான கருத்துகளைச் சொல்லவே முடியாது. அப்படி சொல்கின்றவர்களுக்கு மக்களுடைய செல்வாக்காவது இருக்க வேண்டும். அரசை எதிர்த்து, மக்களை எதிர்த்துச் சில அறிஞர்களே துணிவாகக் கருத்துகளைச் சொல்வர். உண்மைகள் என்பதற்காக எதைப் பற்றியும் கவலைப்படாமல் கருத்துகளைச் சொன்னவர் சிங்காரவேலர்.

சாமி ஆடல்

சிங்காரவேலர் வாழ்ந்த காலத்தில் சாமி ஆடல் என்பது மக்களால் மிக மிகப் புனிதமாகப் போற்றப்பட்ட பழக்கமாகும். அதனை எதிர்த்துச் சிங்காரவேலர் கடுமையான விமர்சனங்களை வைக்கின்றார். தெய்வமாடல் என்பதற்குச் சிங்காரவேலர்

> தெய்வமாடல் முதலிய துர்ப்பழக்கங்கள் என்றே பெயர் தருகின்றார். இப்படி சாமியாடுவது தெய்வ அருளால் அல்ல; அது பலவீனமான மனிதன் தானே வரவழைத்துக் கொள்ளும் ஒருவகை வெறியுணர்வு; உசுப்பல் உணர்ச்சி என விளக்கம் தருகின்றார். சிலருக்குக் காக்காய் வலிப்பு வருவதைப் பார்க்கிறோம். இந்தத் தெய்வமாடல் என்பது தானே வரவழைத்துக் கொள்ளும் பலவீனப்பட்ட மனிதனின் நரம்பு தொடர்பான நோய் என விளக்கம்

> தருகின்றார். சாமி ஆடுகிறது, சாமி பேசுகிறது, சாமி மூர்ச்சித்தது, சாமி மலை ஏறி விட்டது என்றெல்லாம் கூறுவது பாமரர்களின் சொல்லாட்சி. [1]

என்கிறார் சிங்காரவேலர்.

> பலவீனப்பட்ட மனநிலையில் உள்ள மனிதர்கள் இந்த உணர்வைப் பெற உடுக்கை, சிலம்பு, கரகம், வேப்பிலை, மேளம், தாளம், விபூதி, மணி முதலிய கருவிகளால் எளிதில் தூண்டப்படுவர். [2]

எனச் சிங்காரவேலர் விளக்கம் தருகின்றார்.

உசுப்பல் உணர்ச்சி

> இது ஒரு வகையான மனநோய் என விளக்குகின்றார். ஒரு மனிதனுக்கு ஜன்னி வந்தால் அவன் தாறுமாறாக உளறுவான். விவரம் புரியாத பாமரர்கள் ஜன்னி என்பதை விளங்கிக் கொள்ளாமல் அவனை அடித்துக் கூடக் கொன்றிருக்கிறார்கள். ஆனால் தானே ஜன்னியை உண்டாக்கிக் கொண்டு உடுக்கை, சிலம்பு இவற்றுக்குத் தகுந்தபடி ஆடுகின்ற மனிதரைத் தெய்வமாக நினைத்து மனிதன் வணங்குவதற்கு அறியாமையே காரணம்

என்கிறார் சிங்காரவேலர்.

தாங்களே வரவழைத்துக் கொண்ட ஹிஸ்டீரியா என்னும், நோயால் அவதிப்படும் மனிதன் உளறுவதை அம்மன் ஆடு கேட்கிறாள், அம்மன் கோழி கேட்கிறாள் எனப் படையல் போடுவதற்கு மனிதனின் அறியாமையே காரணமென விளக்குகின்றார். இதன் தொடர்பாக உறையூர், ரங்கூன், டர்பன் முதலிய இடங்களிலிருந்து வந்த வினாக்களுக்கெல்லாம் சிங்காரவேலர் தகுந்த விளக்கம் தந்து விளக்குகின்றார். இவை ஒருவகை தூண்டப்பட்ட உசுப்பல் உணர்ச்சி என்கிறார்.

டர்பன் நகரைச் சேர்ந்த நண்பர் ஒருவர் தீ மிதிக்கின்ற படத்தை அனுப்பிவிட்டு, இவையெல்லாம் தெய்வ மகிமையல்லவா? எனவும் வினாவியுள்ளார்

---

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்.603-605.
2. மேற்படி

> பாதத்தின் தோல் உடம்பின் மற்ற பகுதியைவிடக் கொஞ்சம் கடினமானது. குறிப்பிட்ட நேரத்திற்குள் மக்கள் தீயைத் தாண்டி விடுகிறார்கள். இதில் தெய்வீகத்திற்குத் துளியும் இடங்கிடையாது. தெய்வமே கிடையாது என்கின்றபொழுது தெய்வீகம் எங்கிருந்து வரமுடியும்

எனவும் சிங்காரவேலர் கேட்கின்றார்.

வேறுவகை மூடத் தனங்கள்

இன்னும் சிலர் உடம்பில் ஊசி குத்திக் கொள்ளும் பழக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு இவையெல்லாம் தெய்வீகத்தால்தானே வலி இல்லாமல் மனிதன் இருக்கிறான் எனவும் வினாவியுள்ளனர்.

> முதலில் கொஞ்சமாக ஊசியைக் கொண்டு குத்திக் கொள்வது. அந்தக் காயம் ஆறிய பின்னர் அதே இடத்தில் ஊசிகளைக் கொண்டு குத்திக் குத்திப் பழக்கமாக்கி விட்டால் பின்னர் அந்த இடத்தில் எவ்வளவு குத்தினாலும் வலியே இல்லாமல் மரத்து விடுகிறது. இதில் தெய்வீகத்திற்குத் துளியும் இடமில்லை

எனச் சிங்காரவேலர் விளக்குகின்றார். சிலர் தேங்காயை மண்டையில் அடித்து உடைக்கிறார்கள். சிலர் மிளகாயைப் பொடியாக்கி அதிலேயே குளிக்கின்றார்கள். அவர்களுக்கு வலியோ, எரிச்சலோ தெரிய வில்லையென்றால் அதற்குக் காரணம் தெய்வீகம்தானே எனச் சிலர் வினாவியுள்ளனர்.

இவையெல்லாம் பழக்கத்தால் செய்யப்படுவதே தவிர இதில் ஏதும் தெய்வீகம் கிடையாதென்கிறார் சிங்காரவேலர். தொடர்ந்து தலையில் தேங்காயை அடித்து வந்தால் அந்தப் பகுதி கல்லைப் போலக் கடினமாகி விடுகிறது. அந்த இடத்தில் அடித்தால் தேங்காயும் உடைந்து விடுகிறது. இது பழக்கத்தால் வந்த சாதனையேயன்றித் தெய்வீகத்தால் வந்ததல்ல எனச் சிங்காரவேலர் விளக்குகின்றார். மிளகாய்த்தூளில் குளிப்பதும் பழக்கத்தால் வந்ததேயன்றித் தெய்வீகத்தால் அல்ல என விளக்குகின்றார் சிங்காரவேலர்.

முரட்டு மூடத்தனம் கூடாது

இப்படிப்பட்ட விளக்கங்களால் தெளிவடையாத சில மூடர்கள், வீம்பிற்காகச் சிங்காரவேலரை மிரட்டியும் உள்ளனர்.

இந்த விளக்கங்களால் விளையாத நிலம் விளையுமா? காலத்தில் பெய்யாத மழை பெய்யுமா? என விதண்டாவாதம் பேசிச் சிங்காரவேலரை மிரட்டியும் உள்ளதைக் குடியரசில் நாம் காணமுடிகிறது.

இப்படிப்பட்ட வீணர்களுக்கெல்லாம் சிங்காரவேலர் அவருக்கே உரிய நகைச்சுவையுடன் விடை கூறுவதைக் காணமுடிகிறது.

> நியூஸ்லாண்டில் ஒருவன் தன் நாயகியைச் சோரம் போனாள் என்று கொன்று விட்டானாம். சோர நாயகனும் அவளுடன் போய்ச் சேர வேண்டுமென்று தற்கொலை செய்து கொண்டானாம். இவ்விருவரும் மேல் லோகத்தில் ஒன்றாகச் சேரக்கூடாது என்பதற்காக நாயகனும் தற்கொலை செய்து கொண்டானாம். இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று கேட்டால் நீங்களும் எங்களுடன் தற்கொலை செய்து கொண்டால் உண்மை விளங்கும் என்றானாம். அது போல மூடநம்பிக்கைகளைப் பொய் நம்பிக்கை என்றால் நீரும் எங்களுடன் நம்புங்கள் என்று சொல்வதைப் போலச் சில மூடர்கள் பிடிவாதம் செய்து விளக்கம் சொல்லுகின்ற நம்மையும் பழித்தும், இழித்தும் பேசுகின்றார்கள்.

மூடரைத் திருத்த முடியாது

> நியூசிலாந்து மனிதனைப் போலத் தங்கள் யுக்தி, புத்தியை இழந்து விட்டுப் பகுத்தறிவையும் இழந்து நிற்போரை எப்படி நாம் திருத்த முடியும்? யாரால் அவர்களைத் திருத்த முடியும்.

என்று கேட்கின்ற சிங்காரவேலர் உங்களையும், உங்கள் அறியாமையையும் கல்வியும், விசாரணையும் மட்டுமே உங்களில் அஞ்ஞானத்தை விலக்க முடியும் என விளக்கவும் செய்கின்றார்.

மதத்தைப் பற்றிப் பேசமாட்டார்கள்

இந்தியாவில் மதங்கள் தொடர்பான அறியாமையை நீக்குவதற்கு எந்த அறிஞரும் கருத்துக்களைக் கூறுவதற்கு முன் வரமாட்டார்கள். நல்ல கருத்துகள் என்றாலும் எங்கள் மனத்தைப் புண்படுத்துகிறீர்கள் என்று மதவாதிகள் முரண்படுவர். ஆகவே ஒரு மதம் தொடர்பாக இன்னொரு மதத்தவர் தலையிடுவதில்லை.

எங்கள் மனத்தைப் புண்படுத்தி விட்டனர் என்று வழக்கு மன்றத்திற்கே சென்று விடுவர். சிங்காரவேலர் எந்த மதம் தொடர்பாகவும் உண்மைகளைச் சொல்ல அஞ்சியதே இல்லை.

எந்த மதத்தையும் சிங்காரவேலர் சனியன் என்றே கணிப்பார். ஒரு மதத்தை விட்டு இன்னொரு மதத்திற்கு மதமாற்றம் பெறுவதை அவர் ஒரு சனியனை விட்டு இன்னொரு சனியனை விரும்புவதைப் போல என்று கூறுவார். எல்லாமே சனியன்கள் என்னும்போது எது நல்ல சனியன்? எது கெட்ட சனியன்? என்று கேட்பார். அனைத்து மனிதர்களும் மதமான சனியன்களை விட்டு நீங்குவதுதான் மனிதனின் கடமை என்பார் சிங்காரவேலர்.

மறைவான கோட்பாடுகளைப் பெற்றிருப்பதனாலேயே மதங்கள் இங்கே மதிக்கப்படுகின்றன. இந்து மதம், கிறிஸ்துவ மதம், முகமதிய மதம், புத்த மதம் இந்த நான்கு மதங்களுமே இந்த மறைவான கோட்பாடுகளைப் பெற்றிருப்பவைதாம் என்கிறார் சிங்காரவேலர். இறந்த பின்பு மனிதன் துக்கமற்ற வாழ்வை அடையலாம் என்ற கோரிக்கை மனிதனுக்குள் ஆழ்ந்து கிடப்பதால் முக்தி மேல் மனிதனுக்கு அவ்வளவு ஆசை உண்டானது என்கிறார் சிங்காரவேலர்.

> பக்தி மார்க்கம் புத்தமதத்தில் இல்லையென்று சிலர் வாதிடலாம். இது தவறு. மத வைராக்கியம் உடையவர்கள் வேண்டுமானால் அப்படி கூறலாமே தவிர, அறிஞர்கள் கூறமாட்டார்கள்.

என்கிறார் ம. சிங்காரவேலர். பக்தி நெறியால் மோட்சம் என்பது மகாயாண புத்தத்தில் சிறந்ததோர் கற்பிதம் என்கிறார் ம. சிங்காரவேலர். [1]

இந்துமத ஆய்வு

இதில் முதலில் இந்து மதம் என்கின்ற பிராமண மதத்தைப் பற்றிச் சிங்காரவேலர் திறனாய்வு செய்கின்றார். 1. இந்து மதத்தில் கடவுள் ஒருவரோ, பலரோ உண்டு 2. அவரைப் பக்தியால் மனிதர் அடைய முடியும் 3. அவரால் மோட்ச நகரம் மனிதனுக்குக் கிடைக்கும். இதனைத்தான் கர்ம பலன் என்கின்றனர் 5. அந்தப் பலனையும் மறு பிறவியில் அடையலாம். 6. சிற்சில யோக அபிப்பிராயத்தால் மோட்சம் பெறலாம். இந்த யோக மோட்சத்தை வேதாந்திகள் 'ஐக்கிய முக்தி' அல்லது 'ஜீவன் முக்தி'

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்.605-620.

என்பர். இவையே பிராமண மதத்தின் கோட்பாடுகள் என்றும் சிங்காரவேலர் அவற்றை ஆணித்தரமான கருத்தால் மறுக்கின்றார்.

தூங்குமூஞ்சியின் வாதம்

எந்த ஒன்றையும் அதன் உண்மையைக் கண்டறிய விஞ்ஞான முறையாகிய பார்த்தல், பரிட்சித்தல் எனும் வழிகளைக் கொண்டுதான் அதன் உண்மைகளை அறிய வேண்டும். அந்த வகையில் இந்து மதக் கருத்துக்கள் மறை பொருளாக இருக்கின்றனவேயன்றி உண்மைகளை விளக்குவதாக இல்லை என்கிறார் சிங்காரவேலர். கடவுளை ஊனக் கண்ணால் பார்க்க முடியாதாம். பக்தி என்னும் ஞானக் கண்ணால் மட்டுமே காண முடியுமாம். கடவுள் என்னும் பொருள் மனத்திற்கும், வாக்கிற்கும் காயத்திற்கும் எட்டாததாம். இந்த வாதமே தூங்கு மூஞ்சிகள் செய்கின்ற குழப்பவாதம் என்றும், இவையே பாமரர்களையும் குழந்தைகளையும் ஏமாற்றும் வெறுஞ் சொற்களே என்றும் சிங்காரவேலர் முடிவு கூறுகின்றார். பூச்சி தின்ற புத்தகங்களில் வேண்டுமானால் நரகம், மோட்சம், கடவுள், பேய், பிசாசு இருக்கலாமே தவிர அறிவியல் உலகில் இவற்றுக்கு இடமே இல்லை என்கிறார் சிங்காரவேலர்.[1]

புத்த மதத் திறனாய்வு

இரண்டாவதாகச் சிங்காரவேலர் உலகப் புகழ் பெற்ற புத்த மதத்தைத் திறனாய்வு செய்கின்றார். 2,500 ஆண்டுகளுக்கு முன்னர்க் கௌதம புத்தரால் உண்டானது புத்த மதம் என்பது வரலாறு. இந்த மதத்திற்கு ஆதாரம் பிடக நூல்களாகும். உலகில் கோடானு கோடி மக்கள் இந்த மதத்தைப் பின்பற்றுகிறார்கள். பார்த்தல், பரிட்சித்தல் என்ற தத்துவத்தை மக்கள் பயன் படுத்துவார்களேயானால் இந்தப் புத்த மதத்தை யாரும் பின்பற்றமாட்டார்கள் என்கிறார் சிங்காரவேலர்.

பிடகங்கள் என்றால் கூடைகள் என்று பொருள். புத்தர் வாழ்ந்தபொழுது அவர் பேசிய கொள்கைகள் எல்லாம் திரட்டப்பட்டுக் கூடையில் வாரி வைக்கப்பட்டதைப் போல அவை பிடகங்கள் என வழங்குகின்றன. புத்தரின் தத்துவங்கள் மூன்று கூடைகளாகத் திரட்டப்பட்டுள்ளன. அவை 1. சூத்திர பிடகம் 2. வினய பிடகம் 3. அபிதம்ம பிடகம் என்று வழங்கப்படுகின்றன.

---

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்.620.

மூன்று பிடகம்

சூத்திர பிடகம் என்பது கௌதம புத்தர் சாதாரண மனிதர்களுக்குச் சொல்லிய கருத்துகளாகும். வினய பிடகத்தில் புத்த சன்னியாசிகள் செய்யவேண்டிய ஒழுக்கங்கள் பேசப் பட்டுள்ளன. அபிதம்ம பிடகத்தில் புத்த தத்துவங்கள் பேசப் பட்டுள்ளன. மேற்சொன்ன தத்துவங்கள்தாம் ஹீனயானத்திலும் மகாயானத்திலும் நிறைந்துள்ளன. இக் கோட்பாடுகள் அனைத்தும் கற்பனையே. இவற்றைச் சாதாரண மக்கள் நம்பலாம். சிந்திக்கின்றவர்கள் இவற்றை நம்ப முடியாது. மேற்கூறிய தத்துவங்கள் அனைத்தும் பார்த்தல், பரிட்சித்தல் என்னும் விஞ்ஞான ஆய்வுக்கு உட்பட்டவை அல்ல. இவையாவும் வெறுஞ் சொற்களே. மூட நம்பிக்கைகளே என்கிறார் சிங்காரவேலர்.

கிறிஸ்துவ மதத் திறனாய்வு

இனி, சிங்காரவேலர் கிறிஸ்துவ மதத்தில் உள்ள மூட நம்பிக்கைகளைத் திறனாய்வு செய்கின்றார்.

உலகிலுள்ள எல்லா மதங்களிலும் இருப்பதைப் போலவே கிறிஸ்துவ மதத்திலும் கடவுள், ஆன்மா, மோட்சம், நரகம் என்ற சொற்கள் உள்ளன.

கிறிஸ்துவ மதக் கோட்பாடுகளில் முக்கியமானவை 1. கன்னி கர்ப்பம் தரித்தல், 2. ஒருவன் செய்த பாவத்தை மற்றொருவன் ஏந்திக் கொள்ளல் 3. உடலும், இரத்தமும் சாராயமும், ரொட்டியுமாக மாறுதல் 4. டிரிட்டி என்னும் பிதா, குமரன், பரிசுத்த ஆவி மூன்றும் ஒன்றெனக் கருதல் என்னும் இவையே கிறிஸ்துவ மதத்தின் முக்கிய நம்பிக்கைகள் ஆகும்.

ஆணுடன் சேராமலேயே சில பூச்சிகள் கர்ப்பம் தரிப்பதுண்டு. கன்னி மேரி கர்ப்பம் தரித்தாள் என்பதும் உண்மையற்ற பிதற்றல்களே. அனுமான் காற்றிலே பிறந்தார் என்பதைப் போன்றதுதான் அன்னை மேரி வயிற்றில் பரிசுத்த ஆவியான ஏசு கர்ப்பம் தரித்தார் என்ற கதையும். விஞ்ஞான ஆய்வாகப் பார்த்தல், பரிட்சித்தல் என்ற கோட்பாடுகளுக்குள் அவை அடங்காததால் அவையும் வெறும் சொற்களே என்கிறார் சிங்காரவேலர்.

ஏசு உலகப் பாவங்களைத் தாங்குகிறார் என்பது பூமியைப் பூமிதேவி தாங்குகிறார் என்பதைப் போன்ற கற்பனைக் கதையே. ஒருவனைப் பெருமைப்படுத்த அவனை இந்திரன், சந்திரன் என்பது உலக வழக்கு. அதைப் போன்றே ஏசுவைப் பெருமைப்படுத்த ஏற்பட்ட கற்பிதங்களே இவை. ஏனென்றால் பரிட்சித்தல்,

பார்த்தல் இவற்றில் உட்படாதபோது ஏசுநாதர் கர்ப்பத்தையும் கற்பிதமாகச் சொல்வதே சரியானது என்கிறார் சிங்கரவேலர்.

உலகம் முழுமையும் வாழ்ந்த தமிழர்கள் நம்பிக்கையோடு கேள்விகள் கேட்க அவற்றிற்கெல்லாம் சிங்காரவேலர் குடியரசில் சலிக்காது விடை கூறி வந்தார். எந்த நம்பிக்கை விஞ்ஞானத் தொடர்பானது, எந்த நம்பிக்கை விஞ்ஞான நம்பிக்கைக்கு எதிரானது என்பதையெல்லாம் சிங்காரவேலர் மக்களுக்குத் தெளிவுபடுத்திக் கொண்டே இருந்தார். அவற்றில் ஒன்றுதான் மெஸ்மரிசம் என்பது.[1]

மெஸ்மரிசம் தொடர்பான வினா

மெஸ்மரிசம் அறிவியலாகுமா? அதனை ஒப்புக் கொள்ளாலாமா? எனச் சில தோழர்கள் வினவினர். இதற்குச் சிங்காரவேலர் எது விஞ்ஞானம்? எது போலி விஞ்ஞானம் என்று விளக்கும் பொழுது மெஸ்மரிசம் விஞ்ஞானப் பூர்வமானதல்ல; அது ஒரு போலி வித்தையென்று கூறியதுடன் அதனை விஞ்ஞானி உதறித் தள்ளியதுடன் ஹிப்னாட்டிசம் என்ற வித்தையை அறிஞர்கள் விளக்குகிறார்கள் என்கிறார் சிங்காரவேலர்.

போலி விஞ்ஞானம்

மெஸ்மரிசத்தைப் போலி விஞ்ஞானம் என்று அறிஞர்கள் கணித்ததைப் போலவே 'டெலி பதி'யையும் போலி விஞ்ஞான மென்றே மக்கள் உணரவேண்டுமென்கிறார் ம. சிங்காரவேலர். ஹிப்னாட்டிசம் என்னும் மயக்க வித்தை ஜெர்மனி டாக்டர் மெஸ்மர் என்பவரால் மிகச் சாமர்த்தியமாக அறிமுகப் படுத்தப்பட்டது. ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு நுட்பமான சக்தி யுண்டு. அந்தச் சக்தியைக் கொண்டு ஒரு மனிதன் மற்றொரு மனிதனை விழிப்பில் தூங்க வைக்க முடியும். அந்த விழிப்பிலுள்ள தூக்கத்தில் கண்களுக்குத் தெரியாத வஸ்துக்கள் தெரியும். மறந்து போன விஷயங்கள் ஞாபகத்திற்கு வரும். சர்க்கரையைக் கொடுத்துத் தூக்கத்திலுள்ளவனுக்குக் கசப்பு என்று சொல்லச் சொன்னால் அது கசப்பது போலவே செய்கையையும், சைகையையும் செய்வான்.

ஒரு காலத்தில் மக்கள் இதனை விஞ்ஞானப் பூர்வமானது என நம்பினர். இது டாக்டர் மெஸ்மரின் யோசனையே தவிர விஞ்ஞானமல்ல. இந்தச் சக்தியைப் பார்க்கவும் முடியாது, பரிட்சிக்கவும் முடியாது. ஆகவே இது விஞ்ஞானமல்ல, போலி விஞ்ஞானமெனச் சிங்காரவேலர் தெளிவுபடுத்துகின்றார்.

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக். 635-638.

இப்னாட்டிச முறையில் மனிதனைச் செயல்பட வைப்பதற்கு உசுப்புதல்தான் காரணமென்பார். ஒரு மனிதனை அடி என்றால் அடிக்கிறான். சுடு என்றால் சுடுகிறான். விழிப்பில் ஒருவனைச் செயல்பட வைப்பதைப் போல ஒருவனை உறக்கத்திலும் செயல் பட வைக்கமுடியும். ஆனாலும் இது அறிவியல் பூர்வமானதல்ல எனச் சிங்காரவேலர் கூறுகின்றார். இந்த உசுப்பல் முறையால் சிலரின் ஆயாசம், இளைப்பு, தலைவலி, மயக்கம் போதை முதலியவற்றைத் தீர்க்கக் கூடும். சம்பந்தப்பட்டவர் மன ரீதியாக முழுமையாக நம்பிச் சிகிச்சையை ஏற்றதால் வந்த மாற்றமே தவிர இதனை அறிவியல் ரீதியான முறை எனல் பொருந்தாது என்கிறார் ம. சிங்காரவேலர்.

மனிதனின் பலம், பலவீனத்தை உணர்த்தியவர்

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் என்ற பட்டத்திற்கு முற்றிலும் பொருத்தமாக வாழ்ந்தவர் ம. சிங்காரவேலர். அவர் ஆராய்ந்து சொல்லாத பொருள்களே கிடையா. மனிதனிடம் காணப்படுகின்ற பலம், பலவீனம் இரண்டையும் உணர்த்திய மேதையவர். அவர் 'மனிதர்கள் பெரிதும் யோசிப்பதில்லை. அப்படியே யோசித்தாலும் தகுதியான முறையில், அறிவியல் முறையில் யோசிப்பதில்லை' என்னும் சிங்காரவேலர் மனிதனுக்கு நம்பிக்கைகள்தாம் வழிகாட்டுகின்றன. அந் நம்பிக்கைகள் இரண்டு வகைப்படும். ஒன்று சரியான நம்பிக்கை, இரண்டாவது தவறான நம்பிக்கை என வகைப்படுத்துகின்றார் ம. சிங்காரவேலர்.

காற்றால் புயல் அடிக்கிறது. இது சரியான நம்பிக்கை, வாயுதேவனால் புயல் அடிக்கிறது என்பது தவறான நம்பிக்கை. எந்த நம்பிக்கையையும் இரண்டு வகையில் ஆராய வேண்டும். எந்த நிகழ்ச்சியையும் பார்த்தல், பரிட்சித்தல் மூலம்தான் முடிவு செய்ய வேண்டும். இதற்கு ஒரே வழி பரிசோதனைதான் எனக் கூறுகின்றார் சிங்காரவேலர்.

மனிதன் இன்றைக்குப் படுகின்ற பல அவதிகளுக்கும் காரணம் அவனே என நகைச்சுவையுடன் கூறுகிறார் சிங்காரவேலர். மனிதனே உருவாக்கியதுதான் கோயில்களும், சிலைகளும். தான் உருவாக்கிய சிலைகளிடமே சென்று மனிதன் வரம் கேட்பானானால் இந்த மனித இனத்தின் அறியாமையைப் பற்றி என்ன கூற முடியும்? என்கிறார் சிங்காரவேலர். [1]

மனிதன் பேசிய் பின்னர் வந்ததே கடவுள்

உலகில் எத்தனையோ கோடிக்கணக்கான உயிர்கள் உள்ளன. அவற்றுக்கெல்லாம் இல்லாத கடவுள், மோட்சம், நரகம், சொர்க்கம் போன்றவை மனித இனத்திற்கு மட்டுமே உள்ளன.

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்.1211-1213.

இதற்கெல்லாம் காரணம் என்ன? என்று கேட்கின்ற சிங்காரவேலர் மனித இனம் பேசத் தொடங்கிய பின்னர் அவர்கள் படைத்துக் கொண்ட கற்பனைகளே இந்தக் கடவுள்கள் என்று விளக்குகின்றார். மனிதன் ஒருவனே சொற்களைக் கற்பித்தவன், மற்ற பிராணிகள் யாவும் சைகையாலும், முகக் குறிப்பாலும், கூச்சலாலும், கத்துவதாலும் தத்தம் செய்கைகளை உணர்த்துகின்றன. ஆனால் மனிதன் ஒருவன்தான் சத்தத்தைச் சொற்களாக்கி, அவற்றின் மூலமாகத் தனது செய்கைகளைக் குறிப்பிடுகின்றான். சொல்லென்பது சத்தமே. அந்தச் சத்தத்தை நாக்காலும், உதட்டாலும், தொண்டையிலுள்ள சதையாலும் ஒழுங்குபடுத்துவதால் அச் சப்தங்கள் சொற்களாக மாறுகின்றன.

சொற்களால் வந்த விபரீதங்கள்

சொற்கள் உண்டானபோது அவற்றைக் கொண்டு மனிதன் உலகப் பொருள்களுக்குப் பெயர் இட்டான். கண்டதையும் பரிட்சித்ததையும் பஞ்சேந்திரியங்கள் மூலமான, தன் அனுபவத்தில் வந்த பொருள்களுக்குப் பெயர் வைத்த மனிதன் தான் கற்பனையாகப் படைத்துக் கொண்ட பொருள்களுக்கும் பெயர் வைத்தான். பலவற்றைத் தன் கற்பனையால் படைத்து அவற்றிற்கெல்லாம் கடவுள், ஆன்மா, உயிர், நரகம், மோட்சம் என்ற பெயர் வைத்துவிட்டு, தான் படைத்த படைப்புகளைக் கண்டே மனிதன்-அஞ்சவும் ஆரம்பித்தான். இது வேடிக்கை யில்லையா? பேசும் சத்தி வராமல் போய் இருந்தால் இத்தகைய சிருட்டிகளே உலகில் உண்டாகி இரா என்கிறார் சிங்காரவேலர்.

கற்பனையாகப் படைத்துக் கொண்ட இவற்றிற்கெல்லாம் கோயில், குளம், புராணம், இதிகாசம் என்றெல்லாம் உண்டாக்கிக் கொண்டு இந்தச் சொற்களைக் கேட்ட மாத்திரத்தில் மனிதன் நடுங்குகிறான். உலகிலுள்ள மாயா ஜாலங்கள் அனைத்தும் சொற்களின் மாயா ஜாலமே. பார்த்தல், பரிட்சித்தல் என்ற முறையில் மனிதன் படைத்த கற்பனைகளை ஆராய்வானே யானால் சொற்களுக்கு மயங்குகின்ற, அஞ்சுகின்ற பழக்கம் மனிதனை விட்டு ஒழியும் என்கிறார் ம. சிங்காரவேலர்.

நிர்வாணக் கொள்கை

தமிழகப் பத்திரிகைகளிலே ‘குடியரசு’க்கு ஒரு தனித்த இடம் உண்டு. புதுமையான செய்திகளை வெளியிடுவது பெரிதும் நாட்டில் ஆங்கிலப் பத்திரிகைகளே. அவற்றிற்கு இணையாகத் தந்தை பெரியாரின் குடியரசு செய்திகளை வெளியிட்டது. குடியரசில் அதிசயமான செய்திகளெல்லாம் வெளியிடப் பெற்றன.

1932க்குப் பின்னர்த் தந்தை பெரியார் ரஷ்யா சென்று வந்த பின்னர், மேலை நாடுகளில் தாம் கண்டு வந்த நிர்வாணச் சங்கத்தைப் பற்றியெல்லாம் குடியரசில் எழுதினார். வாசகர்களுக்கு அதனைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆசை தொற்றிக் கொண்டது. சிலர் நிர்வாணமென்பது ஆன்மீகத்தோடு தொடர்புடையதா? எனவும் வினவ ஆரம்பித்துவிட்டனர். இதற்கு விடையளிக்கின்ற முறையில் 29.10.1933இல் நிர்வாணம் தொடர்பாக எழுதிச் சிங்காரவேலர் மக்களுக்குத் தெளிவை ஏற்படுத்துகின்றார்.

நிர்வாணம் ஆன்மீகமல்ல

தம் கட்டுரையில் நிர்வாணத்திற்கும் ஆன்மீகத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதை வலியுறுத்தும் ம.சிங்காரவேலர் எந்தக் காலத்திலிருந்து எந்தெந்த நாடுகளி லெல்லாம் நிர்வாணம் என்பது புனிதமாகக் கொள்ளப்பட்டது என்பதையெல்லாம் மிகமிகத் தெளிவாக விளக்குகின்றார். புத்தர் காலத்திற்கு முந்தைய வேத ஆகமக் காலங்களில் கூட மனிதர்கள் நிர்வாணமாக நின்று தவம் புரிந்தனர் என்பதை விளக்குகின்றார்.

புத்தர் காலத்திலேயும் கங்கை, யமுனை நதிக்கரைகளிலும் அடர்ந்த காடுகளிலும் இருடிகள் நிர்வாணமாக நின்று தவம் செய்தனர் என்பதைச் சிங்காரவேலர் விளக்குகின்றார். புனிதமென்ற பெயரால் நிர்வாணம் மேலை நாடுகளிலும் பாராட்டப்பட்டதையும் ம. சிங்காரவேலர் கூறுகின்றார். கிறிஸ்துவுக்குப் பின் யுகங்களிலும் கத்தோலிக்கப் பாதிரிகள் தங்கள் அறைகளில் நிர்வாணமாகத் தவம் செய்தனர். இக் காலத்தில் கூட வட இந்தியாவில் சமண மதத் துறவிகள் நிர்வாணமாக இருந்ததைத் தாம் வடநாட்டில் கண்டதாகக் கூறும் ம. சிங்காரவேலர் இதில் ஏதும் புனித மென்பதே கிடையாது என்பதுடன் இது ஒருவகை மூடத்தனம் என்றும் விளக்குகின்றார்.

சமணர்களின் நிர்வாணம்

சமண மதத்தில் திகம்பரர்கள் உண்டு. ஆடையே இல்லாமல் திரிந்தவர்கள் 'சுவதேம்பரர்' என அழைக்கப்பட்டனர். முகமதியர்கள் ஆண்ட காலத்திலும் நிர்வாணச் சாமியார்கள் நாடு முழுமையும் திரிந்ததைச் சரித்திர ஆசிரியர்கள் எழுதுவதைச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார். அப்படிப்பட்ட நிர்வாணச் சாமியார் ஒருவரைக் கான்பூர் சதி வழக்கின்போது கான்பூரில் கண்டதாகச் சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார். இதற்கெல்லாம் மக்களின் மத நம்பிக்கையும், மூடக் கோட்பாடுகளுமே காரணமென்று ம. சிங்காரவேலர் குறிப்பிடுகின்றார். [1]

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்.1097-1100.

நிர்வாணம் புனிதமல்ல

இதைப் போன்ற நிர்வாணத்தில் தெய்வீகத் தன்மை இருப்பதாக நம்புவது பாமரர்களின் அறியாமை. நாற்றம், அசிங்கம், நிர்வாணம், அசுத்தம் இவற்றையெல்லாம் புனிதமெனப் போற்றுவதற்குக் காரணம் மக்களின் அறியாமையே என்கிறார். மேலை நாடுகளில் நிர்வாணமென்பது சுகாதாரத்தின் பெயரால் வழங்கப்படுகிறது. நம் நாட்டில் மதத்தின் பேரால் நிர்வாணம் போற்றப்படுவதற்கு மக்களின் அறியாமையன்றி வேறு காரணங்களே கிடையாது என்கிறார் ம. சிங்காரவேலர். எந்த நாடாக இருந்தாலும் நிர்வாணம் என்பது மனித நாகரிகத்திற்கு முரணானது. எனினும் மக்கள் அதனை விரும்புவதற்கு ''உசுப்புதல்'' என்னும் தூண்டல்தான் பெருங் காரணமெனச் சிங்காரவேலர் ஆராய்கின்றார். வெளிநாடுகளில் சூனியக்காரர்கள் என்று மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டனர். 'குருசேட்' என்ற பெயரில் முகமதியர்கள் இலட்சக்கணக்கில் கொல்லப்பட்டதற்கு இந்த 'உசுப்பல்' கொள்கையே காரணம் என்கிறார் ம. சிங்காரவேலர்.[1]

மத்திய காலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூத்தாடியதற்கு இந்த உசுப்பலே காரணம். தெய்வம் ஆடுகின்றவனைப் பார்த்துப் பார்த்தவனும் ஆடுவதற்குக் காரணம் இந்த உசுப்பல்தான். அழுகின்றவளைப் பார்த்துப் பார்த்தவனும் அழுவதற்குக் காரணம் இந்த உசுப்பல்தான். இதைப் போல மனித இனம் ஆடை இல்லாமல் திரிவதற்கு மனோதத்துவ அடிப்படையில் கிளர்ச்சியூட்டும் உசுப்பல்தான் காரணம் என்கிறார். இறுதியாக, முயற்சியோடு இருப்பவன் ஆடையோடுதான் இருப்பான். அது இல்லாமல் அம்மணமாக இருப்பவன், அம்மணத்தையும் ஆண்டவன் வடிவமென்பவன் உண்மையில் அறிவிலியாகத்தான் இருப்பான். ஆகவே இதில் புனிதமென்பதோ, ஆன்மிகம் என்பதோ எதுவும் கிடையாதெனச் சிங்காரவேலர் கூறுகின்றார்.

1934இல் 'தமிழரசு' என்னும் பத்திரிகையில் தாஸ்குப்தா என்பவரால் 'மரணத்திற்குப்பின் மனிதர் நிலை' என்ற கட்டுரை வெளிவந்தது. இதனைப் படித்த கரிவலம் வந்த நல்லூர்வாசியான ஒருவர் இதன் தொடர்பான வினாவைக்கேட்க, சிங்காரவேலர் குடியரசில் விடையளித்துள்ளார்.

---

1. முத்து. குணசேகரன், பா.வீரமணி, ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம், பக்1097-1100.

மனிதன் இறந்தவுடன் அதோடு அவனது கதை முடிந்து விடுகிறது. ஆனாலும் இறந்தவன் ஆவியாக உலவுகிறான் என்பதற்குக் காரணம் படிக்காதவன் முதல் பண்டிதன் வரை அனைத்து மனிதர்களிடமும் உள்ள மூட நம்பிக்கைதான் காரணமென்கிறார் ம. சிங்காரவேலர். ஆதி மனிதர்கள் இறந்தவனுக்கு உணவுகளை வைத்துப் படைத்தனர். இதற்கு இறந்தவன் வந்து அவற்றையெல்லாம் உண்பான் என்கின்ற மூடத்தனமன்றி வேறு காரணங்கள் இல்லை என்கிறார். மகாத்மாவும் தமக்குக் கடவுள் இதைச் சொன்னார், அதைச் சொன்னார் என்று கூசாமல் பொய் சொல்லுகின்றார். காந்திக்கு இன்றைக்கிருந்த மூடநம்பிக்கையைப் போல அன்றைய கிறிஸ்துவ மோசசுக்கும் இருந்தது. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு கடவுள் தீப்பற்றி எரியும் புதரில் இருந்துகொண்டு பத்துக் கட்டளைகளை ஓதினார் என நம்பும் நம்பிக்க்கை கிறிஸ்துவர்களின் மூட நம்பிக்கையே.

இதைப் போன்ற செய்திகளில் எவ்வளவு பெரிய மனிதன் தொடர்புபடுத்தப்பட்டுப் பேசப்பட்டாலும் அவை அனைத்தும் பொய்யே என்கிறார் ம. சிங்காரவேலர். சில விஞ்ஞானிகள் கூட இதைப் போன்ற மூட நம்பிக்கைகளுக்குத் துணை போவதற்கு அவர்களின் மூடத்தனமான வளர்ப்பு முறைதான் காரணம் என்கிறார் ம. சிங்காரவேலர்.

பிரபல விஞ்ஞானியான சர் 'ஆலிவர் லாட்ஜ்' என்பவர் இறந்த தமது மகன் தம்முடன் பேசினான் என்று எழுதுவது உண்மைக்கு எதிரான பொறுப்பற்ற பொய் என்கிறார் சிங்காரவேலர்.

மனிதனும் ஒருவகையில் விலங்கினத்தைச் சார்ந்தவன்தான். மற்ற விலங்கினங்களுக்கு ஆவி, பேய், பிசாசு தொடர்பான சிந்தனைகள் இல்லாதபோது மனிதனுக்கு மட்டும் ஆவி, நரகம், மோட்சம், சொர்க்கம் உண்டென்பது மோசடிகளே என விளக்குகிறார். ''நமக்குத் தோன்றும் ஆன்மா ஏன் விலங்குகளுக்குத் தோன்றுவது இல்லை?'' எனக் கேட்கும் ம. சிங்காரவேலர் மரணத்திற்குப்பின் மனிதனுக்கு அனைத்தும் முடிந்து விடுகிறது என்கிறார்.

விஞ்ஞான முறைப்படி இதுவரை நடந்துள்ள ஆய்வுகளின்படி ஆன்மா, மோட்சம், நரகம் ஆகியவை இருப்பதற்கான சான்றுகளே கிடையாது. ஆன்மா, மோட்சம் இவற்றைப் பாமரர்கள் நம்புவதைப் போலப் படித்த மதவாதிகளும் நம்பி இதைப் போன்ற எண்ணங்களைப் பரப்புகின்றனர். பார்ப்பது,

பரிட்சிப்பது என்ற இரண்டிற்குள்ளும் எந்தப் பொருளும் அடங்கியாக வேண்டும். அடங்காத எதுவும் இந்த உலகத்தில் இல்லாத பொருளே. ஆகவே மனிதனின் மரணத்திற்குப்பின். எதுவும் கிடையாது என்கிறார் ம. சிங்காரவேலர்.

சுயமரியாதைச் சமதர்ம இயக்கம்

பெரியாரின் சுயமரியாதை இயக்கம், சிங்காரவேலரின் சமதர்ம இயக்கம் இரண்டும் இணைந்து 'சுயமரியாதைச் சமதர்ம இயக்கம்' என்றானதன்பின் இயக்கத்தின் செயல்பாடுகள் தீவிரமாயின. பெரியாரும் சிங்காரவேலரும் இணைந்து பொதுவுடைமைப் பணிக்காகக் குரல் கொடுத்தனர். இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில் பொதுவுடைமையின் வீச்சு அதிகமானது. பிரச்சாரமும் அதிகமானது. ஆங்காங்கே ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அணி திரண்டு ஆர்ப்பரித்தனர்.[1]

அரசு அஞ்சியது

பிரிட்டிஷ் அரசு 1920களில் செயல்பட்டதைப் போல, இப்பொழுதும் சிந்தித்துச் செயல்பட ஆரம்பித்தது. பிரிட்டிஷ் அரசு கடவுள் மறுப்பையோ, வர்ணாசிரம எதிர்ப்பையோ, ஜாதி, மத எதிர்ப்பையோ கண்டு அஞ்சவில்லை. பொதுவுடைமைப் பிரச்சாரத்தைக் கண்டே நடுங்கியது. கான்பூர் சதி வழக்கு, மீரட் சதி வழக்குகளைப் போலவே இப்போதும் பொதுவுடைமைக்கெதிராகச் சட்டங்கள் செய்ய வேண்டுமெனப் பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டது. பெரியார், சிங்காரவேலர் இருவரின் செயல்பாடுகள் மிகத் தீவிரமானவை என அரசு முடிவெடுத்தது.

அரசின் நடவடிக்கை

இதனைத் தடுக்க வேண்டுவது மிகமிக அவசியமெனப் பிரிட்டிஷ் அரசும் முடிவெடுத்தது. இதன் அடிப்படையில் 1934 முதல் இந்தியாவில் பொதுவுடைமை இயக்கத்திற்குத் தடையும் விதித்தது. பொதுவுடைமை இயக்கத்திற்குச் சாதகமாக யார் யார் செயல்படுகிறார்களோ, அவர்கள் மீது அஞ்சாமல் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனப் பிரிட்டிஷ் அரசு சென்னையின் நீதிக்கட்சியை வலியுறுத்தவும் செய்தது. அரசினுடைய இரகசியக் காவலர்கள் பெரியார், சிங்காரவேலரின் செயல்பாடுகள் தீவிரமானவை, அரசுக்கு எதிரானவை என்று குறிப்பையும் எழுதி

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் கட்டுரைகள், பக். 10-14.

வைத்தனர். இந்தச் சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் பெரியாரையும், சிங்காரவேலரையும் கம்யூனிஸ்டுகள் என்று குற்றம் சாட்டிக் குற்றவாளிகளாகச் சதி செய்தனர்.

தொண்டர்கள் வேண்டல்

பெரியாரின் பெருந்தொண்டர்களான நீதிக் கட்சி சார்புடைய பல தலைவர்களும் சுயமரியாதைக் கட்சிக்குரிய முதன்மைக் கொள்கைகளான வர்ணாசிரம எதிர்ப்பு, ஜாதி ஒழிப்பு, மத ஒழிப்பு, கடவுள் மறுப்பு இவற்றுடன் பார்ப்பன எதிர்ப்பு என்று செயல்படுவதுதான் இப்பொழுது தேவை என்று கூறவும் ஆரம்பித்துவிட்டனர். பொதுவுடைமைக்கு ஆதரவு என்பது இப்பொழுதைக்கு உடனடித் தேவையில்லை எனவும் கூறினர். பெரியாரின் பெருந் தொண்டர்களான எஸ். இராமநாதன், சௌந்தர பாண்டிய நாடார், கி.ஆ.பெ. விசுவநாதம், சாமி. சிதம்பரனார் போன்றவர்கள் பொதுவுடைமைப் பிரச்சாரம் நமது இயக்கத்திற்கு உடனடித்தேவை இல்லை என்பதை வலியுறுத்தவும் தொடங்கினர்.

பார்ப்பன எதிர்ப்பே தேவை

உடனடித் தேவை தமிழர்களுக்குப் பாதுகாப்பும், பார்ப்பன எதிர்ப்பும்தாம் என்பதை வலியுறுத்த ஆரம்பித்தனர். வர்ணாசிரம எதிர்ப்பு என்கின்ற உயிர்க் கொள்கையை விடுத்து சுயமரியாதை இயக்கம் இப்பொழுது திசைமாறிப் போகவும் செய்கிறது என்பதைப் பெரியாரிடம் வலியுறுத்தியும் கூறினர்.

அரசின் அடக்கு முறைகள்

அரசினுடைய செயல்பாடுகள் இப்பொழுது பொதுவுடைமை இயக்கத்திற்கு முற்றிலும் எதிராக இருந்தன. சுயமரியாதைச் சமதர்ம அலுவலகங்கள் எல்லாம் காவலர்களால் சோதனை இடப்பட்டன. தீவிரமான இளைஞர்கள் மீது அரசு பொய் வழக்கு போட்டது. ஆங்காங்கே இளைஞர்கள் காவலர்களால் அடித்து நொறுக்கப்பட்டனர். சுயமரியாதைச் சமதர்மத் தோழர்கள் மீது அரசு காட்டுமிராண்டித்தனமாக அடக்குமுறைகளை ஏவிவிட்டது.

பெரியார் இயல்பு

பெரியார் எப்பொழுதுமே ஓர் உன்னதமான தலைவர். தாம் அழிந்தாலும், பரவாயில்லை; தொண்டர்களும் இயக்கமும் காப்பாற்றப்பட வேண்டுமென நினைப்பவர். தம்முடைய தங்கை

கண்ணம்மையின் மீது அரசு நடவடிக்கை, தமது அண்ணன் கிருஷ்ணசாமி மீது அரசு நடவடிக்கை, குடியரசு, புரட்சி, பகுத்தறிவு ஆகிய பத்திரிகைகள் தடுக்கப்படல், பதிப்பகங்கள் மூடப்படல் என அளவில்லாத அடக்கு முறைகளைச் சந்தித்த பெரியார், தாம் அழிந்தாலும் பரவாயில்லை இயக்கத்தவர்களும், இயக்கமும் காக்கப்பட வேண்டுமே எனத் துடித்தார். ப. ஜீவானந்தத்தின் மீது அரசு எடுத்த நடவடிக்கைக்காகப் பெரியார் பேரளவில் வருந்தினார்.

கட்சிகளுக்குத் தீர்மானங்கள் அனுப்பல்

இந்தச் சமயத்தில் தம்முடைய அரசியல் கொள்கைகளைத் தீட்டி நீதிக்கட்சிக்கு ஒன்றும், காங்கிரஸ் கட்சிக்கு ஒன்றுமாகப் பெரியார் தீர்மானங்களை அனுப்பி இருந்தார். வர்ணாசிரம எதிர்ப்பு என்பதைக் காங்கிரஸ் குறிப்பாக அண்ணல் காந்தி ஒப்புக் கொள்ள அறவே மறுத்தார். தோல்வி முகத்தில் நின்றிருந்த நீதிக்கட்சி, தந்தை பெரியாரின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருந்தது.[1]

அமைச்சர்கள் ஆலோசனை

இந்த நிலையில்தான் தந்தை பெரியார் நீதிக்கட்சியின் சட்டத்துறை அமைச்சராக இருந்த சர்.ஏடி. பன்னீர் செல்வத்தைத் தனிமையில் சந்தித்தார். அவர்தான் தந்தை பெரியாருக்கு அரசு தற்பொழுது எடுக்க இருக்கின்ற நடவடிக்கைகள் குறித்து விளக்கமாகக் கூறினார். பெரியார் மீதும் மற்றவர்கள் மீதும் இராஜதுரோகக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதை விளக்கமாகக் கூறினார். பொதுவுடைமைப் பிரச்சாரத்தை நிறுத்திக் கொண்டால் பெரியாரை அரசு மன்னிக்கத் தயாராக இருக்கிறது என்ற இரகசியத்தையும் தெளிவாகக் கூறினார். இந்த நிலையில்தான் பெரியார் உன்னதமான முடிவொன்றை எடுத்தார்.

இயக்கத்தைக் காக்க

இதுநாள்வரை கட்டிக் காத்து வந்த இயக்கத்தைக் காக்க வேண்டுவது தமது கடமை எனப் பெரியார் உணர்ந்தார். இயக்கத்திற்காக உழைத்த தொண்டர்களைக் காக்க வேண்டுவது தமக்குள்ள பெருங்கடமை எனப் பெரியார் நம்பினார். இப்பொழுது பெரியார் மிகச் சாதுர்யமாகவும் நடந்து கொண்டார். ஆவணங்களின்-அரசு குறிப்புகளைக் கண்ட பெரியார் இப்பொழுது அற்புதமான செயல் ஒன்றையும்

---

1. ப.சீனிவாசன், சிங்காரவேலரின் வரலாறு-உண்மையும் புரட்டும், பக். 48-54.

வெளிப்படுத்தினார். இயக்கத்தையும் தொண்டர்களையும் காக்க வேண்டுவது தமது கடமை எனப் பெரியார் முடிவெடுத்தார். ப.ஜீவானந்தம், நாகை கே.முருகேசன், நாகை டி.என். இராமச்சந்திரன் ஆகியவர்களின் உணர்வையும் புரிந்து கொண்டார். சுயமரியாதை இயக்கம் எதற்காகத் தொடங்கப் பட்டதோ அந்த நோக்கத்தில் பெரியார் சரியாகவே செயல்பட்டார். ஆகவே பெரியார் இப்படியொரு முடிவெடுத்தார்.

இயக்கத்தைக் காக்க

தாம் எடுக்கின்ற முடிவால் என்ன விளைவுகள் வரும் என்பதை அறிந்த பின்பே பெரியார் அந்த முடிவை எடுத்தார்.

> நம் இளைஞர்களும் சில தலைவர்களும் பொதுவுடைமை இயக்கத்தை முன்னிறுத்தப் படுகின்ற பாட்டை நான் நன்கறிவேன். ஆனாலும் அரசு எடுக்க இருக்கின்ற நடவடிக்கைகள் என்ன என்பதை அறிந்த பின்பும் தொடர்ந்து சென்று இயக்கத்தையும் இளைஞர்களையும் நான் பலி கொடுக்க விரும்பவில்லை. ஆகவே நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்த்து நடந்தவற்றிற்கு நானே பொறுப்பு என்று கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். ப. ஜீவானந்தம் உட்பட மற்ற இளைஞர்கள் யாரும் பொறுப்பல்ல; அனைத்துச் செயல்பாடுகளுக்கும் நானே பொறுப்பு என்று கூறினேன். மன்னிப்பும் கேட்டேன். மன்னிக்கவும் பட்டேன்.

என்றொரு விளக்கமான அறிக்கை யொன்றை வெளியிட்டுப் பெரியார் இனி நாம் தொடங்கிய சுயமரியாதைப் பணியைத் தொடர்ந்து செய்வோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இருவேறு இயக்கங்கள் ஆனமை

அப்பணியில் நிறைவில்லாதவர்கள் தொடர்ந்து சமதர்மப் பணி செய்ய வேண்டுமென்று விரும்புகின்ற தலைவர்களும், இளைஞர்களும் அவர்கள் விரும்புவதைப் போலவே செயல்படலாம் என அறிவிக்கவும் செய்தார். இதன்பின் சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் இரு கூறானது. வழக்கம் போலப் பெரியார் தமது சுயமரியாதைப் பணிகளைத் தொடர்ந்து செய்தார். இதைப்போலவே சிங்காரவேலர் தமது சமதர்மப்

பணிகளைத் தொடர்ந்து செய்தார். அவரவர் பணிகளிலே இருவருமே முனைப்புடன் செயல்பட்டனர்.[1]

பெரியாரின் உன்னதப் பணிகள்

இதன் பின்னர்ப் பெரியார் தமது உயிர்ப் பணியான வர்ணாசிரம எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, ஜாதி ஒழிப்பு, மத மறுப்பு, தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றம், பிற்பட்டவர், மிகப் பிற்பட்டவர் முன்னேற்றம், காங்கிரஸ் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, மாநிலத் திற்குரிய உரிமைகள், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பார்ப்பனர் மேலாண்மை எதிர்ப்பு எனத் தொடர்ந்து பாடுபட்டு வந்தார்.

தமிழர் நலம் காக்க

தமிழ் மக்களின் நலங் கருதிப் பெரியார் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தையும், நீதிக் கட்சியையும் ஆதரித்தார். தமிழ் மக்களுக்கு நன்மை செய்பவர்கள் யாராக இருந்தாலும் அது நீதிக் கட்சியாக இருந்தாலும் பெரியார் ஆதரித்தார். இராஜாஜி தமது நண்பரென்றாலும், தம்மை அரசியலுக்கு ஆட்படுத்தியவர் என்றாலும் தமிழர் நலத்திற்கு முரணாகச் செயல்பட்டபொழுது பெரியார் தயவு தாட்சண்யம் இன்றி எதிர்த்தார். தமிழர் நலம் கருதித் தாம் சார்ந்திருந்த நீதிக் கட்சியின் பெயரைக் கூடப் பேரறிஞர் அண்ணாவின் துணையால் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்தார்.[2]

பச்சைத் தமிழர் கு. காமராஜரை ஆதரித்தல்

காங்கிரசை ஒழிப்பேன் எனச் சூளுரைத்து, காங்கிரஸ் மாநாட்டிலிருந்து வெளியேறிய பெரியார் 1950களில் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த பெருந்தலைவர் கு. காமராஜர் அவர்களைக் கண்ணைமூடிக் கொண்டு ஆதரித்தார். காமராஜர் தமிழர்களுக்கு நன்மை செய்தபொழுது பச்சைத் தமிழர் காமராஜர் எனப் பாராட்டவும் செய்தார். பெரியார் சொன்னதைப் போல

> நான் மாறி மாறி முடிவெடுத்திருக்கலாம். வெவ்வேறு அரசியல் கட்சிகளை ஆதரித்திருக்கலாம். மிகுதியான மக்களுக்குத் தமிழர்களுக்கு நன்மை செய்வதற்காக அது இருந்திருக்குமே யல்லாது என்னுடைய சுய நலத்திற்கல்ல

---

1. முத்து. குணசேகரன், தந்தை பெரியாரும் ம. சிங்காரவேலரும், ப. 185-189.
2. மேற்படி, ப. 267.

என்று பெரியார் கூறியது அப்பழுக்கற்ற உண்மை என்பதை எந்த நடுநிலையாளரும் ஒப்புக்கொள்வர்.

டெல்லியையும் எதிர்த்தார்

தமிழ் நலத்திற்கும், தமிழர் நலத்திற்கும், டெல்லி அரசு முரண்பட்டபொழுது பெரியார் ''தனித் தமிழ் நாடு'' என்றொரு கொள்கையைக் கூட முன்வைத்ததுண்டு. அதற்குப் பெரியார் ''நாங்கள் தனித் தமிழ் நாடு கேட்கவில்லை; கேட்குமாறு டெல்லி அரசால் வற்புறுத்தப் படுகிறோம்'' என நுட்பமாகப் பதில் சொன்னார். தமிழர்களுக்கு எவையெல்லாம் நன்மை தந்தனவோ, அவற்றையெல்லாம் பெரியார் ஆதரித்தார். தமிழர் நலத்திற்கு எவை எவை முரண்பட்டு நின்றனவோ அவற்றையெல்லாம் பெரியார் உள்ளும் புறமுமாக எதிர்த்தார்.

வடநாடு சுற்றுப்பயணம்

தமிழர் நலத்திற்காகவே பெரியார் வடநாடு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அறிஞர்கள் ஜின்னா, அண்ணல் அம்பேத்கர் அவர்களையெல்லாம் தம் வட இந்தியப் பயணத்தின்போது கண்டு பேசினார். தமிழ் மக்கள் நலன் கருதித் தம் முதுமை நாள்களில் கூடச் சிறைப் பறவையாகவே பெரியார் வாழ்ந்தார். பெண்ணினத்திற்குக் குரல் கொடுத்த உலகப் பேரறிஞர்களில், தந்தை பெரியார் முன்னணி மட்டுமல்ல முனை மழுங்கா முதல் போர் வீரராகவே வாழ்ந்தார். தாம் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தின் வடிவமாகவே வாழ்ந்தார். சுயமரியாதை இயக்கத்திற்கு இடையூறு வருகிறபொழுது எந்த இயக்கத்தையும் எதிர்க்கின்ற தூய வீரராகவே பெரியார் வாழ்ந்தார்.

காசி ஆனந்தன் சொல்வதைப் போலப்

பெரியார் ஒருவர்தான் பெரியார்
பெருமைக்குரியார் இவர் போல் பிறர் யார் நீ
பகைவர் தமை வாட்டிப், பகைத்த கூர் ஈட்டி,
தமிழர் புகழ் நாட்டி, வாழ்ந்த வழிகாட்டி!
பெரியார் ஒருவர்தான் பெரியார். . .

மாட்டைத் தீண்டுவான், ஆட்டைத் தீண்டுவான்
மனிதனைத் தீண்ட மறுத்தானே,
நாட்டை உலுக்கினார் பெரியார், அவர் தொண்டன்
நரிகளின் வாலை அறுத்தானே!

கோல எழில் கொஞ்சும் பெண்களைக்
கொடியவன் கூட்டில் அடைத்தானே!
காலங் காலமாய் அழுத பெண்களின்
கண்ணினைக் கிழவன் துடைத்தானே!
பெரியார் ஒருவர்தான் பெரியார்.

மானங் கெடுப்பாரை, அறிவைத் தடுப்பாரை,
மண்ணோடு பெயர்த்த கடப்பாறை,
வானம் உள்ள வரை, வையம் உள்ளவரை,
யார்தான் மறப்பார் பெரியாரை?

என்னும் புகழ் மொழிக்கு முழுமையும் பொருத்தமாக வாழ்ந்தவர் தந்தை பெரியார். சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியாரைச் சிங்காரவேலரே வானளவு புகழ்ந்ததுண்டு. ''ஒவ்வொரு மனிதனுக்கும் மரியாதை கண்ட முதல் மனிதர் பெரியார் எனச் சிங்காரவேலர் பாராட்டினார். தம்முடைய இயக்கமான சுயமரியாதை இயக்கத்திற்காகவே வாழ்ந்தவர் தந்தை பெரியார்.

இதைப்போலவே சமதர்ம இயக்கத்திற்காகவே வாழ்ந்தவர் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர். பொதுவுடைமை இயக்கமான கம்யூனிஸ்டுக் கட்சியைக் கான்பூரில் தொடங்கி வைத்தவர் சிங்காரவேலர். அந்த இயக்கத்திற்கு முன்னோடி இயக்கமான இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான் இயக்கத்தை 1923லேயே தொடங்கி வைத்தவர் சிங்காரவேலர்தாம். முதன் முதல் 'காம் ரேட்ஸ்' என்ற வார்த்தையைக் காங்கிரஸ் மேடைகளிலே கயாவில் 1922இல் உச்சரித்தவர் ம. சிங்காரவேலர்தாம். காங்கிரஸ் கொடியுடன் கம்யூனிசக் கொடியான கதிர் அரிவாள் சின்னம் பொறித்த புரட்சிக் கொடியையும் 1923இல் ஏற்றி வைத்து முதன் முதல் மே நாள் கொண்டாடியவர் சிங்காரவேலர்தான். 1934இல் தடை செய்யப்பட்ட பொதுவுடைமை இயக்கத்தின் தடை நீக்கப் பாடுபட்டு 1938இல் வெற்றி பெற்றவர் ம. சிங்காரவேலர்தாம். பெரியார் தம்முடைய சுயமரியாதைப் பணியில் இறுதிவரைப் பாடுபட்டதைப் போலச் சிங்காரவேலரும் சமதர்மத்திற்காக இறுதி மூச்சு உள்ளவரை பாடுபட்டார்.

இனி ம. சிங்காரவேலரும் அவரது தொண்டர்களும் தனித்துச் சமதர்மப் பணியை எவ்வாறு செய்தனர் என்பதைக் காண்போம்.

4. சிங்காரவேலர் வாழ்வின் பிற்பகுதி

காங்கிரஸ் இயக்கம் நடத்திய சட்ட மறுப்பியக்கம் 1929இல் நாட்டில் ஒரு பேர் இயக்கத்தை உருவாக்கியது. 1929 மார்ச்சு 20இல் கம்யூனிஸ்டு தலைவர்களின் கைது, மீரட் சதிவழக்கு விசாரணை போன்றவை தொழிலாளர்களை உசுப்பிவிட்டுத் தொழிற் சங்கத்தின்பால் தொழிலாளிகளை அக்கறை கொள்ளச் செய்தன.

நவஜவான் பாரத் சபை, இந்துஸ்தான் சோஷலிஸ்டு ரிப்பப்ளிக் என்ற அமைப்புகளில் இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் இயங்கி வந்தனர். மாஸ்கோவில் பயிற்சி பெற்ற அமீர் ஹைதர்கான் சென்னையிலே கம்யூனிஸ்டு அமைப்பை உருவாக்க இளைஞர்களுடன் பாடுபட்டுவந்தார். மீரட் சதி வழக்கில் ஒருவராகக் கருதப்பட்ட அமீர் ஹைதர்கான் மீது சென்னையிலே தனி வழக்கு ஜோடித்து 1932 மே மாதத்தில்அவரை அரசு கைது செய்தது. இதனைத் தமிழ்நாடு ஆவணக் காப்பக உதவிச் செயலர் பாதுகாப்பு கோப்பு 843 இன் மூலம் அறிகிறோம்.

சென்னையில் அமீர் ஹைதர்கான் பணியாற்றியபோது பி. இராஜவடிவேலு மூலமாகச் சிங்காரவேலரைச் சந்தித்தார் எனத் தமிழ் நாடு ஆவணக் காப்பக அரசு ஆணை 918/919 பொது 1932 என்பதன் மூலமாக அறிகிறோம். என்றாலும் சிங்காரவேலருக்கும் அமீர்ஹைதருக்கும் நெருக்கம் ஏற்படாமலே போயிற்று. இக்காலத்தில் சிங்காரவேலர் தம்முடைய முழு ஒத்துழைப்பையும் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திற்குக் கொடுத்து வந்தார். பெரியார் இக்காலத்தில் பார்ப்பன எதிர்ப்பு, ஜாதி ஒழிப்பு, மத எதிர்ப்பு, வர்ணாசிரம எதிர்ப்பு ஆகியவற்றில் முழுக் கவனம் செலுத்தியதுடன் காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்தையும் முழுமையாக எதிர்த்தார். காந்தியாரின் சட்டமறுப்பு இயக்கத்தை ஆதரிக்கக் கூடாது என்பதில் மிக உறுதியாகவும் இருந்தார்.

இதனாலும் அமீர் ஹைதர்கான் சிங்காரவேலரைத் தவிர்த்திருக்கலாம். தென்னிந்திய இரயில்வே சதி வழக்கில் தண்டிக்கப்பட்ட சிங்காரவேலர் சிறையில் இருந்ததனாலும் அமீர் ஹைதர்கானைச் சந்திக்க முடியாமல் ஆகி இருக்கலாம். 1930க்குப் பின்னர், சிங்காரவேலர் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர்

உடல் நலமும் பாதிக்கப்பட்டிருந்தார். சுயமரியாதைத் தோழர்களைக் கூர்மைப்படுத்த சிங்காரவேலர் தம் முழு நேரத்தையும் கட்டுரைகள் எழுதுவதற்காகப் பயன்படுத்தினார். இந்தக் காலத்தில் பெரியாரோடு சிங்காரவேலர் மிக நெருக்கமாகவும் இருந்தார்.

இக்காலத்தில்தான் அரசு, கிசான் சபைகள், இளைஞர் மன்றங்கள், மாணவர் மன்றங்கள் அனைத்தையும் தடை செய்து வைத்திருந்தது. அரசாங்கத்திற்குப் பிடிக்காத எச்செயலையும் செய்யும் யாரையும் அரசு மிகக் கொடுமையாகக் கைது செய்த காலம் இது. தலை மறைவு வாழ்வு நடத்தி வந்த அமீர் ஹைதர்கான் ஒரே ஒரு முறை மட்டும் சிங்காரவேலரைச் சந்தித்தாக ஆர்யா என்னும் பாஷியம் குறிப்பிடுகின்றார்.

1932 சென்னை அரசாங்கத்தின் நிர்வாக அறிக்கையின்படி மாஸ்கோவில் பயிற்சி பெற்ற அமீர் ஹைதர்கான் தலைமையில் இளந் தொழிலாளர் கழகம் என்ற பெயரில் கம்யூனிசப் பிரச்சாரம் செய்யும் குழுவொன்று சென்னையில் இயங்கியதை அரசாங்கம் கண்டுபிடித்து அழித்துவிட்டது. அமீர் ஹைதர்கான் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டார் என்றும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

சிங்காரவேலரும், அமீர் ஹைதர்கானும் ஏன் அடிக்கடி சந்திக்கவில்லை என்பதற்கான காரணத்தை இப்பொழுது நாம் விளங்கிக் கொள்ள முடியும். அமீர் வெளியில் இயங்கியபொழுது சிங்காரவேலர் சிறையில் இருந்தார். அமீர் சிறையிலிருந்த பொழுது சிங்காரவேலர் வெளியில் இருந்தார். சிங்காரவேலர் தீவிரமான எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்தார். ஆனால் இருவருமே தங்களின் சோஷலிசப் பிரச்சாரப் பணியைத் தீவிரமாகவே செய்து வந்தனர். சுயமரியாதைத் தோழர்களைச் சிங்காரவேலர் சமதர்மத் தோழர்களாக மாற்றியதைப் போல அமீரும் சிறையில் இருந்த பொழுது சோஷலிசத்திற்கு உதவும் முயற்சியைத் தம் முழு நேரப்பணியாகச் செய்து வந்தார்.

அமீர் 1934இல் சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் மீண்டும் தம் சோஷலிச இயக்கப்பணியைத் தொடங்கினார். பி. சுந்தரையா, பி. சீனிவாசராவ், ஆர்யா என்ற பாஷ்யம் 1934இல் சென்னைக்கு வந்து இயக்கப் பணியாற்றிய ஏ.எஸ்.கே. அய்யங்கார் இவர்களுடன் அமீர் சிங்காரவேலர் ஆளுமையின் கீழ்க் கம்யூனிஸ்டு அமைப்பு ஒன்றை அமைக்க அரும்பாடுபட்டார். அமீர் மீண்டும் கைது செய்யப்பட்டபின் அம்முயற்சி தோற்றுப் போனது. அமீர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

1935, 1936இல் பம்பாயிலிருந்து நாடு கடத்தப்பட்ட எஸ்.வி. காட்டே சென்னை வந்து சிங்காரவேலரைச் சந்தித்தார். சிங்காரவேலரின் யோசனைப்படி நாகை கே. முருகேசனுடன், பகத் ஹவுசில் தங்கிக் கொண்டார். அதன் பின்னரே கம்யூனிஸ்டு கட்சியைத் தமிழகத்தில் உருவாக்கும் பணி தொடங்கியது. பி. சுந்தரய்யா, கே. சத்தியநாராயணா, ஏ.எஸ்.கே. அய்யங்கார், இராஜவடிவேலு, அவர் சகோதரர் பி. மாணிக்கம் ஆகியோர்கள் சிங்காரவேலரின் யோசனையின்படி 19.7.1935இல் ''தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம்'' என்ற ஓர் அமைப்பு தொடங்கப் பெற்றது. நகராண்மைக் கழகத் தெரு கூட்டுவோர், அச்சகத் தொழிலாளர்கள், பீடி சுற்றும் தொழிலாளர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தனர்.

ஆந்திரப் பகுதியில் தொழிலாளர் பாதுகாப்புச் சங்கத்தின் கிளையொன்று சுந்தரையாவால் தொடங்கப்பெற்றது. ஏ.எஸ்.கே. இராஜவேலு சிங்காரவேலருடன் நேரடியாகவே தொடர்பு கொண்டு இயக்கத்திற்கான ஆலோசனைகளைப் பெற்று வந்தார். இந்தச் சமயத்தில்கூடப் பெரியார் சிங்காரவேலர் கூடத்தான் இருந்தார்; என்றாலும் இருவரிடையே கொள்கை தொடர்பான வேற்றுமைகள் முளைவிடத் தொடங்கி இருந்தன. 1934 மே நாளில் ஈ.வெ.ரா. உரையாற்றுவார் என்று கூட இராஜவேலு அறிவித்திருந்தார். என்றாலும் அக்கூட்டத்திற்குப் பெரியார் வரவில்லை. சிங்காரவேலர் மட்டுமே கலந்து கொண்டு மே தினச் சொற்பொழிவாற்றினார். [1]

இக்காலத்தில் பெரியார் சமதர்மக் கொள்கைகளின் மீது கொண்டிருந்த பற்றைவிட நீதிக்கட்சியின் செல்வாக்கைப் பெறுவதிலும் அவர்களின் ஆதரவைப் பெறுவதிலுமே அவர் நேரத்தைச் செலவிட்டார். இதனால் சமதர்மத் தோழர்கள் அனைவரும் பெரியார் மீது கடும் அதிருப்தியில் இருந்தனர். சிங்காரவேலருக்குக் கட்டுரை எழுதும் வாய்ப்பும் மறுக்கப்பட்ட நிலையில் தோழர் நாகை கே. முருகேசனும், நாகை டி.என். இராமச்சந்திரனும் சிங்காரவேலர் எழுதுவதற்காகவே ''புதுவுலகம்'' என்னும் மாதாந்திர ஏட்டைக் கொண்டு வந்தனர் என்பதை முன்னரே நாம் குறிப்பிட்டுள்ளோம். 1.11.1936இல் சுயமரியாதை மாநாடு திருச்சியில் கூட்டப் பெற்றதையும் அதில் எஸ்.ஏ.டாங்கே சிறப்புரையாற்றியதையும் முன்னரே கண்டோம். கம்யூனிஸ்டு இயக்கம் தடை செய்யப்பட்டிருந்த நிலையில் பல கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சிகளில் பணியாற்றி

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், பக். 226-228.

வந்தனர். சுயமரியாதைச் சோஷலிஸ்டு தோழர்கள் பலரும் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியில் சேர்ந்து பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில் 1936இல் தோழர் பி.சி. ஜோஷி, தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயணன், தோழர் எஸ்.வி.காட்டே ஆகியோர் லக்னோவில் கூடினர். தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்டு உறுப்பினர்களும் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியும் இணைந்து செயல்பட வேண்டுமென்று முடிவெடுத்தனர். ஏகாதிபத்தியத்தின் முழுமையான அடக்கு முறையை மீறிக் காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் தீவிரமாகச் செயல்பட்டு வந்தனர். பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தேசிய இயக்கத்தில் குறிக்கோள் சோசஷலிசம்தான் என்று அறிவித்ததன் அடிப்படையில் 1936 டிசம்பரில் நடைபெற இருந்த அகில இந்திய ஃபெய்ஸ்பூர் மாநாட்டிற்கு மூன்றில் ஒரு பங்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் பிரதிநிதிகளாகச் செல்லும் அளவிற்கு வலிமை பெற்றனர்.

இந்த மாநாட்டில் பாசிசம், நாசிசம் இவற்றிற்கு எதிரான கோஷங்களை வைக்குமளவிற்குக் காங்கிரசில் மாற்றம் ஏற்பட்டது. சென்னையில் 1934 முதலே பேரியக்கமாக இயங்கி வந்த எஸ்.வி.காட்டே பம்பாயில் இயங்கி வந்த கம்யூனிஸ்டு இயக்கத்துடன் நேரடித் தொடர்பைச் சென்னையில் உருவாக்கினார். எண். 50 தாதா முத்தியப்பன் தெருவில் இயங்கி வந்த தொழிலாளர் பாதுகாப்பு இயக்கத்தை 2/65 பிராட்வேயில் உருவாகி இருந்த புதிய கட்டடத்திற்கு மாற்றிக் கொண்டனர். இந்த இயக்கத்திற்கு வந்த பின்னர் அலுவலகம் முழு மூச்சுடன் இயங்கத் தொடங்கியது. இந்த அலுவலகத்தை மக்கள் "ஸ்ட்ரைக் ஆபீஸ்" என்றே அழைத்தனர்.

1936இல் சென்னைக்கு வந்தபொழுது இந்த அலுவலகத்தில் இயங்கி வந்த காங்கிரஸ் சோஷலிஸ்டுகளின் அழைப்பை ஏற்றுப் பகத் ஹவுசிற்கு நேரு வருகை தந்தார். இந்த அலுவலகத்தில் பண்டிட் நேரு 'காட்டே இந்தக் காபி மிக நன்றாக இருக்கிறது. இன்னொரு குவளை தரமுடியுமா?' எனக் கேட்டு வாங்கியருந்தினார் (11.ப.229). 2/56 பிராட்வே பகத் ஹவுஸ் மாளிகைக்கு வழக்கு மன்றம் வருகின்ற சிங்காரவேலர் அன்றாடம் அங்குத் தவறாது வருவார். இயக்கத்திற்குத் தேவையான யோசனைகளைச் சிங்காரவேலர் வழங்குவதுண்டு.[1]

---

1. முத்து. குணசேகரன், தொழிற்சங்க மேதை ஏ.எஸ்.கே. அய்யங்கார், பக். 97-98.

நாகை கே. முருகேசன், ஏ.எஸ். கே. அய்யங்கார், எஸ்.வி. காட்டே இவர்களெல்லாம் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்கள். இப்பொழுது இந்தக் குழுவிற்கு எஸ்.வி. காட்டே தலைவராக இருந்தார். பி. இராமமூர்த்தி, ப. ஜீவானந்தம், அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் கே. பால தண்டாயுதம், புதுவை வி. சுப்பையா, இராமச்சந்திர ரெட்டி, இவர்களெல்லாம் அடிக்கடி பகத் ஹவுசிற்கு வந்து இயக்கப் பணியாற்றினர்.

சிங்காரவேலர் யோசனைகளை அடிக்கடி பெற்ற எஸ்.வி. காட்டே தொழிலாளர்களையும், மாணவர்களையும் ஒருங்கிணைத்துப் பெரும் இயக்கப் பணியாற்றினார். எஸ்.வி. காட்டேயின், யோசனைப்படி கம்யூனிச இயக்கவுணர்ச்சிக்காக "நியூ ஏஜ்" என்ற பத்திரிகை தொடங்கப்பெற்று, கம்யூனிச இயக்கத்திற்குப் பெரும் தொண்டாற்றியது. இக்காலத்தில் ம. சிங்காரவேலர் முதுபெரும் தலைவராக இருந்து கம்யூனிஸ்டு இயக்கத்திற்கு வழிகாட்டி வந்தார்.

ப. ஜீவானந்தத்தின் தலைமையில் 'ஜனசக்தி' எனும் தமிழ் ஏடு தொடங்கப் பெற்றது. தமிழ் நாட்டிலிருந்த காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சிப் பிரிவுக்கு அது நிரந்தர வழிகாட்டியாக இயங்கியது. எஸ். வி. காட்டே இந்தச் சமயத்தில் சிங்காரவேலர் வழிகாட்டுதலில் கம்யூனிஸ்டு நிறுவன அமைப்பைத் தோற்றுவித்தார். அந்த அமைப்பு எப்பிரச்சினை பற்றியும் இயக்க அடிப்படையில் விவாதத்திற்கு உட்படுத்திய பின்னரே மேற்கொண்டது. தொண்டர்களால் சி.எஸ். என்றழைக்கப் படுகின்ற சி.சுப்பிரமணியம் இயக்கத்திற்குச் செயலாளராக இருந்தார். எஸ்.வி. காட்டே தலைமையில் இயங்கிய கம்யூனிஸ்டு இயக்கம் மிக்க செல்வாக்கும் ஆளுமையும் பெற்ற இயக்கமாக விளங்கியது.

இக்காலத்தில் சிங்காரவேலர் அடிக்கடி உடல் நலிவுற்றார். என்றாலும் எஸ்.வி. காட்டே, ஏ.எஸ்.கே., ப. ஜீவானந்தம், நாகை கே. முருகேசர் ஆகியோர் சிங்காரவேலரை அடிக்கடி சந்தித்து இயக்கத்திற்கான யோசனைகளைப் பெறுவதை ஒரு வாடிக்கையாகக் கொண்டிருந்தனர். சிங்காரவேலர் தொழிலாளி வர்க்கத்தையும், தொழிற்சங்க இயக்கத்தையும் ஒன்றுபடுத்துவதற்கு இயன்றதையெல்லாம் செய்து கொண்டிருந்தார். 1935இல் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் விதித்த செயல்முறையின் அடிப்படையில் இந்தியத் தேசத்தின் விடுதலைக்கான முயற்சியை இயக்கம் தொடர்ந்து தொய்வின்றி நடத்த வேண்டுமென்று சிங்காரவேலர் அறிவுறுத்தி வந்தார்.

1936க்குப்பின் தொழிற்சங்க இயக்கங்கள் முழுமையான வலிமை பெற்ற இயக்கங்களாக மலர்ந்தன. 1937க்குப் பின்னர், சில மாநிலங்களில் காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தது. இக்காலத்தில் சென்னையில் சிங்காரவேலர் ஆளுமையின் கீழ்த் தென்னிந்தியப் பாட்டாளி வர்க்கம் முழுச் செல்வாக்குடன் செயல்பட்டது. தோழர் ஏ.எஸ்.கே. அய்யங்கார் அச்சுத் தொழிலாளர் சங்கம், டிராம்வே சங்கத்தின் தலைவராக இருந்தார். கள் இறக்குவோர் சங்கத்தின் தலைவராகப் பி. இராமமூர்த்தியும், செயலாளராக நாகை கே. முருகேசனும் இருந்தனர்.

சென்னையின் அச்சுத் தொழிலாளர் சங்கமும், டிராம்வே அண்டு எலக்ட்ரிக் சப்ளை தொழிலாளர் சங்கமும் நேரடியாகவே கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கின. முதுமையால் பெரிதும் இயக்கப் பணிகளில் யோசனை மட்டும் சொல்லிவிட்டு ஒதுங்கி இருந்த சிங்காரவேலரை இத் தொழிற் சங்கங்களின் தலைவராகத் தேர்வு செய்தன. எஸ்.வி. காட்டே நேரில் சென்று வற்புறுத்தியதன் காரணமாகச் சிங்காரவேலர் அப்பதவியை ஏற்றார். இயன்ற பொழுதெல்லாம் இயக்கத்திற்கு யோசனை சொல்வதும், மாதம் ஒருமுறை வந்து மாதாந்திரக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதும் சிங்காரவேலரின் நடைமுறைகளாக இருந்தன.

சிங்காரவேலரின் தலைமை, எஸ்.வி. காட்டேயின் செயல்திறன் இவற்றால் டிராம்வே எலக்டிரிக் தொழிலாளர் சங்கம் பல வெற்றிகளைப் பெற்றது. சென்னையின் அச்சுத் தொழிலாளர் சங்கம் சிங்காரவேலரின் ஆளுமையால் போர்க் குணம் மிகுந்த அமைப்பாக இருந்தது. இந்தச் சமயத்தில்தான் இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க வேண்டுமென்று சிங்காரவேலர் 27.3.1938இல் நடைபெற்ற தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தின்போது கட்சித் தடை நீக்கக் கோரிக்கையை முன் வைத்தார். அகில இந்தியத் தொழிற் சங்கத்திற்கும், காங்கிரசைச் சார்ந்த சங்கங்களுக்கும், காங்கிரஸ் சோஸலிஸ்டு கட்சிக்கும் அனைத்து இயக்கங்களுக்கும் சேர்த்துச் சிங்காரவேலர் தலைமை ஏற்றது சிங்காரவேலரின் பெருஞ்சாதனை எனச் சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.

1919இல் தோற்றுவிக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்து விலகிவிட்ட எம்.என். ராய் 1936இல் சென்னை வந்திருந்தபொழுது சிங்காரவேலரை அவர் வீட்டில் கண்டு பேசினார். மூன்று நாள்கள் சிங்காரவேலரைக் கண்டு தமது ‘‘ரேடிக்கல் கம்யூனிஸ்டு கட்சிக்கு’’ ஆதரவு தர வேண்டுமென்று

கேட்டார். மார்க்சியத் தத்துவத்தில் பற்றுக் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்திடம் நம்பிக்கைக் கொண்ட சிங்காரவேலர் எம்.என். ராயின் தவறான கருத்துகளுக்கு இடமளிக்கவில்லை. சிங்காரவேலருடன் நடத்திய பேச்சு வார்த்தையில் எம்.என். ராய் தோற்றார்.

எம்.என். ராய் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர், சிங்காரவேலர் நாகை கே. முருகேசனிடமும் அவர் குடும்பத்தவர்களிடமும் அறிவு ஜீவிகள் எப்பொழுதும் கொள்கைப் பற்றுறுதியுடன் இருப்பதுடன், இருக்கின்ற சூழலுக்கு ஏற்ப நெளிவு சுளிவுடன் நடந்து கொள்ள வேண்டும். தன்னுடைய சுயலாபத்திற்காகக் கொள்கைகளிலிருந்து விலகக் கூடாது. தவறான போக்கின் காரணத்தால் எம்.என். ராய் என்கின்ற அறிவு ஜீவியின் புரட்சி வாழ்வு முடிந்துவிட்டது. இனி அவர் கதி அதோ கதிதான்'' எனச் சிங்காரவேலர் கூறினார். எம்.என்.ராய் போன்றவர்களின் கம்யூனிசப் பற்று தளர்ந்து வந்த நிலையில் நாளாக நாளாகச் சிங்காரவேலரின் கொள்கைப் பற்றும் கம்யூனிசப் பற்றும் மேலும் மேலும் வளர்ந்தன எனச் சி.எஸ். சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.

சிங்காரவேலர் 1923 முதல் ஒவ்வொரு மே தினத்தையும் விமரிசையாகக் கொண்டாடினார். தொழிலாளர்களுக்கெல்லாம் தம் வீட்டில் விருந்து ஏற்பாடு செய்தார். இவையன்றி அக்டோபர் புரட்சி தினம், லெனின் தினம், சுதந்திர தினம், மார்க்ஸ் தினம், பாரீஸ் கம்யூன் தினம், இவற்றைத் தாம் கொண்டாடுவதுடன் தொழிலாளர்களையும் சிங்காரவேலர் கொண்டாடச் செய்தார்.

சிங்காரவேலர் யோசனையின் அடிப்படையில் 'சோஷலிஸ்டு' என்ற பத்திரிகையை நடத்த பி. சீனிவாசராவ் அனுமதி கேட்டார். அரசு அனுமதி மறுத்தது. ஆனாலும் ப. ஜீவானந்தம் 1937இல் 'ஜனசக்தி' என்ற தமிழ் ஏட்டைத் தனியார் அச்சகத்திலிருந்து கொண்டு வந்தார். இன்றும் அப்பத்திரிகை கம்யூனிஸ்டு இயக்கத்தால் நடத்தப் பெறுகிறது. அன்றைக்கு, ப. ஜீவானந்தத்திற்கு, சுப்பிரமணியம் உறுதுணையாக இருந்தார். 1939 செப்டம்பரில் இரண்டாவது உலகப் போர் தொடங்கியதால் அரசு இப்பொழுது கம்யூனிஸ்டுகளையெல்லாம் எதிரிகளாக நினைத்துக் கைது செய்யத் தொடங்கியது. இக்காலத்தில் சிங்காரவேலர் முதுமையில் வீட்டிலே இருந்தாலும், பல கம்யூனிஸ்டு தலைவர்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த நிலையில் இயக்கத்திற்கும், கட்சிக் காரர்களுக்கும் வேண்டிய யோசனைகளையும், வழிகாட்டுதலையும்

தெளிவாகவும், நிறைவாகவும் செய்து வந்தார். எப்பொழுது கூட்டங்கள் நடைபெறுகின்றன என்று அறிந்தால், முடிந்த பொழுதெல்லாம் உரிய நேரத்திற்கு முன்பாகவே சென்று கூட்டங்களில் கலந்து கொள்ளுகின்ற பழக்கம் சிங்காரவேலரிடம் இருந்ததாக ம.பொ.சி.யும் கூடப் பதிவு செய்துள்ளார்.

1945 ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்கினாார். தொண்டர்களைப் பாராட்டுவதில் சிங்காரவேலருக்கு நிகர் சிங்காரவேலரே. கம்யூனிஸ்டு இயக்க வளர்ச்சிக்காக இடையறாது உழைத்துவரும் தோழர்கள் எஸ்.வி.காட்டே, ப.ஜீவானந்தம், ஏ.எஸ்.கே. முருகேசன் இவர்களையெல்லாம் மனம் திறந்து பாராட்டியதுடன் இயக்கத்தின் கட்டுப்பாட்டிற்காகவும் மெய்மறந்து சிங்காரவேலர் பாராட்டினார்.

> தொழிலாளர்களுக்கு எப்பொழுதும் இயக்கச் செயல்பாட்டில் அச்சமே இருக்கக் கூடாது. கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளப் போராட வேண்டும். வேலை நிறுத்தமென்பது கடைசி ஆயுதமாக இருக்க வேண்டும். ஒரு தொழிற்சங்கத்திற்கு எதிராக இன்னொரு தொழிற் சங்கம் போட்டியாகச் செயல்படக் கூடாது. அப்படி செயல்பட்டால் தொழிற் சங்கங்கள் திசைமாறிப் போய்விடும்

என்று குறிப்பிட்டார். அவர் உரையில்,

> எனக்கு வயது 85 ஆயினும் தொழிலாளி ஆதிக்கத்திற்கு என் கடமையைச் செய்ய இங்கு வந்துள்ளேன். உங்கள் மத்தியில் இறந்தால் அதைவிட எனக்குக் கிடைக்கக் கூடிய பாக்கியம் வேறென்ன?

என்று பேசினார். மேலும் அவர் தொழிலாளர்களின் கட்சி கம்யூனிஸ்டு கட்சிதான்; அதன் தலைவர்கள்தாம் சரியான தலைவர்கள் என்றும் குறிப்பிட்டார். 1946 ஜனவரி வாக்கில் அவரைப் பக்கவாதம் இலேசாகத் தாக்கியது. இரண்டாவது தாக்குதலுக்குப் பிறகு அவர் உடல் நலிவுற்றது. 11.2.1946இல் அதாவது இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு ஓர் ஆண்டிற்கு முன்பே சிங்காரவேலர் மறைந்தார்.

இறக்கின்ற சமயத்தில் சிங்காரவேலர் பாரிச வாயு என்கின்ற பக்க வாதத்தாலும் பாதிக்கப்பட்டார். மருத்துவச் சிகிச்சைக்குப் பின்னர் ஓரளவு நடமாடுகின்றவராகவே வாழ்ந்து வந்தார்.

உயிர் பிரிகின்றபொழுது, சிங்காரவேலரின் உதடுகள் ''உலகில் இனி யுத்தம் ஒழியட்டும். அமைதி தழைக்கட்டும்'' என்று தமிழிலும், ஆங்கிலத்தில் ''Let there be peace in the world, let there be no more war in the world'' என்று முணுமுணுத்த வண்ணமே அவர் பேச்சு அடங்கியதாக அவர் அருகில் இருந்த பேராசிரியர் எம். ஜெய்பாய் பதிவு செய்துள்ளார். சுதந்திரப் பித்தரும் யோக்கியர்களில் ஒருவரும் மறைந்தார் என இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சிங்காரவேலரைப் பற்றி இரங்கலுரையாகக் குறிப்பிட்டது சிங்காரவேலரின் முழு வாழ்வைப் படம் பிடிப்பதாகும்.

5. சிங்காரவேலர் குண இயல்புகள்

சிங்காரவேலர் ஆய்வு மாணவராக இருந்து பல ஆண்டுகள் உழைத்ததன் அடிப்படையிலும் அவரோடு மிக நெருக்கமாக இருந்த தொழிற் சங்கத் தலைவர்கள் நாகை கே. முருகேசன் செஞ்சட்டைப் பஞ்சாட்சரம், நெ.து. சுந்தர வடிவேலு இவர்களையெல்லாம் நேரில் சந்தித்து உரையாடுகின்ற வாய்ப்பைப் பெற்றதாலும், அவர் குடும்பத்தவர்கள் பலரையும் நேரில் கண்டு உரையாடுகின்ற வாய்ப்பைப் பெற்றதாலும் அவர் குண இயல்பைப் பற்றி ஓரளவு நன்றாகவே அறியலாம்.[1]

சிங்காரவேலர் இயல்பு

சிங்காரவேலர் ஒவ்வொருநாளும் ஏதாவது ஓர் இயக்கத்தில் பங்கு பெற்றவராகவே இருப்பார். அரசியல் கூட்டங்களுக்கோ தொழிற்சங்க இயக்கக் கூட்டங்களுக்கோ ஒவ்வொருநாளும் சென்று வருவார். பெரிதும் இரவு வேளைகளில் காலங்கடந்தே வீட்டிற்கு வருவது அவரது இயல்பாக இருந்தது. தனிமையில் இருக்கின்றபொழுது பெரிதும் சிந்தனை வயப்பட்டவராகவே இருப்பார். அப்படி இல்லாத பொழுது படித்துக் கொண்டும் குறிப்பெடுத்துக் கொண்டும்தான் இருப்பார்.

அதிர்ந்து பேசினால் பிடிக்காது

சிங்காரவேலர் வீட்டிலுள்ளபொழுது வீடு மிக அமைதியாகவே இருக்கும். வீட்டின் பக்கத்தில் யாராவது அதிர்ந்து பேசினால் ''கிழவன் வீட்டில் இருக்கிறார் யாரும் பேசாதீர்கள், அவர் வெளியே வந்து விடுவார்; கோபித்துக் கொள்வார்'' என்பதே வீட்டவர்களின் எச்சரிக்கையாக இருக்கும்.

கொள்கையாளர்களை மட்டுமே பிடிக்கும்

கொள்கையுள்ளவர் என்று தெரிந்து விட்டால் அவர்களை முகமலர வரவேற்பது, மணிக்கணக்கில் பேசிக்

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 128வது ஆண்டு சிறப்புமலர், பக். 124-132.

கொண்டிருப்பது, அவர்களைச் சாப்பிட வைப்பது சிங்காரவேலரின் பண்பாக இருக்கும். கொள்கை இல்லாதவர், சுயநலக்காரர் என உணர்ந்து விட்டால் வந்தவர் எவ்வளவு பெரிய மனிதரென்றாலும் அவர்களோடு ஒருசில நொடியே உறவாடுவார். பெரிதும் அவர்களைத் தவிர்ப்பதையே விரும்புவார்.

கொள்கையில் முரண்பட்டவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களென்றாலும் அவர்களைக் கண்டிப்பதில், சினந்து பேசுவதில் சிங்காரவேலர் நொடியும் தாமதிக்கமாட்டார். அண்ணல் காந்தி முதல், தந்தை பெரியார், தமிழ்த் தென்றல் திரு.வி.க. வரை அனைவரிடமும் சிங்காரவேலர் முரண்பட்டதுண்டு. இதனாலேயே சிங்காரவேலர் முரட்டு மனிதர், முசுடு, முன் கோபக்காரர், இங்கிதம் தெரியாதவர் என்றெல்லாம் பழிக்கப்பட்டதுண்டு.

திருவண்ணாமலையைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர் அண்ணாமலைப் பிள்ளை தொழிற்சங்கத்தில் கடவுள் வாழ்த்துப் பாடுகின்றபொழுது அப்படியொரு நிகழ்ச்சி நடைபெற்றது என்பர். 'அங்கிங் கெனாத படி எங்கும் பிரகாசமாய்' என்று பாடிய அண்ணாமலைப் பிள்ளையிடம் இது என்ன பேதமையான பாட்டு. இந்தச் சூரிய மண்டலத்தைத் தவிர மற்ற இடங்களெல்லாம் இருண்டுதான் கிடக்கின்றன. எங்கும் பிரகாசமாகி என்பதில் அறிவியல் உண்மை கூடக் கிடையாது. அண்ணாமலைப் பிள்ளைக்காகப் பரிந்து பேச வந்த திரு.வி.க. வையும், தொழிற் சங்க இயக்கத்தில் இந்து, முஸ்லீம், கிறிஸ்துவன் இன்னும் பலர் இருக்கின்றார்கள். இந்தச் சூழலில் திரு.வி.க. போன்றவர்கள் இதனை ஆதரிப்பது பேதமையானது என்று சிங்காரவேலர் குறிப்பிட்டார் என்பார்கள்.

தாமதமாகச் செல்லமாட்டார்

சிங்காரவேலர் வாழ்ந்த காலத்தில் கூட்டங்களுக்குத் தாமதமாகச் செல்கின்ற பழக்கமே அவரிடம் கிடையா தென்பார்கள். பல வேளைகளில் கூட்டங்களுக்கு முன்னரே வந்து காத்து இருக்கின்ற மனிதராகவே சிங்காரவேலர் இருந்தார். ம.பொ.சி.யும் கூட அப்படியொரு கூட்டத்திற்கு வந்து சிங்காரவேலர் காத்திருந்ததாகப் பதிவு செய்துள்ளார்.

நேரத்தைப் போற்றுவார்

குறித்த நேரத்தில் வராத எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் முகத்துக்கு முன்னர்க் கடுமையாகப் பேசுவது சிங்காரவேலர் இயல்பு எனப் பதிவு செய்கிறார் நாகை.

கே. முருகேசன். அப்படியொரு நிகழ்ச்சி எம்.என்.இராய் சந்திப்பின்போது நிகழ்ந்தது எனக் கூறுகின்றார். தாமதமாக வந்த எம்.என். இராயிடம் வெளிநாட்டில் பல காலம் இருந்த நீ இப்படி தாமதமாக வரலாமா? எனச் சிங்காரவேலர் முகஞ்சுளித்தார் என்பார் நாகை கே. முருகேசன்.

இயக்கம் பெரிதென்பார்

சில பொழுது பெரிய இயக்கங்களில் பங்கு பெறுகின்ற பெரிய மனிதர்கள் தங்களுடைய சுயநலம் கருதி இயக்கத்தினிடம் முரண்படுவது உண்டு. அப்பொழுதெல்லாம் திறனாய்வு செய்து கருத்துகளைக் கூறச் சிங்காரவேலர் தயங்கியதில்லை. தொடக்கக் காலத்தில் கம்யூனிஸ்டு இயக்கத்தை இந்தியாவில் விதைத்த எம்.என். ராய் கம்யூனிச இயக்கத்திற்கு முரண்பட்டுத் தனக்கென இந்தியாவில் 'ரேடிக்கல் கம்யூனிசம்' என்று பெயரிட்டுச் செயல்பட்டபொழுது, அந்த இயக்கத்திற்குச் சிங்காரவேலர் ஆதரவு தர மறுத்ததுடன் சுயநலம் கருதி இப்படி தனி இயக்கங்கள் அமைப்பது பேதமை மட்டுமல்ல, முரண்பாடானது என எம்.என். ராய் முகத்து முன்னர்த் திறனாய்வும் செய்தார் என்பார் நாகை கே. முருகேசன்.

குழந்தைகளிடம் மகிழ்ச்சி

எப்பொழுதும் கடுகடுத்த முகத்துடன் சிந்தனை வயப்பட்ட நிலையில் வாழுகின்ற சிங்காரவேலர் அனைத்துக் கவலைகளையும் மறந்து மகிழ்ச்சியுடன் கலகலப்பாகப் பழகுகின்ற இடமொன்று இருந்தது. அதுதான் தங்கள் வீட்டுக் குழந்தைகளுடன் பழகுகின்ற நேரம். சிங்காரவேலர் வீட்டில் இருக்கின்ற பொழுது குறிப்பாகக் குழந்தைகளுடன் இருக்கின்ற பொழுது குழந்தைகளின் மகிழ்ச்சி கண்டு குழந்தையாகவே மாறி விடுவார். அரசியல் வாதியான சிங்காரவேலருக்கும், குழந்தைகளோடு உள்ள சிங்காரவேலருக்கும் அடிப்படையிலே பெரும் வேறுபாடு இருக்கும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சிங்காரவேலர் காலையிலோ, மாலையிலோ குழந்தைகளை யெல்லாம் காரில் உட்கார வைத்து உல்லாசமாக ஓட்டிச் செல்வார். சென்னைக் கடற்கரை சாலையில் போகிறபொழுது "அந்தக் காரை விட முந்திச் செல்லுங்கள்" என்று குழந்தைகள் சொன்னால் உடனடியாகச் சிங்காரவேலர் அந்தக் காரையும் விட முந்திச் செல்வார்.[1]

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப.40.

அப்பொழுதெல்லாம் குழந்தைகள் பேரார்வத்தோடு சத்தமிடுவார்கள். குறிப்பாக வெள்ளைக்காரர்களை முந்திச் செல்வது சிங்காரவேலருக்கு மிகவும் பிடித்த ஒன்றாக இருக்கும். அப்பொழுது சிங்காரவேலரே ஒரு குழந்தையைப் போலவே நடந்து கொள்வார் எனச் சிங்காரவேலர் பேரக் குழந்தைகளான ம. ஜெய்பாயும், ம. ஜூபாயும் நினைவூட்டுகின்றனர்.

பெயர் சூட்டல்

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவது மட்டுமல்ல; பல வீடுகளுக்குக் கூடப் பெயர் வைப்பது சிங்காரவேலர் இயல்பாக இருந்தது. குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி மகளுக்குச் சிங்காரவேலர் 'இரஷ்யா' என்று பெயர் வைத்தார். இப்படி பெயர் வைப்பதில் மரபு, நம் நாட்டுப் பழக்கம் என்றெல்லாம் சிங்காரவேலர் பார்ப்பதில்லை. மகாராஷ்டிராவிலிருந்து வந்த ஒரு கலைக்குழுவினர்களின் வித்தியாசமான பெயரைப் பார்த்துத்தான் தாத்தா எங்களுக்கு , 'ம. ஜெய்பாய்' என்றும் 'ம. ஜூபாய்' என்றும் பெயர் சூட்டினார் என்கிறார் சிங்காரவேலர் பேத்தியான ம. ஜெய்பாய். குழந்தைகள் அத்தனைபேரும் முதலெழுத்தும் ம. என்றே தொடங்க வேண்டுமென்பது ம. சிங்காரவேலர் விருப்பம்.

ஊர்ப் பெயர் முதலெழுத்து

தங்கள் வீட்டுக் குழந்தைகளிடம் தங்களுடைய தந்தையின் பெயரை முதலில் போடாதீர்கள்; என்னைப் போலவே, மயிலாப்பூர் என்பதை முதலெழுத்தாகப் போடுங்கள் எனச் சிங்காரவேலர் வலியுறுத்துவார். ஆகவேதான் அவர் வீட்டுக் குழந்தைகள் பெயர் அத்தனையும் ம. ஜெய்பாய், ம. ஜூபாய், ம. கமலா, ம. ஜலகண்டி என்றே வழங்குகின்றன.

வீட்டிற்குப் பெயர் வைத்தல்

இன்றைக்கும் புகழோடு வாழ்பவர் சுப. வீரபாண்டியன். இவர் தந்தைதான் சமதர்மம் சுப்பையா. பெரியாரின் சயமரியாதை இயக்கத்திலும், சிங்காரவேலரின் சமதர்ம இயக்கத்திலும் இருந்தவர். இவர் அக்காலத்தில் சென்னை வருகின்ற பொழுதெல்லாம் சிங்காரவேலரைச் சந்திக்கத் தவறுவதே இல்லை. சிங்காரவேலர் மேல் இருந்த ஈடுபாட்டால் தம் பெயரைக் கூடச் சமதர்மம் சுப்பையா என்று மாற்றிக் கொண்டவர்.

சென்னையில் சிங்காரவேலரைக் கண்ட சமதர்மம் சுப்பையா 'அய்யா, எங்களூர் காரைக்குடியில் புதிதாக வீடு கட்டியுள்ளேன்' என்றார். உடனடியாகச் சிங்காரவேலர் 'அந்த வீட்டிற்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்'? என்று கேட்டார்.

'வீட்டுக்கா? பெயர் வைப்பதா?' என்று கேட்ட சுப்பையா ஆச்சரியப்பட்டார். ''சுப்பையா, மனிதனுக்குப் பெயர் வைப்பதைப் போல, உன் வீட்டிற்கும் பெயர் வைக்க வேண்டும். உன் வீட்டிற்குச் 'சமதர்ம விலாஸ்' என்று பெயர் வை'' என்றவர் இதற்கான சலவைக் கல்லான கல்வெட்டையும் செய்து தருவது என் பொறுப்பென்றார். ''சமதர்ம விலாஸ்'' என்ற கல்வெட்டைச் செதுக்கிப் பொறித்ததுடன் தம்முடைய காரிலேயே காரைக்குடி சென்று சமதர்மம் சுப்பையா வீட்டில் ''சமதர்ம விலாஸ்'' என்ற கல்வெட்டையும் பொறித்து விட்டு வந்தார். இதனைச் சமதர்மம் சுப்பையா இன்றளவும் உணர்வுடன் கூறி வருகின்றார்.

வேகமாகச் செல்லமாட்டார்

குழந்தைகளுக்காகப் போட்டியாகக் கார் ஓட்டுகின்ற சிங்காரவேலர் நண்பர்களோடு வெளியூர் செல்லுகின்றபொழுது கார் ஓட்டுகின்ற ஓட்டுநர்கள், மிக வேகமாக ஓட்டினால் ஓட்டுநர்களைக் கண்டித்து மெதுவாக ஓட்டச் சொல்வார். அதையும் மீறி வேகமாக டிரைவர் ஓட்டினால் பக்கத்திலுள்ள குத்தூசி குருசாமியிடம் ''குருசாமி, அவன் வேகமாகக் காரை ஓட்டுகிறான், மெதுவாகப் போகச் சொல், கேட்கவில்லை யென்றால் அவன் தலையில் குட்டு'' என்று சிங்காரவேலர் கூறுவார்.

தின்பண்டங்கள் வாங்கி வருவார்

ஒவ்வொரு நாளும் நீதிமன்றத்திலிருந்து வருகின்ற பொழுது என்ன வேலை இருந்தாலும் குழந்தைகளுக்கான தின்பண்டங்களை வாங்கிவரச் சிங்காரவேலர் மறப்பதே இல்லை. தின்பண்டங்களைக் குழந்தைகளிடம் நிறையக் கொடுக்க மாட்டார். குழந்தைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின் பண்டங்களைக் கொடுப்பார். தின்றுவிட்டு வருகின்ற குழந்தைகளுக்கு மீண்டும் சிங்காரவேலர் தின்பண்டங்களைத் தருவார். குழந்தைகள் தின்பண்டங்களைத் தின்பதைக் காண்பதில் சிங்காரவேலருக்கு அளவில்லாத ஆனந்தம் என்கிறார் ம. ஜெய்பாய்.[1]

இசை நுட்பமறிந்தவர்

''எங்கள் வீட்டுக் குழந்தைகள் அனைவருமே எல்லா இசைக் கருவிகளையுமே வாசிக்கத் தெரிந்தவர்கள். அனைவருமே நன்றாகப் பாடுவோம். அதற்குக் காரணம் எங்கள் தாத்தா

1. கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு, ப.262.

சிங்காரவேலர்தான்'' என்று கூறுவார் ம. ஜெய்பாய். தாத்தா சிங்காரவேலருக்குக் கித்தார், வீணை, வயலின், கஞ்சிரா, மிருதங்கம், தபேலா அனைத்தும் வாசிக்கத் தெரியும். ஒவ்வொரு கருவியை எப்படி இயக்க வேண்டுமென்று தாத்தா சொல்லித் தருவார். ஆகவே நாங்கள் அனைவருமே இசைக் கருவிகளை இசைக்க வல்லவர்களாக இருந்தோம். அதற்குக் காரணம் தாத்தாதான்'' என ம. ஜெய்பாய், ம. ஐஃபாய் கூறுவர். ''தாத்தா டென்னீஸ் ஆடுவார். மாலை வேளைகளில் தாத்தா கூடவே சென்று பந்து பொறுக்கிப் போடுவோம்'' என்று நினைவு கூர்கிறார் ம. ஜெய்பாய்.

பாயசம் நாள்

> குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை என்றால் குழந்தைகளுக்கெல்லாம் கொண்டாட்டம்தான். அந்த நாளைத் தாத்தா குழந்தைகளுக்காகவே செலவிடுவார். அரசியல் கூட்டங்கள் இல்லாதபோது எங்களை யெல்லாம் காரிலோ அல்லது மாட்டு வண்டியிலோ எங்களுடைய திருவான்மியூர் பண்ணை வீட்டிற்குக் கூட்டிச் செல்வார். ஞாயிற்றுக்கிழமைகளை நாங்கள் குழந்தைகள் பெரிதும் பாயசம் நாள் என்று குறிப்பிடுவோம். சமையல்காரர்களிடம் பாயசத்தையோ, தித்திப்புக்களைச் செய்யச் சொல்லி எங்களோடுதான்-குழந்தைகளோடுதான் மேஜையில் நாற்காலியில் அமர்ந்து சாப்பிடுவார்.

என்கிறார் ம. ஜெய்பாய்.[1]

வான மண்டலப் படங்கள்

> ''எங்கள் வீட்டு நூலகச் சுவரில் பெரிய உலகப்படம், இந்தியப் படம் இடம் பெற்றிருக்கும். அன்றைக்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எந்த இடத்தில் என்பதைத் தாத்தா விளக்கத் தவறியதே இல்லை'' என்கிறார் ம. ஜெய்பாய். அதைப் போல எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்குச் சூரிய மண்டலம், விண்வெளி தொடர்பான செய்திகள் அனைவர்க்கும் அத்துப்படி. அதற்குக் காரணம் தாத்தாதான். அருந்ததி என்பது அந்த நட்சத்திரம்தான். தேள் வடிவத்தில் காணப்

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், பக். 125-127.

படுகின்ற நட்சத்திரம் இது. இவையெல்லாம் சூரியனைப் போன்ற கோள்கள். சப்தரிஷி மண்டலம், கரடிக் கூட்டம், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன் என்றெல்லாம் அனைத்து விண் தொடர்பான செய்திகளையும் தாத்தா எங்களைப் பள்ளிப் பிள்ளைகளைப் போல உட்கார வைத்து விளக்குவார்கள். பணக்கார வீட்டுப் பெண்கள் நாங்களென்றாலும் எங்களையெல்லாம் தாத்தா அரசியல் கூட்டங்களுக்கும், கண்காட்சிகளுக்கும் கூட்டிச் செல்வார். சென்னையில் கண்காட்சிகள் அமைகின்ற இடங்களில் தாத்தா தவறாமல் அறிவியல் கண்காட்சிகள் இடம் பெறச் செய்வார். அவரே வருபவர்கள் அனைவருக்கும் விளக்கம் சொல்வார்.

சாணியால் அடிக்கப்பட்டனர்

கல்லூரி மாணவிகள் அக்காலத்தில் அரசியல் கூட்டங்களுக்குச் செல்வது மிகமிக அரிது. விதிவிலக்காக எம்.ஏ. மாணவியான நானும், மருத்துவக் கல்லூரி மாணவியான ஜூபாயும் சில கூட்டங்களுக்குச் சென்றதுண்டு. சிந்தாதிரிப் பேட்டையில் நடைபெற்ற ஓர் அரசியல் கூட்டத்தில் எங்கள் மீது சாணியை எடுத்து எறிந்து விட்டார்கள். எங்களுக்கு அவமானமாகப் போய் விட்டது. அதைப் பற்றியே நீண்டநேரம் புலம்பிக் கொண்டிருந்தோம். தாத்தா அதனைப்பற்றி ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. குளித்தால் சாணி போய்விடப் போகிறது; இதில் புலம்புவதற்கு என்ன இருக்கிறது? என்று தாத்தா அதனைப் பற்றி மிகமிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டார்கள்.

என நினைவூட்டுகின்றார் ம. ஜெய்பாய்.[1]

அளவில்லாமல் புத்தகம் வாங்குவார்

''புத்தகம் வாங்குவதில் தாத்தாவைப் போல ஓர் ஊதாரி உலகத்திலேயே கிடையாது'' என்கிறார் ம. ஜெய்பாய். உலகிலிருந்தெல்லாம், குறிப்பாகத் தடை செய்யப்பட்ட புத்தகங்கள் வீட்டிற்கு வந்து கொண்டே இருக்கும். வானவியல், அறிவியல், மனவியல், தத்துவம், சோஷலிசம் தொடர்பான

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், பக். 131-132.

புத்தகங்கள் எப்படியோ தாத்தாவிடம் வந்துவிடும். புதுவையின் விசுவநாதன் என்பவர் மூலமாகத் தடை செய்யப்பட்ட புத்தகங்களெல்லாம் காவலர்களுக்குத் தெரியாமல் வந்து சேரும். 'மகாதேவன் புத்தகக் கடை என்பது மயிலாப்பூரில் அக்காலத்தில் மிகப் புகழ் வாய்ந்த புத்தகக்கடை. சிங்காரவேலரே நேரில் சென்று முதல் புத்தகமாக அள்ளிக் கொண்டு வருவார். புத்தகத்தைக் கடன் கொடுக்கின்ற பழக்கம் சிங்காரவேலருக்கு அறவே கிடையாது என்பர்.[1]

நேர்மையானவர்

அவருடைய நண்பர்கள் வழக்கறிஞர்கள் எப்பொழுதும் காம்ரேட் சிங்காரவேலு என்றுதான் அழைப்பார்கள். பிடிவாதக் கொள்கைக்காரர், முரட்டு மனிதர் என்று சிங்காரவேலர் பெயர் எடுத்தாலும் சிங்காரவேலரின் நடு நிலைமைக் கொள்கைக்காகவும், நேர்மைக்காகவும் அனைவராலும் பாராட்டப்பட்டார். அரசு எவ்வளவோ நெருக்கடிகளைத் தந்தபொழுதும் நியூஜெண்ட் கிரேண்ட் போன்ற வழக்கறிஞர்கள் சிங்காரவேலருக்காக வலிய வந்து வழக்காடினார்கள். அது அவரின் நேர்மைத் திறத்துக்கமைந்த நற்சான்றாகும்.

சிங்காரவேலர் உடல் வாகு

சிங்காரவேலர் நடுத்தர உயரமுடையவர். ஒல்லியானவர். ஆனால் அவரின் அடர்ந்த புருவங்கள் அவரின் கடுமையான முகத்தை இன்னும் கடுமையாகக் காட்டும். தொழிலாளர்கள் ஊர்வலம் போகும் பொழுது சிங்காரவேலர் காணற்கரிய காட்சியாகக் கண்டு இரசிப்பார். அவர் மலர்ந்த முகம் இன்னும் வசீகரமாகக் காணப்படும். நல்ல நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது ஆகா சபாஷ் என்பது அவரின் இயல்பு.

குடும்ப அறக்கட்டளை

அவர் குடும்பத்திற்கென்று ஓர் அறக்கட்டளை இருந்தது. சென்னையில் மட்டுமல்ல; தமிழகம் முழுமையும் அவர்கள் குடும்பத்திற்குச் சொத்துக்கள் இருந்தன. மயிலாப்பூர், திருவான்மியூர், திருப்போரூர், மயிலம், திருத்தணி, திருவண்ணாமலை இங்கெல்லாம் இன்றளவும் சத்திரங்கள் உள்ளன. அவற்றைப் பற்றியெல்லாம் சிங்காரவேலர் ஒருநாளும் கவலைப்பட்டதில்லை. கூடுமானவரை அவற்றையெல்லாம் சிங்காரவேலர் அண்ணன் கவனித்துக் கொள்வார். அறக்கட்டளை

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர்.

தொடர்பான வழக்குகள், சிங்காரவேலர் குடும்பச் சொத்துக்கள் குறித்து அவர் வெறுப்படைந்தார்.

கலப்புமண முன்னோடி

தங்கள் வீட்டுப் பெண்கள் கலப்பு மணம் செய்ய விரும்பியபோது அதனை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். 1935இல் மீரட் சதி வழக்கில் தொடர்பு படுத்தப்பட்ட பிலிப் ஸ்பரேட் என்ற ஆங்கிலேயர் சிங்காரவேலர் வளர்ப்புப் பெண் சீத்தாவை விரும்பி மணந்த காதல் மணத்தை, கலப்பு மணத்தை மனமுவந்து ஏற்றார். பிலிப் இலண்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட வெள்ளைக்காரர். மீரட் சதிவழக்கில் தொடர்பு படுத்தப்பட்டவர். சிங்காரவேலர் வீட்டில் குடியிருந்தவர்.

தாக்கம் பெற்றவர்கள்

அக்கால இளைஞர்களுக்குச் சிங்காரவேலர் பெரும் தாக்கமாக இருந்தார். ஏ.எஸ்.கே. அய்யங்கார், எஸ்.வி. காட்டே, டாங்கே, நாகை கே. முருகேசன், டி.என். இராமச்சந்திரன், எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி இவர்களுக்கெல்லாம் சிங்காரவேலர் முன் மாதிரியாக இருந்தார். சிங்காரவேலர் தாக்கத்தால் ஏ.எஸ்.கே. அய்யங்கார், நாகை கே. முருகேசன், டி.என். இராமச்சந்திரன், எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி இவர்களெல்லாம் கொள்கைக்காக, சிங்காரவேலர் சொன்னார் என்பதற்காகத் திருமணத்தையே புறக்கணித்தார்கள்.

கதரே அவர் உடை

காந்தியிடம் முரண்பட்டு விட்ட பின்னரும் அவர் கதர் போடுவதை நிறுத்தவே இல்லை. தமக்கு வேண்டிய நூலைத் தறியில் செய்து கொண்டவர் சிங்காரவேலர். குடும்பத்தவர்கள் அத்தனை பேரையும் தறி நெய்ய வேண்டுமெனச் சிங்காரவேலர் கட்டாயப் படுத்தினார். உள்ளூரில் செய்யப்பட்ட சீயக்காய்த் தூள், பழுப்பு சர்க்கரை, பனைவெல்லம் இவற்றை விரும்பி சிங்காரவேலர் பயன்படுத்தினார். சில உணவுகளுக்கு வெல்லத்தைத் தொட்டுக் கொள்வது சிங்காரவேலருக்குப் பிடித்த ஒன்று. வீட்டில் எப்பொழுதும் கால் கட்டை என்கிற மர மிதியடியைப் பயன்படுத்தினார்.

நடந்தே வருவார்

உயர் நீதிமன்றத்தில் பணியாற்றியபொழுது பெரிதும் மாலை வேளைகளில் வீடுவரை நடந்தே வருவது அவரது பழக்கமாக இருந்தது. தேவைகளுக்கு ஏற்ப மோட்டார் காரிலும்,

மோட்டார் சைக்கிளையும் பயன்படுத்தினார். குழந்தைகளை வெளியில் அழைத்துச் செல்லும்பொழுது திருவான்மியூருக்குத் தமது பண்ணை வீட்டிற்கு மாட்டு வண்டியில் அழைத்துச் செல்வார். மாட்டு வண்டியை ஓட்டிச் செல்லுவது அவருக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. [1]

உழவில் பேரார்வம்

வழக்கறிஞர் பணியைப் போல விவசாயத்திலும் ஈடுபடுவது அவருக்கு உவப்பான பணியாகும். திருவான்மியூர்ப் பண்ணை வீட்டிற்கு விதைக்கின்ற காலத்திலேயும், அறுவடைக் காலங்களிலும் பண்ணை வீட்டிலேயே வாரக் கணக்கில் தங்கி விடுவது அவரது வழக்கம். அவர் அரசியலிலும் தொழிற் சங்கப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்த பொழுது பலமுறை அவர் வீடுகள் காவலர்களால் சோதனையிடப்பட்டதுண்டு. எப்பொழுதும் அரசுக்கு எதிரான ஆவணங்களை அவர் வீடுகளிலிருந்து காவலர்கள் கைப்பற்றியதில்லை. [2]

இரகசியக் காவலர்கள் நோட்டமிடல்

இரகசியக் காவலர்கள் அவர் வீட்டை எப்பொழுதும் நோட்டமிட்ட வண்ணமே இருப்பர். ஒருமுறை நண்பனென்று மிக நெருக்கமாகப் பழகியவன் அரசாங்க ஒற்றன் என்பதைச் சிங்காரவேலர் மூலம் உணர்ந்த நாகை கே. முருகேசன் தனது தலைவருக்கு இப்படிப்பட்ட இடையூறுகள் வரக்கூடாது என்பதற்காகவே வாழ்வில் நண்பர்களையே தவிர்த்து வாழ்ந்ததாகக் குறிப்பிட்டார்.

கொள்கையாளர்களை வீட்டில் தங்க வைப்பார்

மிகப்பிடித்த தோழர்களைத் தம் வீட்டிலேயே சோறு போட்டுத் தங்க வைத்துக் கொள்ளுவது சிங்காரவேலர் இயல்பு. அப்படி சிங்காரவேலர் வீட்டில் நிரந்தரமாகத் தங்கி இருந்தவர் நாகை கே. முருகேசனும், ஆஷ் கொலை வழக்கில் தொடர்பு படுத்தப்பட்ட எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரியும். வாழ்வின் கடைசிக் காலத்தில் சிங்காரவேலர் சங்கத் தமிழ் இலக்கியங்களையும் மிகமிக விரும்பிப் படித்தார். வாழ்வின் கடைசி நாள்கள் வரை அவர் அஞ்சாத மனிதராகவே வாழ்ந்து வந்தார்.

---

1. முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், ப. 129.
2. மேற்படி.

சிங்காரவேலர் எதிர்பார்ப்பு

சிங்காரவேலர் தாம் சேகரித்த நூல்களைத் தம்முடைய குடும்பத்தார்களும், குழந்தைகளும், மக்களும் படிப்பார்கள் என எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்ததைப் போலக் குழந்தைகள் அவர் சேகரித்த புத்தகத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. குடும்பத்தைச் சேர்ந்த பல பிள்ளைகளும் படித்துவிட்டு வேலைக்குச் சென்றதுடன் நூலகம் பராமரிப்பு இல்லாமல் போனது. பல வேலைக்காரர்கள், நிறையக் குடும்பத்தவர்கள் கூட்டுக் குடும்பம் என்ற நிலையில் நூலகம் பராமரிப்பு இன்றிப் பாழாகத் தொடங்கியது. வீடு பலரும் வந்து போகின்ற இடமாக இருந்ததுடன் சிங்காரவேலர் வீட்டுப் புத்தகங்கள், களவு போனதையும் அறிந்தார். உடனடியாகச் சிங்காரவேலர் தமக்கு உரிமையாக இருந்த 20,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் அனைத்தையும் மிகப் பொறுப்பாகப் பொதுவுடைமை இயக்கத்திற்கு உயில் எழுதி வைத்தார்.

புத்தகங்களைப் பொதுவுடைமை இயக்கத்திற்குக் கொடுத்தல்

சிங்காரவேலர் யோசனையின்படி பிராட்வேயில் கட்டி எழுப்பப்பட்டிருந்த பொதுவுடைமை மாளிகையின் பொறுப்பிலிருந்த ப. ஜீவானந்தம், நாகை கே. முருகேசன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், பம்பாயிலிருந்து நாடு கடத்தப்பட்டு வந்து தங்கி இருந்த எஸ்.வி. காட்டே இவர்களிடம் அனைத்துப் புத்தகங்களும் ஒப்படைக்கப்பட்டன. அப் புத்தகங்கள் அனைத்தும் 'பகத் ஹவுஸ்' என்கின்ற மாளிகையின் ஒரு பெரிய அறையில் வைத்து அடுக்கப்பட்டன. 1940க்குப் பிறகு கொண்டுவந்து அடுக்கப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் தகுந்த பராமரிப்பு இன்றி ஒரே அறையில் குவிக்கப்பட்டிருந்தன. 1982இல் ஏற்பட்ட மிகப் பெரிய மழை புயலால் பகத் ஹவுஸ் என்கின்ற கட்டடம் கொஞ்சம் பழுது பட்டது. வாடைக் காலத்தில் மூன்று மாதங்களுக்கு மேலாகப் பெய்த மழை நீர் அறையின் ஓட்டை வழியாக உள்ளே நுழைந்து அனைத்துப் புத்தகங்களையும் ஒட்டு மொத்தமாகப் பாழாக்கியது.

மழைக்காலம் முடிந்து முத்து. குணசேகரன் என்ற நானும் அருமை இராஜகோபால் என்கின்ற இளைஞரும் நாகை கே. முருகேசனால் அப் புத்தகங்களை ஒழுங்குபடுத்த வேண்டிக் கொள்ளப்பட்டோம். அறை முழுமையும் மூன்று மாதத்திற்கு மேலாகத் தேங்கி நின்ற நீரால் அனைத்துப் புத்தகங்களும்

சேற்றைப்போல, புட்டுப் புட்டாகப் பாழாகி இருப்பதைக் கண்டு துடித்துப் போனோம்.[1]

சில ஆயிரக்கணக்கான புத்தகங்கள் மட்டுமே தப்பின. மீட்டெடுத்துத் தரப்பட்ட புத்தகங்கள் நாகை முருகேசனின் நன்முயற்சியால் ரஷ்ய வரலாற்று ஆராய்ச்சியாளர் மிந்ரோக்கின் அவர்களின் பெரு முயற்சிக்குப் பின்னர் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகத்தில் ம. சிங்காரவேலர் நூலகம் என்ற பகுதியில் சேர்க்கப்பட்டு இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகின்றன. ரஷ்யாவில் சிங்காரவேலர் பெயரில் நூலகம் உள்ளது நமக்கு வியப்புக்குரிய செய்தியல்லவா?

---

1. முத்து. குணசேகரன், பெருந்தலைவர்களுடன் பெருந்தொண்டர் நாகை கே. முருகேசன், பக். 83-85.

துணை நூல்கள்

1. வேணு, ஏ.எஸ்., **சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர்**, ஐஸ்டின் பப்ளிகேஷன்ஸ், சின்ன காஞ்சிபுரம், 1991.
2. குணசேகரன், முத்து., **சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலரும், சுயமரியாதை இயக்கமும்**, சிங்காரவேலர் சிந்தனைக் கழகம், அறக்கட்டளை, சென்னை, 2007.
3. குணசேகரன், முத்து., **நெய்தல் நிலத்துச்செங்குயில்**, பேரொலிப் பதிப்பகம், திருவெண்காடு, 1992.
4. குணசேகரன், முத்து., **செஞ்ஞாயிறும் விண்மீன்களும்**, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் கல்வி அறக்கட்டளை, சென்னை, 1993.
5. குணசேகரன், முத்து., வீரமணி, பா. **தமிழகத் தொழிற்சங்கத் தலைவர்கள்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2007.
6. குணசேகரன், முத்து., **கடலோரத்து வானவில்**, பேரொலிப் பதிப்பகம், சென்னை, 1991.
7. குணசேகரன், முத்து., **ம. சிங்காரவேலரின் வாழ்க்கைக் குறிப்புகள்**, சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலரின் கல்வி அறக்கட்டளை, சென்னை, 2008.
8. சீனிவாசன்,ப., **ம.சிங்காரவேலரின் வரலாற்று உண்மையும் புரட்டும்**, சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் கல்வி அறக்கட்டளை, சென்னை, 2008.
9. குணசேகரன், முத்து., **மாமேதைச் சிந்தனைச் சிற்பி ம. வெ. சிங்காரவேலர்**, சிந்தனைச் சிற்பி பதிப்பகம், சென்னை, 1989.
10. சிங்காரவேலு,ம., **மெய்ஞான முறையும் மூடநம்பிக்கையும்**, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், திருச்சி, 1973.
11. குணசேகரன், முத்து., **சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்**, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் கல்வி அறக்கட்டளை, சென்னை, 1990.
12. முருகேசன்,கே., சுப்பிரமணியம்,சி.எஸ்., **சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1991.

13. சினேகா சேது, **சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்**, மீனவர் வாழ்வுரிமை இயக்கம், கொள்கையும் உறுப்பினர் சேர்க்கை விதிகளும், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் வாழ்வுரிமை இயக்கம், நாகை, 2008.

14. அண்ணாதுரை, சி.என்., **சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர்**, மீனவர் நலப் பேரவை, சென்னை, 1982.

15. குணசேகரன், முத்து., வீரமணி. பா., **சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சிந்தனைக் களஞ்சியம்**, சென்னை, 2006.

16. குணசேகரன், முத்து., (ப.ஆ.) **சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்**, 128ஆம் ஆண்டு நினைவு சிறப்பு மலர், 1987.

17. குணசேகரன், முத்து., **சிங்காரவேலரும், வந்தனைக்குரிய பெரியோர்களும்** , ஜோதி புத்தக நிலையம், சென்னை, 2003.

18. மெய்கண்டான், தி.வ., இளந்தமிழன், **நீதிக் கட்சியில் அண்ணா**, அடியார், சென்னை, 2008.

19. வேணு, ஏ.எஸ்., **அண்ணா 75**, சென்னை, 1973.

20. அய்யர், ஏ.எல்., **சுதர்மா கட்டுரைகள்**, சென்னை, 1922.

21. சிதம்பரம், சாமி., **தமிழர் தலைவர், பெரியார் ஈ.வெ.ரா. வாழ்க்கை வரலாறு**, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, திருச்சி, 1975.

22. ஆனைமுத்து, வே., பதிப்பாசிரியர், **பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்**, 1,2,3, சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974.

23. குணசேகரன், முத்து., வீரமணி. பா. **தமிழகத் தொழிற்சங்கத் தலைவர்கள்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

24. முத்துக்கிருஷ்ணன், தி., **மகாகவி பாரதியார் வாழ்க்கை வரலாறு**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட் சென்னை.

25. பாலசுந்தரம், சி., **ராவ் பகதூர் என். சிவராஜ் வாழ்க்கை நினைவுகள்**, யமுனா, பெங்களூர், 2003.

26. சொக்கலிங்கம், நா.வை., **யாதும் ஊரே**, சென்னை, 2008.

27. கோவேந்தன், **என் நினைவுகளில் பாவேந்தர்**, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1983.

28. குருசாமி, குத்தூசி., **பொதுவுடைமை**, குத்தூசி குருசாமி பதிப்பகம், வேலூர், 1984.

29. சிங்காரவேலு, ம., **சமூகம்-பொருளாதாரம்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிமிடெட், சென்னை, 1985.

30. சுப்பையா, இராம., காரைக்குடி, **நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்**, காளிமுத்துப் பதிப்பகம், சென்னை, 1985.

31. சுந்தர வடிவேலு, நெ.து., **சிங்காரவேலரும் பகுத்தறிவும்**, ரசனா புக் ஹவுஸ், சென்னை, 1988.

32. திருநாவுக்கரசு, க., **திராவிட இயக்க இதழ்கள்**, நக்கீரன் பதிப்பகம், சென்னை, 1998.

33. சுப்பிரமணியம், சி.எஸ்., **தோழர் எஸ்.வி. காட்டே**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1977.

34. கோவிந்தன், த., **என் நினைவுகளில் பாவேந்தர்**, பூக்கூடைப் பதிப்பகம், சென்னை, 1983.

35. பாண்டியன், தா., **பாரதியும் சாதிகளும்**, அருண்குமார் பதிப்பகம், சென்னை, 1981,

36. சுப்பையா, இராம. காரைக்குடி, **நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்**, கனிமுத்துப் பதிப்பகம், சென்னை, 1985.

37. முத்து கிருஷ்ணன், தி., **மகாகவி பாரதியார் வாழ்க்கை சரித்திரம்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிமிடெட், சென்னை, 1986.

38. சுப்பிரமணியம், சி.எஸ்., **தோழர் சக்லத்வாலா**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிமிடெட், சென்னை, 1975.

39. பத்மநாபன், ரா.சு., **பாரதியார்**, நேஷனல் புக் டிரஸ்டு இந்தியா, புதுடெல்லி, 1993.

40. அகஸ்தியலிங்கம், சு.பொ., **சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பயில்வோம்**, பாரதி பதிப்பகம், சென்னை, 2008.

41. கோவேந்தன், தா., **என் நினைவுகளில் பாவேந்தர்**, புதுமை பதிப்பகம், சென்னை, 1983.

42. குணசேகரன், முத்து., (ப.ஆ.), **சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் கட்டுரைகள்**, சென்னை, 2003.

43. பாரதி. செல்லம்மா, **பாரதியார் சரித்திரம்**, சென்னை, 1941.


44. சிங்காரவேலர், ம., **சுயராஜ்யம் யாருக்கு?**, சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம், 1998.

45. குணசேகரன், முத்து., **செஞ்சூரியன், சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர்**, சேகர் பதிப்பகம், சென்னை, 2010.


46. குணசேகரன், முத்து., **தந்தை பெரியாரும் ம. சிங்காரவேலரும்**, அருள் பதிப்பகம், சென்னை, 2010.

47. குணசேகரன், முத்து., **தொழிற் சங்க மேதை ஏ.எஸ்.கே. அய்யங்கார்**, சேகர் பதிப்பகம், சென்னை, 2008

48. குணசேகரன், முத்து., **பெருந்தலைவர்களுடன் பெருந்தொண்டர் நாகை. கே. முருகேசன்**, சென்னை, 2009.



சிங்காரவேலர் கலந்து கொண்ட சேலம் மாநாட்டு விளம்பரம்



சிங்காரவேலரின் தமிழ்க் கையெழுத்து

hands later. There are also
motor cycles. The man sits
quiet as in an ordinary
bicycle and the hind wheel
is moved by oil gas. There
are also steam cars like
our own
Madras, and driven by steam
engine.

Railways run under
the steps of houses. Railways
run below the houses from
street to street. You get
down in a lift and you find

you get into the train and
arrive on the other side
you get down and you are
lifted above to the street.
Is this not wonderful?
My boy — to whole place,

சிங்காரவேலரின் ஆங்கிலக் கையெழுத்து




சிங்காரவேலரின் விருப்பப்படித் தன் மகளுக்கு "இரஷியா"
என்று பெயரிட்டழைத்த குஞ்சிதம் குருசாமி
(குத்தூசி குருசாமி துணைவியார்)



இரயில்வே சதி வழக்கில் சிங்காரவேலருடன்
தண்டிக்கப்பட்ட நாகை [illegible]





REGD. No. M. 1627

...DIANS OVERSEAS & OUR COUNCILLORS.

...wadharma

Editor: N. Kannan.

SUNDAY, ... AUGUST, 1923. No. 17

CONTENTS.

PEACE

NOTES.

THE LABOUR AND KISHAN PARTY.

MY IDEAL.

சிங்காரவேலரின் ஆங்கிலக் கட்டுரைகள் இடம் பெற்ற சுதர்ம பத்திரிகையின் முகப்புத் தோற்றம்



"KUDI-ARASU"

குடி அரசு

"பகுத்தறிவு."

பகுத்தறிவு மாதவெளியீடு

சிங்காரவேலர் கட்டுரைகள் இடம் பெற்ற குடியரசு

அறிக்கை நெ. 1.

திருநெல்வேலி ஜில்லா 5-வது சுயமரியாதை மகாநாடு,

திருநெல்வேலி.

இங்ஙனம்,

S. குற்றாலலிங்கம்
தலைவர்.


A. ராமனுஜர்,
காரியதரிசி

சிங்காரவேலர் கலந்து கொண்ட திருநெல்வேலி மாநாட்டு விளம்பரம்

'பகுத்தறிவு'

மாதப்பதிப்பு.

சிங்காரவேலர் எழுத்துக்கு முதன்மை தந்த பகுத்தறிவுப் பத்திரிகை




சிங்காரவேலர் உடனிருந்து தோற்றுவித்த
டி. யூ. சி. எஸ். தலைமையகம் — முகப்புத் தோற்றம்



சிங்காரவேலரின் வளர்ப்புப்
பிள்ளை ம. சத்தியகுமார் (மறைவு)
(மகன் வயிற்றுப் பேரன்)



டி. யூ. சி. எஸ். - இல் இடம்
பெற்றுள்ள சிங்காரவேலரின்
புகைப்படம்




சிங்காரவேலரின் முன்னோர்களின் சொத்துக்களின் விவரமடங்கிய கல்வெட்டு



சிங்காரவேலரின் இல்லமாக இருந்த — 22, சவுத் பீச் சாலையில் தற்பொழுது இடம் பெற்றுள்ள — வெலிங்டன் கல்லூரி



சிங்காரவேலர் உயிர்த்த இல்லம். இவ்வீடு வேறொருவரால் வாங்கப்பட்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



வெலிங்டன் கல்லூரிக்குப் பின்புறம் இன்றும் இடம் பெற்றுள்ள முன்னோர்களான கந்தப்பச் செட்டி, அருணாசலம் செட்டியின் சமாதிகள்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
படைப்பு நெறிமுறைகள்	150.00
Comparative Studies in Literary Cultures	100.00
Sangam Classics : New Perspectives	105.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள்	100.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம்	170.00
கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை	45.00
தமிழ் நாடக வகையும் வரலாறும்	110.00
வா.செ.கு.என்ற ஆளுமையாளர்	50.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	45.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	40.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1	85.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2	75.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1	125.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல்	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல்	95.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல்	190.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல்	90.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல்	55.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல்	120.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.)	65.00
வல்லம் புராணம்	200.00
இதழியல் உலகம்	120.00
தமிழும் தமிழ்க் கற்பித்தலும்	60.00
படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு	100.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00
உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும்	85.00
அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்	115.00
பெயரியல்	55.00
தமிழ் இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை	45.00
தலித் அறம்	45.00
பொதுவுடைமை இயக்க இதழ்கள்	115.00
தமிழில் இதழியல்	270.00

735 சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலரும் தந்தை பெரியாரும் 105.00